මධ්‍යම පරිසර අධිකාරිය
மத்திய சுற்றாடல் அதிகாரசபை
Central Environmental Authority

ஆண்டறிக்கை - 2021



පරිසර අමාත්‍යාංශය
சுற்றாடல் அமைச்சு
Ministry of Environment

நோக்கு

தூய்மையானதும்

பசுமையானதுமான சுற்றாடல்

பணி

ஒருங்கிணைப்பு, பொதுமக்கள் பங்கேற்பு, அமுலாக்கம், பொருத்தமான தொழில்நுட்ப இடையீடுகள், கல்வி மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றின் மூலம் சுற்றாடலைப் பாதுகாப்பதிலும் முகாமை செய்வதிலும் தேசத்தின் முன்னோடியாகத் திகழ்தல்

முன்னுரை

2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை, தலைமையகத்திலுள்ள 17 பிரிவுகள்/அலகுகளின் பணிப்பாளர்கள்/தலைவர்கள், 09 மாகாண அலுவலகங்கள் மற்றும் சுற்றாடற் பேரவை ஆகியோர்/ஆகியவை வழங்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட விசேட கருத்திட்டங்களின் தகவல்கள் மற்றும் செயலாற்றுகை ஆகியவற்றையும் இது உள்ளடக்கியள்ளது. இவ்வறிக்கையில், தலைமை அலுவலகம் மற்றும் மாகாண அலுவலகங்களிலுள்ள பிரதான பிரிவுகள்/அலகுகளின் பிரதான செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் வாசகத்திற்கமையவும் நல்லாட்சி வழிகாட்டல்களுக்கமையவும் அதிகாரசபையின் செயலாற்றுகை, வருடாந்தக் கணக்குகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த ஆண்டறிக்கையைத் தயாரிப்பதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை தேவைப்படுத்தப்படுகின்றது.

அவசியமான தகவல்களை அனுப்பியதன் மூலம் தங்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கிய அனைத்துப் பணிப்பாளர்கள்/ பிரிவுத் தலைவர்கள்/ அலகுகள்/ மாகாண அலுவலகங்கள் மற்றும் கருத்திட்டப் பணிப்பாளர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்கு திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றது.

திட்டமிடல் பிரிவு

2021 இன் ஆண்டறிக்கைக்கான தலைவரின் செய்தி

மத்திய சுற்றாடல் அதிகாரசபை இந்நாட்டிற்கான அதன் 40 வருடகால சேவையைக் கொண்டாடும் இவ்வேளையில், அதன் ஆண்டறிக்கையையும் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டிற்கான நிதிநிலைக் கூற்று, காசுப்பாய்ச்சற் கூற்று மற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை ஆகியவற்றைக் கொண்ட கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளையும் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

நாட்டின் துரித அபிவிருத்திச் செயன்முறையினுள் சுற்றாடல் கருத்தாய்வுகளைக் கூட்டிணைக்கும் மத்திய அமைப்பு என்னும் வகையில், சுற்றாடல் கரிசனைகளையும் அபிவிருத்தித் தேவைகளையும் ஒரு பொதுவான தளத்தினுள் ஒன்றிணைப்பதன் மூலம் மத்திய சுற்றாடல் அதிகாரசபை நாட்டிற்கு அளப்பரிய சேவையாற்றுகின்றது.

நாட்டைத் தூய்மையானதும் பசுமையானதுமான சுற்றாடலை நோக்கி கொண்டுசெல்லும் பணியில், கைத்தொழில் நடவடிக்கைகளில் புகை மற்றும் கழிவு வெளியேற்றங்களைக் கட்டுப்படுத்துவதில் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (EPL) பிரதான சட்டக் கருவியாகும். சுற்றாடல் பாதுகாப்பு உரிமமானது சுற்றாடல் தரங்கள் மற்றும் நியமங்களுக்கமைவான தொழிற்பாடுகளுக்காக தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாகத் தாபிக்கப்பட்டது. எதிர்பார்க்கும் இலக்குகளை அடைவதற்காக, 2021 ஆம் ஆண்டில் 947 உயர் மாசாக்கக் கைத்தொழில்களுக்கும் 517 மத்தியதர மாசாக்கக் கைத்தொழில்களுக்கும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை மத்திய சுற்றாடல் அதிகாரசபை வழங்கியுள்ளது.

துரதிஷ்டவசமாக, சிங்கப்பூர் கம்பனியொன்றிற்குச் சொந்தமான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்கு அருகில் தீப்பற்றியதுடன் நாட்டின் நீரியல் சுற்றாடலுக்கும் பாரிய சேதங்களை விளைவித்தது. இச்சந்தர்ப்பத்தில், பொறுப்புவாய்ந்த ஒரு நிறுவனம் என்ற ரீதியில், அப்பிரதேசத்தின் வளித்தரத்தைக் கண்காணிப்பதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை உரிய நேரத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அண்ணளவாக, 500 மெற்றிக் தொன் பிளாஸ்டிக் குளிகைகள் சேகரிக்கப்பட்டுப் பொருத்தமான விதத்தில் அகற்றப்பட்டன. மேலும், நிலைமையை முகாமை செய்வதற்கு ஏனைய நிறுவனங்களுக்கும் அதிகாரசபை தனது முழுமையான பங்களிப்பை வழங்கியது.

2020 இல் நடத்தப்பட்ட ஆறுகள் பற்றிய ஆய்வை அடிப்படையாகக்கொண்டு, இனங்காணப்பட்ட பிரச்சினைகள்/விடயங்களைத் தீர்ப்பதற்காக சுரக்கிமு கங்கா தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் அங்குரார்ப்பண வைபவம், அதிமேதகு சனாதிபதி மற்றும் உரிய நிறுவனங்களைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் பங்குபற்றலுடன், வரலாற்றுச்சிறப்பு மிக்க ருகுணு – கதிர்காமம் புனிதப் பிரதேசத்தில் மாணிக்க கங்கையில் இடம்பெற்றது.

தேசிய சுற்றாடற் சட்டம் வலுவூட்டியுள்ள ஒழுங்குபடுத்தற் கருவிகளில், சுற்றாடல் தாக்க மதிப்பீடு பிரதானமான ஒன்றாகும். 2021 ஆம் ஆண்டில், புதிய கருத்திட்டங்களுக்கு 15 சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அனுமதிகளும் 207 ஆரம்பச் சுற்றாடல் மதிப்பீட்டு அனுமதிகளும் வழங்கப்பட்டதுடன் பூர்த்தி செய்யப்படாதிருந்த ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட 06 கருத்திட்டங்களுக்கு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அனுமதி நீட்டிப்பும் வழங்கப்பட்டன.

2021 வரை, 10 சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்களை மத்திய சுற்றாடல் அதிகாரசபை பிரகடனப்படுத்தியுள்ளதுடன், ஹாலி எல நீர் மூலத்தை சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசமாக ஒதுக்குவதற்கு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இப்பிரதேசங்களின் முகாமைத்துவத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்குத் தொடர்ச்சியான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இலங்கையில் வீடுகளில் காணப்படும் இலத்திரனியல் கழிவுகளை சேகரிப்பதற்கான மேல் மாகாணத்திற்கான இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம், உரிமமளிக்கப்பட்ட 11 இலத்திரனியல் கழிவு சேகரிக்கும் கைத்தொழில்களின் பங்குபற்றலுடன் அபாயகரமான கழிவுகள் முகாமைத்துவ அலகு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் மேல் மாகாணத்தின் மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றினால் கூட்டாக மேற்கொள்ளப்பட்டது. சேகரிக்கப்பட்ட கழிவுகள் ஏறத்தாழ 4.2 தொன்களாகக் காணப்பட்டதுடன் இதற்காக அலகின் வரவுசெலவுத் திட்டத்திலிருந்து ரூ. 429,585.00 என்னும் தொகையும் செலவிடப்பட்டது.

நாட்டின் இலத்திரனியல் கழிவுகளின் முகாமைத்துவத்தில் கவனம் செலுத்தி, உரிமமளிக்கப்பட்ட 11 இலத்திரனியல் கழிவு சேகரிக்கும் கைத்தொழில்களின் உதவியுடன் இலங்கையில் வீடுகளில் காணப்படும் இலத்திரனியல் கழிவுகளை சேகரிப்பதற்கான இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் – 2021 இனை மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடத்தியதுடன் 4.2 தொன் இலத்திரனியல் கழிவுகள் இதன்மூலம் சேகரிக்கப்பட்டு தகுந்த முறையில் அகற்றப்படுவதற்காக ஏற்றுமதி செய்யப்பட்டன.

பொலித்தீன் முகாமைத்துவ ஒழுங்குவிதிகளின் நடைமுறைப்படுத்தலின் கீழ், ஒற்றைப் பாவனைப் பிளாஸ்டிக்கின் தேவையற்ற பாவனையைக் குறைப்பதை இலக்காகக்கொண்டு, பொலிஎதிலீன் டெரெப்தாலேட் (PET) அல்லது பொலிவினைல் குளோரைட்டு, சிறு பைக்கற்றுக்கள், காற்றடைக்கப்படக்கூடிய விளையாட்டுப்பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் காம்புடனான பஞ்சு (Cotton Bud) உள்ளிட்ட 05 பொருட்களின் உற்பத்தியையும் பாவனையையும் தடைசெய்வதற்காக 2211/51 ஆம் இலக்க ஒழுங்குவிதி பிரசுரிக்கப்பட்டது. மேலும், சேகரித்தல் மற்றும் மீள்சுழற்சிச் செயன்முறைகளின்போது சில வகைப் பிளாஸ்டிக்குகளை இனங்காணுவதற்காக 2211/50 ஆம் இலக்க பிளாஸ்டிக் குறியீடுகள் ஒழுங்குவிதியும் 2021 இல் பிரசுரிக்கப்பட்டது.

நாட்டின் தற்போதைய நிலைமையின் மத்தியிலும், மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது இலங்கை முழுவதிலும் 3,512 திடீர்சோதனைகளை நடத்தியதுடன் பொலித்தீன் உணவுத்தாள்களை விற்பனைக்காகக் காட்சிப்படுத்தல் மற்றும் அவற்றின் வர்த்தகப் பயன்பாட்டில் 522 மீறுகைகளும் (19.2 தொன் பொலித்தீன் உணவு உறைகள்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உயர்ந்தளவிலான மீறுகைகள் மேல் மாகாணம், கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் இடம்பெற்றுள்ளன.

2020 இன் சுற்றாடல் தின விழாவில் விருது பெற்ற பாடல்கள் பிரபல கலைஞர்களின் உதவியுடன் வெளியிடப்பட்டன. அதன் மூலம் அப்பாடல்களில் அடங்கும் செய்திகள் வெகுசன ஊடகங்கள் ஊடாகவும் சமூக ஊடகங்கள் ஊடாகவும் பொதுமக்களுக்குப் பரப்பப்படும்.

சுற்றாடல் பற்றிய கரிசனை கொண்ட எதிர்காலத் தலைமுறையினரை உருவாக்குவதை நோக்காகக்கொண்ட பாடசாலைச் சுற்றாடல் நூலகங்களின் உருவாக்கம் மற்றும் ஏற்கனவே காணப்படும் பாடசாலை நூலகங்களின் கொள்திறனை மேம்படுத்தல் ஆகியவை 2021 இலும் தொடர்ந்தமையைப் பெருமையுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

சுற்றாடல் சம்பந்தமான முறைப்பாடுகளை எமது கவனத்திற்குக் கொண்டுவருவதற்கான உதவிச்சேவை அழைப்பு இலக்கமொன்று இல்லாதிருந்தமை கடந்த காலங்களில் பொதுமக்கள் சந்தித்த பிரதான மட்டுப்பாடாகும். இதனால், மத்திய சுற்றாடல் அதிகாரசபை 1981 என்னும் இலக்கத்தினை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் பொதுமக்கள் எந்நேரமும் இவ்விலக்கத்தின் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் குறிக்கோள்களையும் ஆண்டிற்கான இலக்குகளையும் அடைவதற்கு அதன் பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவப் பணியாட்டொகுதியினர் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் வழங்கிய பங்களிப்பினை நான் மனதார மெச்சுகின்றேன். மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முகாமைத்துவச்சபையின் உறுப்பினர்கள் மற்றும் சுற்றாடல் பேரவை உறுப்பினர்கள் ஆகியோர், அதிகாரசபையின் அலுவல்களின் முகாமைத்துவத்தில் எனக்கு அளித்த ஒத்துழைப்பு, வழிகாட்டல், அறிவுரைகள் மற்றும் ஆதரவிற்காக நன்றியைத் தெரிவிப்பதற்கும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கின்றேன். சுற்றாடல் அமைச்சின் செயலாளர், மேலதிகச் செயலாளர்கள் மற்றும் அனைத்து அலுவலர்களும் வழங்கிய ஒத்துழைப்பிற்காகவும் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

தலைவர்

மத்திய சுற்றாடல் அதிகாரசபை

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முகாமைத்துவ அணி

பெயர்	பதவி	தகைமைகள்
திரு. சிறிபால அமரசிங்க (தலைவர்)		
திரு. பி. பீ. ஹேமந்த ஜயசிங்க (பணிப்பாளர் நாயகம்)		
எந். ஜே. எம். யு. இந்திரரத்ன	பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கழிவு முகாமைத்துவம்)	பி.எஸ்சி. (பொறி.) சிறப்பு, எம். பிஏ, C. Eng. MIE (இல.) Grad. IE (அவுஸ்.)
திரு. எம். ஜே. ஜே. பர்னாந்து	பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பிராந்தியத் தொழிற்பாடுகள்)	பி.எஸ்சி. (பிரயோக விஞ்ஞானம்), எம்.எஸ்சி. (வனவியல்), ப.பி.டிப்ளோமா
கலாநிதி ஆர். எம். எஸ். கே. ரத்நாயக்க	பிரதிப் பணிப்பாளர் நாயகம் (சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு)	பி.எஸ்சி. (விசேட), பி.எச்டி., பட்டய இரசாயனவியலாளர், இரசாயனவியல் டிப்ளோமா
திரு. கே. ஜி. ரி. என். கிரியல்ல	பிரதிப் பணிப்பாளர் நாயகம்(நிர்./நிதி/ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)	பி.எஸ்சி., எம்.எஸ்சி.
திரு. ஜி. ஏ. வீரசுந்தர	பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விழிப்புணர்வு மற்றும் கல்வி)	பி.எஸ்சி., எம்.பில்
திரு. என். எஸ். கமகே	பிரதிப் பணிப்பாளர் நாயகம் (EMA)	பி.எஸ்சி, எம்.பில்
திரு. எம். எஸ். ஏ. ஈ. திஸ்மல்பொல	பணிப்பாளர் (மனித வள அபிவிருத்தி)	சட்டத்தரணி, ப.பி. டிப்ளோமா (மனிதவள முகா.)
Ms. மனுஜா விமலசேன	பணிப்பாளர் (சட்டம்)	சட்டத்தரணி, எல்.எல்.பி (இலங்கை), பிரசித்த நொத்தாரிசும், சத்தியப்பிரமாண ஆணையாளரும் கம்பனிகளின் செயலாளரும்
Ms. வசந்தா விஜேசிங்க	பணிப்பாளர் (ஆய்வுகூடச் சேவைகள்)	பி.எஸ்சி. (இரசாயனவியல்) சிறப்பு, எம்.எஸ்சி. (பகுப்பாய்வு இரசாயனவியல்), M.I Chem., பட்டய இரசாயனவியலாளர்
கலாநிதி ஆர். ஏ. சீ. எச். விஜயசிங்க	பணிப்பாளர் (திட்டமிடல்)	DBA, எம்.பிஏ, பி.எஸ்சி – விவ. விசேட பட்டம் (சிறப்பு)
Ms. தேவிகா விதானகே	பணிப்பாளர் (இணக்கக் கண்காணிப்பு)	பி.எஸ்சி.(விஞ்ஞானம்), எம்.எஸ்சி. (சுற். முகா.), ப.பி.டிப்ளோமா (சுற். விஞ்ஞானம்)
திரு. எம். சிவகுமார்	பணிப்பாளர் (கிழக்கு மாகாணம்)	பி.எஸ்சி. (விவ. விஞ்.) சிறப்பு, எம்.எஸ்சி. (NRM), கூட். சுற். முகாமைத்துவத்தில் தொழி. டிப்ளோமா, பட்டய சுற்றாடலியல் தொழில்வல்லுநர்.
திரு. கே. பி. வெலிக்கன்னகே	பணிப்பாளர் (மத்திய மாகாணம்)	பி.எஸ்சி., எம்.எஸ்சி., எம்.ஏ., ப.பி.டிப்ளோமா (சுற்றாடல் விஞ்ஞானம்.), மனிதவள முகா. & சந்தைப்படுத்தல் டிப்ளோமா
திரு. எச். எஸ். பிரேமச்சந்திர	பணிப்பாளர் (மேல் மாகாணம்)	பி.எஸ்சி (விசேட) (சிறப்பு), எம்.எஸ்சி., M.I. Biol, MIEPSL, MPMI (US), பட்டய சுற்றாடலியல் தொழில்வல்லுநர்.
திரு. சுசந்த வெதகே	பணிப்பாளர் (தென் மாகாணம்)	பி.எஸ்சி., எம்.எஸ்சி.

திரு. சீ. மல்வான	பணிப்பாளர் (கம்பஹா மாவட்டம்)	பி.எஸ்சி. (உயிரியல்), எம்.எஸ்சி. (சுற்றாடல் விஞ்ஞானம்)
திரு. எம். ஏ. சி. நஜீப்	பணிப்பாளர் (ஊவா மாகாணம்)	பி.எஸ்சி. (உயிரியல்) எம்.எஸ்சி. வனவியல்)
Ms.என். ஜி. செனவிரத்ன	பணிப்பாளர் (வடமேல் மாகாணம்)	பி.எஸ்சி. எம்.எஸ்சி. (சுற். விஞ்.)
திரு. எஸ். எம். ஏ. சேனாநாயக்க	பணிப்பாளர் (சபரகமுவ மாகாணம்)	பி.எஸ்சி. (பௌதி.), எம்.எஸ்சி. (சுற். விஞ்.), ப.பி.டிப்ளோமா
திருமதி எச். பி. எஸ். ஜயசேகர	பணிப்பாளர் (திண்மக்கழிவு முகாமைத்துவம்)	பி.எஸ்சி., எம்.எஸ்சி. (சுற். பொறி.& முகா.)
திருமதி பிரியங்கனி குணதிலக	பணிப்பாளர் (இயற்கை வளங்கள் முகாமைத்துவம்)	பி.எஸ்சி. (உயிரியல் விஞ்.), எம்.எஸ்சி. (வனவியல் & சுற். முகா.), ப.பி.டிப்ளோமா
Ms. ஏ. சி. பி. தாபரே	பணிப்பாளர் (சுற்றாடல் தகவல் முகாமைத்துவ நிலையம்)	பி.ஏ., எம்.எஸ்சி., ALA., பட்டய நூலகர்
திரு. கே. ஜி. எஸ். ஜயவர்தன	பணிப்பாளர் (மூலோபாய சுற்றாடல் மதிப்பீடு)	பி.எஸ்சி. (உயிரியல் விஞ்ஞானம்) எம்.எஸ்சி. (சுற். பொறி.& முகா.)
திருமதி எஸ். பி. பெரியப்பெரும	பணிப்பாளர் (சுற்றாடல் மேம்பாடு)	பி.எஸ்சி. எம்.எஸ்சி. (வனவியல் & சுற்.) ப.பி.டிப்ளோமா
திரு. பிரதீப் வக்வெல்ல	பணிப்பாளர் (நிதி)	ஏசிஏ, பி.எஸ்சி. (பிரயோகக் கணக்கியல்)
கலாநிதி அஜித் ரோஹண குணவர்தன	பதில் பணிப்பாளர் (ஆராய்ச்சி அபிவிருத்தி)	பி. எச்டி - தொலை உணர்வறிதல் மற்றும் வனவியல் எம்.எஸ்சி.(விவசாய-வனவியல்) பி.எஸ்சி. (விசேட) பட்டம் – விவசாயம் இரண்டாம் வகுப்பு இலங்கை சுற்றாடல் தொழில்வாண்மையாளர்களின் நிறுவனத்தின் பட்டய உறுப்பினர்
Ms. ஜி. யு. விதானாரச்சி	உள்ளகக் கணக்காய்வாளர்	பி.எஸ்சி. (நிர்.), SLICA, MAAT, HDM

உள்ளடக்கம்

உள்ளடக்கம்……viii

அட்டவணைகளின் பட்டியல்……x

உருக்களின் பட்டியல்……xii

சுருக்கக் குறியீடுகளின் பட்டியல்……xiv

அத்தியாயம் 1 : மத்திய சுற்றாடல் அதிகாரசபை……1

1.1 அறிமுகம்……1

1.2 குறிக்கோள்……1

1.3 அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகள்……1

1.4 அதிகாரசபையின் உறுப்பினர்கள்……2

1.5 சுற்றாடல் பேரவை……3

1.6 நிறுவனக் கட்டமைப்பு……5

அத்தியாயம் 2 : சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவு……6

2.1 சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகு……6

2.2 ஆய்வுகூடச் சேவைகள் அலகு……9

2.2.1 வளி வளங்கள் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு அலகு……9

2.2.2 நீரின் தரக் கண்காணிப்பு அலகு……19

அத்தியாயம் 3 : கழிவு முகாமைத்துவப் பிரிவு……26

3.1 அபாயகரமான கழிவு & இரசாயன முகாமைத்துவ அலகு……26

3.2 திண்மக்கழிவு முகாமைத்துவ அலகு……30

I. தொம்பே சுகாதாரம்சார் கழிவு நிரப்பல் வசதி – பசுமைப் பூங்கா ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவ நிலையம்……33

II. கம்பஹா மாவட்ட ஒருங்கிணைந்த திண்மக்கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம்……36

அத்தியாயம் 4 : சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு……38

4.1 சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகு……38

4.2 இயற்கை வளங்கள் முகாமைத்துவ அலகு……59

4.3 மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு அலகு……65

அத்தியாயம் 5 : ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு……67

அத்தியாயம் 6 : சட்ட அலகு……71

அத்தியாயம் 7 : சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் (EE&A) பிரிவு……74

7.1. சுற்றாடல் கல்வி நிகழ்ச்சித்திட்டம்……74

7.2. சுற்றாடல் மேம்பாடு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்……81

7.3. தேசிய சுற்றாடல் தகவல் நிலையம்……94

அத்தியாயம் 8 : திட்டமிடல் அலகு.....97

அத்தியாயம் 9 : முறைப்பாடுகள்அலகு.....100

அத்தியாயம் 10 : திட்டமிடல் அலகு உள்ளகக் கணக்காய்வு அலகு.....104

அத்தியாயம் 11 : இணக்கக் கண்காணிப்பு அலகு.....106

அத்தியாயம் 12 : விசாரணைகள் அலகு.....108

அத்தியாயம் 13 : தகவல் தொழில்நுட்ப (IT) அலகு.....117

B. 2021 ஆம் ஆண்டில் அதன் அலகின் பிரதான பணிகள்.....117

F. டிஜிட்டல் நிலைமாற்றம் – மத்திய சுற்றாடல் அதிகாரசபை (2020-2030).....118

அத்தியாயம் 14 : அதிகாரசபையின் பன்முகப்படுத்தல்.....119

14.1. மாகாண அலுவலகங்களுக்கான அதிகாரப் பகிர்ந்தளிப்பு.....119

14.2. உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான அதிகாரப் பகிர்ந்தளிப்பு.....119

14.3. மாவட்ட சுற்றாடல் சட்ட அமுலாக்கல் குழு (DELEC).....119

அத்தியாயம் 15 : அதிகாரசபையின் பிராந்தியமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்.....121

15.1 சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு.....121

15.1.1 சு.பா.உ. செயன்முறை.....121

15.2 ISO 14000 தரநியமங்களின் கீழ் கைத்தொழில்களுக்கு சான்றளிப்பதற்கான பங்களிப்பு.....124

15.3. சுற்றாடல் முகாமைத்துவம்.....124

அத்தியாயம் 16 : பிராந்தியத் தொழிற்பாட்டுப் பிரிவு.....128

அத்தியாயம் 17 : மாகாண அலுவலகங்களிலிருந்தான வெற்றிக் கதைகள்.....136

அத்தியாயம் 18 : "சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம்.....141

அத்தியாயம் 19 : மனிதவள அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவு.....153

19.1 மனிதவள அபிவிருத்தி அலகு 153

19.2 மனிதவள முகாமைத்துவம்.....154

19.3 நிதி அலகு.....156

அத்தியாயம் 20 : நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.....182

அட்டவணைகளின் பட்டியல்

அட்டவணை 1 : மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உள்ளகப் பிரிவிற்கும் ஏனைய வெளி அமைப்புகளுக்கும் உதவி வழங்குதல் 24
அட்டவணை 2 : மீண்டுவரும் ஒதுக்கீட்டின் முன்னேற்றம்..... 24
அட்டவணை 3 : கழிவு சேகரிப்புத் தரவுத்தளம்..... 30
அட்டவணை 4 : 2021 இல் கையாளப்பட்ட கழிவுகள்..... 34
அட்டவணை 5 : 2021 இல் சு.தா.ம./ஆ.சு.ம. ஒழுங்குவிதிகளின் கீழ், சு.தா.ம. அலகினால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் 38
அட்டவணை 6 : பூர்த்தி செய்யப்படாத கருத்திட்டங்களுக்கு 2021 இல் வழங்கப்பட்ட நீட்டிப்பு அங்கீகாரங்கள் 39
அட்டவணை 7 : சு.தா.ம./ஆ.சு.ம. தீர்மானங்கள் நிலுவையிலுள்ள கருத்திட்டங்களின் பட்டியல் 40
அட்டவணை 8 : 2021 இல் ஏனைய மற்றும் அதிகாரசபையின் பிராந்திய அலுவலகங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் 44
அட்டவணை 9 : ஏனைய கருத்திட்ட அங்கீகார முகவராண்மைகளுக்கு தொழில்நுட்ப உதவி/ஒருங்கிசைவு வழங்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் 46
அட்டவணை 10 : 2021 ஆம் ஆண்டில் சு.தா.ம. அலகு சமுகமளித்த சுற்றாடல் ஆலோசனைக் குழுக் கூட்டங்களின் பட்டியல் 50
அட்டவணை 11 : 2021 ஆம் ஆண்டில் சு.தா.ம. அலகு சமுகமளித்த கருத்திட்டக் குழுக் கூட்டங்களின் பட்டியல் 52
அட்டவணை 12 : 2021 ஆம் ஆண்டில் சு.தா.ம. அலகு சமுகமளித்த வழிப்படுத்தற் குழுக் கூட்டங்களின் பட்டியல் 52
அட்டவணை 13 : 2021 ஆம் ஆண்டில் சு.தா.ம. கருத்திட்டங்கள்/ஏனைய கருத்திட்டங்களுக்காக சு.தா.ம. அலகு சமுகமளித்த ஏனைய கூட்டங்களின் பட்டியல்..... 52
அட்டவணை 14 : நடைபெற்றுவரும் நீதின்ற வழக்குகளுக்கான சட்ட ஆலோசனைக் கருத்துக்கள் 54
அட்டவணை 15 : 2021 ஆம் ஆண்டில் கண்காணிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல்..... 55
அட்டவணை 16 : 2021 ஆம் ஆண்டில் மாகாண மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு நடத்தப்பட்ட சு.தா.ம. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.....56
அட்டவணை 17 : 2021 ஆம் ஆண்டில் சு.தா.ம. அலகின் உத்தியோகத்தர்கள் சமுகமளித்த பயிற்சி நிகழ்ச்சிகள் 57
அட்டவணை 18 : 2021 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வளவாளர்களாக சு.தா.ம. அலகின் உத்தியோகத்தர்களின் பங்குபற்றல்..... 57
அட்டவணை 19 : 2021 ஆம் ஆண்டில் முறைப்பாடுகளை விசாரித்தமை 58
அட்டவணை 20 : EPA குழுக் கூட்டங்கள் 60
அட்டவணை 21 : EPA உடன் தொடர்புடைய முறைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகளைக் கையாளுதல்.....60
அட்டவணை 22 : சுற்றாடல் முகாமைத்துவச் செயற்பாடுகள் பற்றிய தொழில்நுட்ப வழிகாட்டல்கள்..... ..64
அட்டவணை 23 : இடஞ்சார்/இடஞ்சாரா தரவுத்தளங்களை இற்றைப்படுத்தலும் பேணுதலும்.68
அட்டவணை 24 : சூழல்கிளப் சாதனங்கள்..... 76
அட்டவணை 25 : 2021 இல் தயாரிக்கப்பட்ட சாதனங்கள் 77
அட்டவணை 26 : இயற்கைக் கள நிலையங்களில் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 84
அட்டவணை 27 : மாவட்டங்களிடையே பொதுமக்கள் முறைப்பாடுகளின் விநியோகம்–2021101
அட்டவணை 28 : 2021 இல் பெறப்பட்ட “A” வகை முறைப்பாடுகளைக் கையாள்வதன் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது 102
அட்டவணை 29 : 2021 இல் CMU கண்காணிப்பின் முன்னேற்றம்..... 106
அட்டவணை 30 : 2021 இல் மாகாண/மாவட்ட அலுவலகங்களினால் நடத்தப்பட்ட இணக்கக் கண்காணிப்பின் முன்னேற்றம்..... 107
அட்டவணை 31 : பொலித்தீன் உணவுத்தாள் உற்பத்திக் கம்பனிகள் தொடர்பில் திடீர் சோதனைச் செயற்பாடுகளின் விபரங்கள்.....110
அட்டவணை 32 : பொலித்தீன் உணவுத்தாள் மொத்த விற்பனையாளர்கள் தொடர்பில் திடீர் சோதனைச் செயற்பாடுகளின் விபரங்கள் 111
அட்டவணை 33 : பிரதான சுற்றாடல் பிரச்சினைகள் பற்றிய விசாரணைகளின் விபரங்கள் ..114
அட்டவணை 34 : சு.பா.உ. செயன்முறையைப் பிராந்திய மட்டத்தில் நடைமுறைப்படுத்தல் ...121
அட்டவணை 35 : புதிய கைத்தொழில்களுக்கு சுற்றாடல் விதப்புரைகளை வழங்குதல்.....123

அட்டவணை 36 : சு.தா.ம. அலகின் சு.தா.ம./ஆ.சு.ம. ஒழுங்குவிதியின் கீழ் 2019-2021 வருட காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல்.....125
அட்டவணை 37: விதித்துரைக்கப்படாத செயற்பாடுகளின் மீதான 2021 ஆம் ஆண்டின் விதப்புரைகளின் உருக்களின் பட்டியல் 126
அட்டவணை 38 : 2021 இல் நடத்தப்பட்ட கூட்டங்கள் 129
அட்டவணை 39 : "சுரக்கிமு கங்கா " மாகாண அங்குரார்ப்பண வைபவங்கள் 144
அட்டவணை 40 : அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் 147
அட்டவணை 41 : "சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் பொதுச் செயற்பாடுகள் 151
அட்டவணை 42 : "சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முன்னேற்றம்152
அட்டவணை 43 : உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 153
அட்டவணை 44 : 2021 ஆம் ஆண்டின் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, பதவி விலகல், பதவியிலிருந்தான நிரந்தர விடுப்பு மற்றும் ஓய்வூதியம் 154
அட்டவணை 45 : 2021ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட மூலதன மானியங்கள் 160
அட்டவணை 46 : நிதிச் செயலாற்றுகைக் கூற்று 161
அட்டவணை 47 : நிதிநிலைக் கூற்று 162
அட்டவணை 48 :காசுப்பாய்ச்சற் கூற்று 164
அட்டவணை 49 : உரிமையாண்மை மாற்றல் கூற்று..... 166
அட்டவணை 50 :குறிப்பு 4 அதிகாரசபையின் வருமானம் 167
அட்டவணை 51 :குறிப்பு 4 – ஏனைய மீண்டெழும் மானியங்கள் 168
அட்டவணை 52 :குறிப்பு 5 – தனிப்பட்ட ஊதியங்கள் 170
அட்டவணை 53 : குறிப்பு 6 – போக்குவரத்துச் செலவுகள் 170
அட்டவணை 54 :குறிப்பு 7 - வழங்கல்கள் & நுகர்வுப் பொருட்கள்..... 170
அட்டவணை 55 :குறிப்பு 8 – பேணுகை 171
அட்டவணை 56 :குறிப்பு 9 – ஒப்பந்தச் சேவைகள் 171
அட்டவணை 57 :குறிப்பு 10 – ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி 171
அட்டவணை 58 :குறிப்பு 11 – பெறுமதித்தேய்வு & பதிவழித்தல் 172
அட்டவணை 59 :குறிப்பு 12 – ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள்..... 173
அட்டவணை 60 :குறிப்பு 13 – நிகழ்ச்சித்திட்டச் செயற்பாடுகள்..... 174
அட்டவணை 61 :குறிப்பு 15 – முதலீடு..... 175
அட்டவணை 62 :குறிப்பு 16 – வழிச்சரக்கு மற்றும் புத்துருவாகும் வேலை 175
அட்டவணை 63 :குறிப்பு 17 – இருப்புக்கள்..... 175
அட்டவணை 64 :குறிப்பு 18 – வருமதி 175
அட்டவணை 65 :குறிப்பு 19 – முற்செலுத்திய கொடுப்பனவுகள்..... 176
அட்டவணை 66 :குறிப்பு 20 - காசும் காசுச் சமானங்களும்..... 176
அட்டவணை 67 :குறிப்பு 21 – செலுத்தவேண்டியவை..... 176
அட்டவணை 68 :குறிப்பு 22 – சென்மதிச் செலவுகள்..... 177
அட்டவணை 69 :குறிப்பு 23 – மீண்டெழும் மானியங்கள் 178
அட்டவணை 70 :குறிப்பு 24 – பணிக்கொடைக்கான ஏற்பாடு 180
அட்டவணை 71 : குறிப்பு 25 – மூலதன மானியம் 180

உருக்களின் பட்டியல்

உரு 1 : நிறுவனக் கட்டமைப்பு 5
உரு 2 : 2021 இல் மத்திய ஆய்வுகூடத்தின் மாதிரியிடல் முன்னேற்றம் 19
உரு 3: ம.சு.அதிகாரசபையில் புதிதாகத் தாபிக்கப்பட்ட நுண் பிளாஸ்டிக் பகுப்பாய்வு ஆய்வுகூடம் 21
உரு 4 : நீரின் தரப் பரிசோதனைக் கருவியின் விநியோகம்..... 21
உரு 5 : மத்திய மாகாண ஆய்வுகூடத்தில் எரிகூடத்தைத் தாபித்தல் 22
உரு 6 : கிழக்கு மாகாண ஆய்வுகூடத்தில் கன்வடெய்னர் (Convertainer) ஆய்வுகூடம் 22
உரு 7 : ஒருங்கிணைக்கப்பட்ட ஆய்வுகூட கழிவு முகாமைத்துவ முறைமையின் அங்குரார்ப்பணம் 22
உரு 8 : ம.சு.அ. கட்டடத்தில் தாபிக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ முறைமை 22
உரு 9 : அனைத்து ம.சு.அ. ஆய்வுகூடங்களினதும் மாதிரி செயலாற்றுகை..... 23
உரு 10 : பயிற்சிக் கையேட்டைத் தலைவரிடம் கையளித்தல் 31
உரு 11 : கடதாசி மாலைகள் செய்தல் பற்றிய பயிற்சி. 31
உரு 12 : மொத்த உக்கக்கூடிய கழிவுகளைக் கையாளுதல் மற்றும் சுகாதாரம்சார் கழிவு நிரப்பல் தளத்தில் கழிவுகளைக் கொட்டுதல் 35
உரு 13 : மொத்த உக்கக்கூடிய கழிவுகளைக் கையாளுதல் மற்றும் சுகாதாரம்சார் கழிவு நிரப்பல் தளத்தில் கழிவுகளைக் கொட்டுதல்..... 35
உரு 14 : கழிவுகளைக் கையாள்வதால் பெறப்பட்ட மொத்த வருமானம் 35
உரு 15 : 6 கலங்களில் 3 ஆம் கலத்தின் 3/6 ஆம் அடுக்கு வரை நிரப்புதல்..... 36
உரு 16 : பெத்தியகந்தவில் விவசாயிகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 37
உரு 17 : பன்சலத்தன்ன மௌஸ்ஸாவ EPA இன் எல்லை நிர்ணயம் 60
உரு 18 : மாரகல மலைத்தொடர் EPA (MMREPA) 62
உரு 19 : இலங்கையின் ஈரநிலங்கள் சஞ்சிகை 63
உரு 20 :ஆராய்ச்சிச் செய்திமடல்..... 67
உரு 21 : கம்பராவ கங்கை உப நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் சூழற்றொகுதிச் சேவைகளின் வரைபடம் 67
உரு 22 : “சுரக்கிமு கங்கா இணையவழி GIS முறைமை” 69
உரு 23 : முன்பள்ளி வழிகாட்டிக் கையேடு 76
உரு 24 : சூழல் கிளப் சாதனங்கள்..... 76
உரு 25 : சுற்றாடல் பற்றிய சமயப் போதனைகள்..... 79
உரு 26 : 'ஜனாதிபதி விருது வழங்கும் விழா' 79
உரு 27 : PET பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் பற்றிய சுவரொட்டிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கையேடு..... 82
உரு 28 : விருது வென்ற பாடல்களின் காட்சியமைக்கப்பட்ட வீடியோக்கள்..... 83
உரு 29 : நீர்க்கோளம் மீதான கல்விசார் ஆவணப்படம்..... 84
உரு 30 : ஹெய்லீஸ் ஃபப்ரிக் இன்டஸ்ட்ரியினால் ஒழுங்குசெய்யப்பட்ட பேஸ்புக் நேரலையின் சிறப்பம்சக் காட்சிகள்..... 85
உரு 31 : வெபினார் நிகழ்ச்சித்திட்டங்களின் துண்டுப்பிரசுரங்கள்..... 86
உரு 32 : களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் சிறப்பம்சங்கள் 87
உரு 33 : “ஹுஸ்ம தென துரு” மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்களின் சிறப்பம்சங்கள் 88
உரு 34 : ICEG இன் சிறப்பம்சங்கள்..... 90
உரு 35 : சுற்றாடல் பேரவையின் 3ஆம் கூட்டத்தொடரின் சிறப்பம்சங்கள்..... 91
உரு 36 : சுற்றாடல் செய்திமடல், சொபாகெத சஞ்சிகை..... 93
உரு 37 : சொபாகெத சஞ்சிகைகள் வெளியீடு 93
உரு 38 : 6.12.2021 ஆம் திகதி நடைபெற்ற கூட்டாண்மைத் திட்டச் செயலமர்வு..... 97
உரு 39 : வகைகளின் அடிப்படையில் மொத்த முறைப்பாடுகள் 102
உரு 40 : மாவட்ட அடிப்படையில் திடீர்சோதனைகள் 109
உரு 41 :தடைசெய்யப்பட்ட உற்பத்திகளுக்கான பொருள்வாரியான திடீர்சோதனைகளின் சராசரி 109
உரு 42 : திடீர் சோதனைகளின் எண்ணிக்கைக்கெதிரான மீறுகைச் சராசரியின் வருடாந்தப் போக்கு 109
உரு 43 : கம்பனியொன்றில் பொலித்தீன்/உணவுத்தாள்கள் திடீர் பரிசோதனை -ஹோமாகம110

உரு 44: தொம்பே சுகாதாரம்சார் கழிவு நிரப்பல் தளத்தில் கையிருப்பு அழிப்பு 112
உரு 45 : சிறு பைக்கற்றுகள் உற்பத்திக் கைத்தொழில் ஒன்றின் மேற்கொள்ளப்பட் திடீர் பரிசோதனை பற்றிய செய்தி 113
உரு 46 : சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம் – மேல் மாகாணம் 132
உரு 47 : சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம்– மத்திய மாகாணம் 132
உரு 48 : சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம் – தென் மாகாணம் 132
உரு 49 : சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம்- சபரகமுவ மாகாணம் 133
உரு 50 : சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம்- வடமேல் மாகாணம் 133
உரு 51 : சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம்- வடமத்திய மாகாணம்.....133
உரு 52 : சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம்- கிழக்கு மாகாணம்.....133
உரு 53 : சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம்- வட மாகாணம் 133
உரு 54 : லுணுகம்வெஹரவில் பால் பண்ணைக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள காணிக்கு TEC இன் பரிசோதனை விஜயம் - 13.03.2021.....134
உரு 55 : நிக்கவரடிய, தெலஹரவில் பால் பண்ணைக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள காணிக்கு TEC இன் பரிசோதனை விஜயம் - 23.03.2021.....134
உரு 56 : தேசிய அங்குரார்ப்பண வைபவம் – ஊவா மாகாணம் 143
உரு 57 : மேல் மாகாணம் - அங்குரார்ப்பண வைபவம் 144
உரு 58 : மத்திய மாகாணம் - அங்குரார்ப்பண வைபவம் 144
உரு 59 : தென் மாகாணம் - அங்குரார்ப்பண வைபவம் 144
உரு 60 : வடமேல் மாகாணம் - அங்குரார்ப்பண வைபவம்.....145
உரு 61 : வட மத்திய மாகாணம் - அங்குரார்ப்பண வைபவம் 145
உரு 62 : வட மாகாணம் - அங்குரார்ப்பண வைபவம் 145
உரு 63 : அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட அமுலாக்க அமைவிடங்களுடனான இலங்கை வரைபடம் 146

சுருக்கக் குறியீடுகளின் பட்டியல்

BOD	-	உயிரியல் ஒட்சிசன் கேள்வி
BOI	-	முதலீட்டுச்சபை
CEA	-	மத்திய சுற்றாடல் அதிகாரசபை
COD	-	இரசாயன ஒட்சிசன் கேள்வி
CETRAC	-	நிர்மாணம் மற்றும் உபகரணப் பயிற்சி நிலையம்
DDG	-	பிரதிப் பணிப்பாளர் நாயகம்
DEO	-	பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்
DO	-	மாவட்ட அலுவலகம்
E & NR	-	சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள்
EE & A	-	சுற்றாடல் கல்வி விழிப்புணர்வு
EIAஆ	-	சுற்றாடல் தாக்க மதிப்பீடு
EM & A	-	சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு
EMS	-	சுற்றாடல் முகாமைத்துவ முறைமை
EPC	-	சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு
EPL	-	சுற்றாடல் பாதுகாப்பு உரிமம்
GSMB	-	புவிச்சரிதவியல், அளவை சுரங்கப் பணியகம்
HRD	-	மனித வள அபிவிருத்தி
HWM	-	தீங்கு விளைவிக்கும் கழிவு முகாமைத்துவம்
IEE.	-	ஆரம்பச் சுற்றாடல் மதிப்பீடு
IEMP	-	ஒருங்கிணைந்த சுற்றாடல் முகாமைத்துவக் கருத்திட்டம்
ITI	-	கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம்
JBIC	-	சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் குழு.
JICA	-	ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை
KPS	-	குருவிட்ட பிரதேச சபை
NBRO	-	தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம்
LLF	-	சுமை அடிப்படையிலான உரிமக் கட்டணம்
NEA	-	தேசிய சுற்றாடல் சட்டம்
NEIC	-	தேசிய சுற்றாடல் தகவல் நிலையம்
NERD	-	தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
OP & M	-	இயக்கத் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு
PO	-	மாகாண அலுவலகம்
PVC	-	பொலிவினைல் குளோரைட்டு
SEO	-	சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர்
SLTB	-	இலங்கைப் போக்குவரத்துச் சபை
SRO	-	உப பிராந்திய அலுவலகம், கண்டி
TPS	-	தமன்கடுவ பிரதேச சபை
WDF	-	கழிவு நீரகற்றல் கட்டணம்
WEA	-	வயம்ப சுற்றாடல் அதிகாரசபை
WWMA	-	மேல் மாகாண கழிவு முகாமைத்துவம்
WPO	-	மேல் மாகாண அலுவலகம்
CPO	-	மத்திய மாகாண அலுவலகம்
SaPO	-	சபரகமுவ மாகாண அலுவலகம்
SuPO	-	தென் மாகாண அலுவலகம்
NCPO	-	வட மத்திய மாகாண அலுவலகம்
EPO	-	கிழக்கு மாகாண அலுவலகம்
UPO	-	ஊவா மாகாண அலுவலகம்
NPO	-	வட மாகாண அலுவலகம்
JAICA	-	ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக் கைத்தொழில்
IQMU	-	வளித்தரக் கண்காணிப்புப் பிரிவு
PM	-	துகள் பொருள்
KECO	-	கொரிய சர்வதேச ஒத்துழைப்பு
NCC	-	தேசிய ஒருங்கிணைப்புக்குழு
TACMIC	-	கைத்தொழில் இரசாயனங்களின் முகாமைத்துவத்திற்கான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு
MEEE	-	இலத்திரனியல் மற்றும் மின் உபகரணங்கள் முகாமைத்துவம்
BMICH	-	பண்டாரநாக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்
CFL	-	கொம்பக்ட் புளோரசன்ட் விளக்கு
PAA	-	கருத்திட்ட அங்கீகார முகவராண்மை
NRM&M	-	இயற்கை வள முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

EM&A	-	சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் விழிப்புணர்வு
NWP	-	தேசிய ஈரநிலக் கொள்கை
NWSC	-	தேசிய ஈரநில வழிப்படுத்தும் குழு
DWLC	-	வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம்
UDA	-	நகர அபிவிருத்தி அதிகாரசபை
ICASL	-	இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம்
SLLRDC	-	இலங்கைக் காணி மீட்டல், அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்
GN	-	கிராம அலுவலர்
DS	-	பிரதேச செயலாளர்
CCD	-	கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்
MC	-	மாநகர சபை
EE&A	-	சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவு
EPP	-	சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்
WED	-	உலக சுற்றாடல் தினம்
TRC	-	தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
DELEC	-	மாவட்ட சுற்றாடல் சட்ட அமுலாக்கக் குழு
NWS&DB	-	தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை
LGA	-	உள்ளூராட்சி அதிகாரசபை
MENR	-	சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு
MERE	-	சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு
PP	-	பிலிசரு கருத்திட்டம்
NSWMSC	-	தேசிய திண்மக்கழிவு முகாமைத்துவ ஆதரவு நிலையம்
KMC	-	குருநாகல் மாநகர சபை
ICTAD	-	நிர்மாணப்பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்
EDCF	-	பொருளாதார அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவகம்
PPA	-	கருத்திட்டத் தயாரிப்பு உதவியாளர்
NPD	-	தேசியத் திட்டமிடல் திணைக்களம்
ERD	-	வெளிவளத் திணைக்களம்
NSWMC	-	தேசிய திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம்
WPWMA	-	மேல் மாகாணக் கழிவு முகாமைத்துவ அதிகாரசபை
CLG	-	உள்ளூராட்சி ஆணையாளர்
BOQ	-	அளவுகள் பட்டியல்
ISWM	-	ஒருங்கிணைந்த திண்மக்கழிவு முகாமைத்துவம்

அத்தியாயம் 1 : மத்திய சுற்றாடல் அதிகாரசபை

1.1 அறிமுகம்

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் தொழிற்படும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது (CEA) தேசிய சுற்றாடல் கொள்கையின் பிரதான நடைமுறைப்படுத்தல் அமைப்பு ஒன்றாகக் காணப்படுகின்றது. 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் 1981 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை தாபிக்கப்பட்டது. அதன் விதப்புரையின் பேரில் 1980 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் திருத்தம் செய்யப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை அதன் நாற்பது ஆண்டுகால சேவையைப் பூர்த்தி செய்துள்ளது.

2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையானது 09 மாகாண அலுவலகங்கள், 16 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 2021 இல் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட கருத்திட்டங்கள் உள்ளடங்கலான மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் செயலாற்றுகையைக் கொண்டுள்ளது. உரிய ஆண்டில் அதிகாரசபை மேற்கொண்ட பணிகள் பற்றிய சிறந்த பார்வையை இவ்வறிக்கை வழங்குகின்றது.

1.2 குறிக்கோள்

1980 ஆம் ஆண்டின் தேசிய சுற்றாடல் சட்டத்தில் காணப்படும் பிரதான அதிகாரங்கள் பின்வருமாறு:

- தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழான சுற்றாடல் பாதுகாப்பு உரிமத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக சுற்றாடலின் தரத்திற்கு ஆபத்து விளைவிக்கும் அல்லது ஆபத்தை விளைவிக்கும் சாத்தியமுடைய கழிவு வகைகள், அவற்றில் அடங்கியுள்ள பகுதிகள், அவற்றின் தாக்கங்கள், வெளிவீச்சு மற்றும் வீழ்படிவுகள் அல்லது ஏனைய மாசாக்கிகளின் மூலங்கள் ஆகியவற்றைச் சீராக்குதல், பேணுதல் மற்றும் கட்டுப்படுத்தல்.
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டைக் கருவியொன்றாகப் பயன்படுத்தி சுற்றாடல் விளைவுகள் பற்றிய முறைமைசார் மதிப்பீட்டின் ஊடாக சுற்றாடலுக்கு உகந்த அபிவிருத்தி இடையீடுகளை உறுதி செய்வதன் மூலம் நாட்டிலுள்ள தேசிய வளங்களின் தளத்தைப் பாதுகாத்தல்.
- சுற்றாடல் பாதுகாப்பில் பொது மக்களின் ஆதரவையும் பங்குபற்றலையும், விசேடமாக பாடசாலை செல்லும் பிள்ளைகளின் பங்குபற்றலையும் ஊக்குவித்து மேம்படுத்தும் நோக்குடன் உள்ளூர், தேசிய மற்றும் உலகளாவிய சுற்றாடற் பிரச்சினைகள் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- பரந்தளவிலான வாடிக்கையாளர் தேவைகளுக்கு உகந்த சேவைகளை வழங்குவதன் மூலம் சுற்றாடலுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்களை வழங்கும் கேந்திர நிலையமாகத் தொழிற்படல்.
- தனது குறிக்கோள்களை அடைவதற்காக; மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது அதன் நிறுவனக் கட்டமைப்பை சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு, சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு, சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு அத்துடன் மனிதவள அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் நிதி ஆகிய தொழில்நுட்பரீதியில் விசேடத்துவம் பெற்ற நான்கு பிரிவுகளில் கவனம் செலுத்தும் வகையில் ஒழுங்கமைத்துள்ளது. இப்பிரிவுகளைத் தவிர நான்கு பிரதான அலகுகள் காணப்படுகின்றன. அவையாவன; திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு, சட்டம், உள்ளகக் கணக்காய்வு மற்றும் இணக்கக் கண்காணிப்பு. இந்த அனைத்துப் பிரிவுகளுக்கும் அலகுகளுக்கும் சுற்றாடல் முகாமைத்துவத் துறையில் கணிசமான அனுபவத்துடன் கல்வித் தகுதிகளைக் கொண்டுள்ள தொழில்சார் தகைமை வாய்ந்த ஆளணியினர் தலைமை வகிக்கின்றனர்.

1.3 அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது தற்போது பின்வரும் பிரதான தொழிற்பாடுகள், அதிகாரங்கள் மற்றும் பணிகளில் பிரதானமாகக் கவனம் செலுத்துகின்றது;

அ) தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் மேற்கொள்ளப்படும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றின் ஏற்பாடுகளை நிர்வகித்தல்.

ஆ) மாசடைதல் ஏற்படுவதற்கான காரணங்கள், இயல்புகள் மற்றும் அதன் அளவு பற்றிய ஆய்வுகள் மற்றும் விசாரணைகளைப் பொறுப்பேற்பதுடன் ஏனைய நபர்கள் அல்லது அமைப்புகளுக்கு அவ்வாறான ஆய்வுகள் அல்லது விசாரணைகளை மேற்கொள்வதற்கு உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல்.
இ) சுற்றாடல் தரவீழ்ச்சியின் ஏதேனும் அம்சங்களுடன் அல்லது அவற்றைத் தடுப்பதுடன் தொடர்புடைய ஆய்வை நடத்துதல், மேம்படுத்தல் மற்றும் ஆய்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் சுற்றாடலைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் அவசியமான கோட்பாடுகளைத் தயாரித்தல்.
ஈ) சுற்றாடலில் உள்ள நன்மையளிக்கும் பயன்களைப் பாதுகாப்பதற்கான தரங்கள், நியமங்கள் மற்றும் விதிமுறைகளைக் குறித்துரைத்தல்.

உ) சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய ஏதேனும் அம்சத்துடன் தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் தகவல்களைப் பிரசுரித்தல்.
ஊ) சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு தொடர்பில் பொதுமக்களுக்குத் தகவல்களையும் கல்வியையும் வழங்குதல்.
மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உருவாக்கம் முதல் 1988 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் தேசிய சுற்றாடல் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் விரிவான ஒழுங்கமைப்பு அதிகாரங்கள் அதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.
இத்திருத்தங்களுடன்,
ஏனையவற்றிற்கிடையில், பின்வரும் பிரதான அதிகாரங்கள் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

அ) மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்ட தரங்கள் மற்றும் விதிமுறைகளுக்கிணங்க, மாசாக்கிகளை சுற்றாடலுக்கு வெளியேற்றும் விளைவையுடைய செயற்பாடுகள், அதிகாரசபை வழங்கிய உரிமத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்குத் தேவைப் படுத்தல்.

ஆ) அமுலாக்கத்தின்போது சுற்றாடலுக்குப் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சில விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்கள் அமுலாக்கப்படுவதற்கு முன்னர், அவை சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதைத் தேவைப்படுத்தல்.

இ)சுற்றாடலுக்குக் கழிவுகளை வெளியேற்றும், வீழ்படிவைத் தோற்றுவிக்கும் அல்லது புகையை வெளியேற்றும் செயற்பாடுகளைக் "குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள்" என வர்த்தமானியில் பிரசுரித்தல் மற்றும் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் கீழும் இச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்படுகின்றவாறான தரங்கள் மற்றும் ஏனைய தகவுகளின் பிரகாரமும் தவிர எந்தவொரு நபரும் ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட செயற்பாட்டை முன்னெடுக்காதிருப்பதை உறுதிப்படுத்தல்.

1.4 அதிகாரசபையின் உறுப்பினர்கள்

அதிமேதகு சனாதிபதி, சுற்றாடல் அமைச்சருடன் கலந்தாலோசித்து நியமனம் செய்யும் மூன்று உறுப்பினர்களை இந்த அதிகாரசபை கொண்டுள்ளதுடன், அவர்களில் இருவர் சுற்றாடல் என்னும் விடயத்தில் போதிய நிபுணத்துவத்தையும் தகைமைகளையும் கொண்டிருத்தலும் வேண்டும். ஏனைய உறுப்பினர்களில் ஒருவர் சுற்றாடல் முகாமைத்துவத்தில் போதிய நிர்வாகத் திறன்களையும் அனுபவத்தையும் கொண்டிருக்க வேண்டும். இந்த மூன்று உறுப்பினர்களில் ஒருவர், அதிமேதகு சனாதிபதியினால் அதிகாரசபையின் தலைவராக நியமிக்கப்படுகின்றார். மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
திரு. எஸ். அமரசிங்க, தலைவர், ம.சு.அ. *(02.01.2020 இலிருந்து பயனுக்கு வரும் வகையில்)*
பேரா. ஏ. ஜி. அமரசிங்க, அதிகாரசபையின் உறுப்பினர்
பேரா. ஹேமந்தி ரணசிங்க,
அதிகாரசபையின் உறுப்பினர் *(10.05.2018 இலிருந்து பயனுக்கு வரும் வகையில்)*

தேசிய சுற்றாடல் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், 2017 ஜூலை முதல் சபையின் செயலாளராக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் திரு. பி. பீ. ஹேமந்த ஜயசிங்க செயற்படுகின்றார். மீளாய்வுக்கு உட்பட்டுள்ள வருடத்தில் இச்சபை சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பான குறித்த சில பிரதான பிரச்சினைகளுக்கு வழிகாட்டல்களை வழங்கி, பணிப்புரைகளை விடுப்பதற்காக 09 கூட்டங்களை நடத்தியுள்ளது.

1.5. சுற்றாடல் பேரவை

அறிமுகம்.

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தினால் மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் சுற்றாடல் பேரவை வலுவூட்டப்படுகின்றது.

சுற்றாடல் பேரவையின் பிரதான தொழிற்பாடுகள்

1. அதிகாரசபையின் பொறுப்புக்கள், பணிகள் மற்றும் கடமைகள் பற்றி பொதுவாக ஆலோசனை வழங்குதல்.
2. அதிகாரசபையினால் சுற்றாடல் பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்படும் சில விடயங்கள் பற்றி அதிகாரசபைக்கு ஆலோசனை வழங்குதல்.

14ஆம் கூட்டத்தொடர்

சுற்றாடல் பேரவையின் 3ஆம் கூட்டத் தொடர் 2020, டிசம்பர் 17 நிறைவு பெற்றது. சுற்றாடல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சுக்கள் மற்றும் புதிய அமைச்சுக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 14ஆம் கூட்டத்தொடருக்காக சுற்றாடல் அமைச்சு பெயர் குறித்த நியமனங்களைக் கோரியது. அதற்கிணங்க, 29/11/2020 இல் அங்குரார்ப்பணக் கூட்டம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் நடத்தப்பட்டதுடன் பின்வரும் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

1.	உருவரிகே வன்னிலத்தோ,	இலங்கை வேடுவர் சமுதாயத்தின் தலைவர்
2.	திரு. பி. பீ. ஹேமந்த ஜயசிங்க	பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை (செயலாளர் – சுற்றாடற் பேரவை)
3.	திரு ஆர். டீ. எஸ். ஜயதுங்க	மேலதிக செயலாளர் (சுற்றாடல் அபிவிருத்தி), சுற்றாடல் அமைச்சு
4.	திருமதி சுஜீவா எஸ். குருகே	மேலதிக செயலாளர் (நிர்வாகம்), காணியமைச்சு
5.	திருமதி எச். நிலக்ஷி என். குணசேகர	மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி) கமத்தொழில் அமைச்சு
6.	திரு. டபிள்யு. பீ. பளுகஸ்வெவ	மேலதிக செயலாளர் (பொறியியல்), பெருந்தெருக்கள் அமைச்சு
7.	திருமதி பீ. நந்தனி சமரவிக்ரம	மேலதிக செயலாளர், பத்திக், கைத்தறி, புடவை மற்றும் உள்ளூர் ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சு
8.	கலாநிதி செவ்வந்தி ஜயக்கொடி	சிரேஷ்ட விரிவுரையாளர், வயம்ப பல்கலைக்கழகம்
9.	கலாநிதி ஜகத் குணவர்தன	வழக்கறிஞர், சுற்றாடல் ஆர்வலர்
10.	திருமதி என். வீ. என். டீ. ஜயவர்தன	சிரேஷ்ட உதவிச் செயலாளர்(நிறுவக நிர்வாகம்), போக்குவரத்து அமைச்சு
11.	திரு தீபால் சந்திரரத்ன	சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்), தொழில் அமைச்சு
12.	திருமதி சுரங்கா பிரேமானி விதானகே	பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்), போக்குவரத்து அமைச்சு
13.	திருமதி ரேனுகா எம். வீரக்கோன்	பணிப்பாளர் நாயகம்(முதலீட்டுப் பிரிவு) சனாதிபதியின் அலுவலகம்
14.	திரு ஆர். டீ. ரணதுங்க	பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்), மீன்பிடி அமைச்சு
15.	திருமதி என். ஆர். அனீஸ்	பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்), மின்சார சபை
16.	திருமதி ஆர். எம். சிறினாம	பணிப்பாளர் (அபிவிருத்தி), துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு
17.	திரு. புபுது வீரரத்ன	தலைவர், உயிரியல் பேணுகை நிலையம்
18.	திரு. திலங்க நதீர பொல்வத்தகே	-
19.	திரு. லசந்த சஞ்சய சேனாரத்னாரச்சி	-
20.	திரு. ஜே. எம். புத்தி மங்கள	-

மேலும், பின்வரும் நிறுவனங்களைச் சேர்ந்த பின்வரும் அலுவலர்களும் உறுப்பினர்களாக உள்ளனர்.

01.	திரு. ஐ. எஸ். எச். ஜயசேன இலுக்பிட்டிய	மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) பெருந்தோட்ட அமைச்சு
02.	திரு. ஐ. சி. பதிராஜ	மேலதிக செயலாளர் (கைத்தொழில் மற்றும் கைத்தொழில் பேட்டைகள் அபிவிருத்தி), கைத்தொழில் அமைச்சு
03.	டாக்டர் திருமதி லக்ஷ்மி சி. சோமதுங்க	மேலதிக செயலாளர் (பொதுச் சுகாதார சேவைகள்) சுகாதார அமைச்சு
04.	திருமதி ஹசந்தி உருகொடவத்த திஸாநாயக்க	மேலதிக செயலாளர் (பதில்) கடல்சார் அலுவல்கள், சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சு
05.	திரு. குமுது மீகஹகே	பணிப்பாளர் (அபிவிருத்தி) வர்த்தக அமைச்சு
06.	திரு. பி. ஏ. சுனில்	அதிபர்


சட்டத்தரணியும் சுற்றாடல் ஆர்வலருமான கலாநிதி ஜகத் குணவர்தன, சுற்றாடல் பேரவையின் தலைவராக சுற்றாடல் அமைச்சர் கௌரவ மஹிந்த அமரவீரவினால் நியமிக்கப்பட்டார். தங்களின் தொடர்ச்சியான பிரசன்னம் மற்றும் துடிப்பான பங்களிப்பின் ஊடாக சுற்றாடல் பேணுகைக்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முன்னேற்றத்திற்கும் கடப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டுமென சமுகமளித்த அனைத்து உறுப்பினர்களையும் கௌரவ அமைச்சரும் அத்துடன் சுற்றாடல் பேரவையின் தலைவரும் கேட்டுக் கொண்டனர்.

சுற்றாடல் பேரவையின் செயலாளர் என்ற வகையில், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வகிபங்கு மற்றும் சுற்றாடல் பேரவையின் செயற்பாடுகள் மீதான சமர்ப்பித்தலொன்றை அங்குரார்ப்பண வைபவத்தின்போது அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் திரு. ஹேமந்த ஜயசிங்க வழங்கினார்.
இந்நிகழ்விற்கு சுற்றாடல் அமைச்சின் செயலாளரான டாக்டர் அனில் ஜாசிங்க மற்றும் அமைச்சின் பணியாட்டொகுதியினரும் சமுகமளித்தனர்.





1.6 நிறுவனக் கட்டமைப்பு



உரு 1: நிறுவனக் கட்டமைப்பு

அத்தியாயம் 2 : சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டுப் பிரிவு

சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு பிரிவின் கீழ் இரண்டு அலகுகள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு:

2.1. சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு

தூய்மையான மற்றும் பசுமையான சுற்றாடலை நோக்கி நாட்டை வழிநடத்துவதும், அதன் செல்வங்களைப் பராமரிப்பதும் நாட்டின் துரித கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் நகரமயமாக்கலுடன் எளிதான பணி அல்ல. எனவே சட்ட மற்றும் நிருவாகக் கருவிகள் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்படுத்துவது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதான முக்கியத்துவமும் பொறுப்பும் ஆகும். சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (சு.பா.உ), கைத்தொழில்துறைச் செயற்பாடுகளில் இருந்து ஏற்படும் மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்கான பிரதான சட்டக் கருவியாகும். 2008.01.25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் செயற்பாடுகள், தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சுற்றாடல் தரங்கள் மற்றும் நியமங்களுக்கு இணங்கிச் செயற்படுவதுடன் அவற்றின் தொழிற்பாட்டிற்காக சுற்றாடல் பாதுகாப்பு உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டும். சுமுகமான சுற்றாடல் பாதுகாப்பு உரிமச் செயற்பாட்டிற்கான ஒருங்கிணைப்பு மற்றும் வசதிப்படுத்தலுக்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபை பல நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தியுள்ளது

புதிய கைத்தொழிற் செயன்முறைகளைத் தாபிப்பதற்கு முன்னர் களங்களுக்கான சுற்றாடல் விதப்புரைகளைப் பெற்றுக்கொள்ளுவது சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு முக்கியமான மூலோபாயமாகும். தொழிற்பாட்டின் பூர்வாங்கக் கட்டத்திலேயே சுற்றாடல் மாசுபடுவதைக் கட்டுப்படுத்துவதற்கு சுற்றாடலுக்கும் தொழில்முயற்சியாளர்களுக்கும் இச்செயற்பாடு பயனளிக்கின்றது. அதற்கிணங்க, 2021 இல், புகை மற்றும் வெளிப்போக்கு வெளியேற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கான வழிகாட்டலை வழங்குவதன் மூலம் 1046 சுற்றாடல் விதப்புரைகளை மத்திய சுற்றாடல் அதிகாரசபை வழங்கியுள்ளது.

சுற்றாடல் தரங்கள் மற்றும் நியமங்களுக்கு இணங்கியொழுகுவதன் மூலம் கைத்தொழில் செயற்பாடுகளால் உருவாகும் திரவ, திண்ம அல்லது புகை வெளியேற்றங்களைக் குறைத்துக் கட்டுப்படுத்த முடியும். 2021 ஆம் ஆண்டில் 10,414 உயர் மாசுறுதல் கைத்தொழில்கள் மற்றும் 7,772 நடுத்தர மாசுறுதல் கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை அதிகாரசபை வழங்கியுள்ளதுடன், இவை மொத்த உயர் மற்றும் நடுத்தர வகை மாசுறுதல் கைத்தொழில்களில் முறையே 70% மற்றும் 75% ஆகும்.

முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள கைத்தொழில் செயற்பாடுகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தின் அமுலாக்கம், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஒத்திசைவுடன் முதலீட்டுச்சபையினால் மேற்கொள்ளப் படுகின்றது. 2021 இல், ஒத்திசைவுச் செயன்முறையின் ஊடாக வழிகாட்டலை வழங்குவதன் மூலம் 1,118 கைத்தொழில்களின் மூலமான மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

முதலீட்டுச் சபை நாடளாவிய ரீதியில் 12 ஏற்றுமதி பதனிடும் வலயங்களைக் கொண்டுள்ளதோடு, மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட தரங்கள் மற்றும் நியமங்களுக்கு இணங்குமாறு முதலீட்டுச் சபையின் வலய முகாமைத்துவத்திற்கு பணிப்புரை விடுப்பதன் மூலம் அவற்றின் வெளியேற்றங்கள்/ வெளிப்போக்குகளை கட்டுப்படுத்துகின்றது. 2021 ஆம் ஆண்டில், 05 முதலீட்டுச் சபை வலயங்கள் சுற்றாடல் நியமங்களுக்கு இணங்கி, சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை பெற்றுக் கொண்டதுடன், தரங்களுக்கு இணங்காதமைக்காக சீதாவக்க முதலீட்டுச் சபை வலயங்களுக்கெதிராக அதிகாரசபை சட்ட நடவடிக்கை முன்னெடுத்துள்ளது.

2008.01.25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தற்கமைவாக குறைந்த மாசுறுதல் கைத்தொழில்களுக்கான சு.பா.உ.

திட்டத்தை அமுல்படுத்துதல். உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு கையளிக்கப் பட்டுள்ளது. சு.பா.உ. செயன்முறையை உள்ளூராட்சி அதிகாரசபை ஊழியர்களிடையே வினைத்திறன்மிக்க வகையில் அமுல்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்குவதற்காக அதிகாரசபையானது இலங்கை உள்ளூராட்சி நிறுவகத்துடன் இணைந்து அனைத்து உள்ளூராட்சி அதிகாரசபைகளையும் உள்ளடக்கி 4 இணையவழிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது.
சு.பா.உ. நடைமுறைக் கையேடு மீளாய்வு செய்யப்பட்டு, குறைந்த மாசுறுதல் கைத்தொழில்களுக்கு சு.பா.உ. வழங்குவது தொடர்பாக உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு வழிகாட்டல்களை வழங்குவதற்காக மீள்பதிப்பு செய்யப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சுற்றாடல் தரங்கள் மற்றும் நியமங்களுக்கு அப்பால் இணக்கத்தை அடைந்துள்ள கைத்தொழில்கள் பாராட்டப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டும். இதேபோன்ற வகைக் கைத்தொழில்களிடையே போட்டியைத் முன்னெடுப்பதன் மூலம் மாசுச் சுமையைக் குறைப்பதற்கு இந்த மூலோபாயம் கைத்தொழில்களை ஊக்குவிக்கும். இச்சூழமைவில், நாட்டின் சுற்றாடல் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்த கைத்தொழில்களை அங்கீகரித்து விருது வழங்குவதற்காக ஜனாதிபதி சுற்றாடல் விருதுகள் நிகழ்ச்சித்திட்டத்தை (PEA) மத்திய சுற்றாடல் அதிகாரசபை அறிமுகப்படுத்தியுள்ளது. 2021 ஆம் ஆண்டில், கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறையின் கீழ் 72 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.
ஏனைய பங்கீடுபாட்டாளர்களின் ஆதரவின்றி ஓர் அமைப்பினால் சுற்றாடலைப் பாதுகாக்கவோ முகாமை செய்யவோ முடியாது என்னும் அபிப்பிராயத்தை மத்திய சுற்றாடல் அதிகாரசபை கொண்டுள்ளது. ஆகவே, ஏனைய நிறுவனங்களிடமிருந்து தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் சுற்றாடலின் தரத்தை மேம்படுத்துவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை பங்களிப்பு வழங்குகின்றது.

களனி ஆற்றுப்படுக்கை மீதான அமைச்சரவை விஞ்ஞாபனம், கைத்தொழில் கழிவுகள் வெளியேற்றத்திலிருந்து களனி ஆற்றைப் பாதுகாப்பதற்கு உயர் மற்றும் நடுத்தர மாசுபடுத்தலை ஏற்படுத்தும் நிறுவனங்களைக் கண்டறிவதில் காணப்படும் மட்டுப்பாடுகளைக் குறித்துரைக்கின்றது. இதற்கிணங்க, களனி ஆற்றுப்படுக்கையில் புதிய கைத்தொழில்களை அனுமதிப்பதற்கான தொழில்நுட்ப விதப்புரைகளை வழங்குவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஒரு குழுவை நியமித்துள்ளது. இக்குழுவில் முதலீட்டுச் சபை (BOI), தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் (ITI), கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆகியவற்றின் உறுப்பினர்கள் உள்ளனர். 2021 ஆம் ஆண்டில், அதிகாரசபை 8 கூட்டங்களை நடாத்தி, தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் 55 கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்துள்ளதுடன், பிரதானமாக களனி ஆறு மற்றும் ஏனைய பெறுகைச் சுற்றாடல்களுக்கான வெளியேற்றங்கள் மற்றும் வெளிப்போக்குகளை அதனால் கட்டுப்படுத்தவும் முடிந்தது.

எந்தவொரு கருத்திட்டமும் அதன் திட்டமிடல் நிலையில் சுற்றாடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியிருப்பின், அது அபிவிருத்தி நடவடிக்கைகளினால் ஏற்படும் தாக்கங்களை இனங்கண்டு சுற்றாடல் மாசடைதலுக்கு எதிரான தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவும். இச்செயன்முறையை நடைமுறைப் படுத்துவதற்கான சட்டரீதியான கருவி சுற்றாடல் தாக்க மதிப்பீடு (சு.தா.ம.) ஆகும். 2021 ஆம் ஆண்டில் EPC அலகு, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 18 கருத்திட்டங்கள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் 43 கருத்திட்டங்கள் ஆகியவற்றிற்கான வழிகாட்டல்களை வழங்குவதற்காக தொழில்நுட்பக் குழுக்களில் கலந்து கொண்டுள்ளது. அதிகாரசபையின் நோக்கெல்லையின் கீழ் வரும் பாரியளவிலான கருத்திட்டங்களில் மாசுக் கட்டுப்பாட்டுக்கான வழிகாட்டல்களை வழங்குவதற்காக 73 தொழில்நுட்பக் குழுக்களிலும் கலந்துகொண்டுள்ளது.

கழிவுகளை ஏற்றிச்செல்லும் தாங்கிகளின் (Gully Bowser) சேவைகள் மாசுக் கட்டுப்பாட்டுக்கு முக்கிய பங்கு வகிக்கின்றன, ஏனெனில் அவை தொழில்துறைக் கழிவுகளை பாதுகாப்பான அகற்றல் தளங்களுக்கு கொண்டு செல்கின்றன.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 2008.01.25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளிலிருந்து உற்பத்தியாகும் கழிவுநீரை கொண்டு செல்வதில் ஈடுபட்டுள்ள கழிவுகளை ஏற்றிச்செல்லும் தாங்கிகளின் சேவை வழங்குநர்களை ஒழுங்குபடுத்துவதற்கான பதிவு நடைமுறையை முன்னெடுத்துள்ளது. 2020/2021 ஆம் ஆண்டிற்காக 27 கழிவுகளை ஏற்றிச்செல்லும் தாங்கிகளின் சேவை வழங்குநர்கள் பதிவு செய்யப்பட்டு, அவர்களை ஒழுங்குபடுத்துவதற்கான பயிற்சித் திட்டமும் நடத்தப்பட்டது.

சு.பா.உ. திட்டத்தின் நடைமுறைப் படுத்தலுக்காகத் தேசிய மட்டக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் தயாரிப்பு பிரதானமான செயற்பாடுகளில் ஒன்றாகும். நாடு முழுவதும் சு.பா.உ. திட்டத்தை ஒழுங்கமைப்பதற்கு வழிகாட்டல்களை விருத்தி செய்யும் பணி 2019 இல் மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்டது. அதன் விளைவாக, பிராந்திய அலுவலகமொன்றினால் சு.பா.உ. வழங்கப்படுவதற்குத் தேவைப்படும் அனைத்துத் தகவல்களும் உள்ளடங்கிய சு.பா.உ. வழிகாட்டியொன்று சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டது. 2021 ஆம் ஆண்டில், இவ்வழிகாட்டி தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு விநியோகத்திற்காக அச்சிடப்பட்டது.

சுற்றாடலின் தரத்தைப் பேணுவதற்கு, தொழில்நுட்ப ஆலோசனைச் சேவைகள் மற்றும் சுற்றாடல் கண்காணிப்பு என்பன சுற்றாடல் இணக்கத்தின் இன்றியமையாத ஆக்கக்கூறாகும்.

நாடளாவிய ரீதியிலுள்ள கைத்தொழில்களின் பரிசோதனைத் தேவைகளை மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் பூர்த்தி செய்ய முடியாததால் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூடங்கள் மற்றும் ஆலோசகர்களாக முறையே 37 ஆய்வுகூடங்கள் மற்றும் 73 ஆலோசகர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட சுற்றாடல் கண்காணிப்பு ஆய்வுகூடங்களை ஒழுங்குபடுத்துவதற்காக, ISO 17025 இனை அமுல்படுத்துவது தொடர்பான தேவைப்பாடுகள் தொடர்பாக 2021 ஆம் ஆண்டில் இணையவழி விழிப்புணர்வுச் செயலமர்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ள புதிய ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதற்கான ஒரு வழிகாட்டல் 2021 ஆம் ஆண்டில், தயாரிக்கப்பட்டதுடன், மண்ணில் ஊடுருவும் வீதத்தை அளவிடுவது தொடர்பான 01 இணையவழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும் நடாத்தப்பட்டது.

கடமைகளை நிறைவேற்றும்போது, உரிய பணித் துறைகளில் கொள்திறன்களையும் இயலுமைகளையும் கட்டியெழுப்புவது ஒரு முக்கிய கூறாகும். 2021 ஆம் ஆண்டில், தேசிய தூய உற்பத்தி நிலையத்தினால் நடாத்தப்பட்ட மாசுக் கட்டுப்பாட்டு உத்திகள் பற்றிய 3 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 05 உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

2.2 ஆய்வுகூடச் சேவைகள் அலகு

ஆய்வுகூடச் சேவை அலகானது வளி வள முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு அலகு மற்றும் நீரின் தரக் கண்காணிப்பு அலகு என இரண்டு உப அலகுகளைக் கொண்டுள்ளது. அவை பிரதானமாக கீழே குறிப்பிட்டுள்ளவாறாகப் பணிகளைச் மேற்கொள்கின்றன.

✓ CEA இன் ஏனைய பிரிவுகள்/ மாகாண அலுவலகங்களுக்கு பகுப்பாய்வுச் சேவை வழங்குதல்.
✓ சுற்றாடல் தராதரங்களின் இணக்கத்தைக் கண்காணித்தல்.
✓ தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களில் சுற்றுப்புற நீர் மற்றும் வளியைக் கண்காணித்தல்.
✓ வளி, ஒலி அதிர்வு மற்றும் நீரின் தரம் தொடர்பாக சுற்றாடல் துறையில் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளல்.
✓ வளித்தரம், நீரின் தரம் மற்றும் ஒலி மீதான ஒழுங்குவிதிகளின் உருவாக்கம்.

2.2.1 வளி வள முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு அலகு

2.2.1.1 அறிமுகம்

வளி வள முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு அலகு என்பது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் கீழ் தொழிற்படும் ஆய்வுகூட சேவைகள் அலகின் ஒரு பிரிவாகும். 2021 ஆம் ஆண்டிற்கான, அலகினால் மேற்கொள்ளப்படும் கடமைகள் கீழே சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

A. ஒழுங்குபடுத்தும் பணிகள் - ஒழுங்கு விதிகள் தயாரிப்பு, ஒழுங்குவிதிகள் திருத்தம், ஒழுங்குவிதிகளின் நிர்வாகம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது சுற்றாடல் பாதுகாப்பிற்கான முகாமைத்துவத்தைக் கொண்டிருப்பதுடன், அதன் மூலம் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளினால் ஏற்படும் சுற்றாடல் மாசடைதல் கட்டுப்பாட்டுக்கான மைய முகவராண்மையாகவும் செயற்படுகின்றது.

I. 1996 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (ஒலிக் கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளைத் தரமுயர்த்தல்

பரந்தளவிலான செயற்பாடுகள் தற்போதுள்ள ஒழுங்குமுறைகளுடன் ஒவ்வாத ஒலிகளை எழுப்புவதால் நாட்டில் தற்போது நிலவும் ஒலி தொடர்பான பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக, 2019 நவம்பர் 01 ஆம் திகதிய 394/4599/19 ஆம் இலக்க சபைப் பத்திரத்தை சமர்ப்பித்ததன் மீது, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையானது 1996 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (ஒலிக் கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளை தரமுயர்த்துவதற்குத் தீர்மானித்தது.

அதற்கிணங்க, 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (ஒலிக் கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகளை திருத்துவதற்கான ஆலோசனை சேவைகளை வழங்கும் பணி 2021 ஏப்ரல் 05 ஆம் திகதி நன்மதிப்பு வாய்ந்த ஆலோசகருக்கு வழங்கப்பட்டதுடன் முதலாவது தொழில்நுட்பக் கூட்டம் 2021 ஏப்ரல் 24 ஆம் திகதி மெய்நிகர் தளத்தினூடாக நடைபெற்றது. தேசிய சுற்றாடல் ஒலி ஒழுங்குவிதிகளின் முதலாவது வரைவு 06.06.2021 இல் ஆலோசகரினால் சமர்ப்பிக்கப்பட்டதுடன், ஒலி ஒழுங்கு விதிகளின் முதலாவது வரைவிற்கான ஆலோசனைகள் மீது பேச்சுவார்த்தைகளை நடத்தி அவற்றை அமுல்படுத்துவதற்காக 2021 ஜூன் 15 ஆம் திகதி இணையவழிக் கூட்டமும் நடைபெற்றது. தற்போது ஒலி ஒழுங்குவிதிகளின் இறுதி வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது இணையவழிக் கூட்டம் சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டாளர்களுடன் 22.12.2021 இல் நடைபெற்றது.

II. வளி, எரிபொருள் மற்றும் வாகன இறக்குமதிக்கான இணைந்த வர்த்தமானி தயாரிப்பு

மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது, வளி, எரிபொருள் மற்றும் வாகன வெளியேற்றுகைகள் பற்றிய விடயம் தொடர்பாக, யூரோ 4 மற்றும் அதற்கு சமமான தரநியமங்கள் தவிர்ந்த நான்கு தனித்தனி ஒழுங்குவிதிகளைத் (2003, 2008, 2014 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில்) தற்போது கொண்டுள்ளது. சட்ட வரைஞர்களின் ஆலோசனைக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட நான்கு வர்த்தமானிகளையும் ஒரே வர்த்தமானியில், இணைக்கும் செயன்முறையை மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் சுற்றாடல் அமைச்சும் ஆரம்பித்துள்ளன. தற்போது இணைந்த வர்த்தமானியின் இறுதி வரைவு, பல்வேறு கூட்டங்கள் நடத்தப்பட்ட பின்னர், சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

III. **வாகன ஒலிகருவிகள் மற்றும் வாகனப் போக்குவரத்துடன் தொடர்புடைய ஏனைய ஒலிகளுடன் (இயந்திரங்கள், சைலன்சர்கள், தொலைக்காட்சி, ஒலி முறைமைகள்) தொடர்புடைய வளி மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்கான ஒழுங்கு விதியொன்றின் தயாரிப்பு**

வாகன ஒலிகருவிகளால் எழும் ஒலியை ஒழுங்குறுத்துவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 2011.12.29 ஆம் திகதிய 1738/37 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தேசிய சுற்றாடல் (வாகன ஒலியெழுப்பிகள்) ஒழுங்கு விதிகளை வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது. அந்த ஒழுங்கு விதிகளுக்கு மேலதிகமாக, வாகன ஒலியெழுப்பிகள், இயந்திரங்கள், சைலன்சர்கள் மற்றும் வாகனங்களில் இணைக்கப்பட்டுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் ஒலி முறைமைகளிலிருந்து உருவாக்கப்படும் ஏனைய ஒலிகளுடன் தொடர்புடைய ஒலி மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்கான நியமங்களைத் தயாரிக்குமாறு சுற்றாடல் அமைச்சின் செயலாளரிடமிருந்து கோரிக்கை எழுந்துள்ளது. அதற்கிணங்க, வாகன இயந்திரம், சைலன்சர் மற்றும் வாகனத்துடன் தொடர்புடைய ஒலி அமைப்புகளிலிருந்து எழும் ஒலிகளைக் கட்டுப்படுத்துவதற்கான தரநியமங்களைத் தயாரிப்பதற்கான குழுவொன்றை நியமிப்பதற்காக 16.11.2021 ஆம் திகதி ஒரு கூட்டம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களின் உதவியுடன் நடாத்தப்பட்ட சில தொழில் நுட்பக் குழுக் கூட்டங்களுடன் ஒலியெழுப்பிகளுக்கான ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதற்காக ஒலி மட்ட அளவீட்டுமானியை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸ் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

IV. ***நிலையான மூலங்களின் வெளியேற்றம் மீதான ஒழுங்குவிதிகளை மீளாய்தல்***

காரீயம் மற்றும் பாதரசத்திற்கான கடுமையான புகை வெளியேற்ற வரம்புகளை அடைவதற்கு கைத்தொழிலாளர்கள் இயலாத நிலையில் இருப்பதாகக் கூறி, கழிவுகளிலிருந்து சக்திக் கருத்திட்டங்களுக்கான சு.தா.ம. கூட்டமொன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் வகையில், நிலையான மூலப் புகை வெளியேற்ற ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்வதற்கான தேவை முதலில் எழுப்பப்பட்டது. இதற்கிணங்க, மேற்படி ஒழுங்குவிதிகள் தொடர்பாக 2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கற்கையின் அடிப்படையில் ஒழுங்குவிதிகளை உருவாக்குவதில் SLEMA இன் முன்னைய ஈடுபாட்டைக் கருத்திற்கொண்டு, ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்வதற்கான பணி SLEMA இடம் ஒப்படைக்கப்பட்டது. அதனையடுத்து, 2018/11/29 ஆம் திகதி SLEMA மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு இடையில் ஓர் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கையில் மூன்று பணிகள் அடங்கியிருந்தன;

1. நிலையான மூலங்களுக்கான வெளியேற்றுகைத் தராதரங்களை மீளாய்தல் மீதான இறுதி அறிக்கை தயாரிப்பு
2. சொல்லப்பட்ட தராதரங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடைமுறைக்கோவை தயாரிப்பு
3. பயிற்சிக் கையேடு தயாரிப்பு மற்றும் நிலையான மூலங்களுக்கான வெளியேற்றுகைத் தராதரங்களை நடைமுறைப்படுத்தல் பற்றியதொரு பயிற்சி.

ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலச்சட்டகத்தின் பிரகாரம், பணிகளை முடிப்பதற்கான இறுதித்திகதி 31/07/2019 ஆகும். துரதிர்ஷ்டவசமாக, பணிகளை நிறைவேற்றுவதற்கான காலச்சட்டகத்தை SLEMA இனால் பூர்த்தி செய்ய முடியவில்லை. எனவே, ஒப்பந்தத்தின் காலச்சட்டகத்தைப் பூர்த்தி செய்யத் தவறியமை, SLEMA மற்றும் ம.சு.அ. உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற கூட்டமொன்றில் கவனத்திற் கொள்ளப்பட்டதோடு, SLEMA மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு இடையிலான ஒப்பந்த உடன்படிக்கையை SLEMA இனால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய காலச்சட்டகத்திற்கிணங்க மாற்றியமைப்பதற்கான கூட்டுத் தீர்மானமொன்றும் மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க, இந்த உடன்படிக்கையின் பெறுபேறுகளை அடைவதற்கான புதிய காலச்சட்டகத்தை SLEMA சமர்ப்பித்துள்ளதுடன், அது அவசியமான நடவடிக்கைகளுக்காக சட்ட அலகிற்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

B. **தேசிய சுற்றுப்புற வளித்தரக் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம்**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது பத்தரமுல்லை மற்றும் கண்டி அத்துடன் கோட்டை புகையிரத கண்காணிப்பு நிலையம் ஆகிய இரு நிகழ்நேர தானியங்கி கண்காணிப்பு நிலையங்களை இயக்கி வருகின்றது.

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் வாகனப் புகை வெளியேற்ற நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், பத்தரமுல்லை மற்றும் கண்டி நகரங்களில் பெறப்பட்டு செயற்படுத்தப்பட்டு 2019 சனவரி முதல் இயக்கப்படுகின்றது.

இந்த இரண்டு நிகழ்நேர கண்காணிப்பு நிலையங்களும் ஒழுங்குபடுத்தப்பட்ட அளவுகோல்களையுடைய வளி மாசுபடுத்திகளை அளவிடுகின்றன; PM_{10} (10 மைக்ரானுக்கும் குறைவான ஏரோடைனமிக் விட்டத்தின் துகள்கள்), $PM_{2.5}$ (2.5 மைக்ரானுக்கும் குறைவான ஏரோடைனமிக் விட்டத்தின் துகள்கள்), நைட்ரஜன் டை ஆக்சைட் (NO_2), சல்பர் டைஆக்சைட் (SO_2), கார்பன் மோனாக்சைட் (CO) & இணைப்பு வானிலை அளவுருக்களுடன் ஓசோன் (O_3).

கண்காணிப்பு நிலையத்தின் பராமரிப்பிற்கு தேவையான உதிரிப் பாகங்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்கான நிதிப் பற்றாக்குறை காரணமாக AAQMS இன் செயற்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டதால், 2021 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களுக்கான (ஜனவரி முதல் மே வரை) AAQMS தரவுகளை மாத்திரமே அதிகாரசபையினால் பெற முடிந்தது. தற்போது, உதிரிப்பாகங்கள் மற்றும் சேவைகளுக்கான பெறுகைச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கோட்டை கண்காணிப்பு நிலையம் சல்பர் டை ஆக்சைட் (SO_2) மற்றும் நைட்ரஜன் டை ஆக்சைட் (NO^2) வளி மாசுபடுத்திகளை ஈரமான இரசாயன முறைகளைப் பயன்படுத்தி அளவிடுகின்றது.

வளித்தரக் கண்காணிப்பின் பெறுபேறுகள்– பின்னிணைப்பு I

(a) 2021 ஆம் ஆண்டில் (ஜனவரி முதல் மே வரை) AAQMS *பத்தரமுல்லையில் ஒழுங்குபடுத்தப்பட்ட மாசாக்கிகளுக்கான மாதாந்த சராசரிகள்*

(b) 2021 ஆம் ஆண்டில்(ஜனவரி முதல் மே வரை) AAQMS *கண்டியில் ஒழுங்குபடுத்தப்பட்ட மாசாக்கிகளுக்கான மாதாந்த சராசரிகள்*

மாதம்	O_3 Conc இன் சராசரி	CO Conc இன் சராசரி	NO2 Conc இன் சராசரி	SO2 Conc இன் சராசரி	$PM_{2.5}$ Conc இன் சராசரி	PM_{10} Conc இன் சராசரி
சன.	15.64	527	23.49		28.85	42.42
பெப்.	23.70	463	24.07		35.74	53.96
மார்.	17.47	679	23.42	4.49	33.06	46.61
ஏப்.	14.36	431	17.90	4.07	22.71	40.78
மே	8.06	417	16.62	4.30	13.87	27.55
மொத்தம்	15.95	479	21.25	4.24	27.26	42.43

மாதம்	O3 Conc இன் சராசரி	CO Conc இன் சராசரி	NO2 Conc இன் சராசரி	SO2 Conc இன் சராசரி	$PM_{2.5}$ Conc இன் சராசரி	PM_{10} Conc இன் சராசரி
சன.	14.75	573.85	10.79	1.24	11.37	30.96
பெப்.	30.50	1032.47	10.27	0.00	21.01	45.13
மார்.	11.93	751.79	20.87	1.69	18.74	0.00
ஏப்.	17.63	483.93	16.98	1.16	24.09	51.39
மே	13.54	245.47	7.91	0.44	7.34	26.70
மொத்தம்	17.12	488.23	11.92	0.88	14.94	37.52

கொழும்பு, கோட்டையில் *ஒழுங்குபடுத்தப்பட்ட மாசாக்கிகளுக்கான மாதாந்த சராசரிகள்*

மாசாக்கிகள்	**வருடாந்த சராசரிப் பெறுமதி**
PM_{10} (µg/m^3)	**57**
NO_2 (ppm)	8.5282E-09
SO_2 (ppm)	4.84E-09

C. 2021 இல் தொழில்நுட்ப ஆலோசனை/உதவித் தொழிற்பாடு

இல	**தொழில்நுட்ப ஆலோசனை/உதவிச் செயற்பாட்டின் வகை**	**வழங்கிய சேவைகள்**
4.1	ஏனைய நிறுவனங்களினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுக்களில் சேவையாற்றல்	02
4.2	கைத்தொழில்கள், கருத்திட்டங்களை மேற்கொள்வோர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் பெற்றுக்கொண்ட தொழில்நுட்ப முன்மொழிவுகளை மதிப்பிடல்	07
4.3	சு.பா.உ. செயன்முறையைக் கையாள்வதற்கு தொழில்நுட்ப உதவி வழங்குதல்	05
4.4	தொழில்நுட்பக் கூட்டங்களும் அவைகளும்	08
4.5	குறுங்கால உள்ளகப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கல்வியியலாளர்களின் பயிற்சி	02
4.6	நீதிமன்றங்கள்/மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சுற்றாடல் சட்டவாக்கங்கள் மீதான நிபுணத்துவ சாட்சியங்கள் வழங்குதல்	03

D. முறைப்பாடுகளைக் கையாளுதல் மற்றும் இசைவைக் கண்காணித்தலுக்குத் தொழில்நுட்ப வழிகாட்டல் மற்றும் உதவி வழங்குதல்


சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்குவதற்காக வளித்தரம் மற்றும் ஒலி மட்டங்களுக்கான இணக்கக் கண்காணிப்பு அறிக்கைகளை வழங்குதல், முறைப்பாடுகளை விசாரித்தல், வர்த்தக அடிப்படை மற்றும் சட்டத் தேவைப்பாடுகளின் வழமையான கண்காணிப்பு ஆகியவற்றில் வளி வள முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புப் பிரிவு ஈடுபடுகின்றது.


இல	**அளவீடுகளின் ஊடாக வழங்கப்பட்ட சேவைகள்**		**வழங்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை**
6.1	ஒலி மட்ட அளவீடுகள்	பகல் நேரம்	48
6.2		பகல் & இரவு நேரம்	39
6.3	வளியிலுள்ள தூசி வெளியேற்றம் (TSPM)		21
6.4	அஸ்பெஸ்டஸ் இழைய வெளியேற்றம்		05

6.5	துகள்மப் பொருள் (PM_{10}) அளவீடுகள்	2
6.6	Fugitive Non – Methane Volatile Organic Compounds (NMVOC)	11
6.7	SO_2, NO_2	03
6.8	குறித்துரைக்கப்படாத அளவீடுகள்(யானை வெடிகள் 02, சுதந்திர தினம் 01)	03

E. சுற்றாடல் அளவீடுகள் ஊடாக சேவைகளை வழங்குதன் மூலம் வருமானம் ஈட்டுதல்


2021 ஆம் ஆண்டில், ARM&M அலகு அளவீடுகள் ஊடாக சேவைகளை வழங்குவதன் மூலம் **2,729,488.52 ரூபாவை** ஈட்டியதுடன் ஒழுங்குபடுத்தல் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட அளவீடுகள் இலவசமாக மேற்கொள்ளப்பட்டன.








பின்னிணைப்பு I – வளித்தரக் கண்காணிப்பின் பெறுபேறுகள்


I. 2021 இல் பத்தரமுல்லை AAQMS இல் மாதாந்த சராசரி செறிவு மாறுபாடு
















II. 2021 இல் கண்டி AAQMS இல் மாதாந்த சராசரி செறிவு மாறுபாடு


கண்டி- [O3]- மாதாந்த சராசரி
ppb
35
30
25
20
15
10
5
01, Jan
02, Feb
03, Mar
04, Apr
05, May


கண்டி - [CO]- மாதாந்த சராசரி
ppb
1,200
1,000
800
600
400
200
0
01, Jan
02, Feb
03, Mar
04, Apr
05, May



கண்டி -[NO2]- மாதாந்த சராசரி
ppb
25
20
15
10
5
0
01, Jan
02, Feb
03, Mar
04, Apr
05, May






III. கோட்டை AAQMS இல் மாதாந்த சராசரி செறிவு மாறுபாடு


(a) கொழும்பு, கோட்டை கண்காணிப்பு நிலையத்தில் PM_{10} செறிவின் மாதாந்த வேறுபாடு, 2021



(b) கொழும்பு, கோட்டை கண்காணிப்பு நிலையத்தில் NOx இன் மாதாந்த வேறுபாடு, 2021



(c) கொழும்பு, கோட்டை கண்காணிப்பு நிலையத்தில் Sox செறிவின் மாதாந்த வேறுபாடு 2021



2.2.2 நீரின் தரக் கண்காணிப்பு அலகு


A. அறிமுகம்

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 4 ஆ பிரிவு மற்றும் உரிய திருத்தங்களுக்கமைவாக சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களைப் பெற வேண்டிய குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு பகுப்பாய்வு அறிக்கையை வழங்குதல் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆய்வுகூடங்களின் பிரதான பணியாகும். அதற்கிணங்க, சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற்றுக்கொள்ளல், அவற்றினைப் புதுப்பித்தல், சட்டப் பிரச்சினைகள் மற்றும் மேல் மாகாணத்தில் அமைந்துள்ள (கொழும்பு மற்றும் களுத்துறை) கைத்தொழில்களின் கண்காணிப்பு ஆகியவற்றிற்காகப் பகுப்பாய்வு அறிக்கைகள் வழங்கப்படுகின்றன.

மேலும், மாகாண ஆய்வுகூடங்களால் மேற்கொள்ளப்பட முடியாத சில அளவுருக்களுக்காக மாகாண ஆய்வுகூடங்களினால் சேகரிக்கப்படும் மாதிரிகளும் பரிசோதிக்கப்படுகின்றன. மேலும், ஆய்வகூட வலையமைப்பின் தேவைப்பாடுகளும் மத்திய ஆய்வுகூடத்தினால் நிறைவேற்றப்பட்டு ஒருங்கிணைக்கப்படும்.

B. மத்திய ஆய்வுகூடத்தினால் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைச் சேவைகள்

2021 ஆம் ஆண்டில் களனி கங்கையின் 17 மாதிரியிடல் இடங்கள், மாஓயாவின் 08 மாதிரியிடல் இடங்கள் மற்றும் தியவன்ன ஓயாவில் 08 மாதிரியிடல் இடங்கள் ஆகிய மூன்று பிரதான மேற்பரப்பு நீர்நிலைகள் திட்டமிட்டபடி கண்காணிக்கப்பட்டன. பல்வேறு நோக்கங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் மொத்த எண்ணிக்கை அட்டவணை I இல் விளக்கப்பட்டுள்ளது.



உரு 2 : 2021 இல் மத்திய ஆய்வுகூடத்தின் மாதிரியிடல் முன்னேற்றம்

C. தியவன்ன ஓயவில் பாசிப் படர்வினை ஆராய்தல் மற்றும் கண்காணித்தல்

மாசுறுதல் மூலங்களை ஆராய்வதற்காக, தியவன்ன ஓயாவின் கடுவெல நீரேந்து பிரதேசத்தில் முன்னரே இனங்காணப்பட்ட புள்ளி மற்றும் புள்ளிகளற்ற 42 மூலங்கள், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் பாதுகாப்பு அலகு மற்றும் SLRDC இன் கூட்டிணைவுடன் ஆய்வுகூடத்தினால் ஆராயப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

D. ISO/IEC 17025:2017 சான்றளிப்பு அந்தஸ்தை நடைமுறைப்படுத்தல்

2023 ஆம் ஆண்டிற்கு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ள ISO/IEC 17025:2017 இன் புதிய பதிப்பின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட தற்போதைய ஆய்வுகூட தர முகாமைத்துவ முறைமையை மீளாய்வு

செய்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆய்வுகூடம் 2021 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுத்திருந்தது. LQMS அமுலாக்கம் தொடர்பாக தேவையான அனைத்து நடவடிக்கைகளும் 2021 ஆம் ஆண்டில் வழக்கம் போல் முழுமையாக மேற்கொள்ளப்பட்டன. 2021 கண்காணிப்பு மதிப்பீடுகளில், நைட்ரேட் டோட்டல் பொஸ்பேற்று (TP), முழுமையாக இடைநீக்கம் செய்யப்பட்ட திடப் பொருட்கள் (TSS) மற்றும் முழுமையாக கரைந்த திண்மம் (TDS) போன்ற மேலும் நான்கு புதிய அளவுருக்களுக்கான அதன் வளவெல்லையை விரிவுபடுத்த ஆய்வுகூடம் 2021 ஆம் ஆண்டில் திட்டமிட்டிருந்தது. அதற்கிணங்க, அவசியமான அனைத்து தொழில்நுட்ப செயற்பாடுகளையும் பூர்த்தி செய்து, அனைத்து அளவுருக்களுக்கும் ITI இனால் நடாத்தப்பட்ட தகைமைப் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றி அனைத்து அளவுருக்களுக்கும் ஆய்வுகூடச் செயல்திறனுக்கான உயர் மட்ட தரப்படுத்தலைப் பெற்றுக்கொண்டது. 2022-2023 காலப்பகுதியில் அனைத்து மாகாண ஆய்வுகூடங்களுக்கும் அங்கீகாரம் பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், அவசியமான தொழில்நுட்ப நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

E. மத்திய ஆய்வுகூடப் பகுப்பாய்வுச் செயற்பாடுகளின் தரமுயர்த்தல் மற்றும் விரிவாக்கம்

I. நுண்ணுயிரியல் பகுப்பாய்வுப் பிரிவைத் தரமுயர்த்தல்

சான்றளிப்பு அந்தஸ்தைப் பெறுவதற்குத் அவசியமான தேவைப்பாடுகளுக்கமைய, நுண்ணுயிரியல் பகுப்பாய்வுப் பிரிவானது சரியான திட்டமிடல் மற்றும் சுற்றாடல் நிலைமையுடன் மேம்படுத்தப்பட்டது.

இப்பிரிவிற்கு புதிய ஆய்வுகூட தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டதோடு நுண்ணுயிரியல் பகுப்பாய்வை மேற்கொள்வதற்கு ஆய்வுகூட உத்தியோகத்தர்களுக்கு தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.



புதிதாகத் தாபிக்கப்பட்ட நுண்ணுயிரியல்

II. நுண் பிளாஸ்டிக் பகுப்பாய்வு வசதியை நிறுவுதல்

ஐக்கிய இராச்சியத்தின் சுற்றாடல், கடற்றொழில் மற்றும் விஞ்ஞானத்திற்கான நிலையம் 2021 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் நுண் பிளாஸ்டிக் பகுப்பாய்வு ஆய்வுகூடத்தை தாபிப்பதற்காக 1.34 மில்லியன் ரூபா பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்களை வழங்கியுள்ளது.

அனைத்து ஆய்வுகூட உபகரணங்களும் CEFAS இனால் வழங்கப்பட்ட இணையவழிப் பயிற்சியின் மூலம் நிறுவப்பட்டுள்ளதுடன் ITI இன் ஒத்துழைப்புடன், 2022 ஆம் ஆண்டில், பிரதான ஆறு மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர் உட்செல்லும் இடத்தில் மைக்ரோ பிளாஸ்டிக் மாதிரியிடலை ஆரம்பிப்பதற்கு ஆய்வுகூடம் திட்டமிட்டுள்ளது .



உரு 3 : CEA இல் புதிதாகத் தாபிக்கப்பட்ட நுண் பிளாஸ்டிக் பகுப்பாய்வு ஆய்வுகூடம்

III. மத்திய ஆய்வுகூடத்தில் புதிய குளிரூட்டும் இயந்திரத்தை நிறுவுதல் மற்றும் பழுதடைந்த ஒளியை மாற்றுதல்

சான்றளிப்பு அந்தஸ்தை நடைமுறைப் படுத்துவதற்காகப் பேண வேண்டிய ஆய்வுகூட சுற்றுப்புறத் தேவைகள், 02 கண்டிஷன் இயந்திரங்களையும் எரிந்த விளக்குகளையும் மாற்றுவதன் மூலம் மேம்படுத்தப்பட்டன. இதற்காக ஆய்வுகூடத்தைப் பலப்படுத்தும் கருத்திட்டத்திற்கான 0.445 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.





F. மாகாண ஆய்வுகூடங்களின் பகுப்பாய்வுக் கொள்திறனைத் தரமுயர்த்துவதற்கான வசதி

I. அனைத்து ஆய்வுகூடங்களுக்கும் நீர்த்தர பரிசோதனைக் கருவிகளை வழங்குதல்

தளத்தில் கள அளவுருக்களை மேற்கொள்வதற்கு வேண்டிய 15 நீர்த்தர சரிபார்ப்பு கருவிகள், ஆய்வுகூடத்தை வலுப்படுத்தும் கருத்திட்டத்திலிருந்து ரூ.1.34 மில்லியன் மொத்த செலவில், அனைத்து ஆய்வுகூடங்களுக்கும் 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன. உபகரணங்களின் தொழிற்பாடு மற்றும் பராமரிப்புக்கான பயிற்சி, இணைய வழியிலும் நேரடியாகவும் பணியாட்டொகுதியினருக்கு வழங்கப்பட்டன.



உரு 4 : நீரின் தரப் பரிசோதனைக் கருவியின்

II. மாகாண மட்டத்தில் ஆய்வு கூடங்களை வலுப்படுத்தும் கருத்திட்டங்களை வலுப்படுத்துதல் மற்றும் நீரின் தரத்தை கண்காணித்தல் ஆகியவை மீதான கருத் திட்டத்திலிருந்து ஆய்வுகூடத் தேவைப்பாடுகளை வழங்குதல்.

மேற்குறிப்பிட்ட 10 பல்வகை வடிகட்டும் முறைமைக்கு மேலதிகமாக, 09 கையடக்க காற்றோட்ட பம்புகள், 03 மாதிரிகளை சேமித்து வைக்கும் குளிர்சாதனப் பெட்டிகள், 06 எடைத் தொகுப்புகள் மற்றும் 06 மைக்ரோ பைபெட்டுகள் மற்றும் இரசாயன, கண்ணாடிப் பொருட்கள், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் வழமையான நடவடிக்கைகளுக்காக அலுவலக உபகரணங்கள் ஆகியவை இந்தக் கருத்திட்டத்திலிருந்து வழங்கப்பட்டன. ஆய்வுகூட உபகரணங்களுக்கான செலவு ரூ.6.068 மில்லியன் ஆகும்.



உரு 6 : கிழக்கு மாகாண ஆய்வுகூடத்தில் கன்வர்டெய்னர் ஆய்வுகூடம்

III. மாகாண ஆய்வுகூடங்களுக்கான ஆய்வுகூட வசதிகளின் ஏற்பாடு

மாகாண ஆய்வுகூடங்களில் போதிய இடவசதி இல்லாதிருப்பதற்கான மாற்றீட்டை அறிமுகப்படுத்தியதன் மூலம், கிழக்கு மாகாண மற்றும் வடமத்திய மாகாண ஆய்வுகூடங்களுக்கு தேவையான வசதிகளுடன் கூடிய இரண்டு மாற்று கன்வடெய்னர் ஆய்வுகூடங்கள் வழங்கப்பட்டன. மேலும் மத்திய மற்றும் கம்பஹா மாவட்ட அலுவலகங்களில் உள்ள ஆய்வுகூட பணியாட்டொகுதியினரின் சுகாதார நிலையைப் பாதுகாக்கும் பொருட்டு இரண்டு புகைக் கவசங்களை நிறுவும் பணி நிறைவுற்றது.



உரு 5 : மத்திய மாகாண ஆய்வுகூடத்தில் புகைக் கவசம்

G. ஆய்வுகூடக் கழிவுகளுக்கான நிலைபேறான கழிவகற்றல் முறைமையின் அறிமுகம்

ஆய்வுகூடக் கழிவுகளைச் சுற்றாடலுக்குள் அகற்றுவதில் ஏற்படும் சுற்றாடல் தாக்கங்களைக் கருத்திற்கொண்டும், மண்ணின் நீர்வாழ் உயிரின மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரைப் பாதுகாத்து அவற்றைப் பேணுவதற்காகவும், இன்சீ எக்கோ சைக்கிள் பிரைவேட்

லிமிட்டெட் நிறுவனத்துடன் இணைந்து அனைத்து ஆய்வுகூடக் கழிவுகளுக்கும் ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு ஆய்வுகூடம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.




உரு 7 : ஒருங்கிணைந்த ஆய்வுகூட கழிவு முகாமைத்துவ முறைமையின் அங்குரார்ப்பணம்



உரு 8 : ம.சு.அ. கட்டடத்தில் தாபிக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ முறைமை

A . A மாகாணச் செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு


திட்டமிடப்பட்டவாறு, 2021 ஆம் ஆண்டில், மேற்பரப்பு மற்றும் கைத்தொழில் நீரியற்கழிவின் மாதிரிப் பகுப்பாய்வு மீதான அனைத்து மாகாண ஆய்வுகூடங்களினதும் வசதியேற்படுத்தல், ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அத்துடன் ஏனைய ஆய்வுகூடப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.



உரு 9 : அனைத்து ம.சு.அ. ஆய்வுகூடங்களினதும் மாதிரி செயலாற்றுகை

A . B வருமான உருவாக்கம்

மேற்பரப்பு மற்றும் கைத்தொழில் நீரியற்கழிவின் மாதிரிகள் மற்றும் பகுப்பாய்வு பற்றிய விபரங்கள் மேலுள்ள வரைபடங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளதுடன் ஆய்வுகூடப் பகுப்பாய்வினால் பெறப்பட்ட வருமானம் கீழே தரப்பட்டுள்ளது.



A . C அதிகாரசபையின் உள்ளகப் பிரிவிற்கும் வெளி அமைப்புக்களுக்கும் உதவி வழங்குதல்

அட்டவணை 1 :மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உள்ளகப் பிரிவிற்கும் ஏனைய வெளி அமைப்புகளுக்கும் உதவி வழங்குதல்

தொ.இ	விபரங்கள்	எண்.
01	சு.தா.ம./ஆ.சு.ம குழுக் கூட்டங்கள் மற்றும் பரிசோதனைகளில் பங்குபற்றல்	48
02	பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	21
03	விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்	08
04	களக் கல்வி நிகழ்ச்சித்திட்டம்	06
05	சுற்றாடல் ஆய்வுகூடங்கள் மற்றும் ஆலோசனைச் சேவைகளைக் கண்காணித்தல்	18
06	இணையவழிக் கண்காணிப்பு நிலைய விஜயம்– அம்பத்தலை	26
07	அவசரநிலைப் பரிசோதனை	06
08	ஏனையவை	04

A . D இளங்கலை மாணவரின் பயிற்சி.

கொவிட்-19 இன் புதிய வழமை நிலைமையின் கீழும், ஆய்வுகூடப் பகுப்பாய்வு, ஆய்வுகூட உபகரணங்களின் தொழிற்பாடு மற்றும் பேணுகை, ஆய்வுகூட சான்றளிப்பை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றில் 07 இளங்கலை மாணவர்கள் 3-6 மாத காலத்திற்குப் பயிற்றுவிக்கப்பட்டனர்.

A . E மீண்டெழும் ஒதுக்கீட்டின் முன்னேற்றம்

அட்டவணை 2 : மீண்டெழும் ஒதுக்கீட்டின் முன்னேற்றம்

நிதிக் குறியீடு	முன்மொழியப்பட்ட செயற்பாடுகள்	செலவு/ரூ
407-1.6.1	மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனைத்து ஆய்வுகூடங்களினதும் ஆய்வுகூட உபகரணங்களைத் திருத்துதல் மற்றும் மதிப்பாராய்வு செய்தல்	ரூ. 479,663.00
407-1.6.2	மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனைத்து ஆய்வுகூடங்களுக்குமான நுகர்வுப்பொருட்களின் பெறுகை	ரூ.1,782,743.80
407-1.6.3	ஆய்வுகூட சான்றளிப்பை நடைமுறைப்படுத்தல்	ரூ.175,010.00
407-1.6.4	ஆய்வுகூடப் பணியாட்டொகுதியினருக்கான பயிற்சி	ரூ.166,336.00

407-1.6.5	மாகாண ஆய்வுகூடத்தின் ஒருங்கிணைப்பு	ரூ.1,400.00
407-1.6.6	நீர், வளி மற்றும் ஒலிக் கண்காணிப்பு	ரூ.7,992.00
407-1.6.7	ஒருங்கிணைக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ முறைமை	ரூ.118,497.72
	மொத்தம்	**ரூ.2,731,642.52**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனைத்து ஆய்வுகூடங்களிலும் வழமையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மீண்டெழும் வரவு செலவுத் திட்டத்திலிருந்து 5.0 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனைத்து ஆய்வுகூடங்களுக்கும் இரசாயனப் பொருட்களைக் கொள்வனவு செய்தல், ஆய்வுகூட உபகரணங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் மத்திய ஆய்வுகூடத்தில் ஆய்வுகூட உபகரணங்களை மதிப்பாராய்வு செய்தல் என்பன இந்த நிதியத்தைப் பயன்படுத்தி பூர்த்தி செய்யப்பட்டன. மீண்டெழும் வரவு செலவுத் திட்டத்திலிருந்து நிறைவேற்றப்பட்ட செலவினங்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

சில நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள நிதியானது 2021 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனைத்து ஆய்வுகூடங்களுக்கும் அவற்றின் அர்ப்பணிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காகவும் பயன்படுத்தப்படும்.

.

அத்தியாயம் 3 : கழிவு முகாமைத்துவப் பிரிவு

இது புதிதாகத் தாபிக்கப்பட்ட பிரிவாகும். கீழே கலந்துரையாடப்பட்டவாறு கழிவு முகாமைத்துவப் பிரிவின் கீழ் இரண்டு அலகுகள் உள்ளன.

3.1 அபாயகரமான கழிவு மற்றும் இரசாயன முகாமைத்துவ அலகு

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கழிவு முகாமைத்துவப் பிரிவின் இரசாயன மற்றும் அபாயகரமான கழிவு முகாமைத்துவ அலகிற்குப் பின்வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

a) அபாயகரமான கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகளை நடைமுறைப் படுத்தல்
b) சர்வதேச உடன்படிக்கைகளைக் கையாளுதல்
c) இரசாயன முகாமைத்துவச் செயற்பாடுகள்
d) 2021 இன் செயற்றிட்டத்தில் இனங்காணப்பட்டவாறாக முகாமைத்துவச் செயற்பாடுகள்

A. இலங்கையில் அபாயகரமான கழிவு முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல்

அபாயகரமான கழிவு முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை (2008.02.01 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 2008 இன் 01 ஆம் இலக்க ஒழுங்குவிதிகள்) அமுல்படுத்துவதன் ஒரு பகுதியாக, 2021 ஆம் ஆண்டில் 329 உரிமங்கள் வழங்கப்பட்டதோடு, SWML இன் விநியோகத்தின் மூலம் ரூபா 1,925,513.00 ஈட்டப்பட்டது.

B. பேசல் சமவாயத்தின் அமுலாக்கம். கைத்தொழில்களுக்கான பேசல் சமவாயத்தின் 'B' பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள பொருட்களை இறக்குமதி செய்தல்

அபாயகரமான கழிவுகளின் எல்லை கடந்த நகர்வு மற்றும் அவற்றை அகற்றுவது தொடர்பான பேசல் சமவாயத்தை (BC) 1992.08.28 ஆம் திகதி இலங்கை ஏற்று அங்கீகரித்துள்ளதுடன், அதன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது பேசல் சமவாயத்தை நடைமுறைப் படுத்துவதற்கான தகுதிவாய்ந்த அதிகாரசபையாக நியமிக்கப்பட்டுள்ளது. சுற்றாடல் அமைச்சின் கீழ் தொழிற்படும் பேசல் சமவாயத்தின் நடைமுறைப் படுத்தலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழு, நாட்டில் அபாயகரமான கழிவுகளை முகாமை செய்வதற்கான தொழில்நுட்ப அம்சங்கள் தொடர்பான விடயங்களின் தீர்மானம் மேற்கொள்ளலில் அதிகாரசபைக்கு ஆதரவளிப்பதற்காக தொழில்நுட்ப நிபுணர் குழுவொன்றை (TEC) நியமித்துள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைமையில் இயங்கும் தொழில்நுட்ப நிபுணர் குழு, பேசல் பட்டியல் 'B' இல் மூலப்பொருட்களாக பட்டியலிடப்பட்டுள்ள கழிவுகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதியைக் கோரும் கருத்திட்டங்களுக்கான விதப்புரைகளையும் சமர்ப்பிக்கின்றது. (BC இன் 'A' பட்டியலில் உள்ள கழிவுகளை இறக்குமதி செய்வது அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தினால் தடை செய்யப்பட்டுள்ளது).

நாட்டிற்கு அபாயகரமான இரசாயனப் பொருட்கள் மற்றும் அபாயகரமான கழிவுப்பொருட்களை இறக்குமதி செய்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் 2013 ஜூன் 05 ஆம் திகதி 1813/14 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டன. இந்த ஒழுங்கு விதிகளை அமுல்படுத்துவதன் ஒரு பகுதியாக, 2021 ஆம் ஆண்டில் 343 இறக்குமதி அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. பட்டியல் B மூலப்பொருட்களுக்கான இறக்குமதி அனுமதிகளை வழங்குவதன் மூலம் ரூபா 4,270,350.00 வருமானம் ஈட்டப்பட்டது.

பேசல் கூட்டங்களின் பிரகாரம், பேசல் பட்டியல் "ஆ" இன் கீழ் கழிவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு 42 இறக்குமதி அனுமதிகள் வழங்கப் பட்டதோடு அதன் மூலம் ரூபா 460,000.00 வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டது. பேசல் பட்டியல் "ஆ" இன் கீழ் கழிவுகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்காக 04 தொழில்நுட்பக் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 168,298.00 ஆகும்.

அபாயகரமான கழிவுகளின் எல்லை கடந்த நகர்வு (ஏற்றுமதிகள் மற்றும் இடைத்தங்கல்கள்)

இலங்கையில் பேசல் சமவாயத்தை அமுல்படுத்துவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரசபையாக விளங்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை, 2021 ஆம் ஆண்டில், பேசல் சமவாயத்தின் பட்டியல்கள் "அ" மற்றும் "ஆ" இல் பட்டியலிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களின் 53 இடைத்தங்கல்கள் மற்றும் 18 ஏற்றுமதிகளுக்கான (எல்லை கடந்த நகர்வு) அனுமதிகளை வழங்கியுள்ளதுடன், ஏற்றுமதி சம்மதங்களை வழங்குவதன் மூலம் ரூபா 224,000.00 வருமானமும் ஈட்டப்பட்டது.

.

C. இரசாயன முகாமைத்துவம்

நடைமுறைப்படுத்தலின் பகுதியொன்றாக, இரசாயனக் களஞ்சியங்களுக்காக 55 சுற்றாடல் விதப்புரைகளையும் சில இரசாயன இறக்குமதிகளுக்காக 413 தடை நீக்க அனுமதிகளையும் இரசாயன முகாமைத்துவம் வழங்கியது. இரசாயன முகாமைத்துவச் செயற்பாடுகளிலிருந்தான மொத்த வருமானம் ரூ. 5,883,300.00.

ரொட்டடாம் சமவாயத்தை நடைமுறைப்படுத்தல் இரசாயனப் பொருட்களின் முகாமைத்துவம் தொடர்பில் கைத்தொழில் இரசாயனப் பொருட்களுக்கான இரண்டு தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதோடு, ஆண்டு முழுவதும் TACMIC கூட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 87,920.00 செலவிடப்பட்டது. TACMIC கூட்டங்களின் பிரகாரம், வெள்ளை ஆஸ்பெஸ்டாஸை இறக்குமதி செய்வதற்கு 109 இறக்குமதி அனுமதிகள் வழங்கப்பட்டதுடன், இதன் மூலம் ரூ. 1,357,050.00 வருமானம் ஈட்டப்பட்டது.

D. இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம்

நாட்டின் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ முறைமையைக் கருத்திற்கொள்ளும்போது, இது முறைமைசார் மற்றும் முறைசாராத் துறைச் சேகரிப்பாளர்கள் ஊடாக தொழிற்படுகின்றது. கணிசமான அளவு மின்-கழிவுகள் முறைசாரா துறை மூலம் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டு வருகின்றன. இந்த செயல்முறைகள் இயற்கையில் அடிப்படையானவை என்பதால், சுகாதாரம் மற்றும் சுற்றாடல் தாக்கங்களை உருவாக்குவதற்கான மிகப்பெரிய சாத்தியக்கூறுகள் உள்ளன. அபாயகரமான கழிவு மற்றும் இரசாயன முகாமைத்துவ அலகு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் மேல் மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்கள் இணைந்து இலங்கையின் வீட்டு மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் இலத்திரனியல் கழிவுகளை சேகரிப்பதற்காக மேல் மாகாணத்தில் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை, 11 உரிமம் பெற்ற இலத்திரனியல் கழிவு சேகரிப்பு கைத்தொழில்களின் பங்குபற்றலுடன் கூட்டாக நடத்தின. சேகரிக்கப்பட்ட இலத்திரனியல் கழிவுகளின் அளவு ஏறத்தாழ 4.2 தொன்கள் என்பதுடன் ரூ.429,585.00 தொகை அலகின் வரவுசெலவுத் திட்டத்திலிருந்து இதற்காக செலவிடப்பட்டது.












E. விழிப்புணர்வுச் சாதனங்கள் தயாரிப்பு


- பேசல் வழிகாட்டியின் 1,000 பிரதிகள் (ஊடகம்: ஆங்கிலம்)
- சிகிச்சைசார் கழிவு வழிகாட்டியின் 1,000 பிரதிகள் (ஊடகம்: ஆங்கிலம்)
- மேல் மாகாண இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் – 2021 இற்காக 150 பதாகைகள் தயாரிப்பு
- மேல் மாகாண இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் – 2021 இற்கான பின்புலத் தயாரிப்பு

பேசல் வழிகாட்டி மற்றும் சிகிச்சைசார் கழிவு வழிகாட்டி ஆகியவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்புக்கான தொகை ரூபா 306,000.00, அலகின் வரவுசெலவுத் திட்டத்திலிருந்து செலவிடப்பட்டது.









மொத்த செலவினக் கணிப்பீட்டின் பிரகாரம், அபாயகரமான கழிவு மற்றும் இரசாயன முகாமைத்துவ அலகு ரூ. 991,803.00 செலவிட்டுள்ளதுடன் 99.18 % நிதி முன்னேற்றத்தினையும் 2021 ஆம் ஆண்டில் அடைந்துள்ளது.

அத்துடன், கைத்தொழில்களுக்கு திட்டமிடப்பட்ட கழிவு முகாமைத்துவ உரிமம் வழங்கல், இறக்குமதி அனுமதிகள் மற்றும் சுற்றாடல் விதப்புரைகள் வழங்குதல் ஆகியவற்றினூடாகவும் அலகானது ரூ 12,763,263.00 இற்கும் அதிகமான தொகையை ஈட்டியுள்ளது.

3.2 திண்மக்கழிவு முகாமைத்துவ அலகு

நாட்டின் தூய்மையான மற்றும் சுகாதாரமான சுற்றாடல் என்ற தொலைநோக்குப் பார்வையை நோக்காகக் கொண்டு, கொள்கைகளை வகுத்தல், ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துதல் மற்றும் இலக்குக் குழுக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் என்பவற்றின் மூலம் நாட்டில் சரியான திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான தொழில்நுட்ப வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் கழிவு முகாமைத்துவப் பிரிவின் திண்மக் கழிவு முகாமைத்துவ அலகு தாபிக்கப்பட்டது.
திண்மக் கழிவு முகாமைத்துவ அலகு, மூன்று பிரிவுகளின் கீழ் தனது பணிகளை மேற்கொள்கின்றது.

1. கொள்கை மற்றும் தொழில்நுட்ப இடையீடுகள்.
2. ஒழுங்குபடுத்தல் மற்றும் சட்ட அமுலாக்கம்.
3. விசேட கருத்திட்டங்கள்.

A. திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான கொள்கை மற்றும் தொழில்நுட்ப இடையீடுகள்.

திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான கொள்கைகள்/உபாயங்கள்/ வழிகாட்டல்கள்/திட்டங்களுக்கான தேசிய/ மாகாண/மாவட்ட மட்டத்திலான முன்னெடுப்புக்கள் கொள்கை மற்றும் தொழில்நுட்ப இடையீடுகள் பிரிவின் கீழ் வருகின்றன.

I. SWM மீதான 3R எண்ணக்கருவின் நடைமுறைப்படுத்தல்

திண்மக்கழிவு முகாமைத்துவத்தில் 3R எண்ணக்கருவை ஊக்குவிப்பதற்காக, 2021 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டன

மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவு சேகரிப்பு, 3 வகையான தரவுத்தளங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் மீள்சுழற்சிக்காக சேகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட கழிவுகளின் சுருக்கம் பின்வருமாறு.

அட்டவணை 3: கழிவு சேகரிப்புத் தரவுத்தளம்

	மீள்சுழற்சி செய்யக் கூடிய கழிவு சேகரிப்பு (தொன்)	
	2020	2021
பதிவு செய்யப்பட்ட சேகரிப்பாளர்கள்	18,610	20,010
BOI கைத்தொழில்கள்	235	318
கப்பற் கழிவு சேகரிப்பாளர்கள்	40	27

மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவு சேகரிப்பாளர்களின் தரவுத்தளம் .

- நாடளாவிய ரீதியில் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவு சேகரிப்பாளர்களின் தரவுத்தளம் களச் சரிபார்ப்புடன் இற்றைப்படுத்தப்பட்டு, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.
- 2021 டிசம்பர் வரை 317 அபாயகரமற்ற/ மாசடையா மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவு சேகரிப்பாளர்கள் பதிவு செய்யப் பட்டுள்ளனர். பதிவு செய்யப்பட்ட சேகரிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின்படி, சராசரியாக 3809 தொன் பிளாஸ்டிக், 4484 தொன் காகிதம், 2979 தொன் அட்டைகள், 2876 தொன் கண்ணாடி, 3426 தொன் உலோகம் ஆகியவை மீள்சுழற்சிக்காக மாதந்தோறும் சேகரிக்கப்பட்டுள்ளன.
- **இலங்கை முதலீட்டுச் சபையின் கைத்தொழில்களிலிருந்து மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவு சேகரிப்பு.**

மீள்சுழற்சி செயன்முறை மற்றும் பொலித்தீன்/பிளாஸ்டிக் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக, திண்மக் கழிவு முகாமைத்துவ அலகு இலங்கை முதலீட்டுச் சபையின் கைத்தொழில்களில் உற்பத்தியாகும் பிளாஸ்டிக்/பொலித்தீன் கழிவுகளை அனுப்புவதற்கு அனுமதியினை வழங்குகின்றது. 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடிதங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகளின் பிரகாரம், மீள்சுழற்சிக்காக இலங்கை முதலீட்டுச் சபையின் கைத்தொழில்களின் 318 தொன் பிளாஸ்டிக்/பொலித்தீன் கழிவுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- **கப்பல்களிலிருந்து அபாயகரமற்ற/ மாசடையாத மீள்சுழற்சிக் கழிவு சேகரிப்பாளர்கள்**

'2021 ஆம் ஆண்டில் 17 கப்பல் கழிவு சேகரிப்பாளர்களுக்கு '2021 ஆம் ஆண்டிற்கான அபாயகரமற்ற/மாசடையாத மீள்சுழற்சிக் கழிவுகளை சேகரிக்கும் சேகரிப்பாளர்களுக்கான சுற்றாடல் பரிந்துரைகள்' வழங்கப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டிற்காக அவற்றில் 11 புதுப்பிக்கப்பட்டுள்ளன.

- இந்தப் 11 கப்பல் கழிவு சேகரிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் பிரகாரம், 3.5 தொன் பிளாஸ்டிக் கழிவு, 1.5 தொன் பொலித்தீன் கழிவு, 12 தொன் உலோகக் கழிவு,

0.5 தொன் கண்ணாடிக் கழிவு மற்றும் 2.4 தொன் காகிதக் கழிவு ஆகியவை மாதாந்த மீள்சுழற்சிக்காகச் சேகரிக்கப்பட்டுள்ளன. (விளக்கப்படம் 01) 2021 ஆம் ஆண்டிற்கான மொத்த கப்பல் கழிவு சேகரிப்பு சராசரியாக மாதத்திற்கு 26.6 தொன் ஆகும்.

பிளாஸ்டிக் முகாமைத்துவம் மீதான தேசிய செயற்றிட்டம்.

சுற்றாடல் அமைச்சினால் 2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பிளாஸ்டிக் முகாமைத்துவத்திற்கான தேசிய செயற்றிட்டத்தைத் தயாரிப்பதில் தொழில்நுட்ப உள்ளீடுகள் வழங்கப்பட்டதுடன் துடிப்பான பங்குபற்றலும் இடம்பெற்றது.

பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவ தொழில்முயற்சியாளர்களின் பயிற்சிக் கையேடு

இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ நிபுணர்களுடன் இணைந்து பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவத்திற்கான 3R பயிற்சிக் கையேடு தயாரிக்கப்பட்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு 2022 ஆம் ஆண்டில் பயிற்சி வழங்கப்படும்.

.



உரு 10 : பயிற்சிக் கையேட்டைத் தலைவரிடம் கையளித்தல்

பிளாஸ்டிக்/பொலித்தீன் மாலைகளுக்கு மாற்றாகக் காகித மாலைகள்.

- கதிர்காமம் போன்ற புனிதத் தலங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒற்றைப் பாவனைப் பிளாஸ்டிக் பொருளாக பிளாஸ்டிக் மாலை அடையாளம் காணப்பட்டது. எனவே, தேசிய கைவினைச் சபையின் ஆதரவுடன், இப்பகுதியில் உள்ள 100 இற்கும் மேற்பட்ட பிளாஸ்டிக் மாலை உற்பத்தியாளர்களுக்கு பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக காகிதம் மற்றும் இயற்கை மலர் மாலைகளை செய்வதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாவட்ட அலுவலகத்துடன் இணைந்து வீடுவீடாக பரந்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நேர்மறையான பதில்களுடன், இந்தப் பொருளும் முன்மொழியப்பட்ட ஒற்றைப் பாவனைப் பிளாஸ்டிக்கின் தடைசெய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.





உரு 11 : கடதாசி மாலைகள் செய்தல் பற்றிய பயிற்சி.

II. கழிவுச் சுத்திகரிப்பு மற்றும் இறுதியில் அகற்றல்

உரமாக்கல், மீள்சுழற்சி, சக்தி மீளப்பெறல் போன்ற கழிவுச் சுத்திகரிப்புகள் மற்றும் இறுதியாக அகற்றல் போன்ற கழிவுச் சுத்திகரிப்புகளுக்கு உள்ளூராட்சி அதிகாரசபைகளிலுள்ள திண்மக்கழிவு முகாமைத்துவக் கருத்திட்டங்கள், தொழில்நுட்ப ரீதியாக வசதியளிக்கின்றன. 2021 ஆம் ஆண்டில், பின்வரும் வசதிகள் வழங்கப்பட்டன.

மாத்தறை, கொட்டவில கழிவிலிருந்து சக்திக் கருத்திட்டம், மாத்தறை மாநகராட்சியினுள் உக்கக்கூடிய திண்மக்கழிவிற்கான நிலைபேறான தீர்வொன்றை வழங்கும் பொருட்டு முன்னெடுக்கப்பட்டது. 2021 இல், கருத்திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்காக மாதாந்த முன்னேற்றக் கண்காணிப்புக் கூட்டம் நடத்தப்பட்டது.

- 'பிலிசரு' என்னும் தேசிய திண்மக்கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம், உள்ளூர் அதிகாரசபைகளை அவற்றின் திண்மக்கழிவு முகாமைத்துவக் கருத்திட்டங்களில் வசதி செய்வதற்காகத் தாபிக்கப்பட்டது. கோரிக்கைகளின் அடிப்படையில், வசதி செய்தலும் பிரச்சினைகளைத் தீர்த்தலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- "வீடுகளில் சேரும் பயன்படுத்தப்பட்ட முகக்கவசங்களைப் பாதுகாப்பாக அகற்றுவதற்கான இடைக்கால வழிகாட்டல்களின்" தயாரிப்பில் துடிப்பான பங்களிப்பு வழங்கப்பட்டது.
- தொழில்நுட்பக் குழு உறுப்பினர் என்னும் ரீதியில் மேல் மாகாண திண்மக்கழிவு முகாமைத்துவப் பெருந்திட்டத்திற்குத் தொழில்நுட்ப உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

III. ஒழுங்கமைப்பும் சட்ட அமுலாக்கமும்

திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான அமுலாக்க முன்னெடுப்புகளும் செயற்பாடுகளும் ஒழுங்கமைப்பு மற்றும் சட்ட அமுலாக்கப் பிரிவின் கீழ் வருகின்றன. ஒற்றைப் பாவனைப் பிளாஸ்டிக்கைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தேவையற்ற பிளாஸ்டிக் பாவனையைக் குறைப்பதை இலக்காகக் கொண்டு, பின்வருவனவற்றின் பாவனையைத் தடைசெய்யும், 2211/51 ஆம் இலக்க ஒழுங்குவிதி 21/01/2021 ஆம் திகதி வெளியிடப்பட்டது-

(a) ஏதேனும் செய்முறை, வியாபாரம் அல்லது கைத்தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் விவசாய இரசாயனப் பொருட்களைப் பொதியிடுவதற்கான பொலிஎதிலீன் டெரெப்தாலேட் (PET) அல்லது பொலிவினைல் குளோரைட்டு (PVC) பொருட்கள்: அத்துடன்

(b) ஏதேனும் செய்முறை, வியாபாரம் அல்லது கைத்தொழிலுக்காக இதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பிளாஸ்டிக் பொருள்: -

(i) 20 மி.லீ.தேறிய கொள்ளளவிற்கு/20 கிராம் தேறிய நிறைக்குக் குறைவான அல்லது அதற்குச் சமமான சிறு பைகள் (உணவு மற்றும் மருந்துகளைப் பொதியிடுவது தவிர):

(ii) காற்றடைக்கப்படக்கூடிய விளையாட்டுப் பொருட்கள் (பலூன்கள், பந்துகள், நீரில் மிதக்கக்கூடிய/நீரில் விளையாடக்கூடிய விளையாட்டுப் பொருட்கள் மற்றும் நீர் விளையாட்டுத் துணைப்பொறிகள் தவிர):

(iii) பிளாஸ்டிக் காம்புடனான கொட்டன் பட் (மருத்துவ/நோய் அறிகுறி சார்ந்த சிகிச்சைக்குப் பயன்படும் கொட்டன் பட் தவிர).

01 முதல் 07 வரையான குறியீட்டு இலக்கங்களைக் கொண்ட பிளாஸ்டிக்கின் ஏழு வகைகள் காணப்படுகின்றன. குறியீடுகளின்றி, சேகரிப்பாளர்களுக்கும் மீள்சுழற்சியாளர்களுக்கும் பிளாஸ்டிக்கின் வகையை சரியாக அடையாளம் காண்பது சவாலாக இருந்தது. எனவே, பிளாஸ்டிக் மீள்சுழற்சியை ஊக்குவிப்பதற்காக, 2211/50 ஆம் இலக்க பிளாஸ்டிக் குறியீட்டு ஒழுங்குவிதிகள் 2021 சனவரி 21 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதற்கிணங்க, தயாரிக்கப்பட்ட எந்தவொரு பிளாஸ்டிக் பொருளும் வர்த்தமானியில் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள குறித்துரைக்கப்படும் பிளாஸ்டிக் பொருள் அடையாள நியமங்களுக்கு அமைவாக தெளிவாகக் குறிக்கப்படுதல் வேண்டும்.

- உரிய பங்கீடுபாட்டாளர்களுடனான பல்வேறு கலந்துரையாடல்களின் பின்னர், ஒழுங்கமைக்கப்படவேண்டிய ஒற்றைப் பாவனைப் பிளாஸ்டிக் பொருட்களின் 3ஆம் பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப் பட்டது.

i. குடிபான உறிஞ்சுகுழாய்கள் மற்றும் கலக்கும் கருவிகள்.
ii. பிளாஸ்டிக் குவளைகள், தட்டுகள், கரண்டிகள், முள்ளுக் கரண்டிகள் & கத்திகள்.
iii. இடியப்பம் தயார் செய்யும் பிளாஸ்டிக் தட்டுகள்.
iv. பிளாஸ்டிக் புற் பாய்கள் (உள் விளையாட்டு மற்றும் மைதானங்களில் பயன்படுத்தப்படுபவை தவிர.)
v. பிளாஸ்டிக் மாலைகள்.
vi. ஊதுபத்திகள் மற்றும் திரிகளைப் பொதி செய்வதற்குப் பயன்படும் ஏதேனும் பிளாஸ்டிக் வகை.
vii. 12 x10 அங்குலத்தை விடக் குறைவான பிளாஸ்டிக் பைகள் (கைப்பிடி அற்றவை) மற்றும் 16x10x5 அங்குல கைப்பிடி கொண்ட பைகள்.

நிபுணர்களின் தீர்மானங்களுக்கிணங்க, மேற்சொல்லப்பட்ட பட்டியலை ஒழுங்கமைப்பதை அங்கீகரிப்பதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

IV பொலித்தீன் முகாமைத்துவ ஒழுங்குவிதிகளின் நடைமுறைப்படுத்தல்.

- 2017ஆம் ஆண்டில், பொலித்தீன் உணவுத்தாள்களைத் தடைசெய்யும் ஒழுங்குவிதி வெளியிடப்பட்டு, அவற்றிற்கு மாற்றீடாக உக்கக்கூடிய உணவுத்தாள்கள் அறிமுகம் செய்யப்பட்டன. 08 உக்கக்கூடிய உணவுத்தாள்கள் உற்பத்தியாளர்களின் பதிவு அதிகாரசபையில் புதுப்பிக்கப்பட்டு அதிகாரசபையின் இணையத்தளத்தில் தரவுத்தளத்தில் இற்றைப்படுத்தப்பட்டன. மேற்படி ஒழுங்குவிதிகளை வினைத்திறனுடன் அமுல்படுத்தும் நோக்குடன், உக்கக்கூடிய உணவுத் தாள்களுக்கான தரநியமங்களைத் தயாரிக்குமாறு இலங்கை தரநியமங்கள் நிறுவகம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி, 2021 ஆம் ஆண்டில் உக்கக்கூடிய உணவுத்தாள்களுக்கான தரநியமங்கள் தயாரிக்கப்பட்டன.
- சுற்றாடல் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு விஞ்ஞான நிலையம் (CEFAS) மற்றும் சுற்றாடல் ஊக்குவிப்பு அலகு என்பவற்றின் ஒத்துழைப்புடன், ஒற்றைப் பாவனை பிளாஸ்டிக் தடை தொடர்பான ஊக்குவிப்புச் செயற்பாடுகள் முன்னணி தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாக வெளியிடப்பட்டன. 100 இற்கும் மேற்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு திண்மக்கழிவு முகாமைத்துவம் மற்றும் துப்பரவு நிகழ்ச்சித்திட்டங்களை இணையத்தளத்தில் மதிப்பீடு செய்தல் தொடர்பாக CEFAS உடன் இணைந்து பயிற்சியளிக்கப்பட்டதுடன், நுண் பிளாஸ்டிக் பகுப்பாய்வு செய்வதில் அதிகாரசபையின் ஆய்வுகூடத்தின் இயலுமையை வலுப்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களை ஆய்வுகூடத்திற்கு பெற்றுக்கொள்வதற்கும் உதவியளிக்கப்பட்டது.
- தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகியவற்றில் வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்தி மூலம் 2021 ஆம் ஆண்டின் ஒழுங்குவிதிகள் மீதான பொதுமக்கள் விழிப்புணர்வு
- 2021 இன் பிளாஸ்டிக் முகாமைத்துவ ஒழுங்குவிதிகளின் நடைமுறைப்படுத்தலுடன் கைத்தொழிற்துறை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதுடன் சில பங்கீடுபாட்டாளர் கலந்தாலோசனைகளும் நடத்தப்பட்டன.

ஒற்றைப் பாவனைப் பிளாஸ்டிக் பொருட்களுக்கான பதிலீடுகளின் பதிவு.

நுகர்விற்குப் பின்னரான பிளாஸ்டிக் கழிவகற்றல் தகுந்த விதத்தில் மேற்கொள்ளப்படாமையால் ஏற்படும் சுற்றாடல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளை குறைக்கும் பொருட்டு, நாட்டில் ஒற்றைப் பாவனைப் பிளாஸ்டிக் பொருட்களைக் (பிளாஸ்டிக்கிலான உணவு வெட்டும் கருவிகள் (cutleries), கொட்டன் பட்கள் (Cotton Bud), உறிஞ்சு குழாய்கள், பைகள் போன்றவை) கட்டுப்படுத்துவதற்கு/ தடை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது . மேற்குறிப்பிட்ட தீர்மானத்தின் காரணமாக ஏற்படும் சமூக தாக்கங்களைக் குறைப்பதற்காக, திண்மக்கழிவு முகாமைத்துவ அலகு ஒற்றைப் பாவனைப் பிளாஸ்டிக் பொருட்களுக்கான பதிலீட்டுப் பொருட்களைப் பதிவுசெய்து ஊக்குவிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. அதற்கிணங்க, சுற்றாடல்-நேய பதிலீட்டுப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் அனைவரும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் பதிவு செய்வதற்கு அழைக்கப்படுகின்றனர். அதற்கமைவாக, பதிலீட்டுப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் 18 பேர் தங்கள் விபரங்களை சமர்ப்பித்துள்ளனர்.

B. விசேட கருத்திட்டங்கள்

விசேட கருத்திட்டங்கள் பிரிவின் கீழ், சுகாதாரம்சார் கழிவு நிரப்பல் பிரதேசம், தொம்பே மற்றும் கம்பஹா மாவட்ட ஒருங்கிணைந்த திண்மக்கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் ஆகியவற்றின் தொழிற்பாட்டு பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு செயற்பாடுகள் உள்ளிட்ட திண்மக்கழிவு முகாமைத்துவம் ஆகியவை தொடர்பான விசேட கருத்திட்டங்கள், மேற்கொள்ளப்படுகின்றன.
சுரக்கிழு கங்கா கருத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்விற்கு, பிரதேச சபையினால் நடாத்தப்படும் உரக்கிடங்கை மேம்படுத்துதல், மாணிக்க கங்கையின் குறுக்கே கழிவுப் பொறிகளை அமைத்தல் மற்றும் பிளாஸ்டிக் மாலைகளை இயற்கை/காகிதப் பொருட்களினால் மாற்றீடு செய்தல் என்பவற்றின் ஊடாக பங்களிப்பு வழங்கப்பட்டது.

I. சுகாதாரம்சார் கழிவு நிரப்பல் பிரதேசம், தொம்பே – பசுமைப் பூங்கா ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவ நிலையம்

தொம்பே கிரிந்திவெலவில் அமைந்துள்ள பசுமைப் பூங்கா ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவ நிலையமானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் முகாமை செய்யப்படும் இலங்கையின் முதலாவது கழிவு நிரப்பல் நிலையமாகும். இந்த நிலையத்தில் சுகாதார கழிவு நிரப்பல் தளம்,

கழிவு நிரப்பல் தளம் மற்றும் பயிற்சி மையம் ஆகியவை கொரிய ஒத்துழைப்பு முகவராண்மையால் (KOICA) அவர்களின் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடன் நிர்மாணிக்கப்பட்டது. மதிப்பிடப்பட்ட கருத்திட்டத்திற்கான மொத்த முதலீடு சுமார் 6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பதுடன் இவற்றுள் கொரிய அரசாங்கத்தின் 4.5 மில்லியன் டொலர்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 1.5 மில்லியன் டொலர்கள் என்பன அடங்கும்.

இந்த சுகாதார கழிவு நிரப்பல் தளத்தின் குப்பை கொட்டக்கூடிய கொள்ளளவு ஒரு நாளைக்கு ஏறத்தாழ 90 தொன்கள் ஆகும் ஆரம்பத்தில் இந்த கழிவு நிரப்பல் வசதி, ஒரு நாளைக்கு 10 தொன் கழிவுகளை நிர்வகிக்கும் இலக்குடன் தொம்பே பிரதேச சபைக்கான மீள்சுழற்சி செய்ய முடியாத கழிவுகளை அகற்றும் இறுதி இடமாக செயல்றபட திட்டமிடப்பட்டது. ஆனால் தளத்தின் வசதிகள் மற்றும் கொள்திறனைக் கருத்திற்கொண்டு, தற்போது தொம்பே PS இல் அமைந்துள்ள சில தெரிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் அபாயகரமற்ற இறுதிக் கழிவுகளை உரமிடும் இடம் மற்றும் பயிற்சி மையம் ஆகியவை உள்ளன.


கொட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுவதுடன் கழிவுகளை கொட்டுவதற்கான கட்டணமாக ஒரு தொன்னுக்காக ரூ.5000 அறவீடு செய்யப் படுகின்றது. பெறப்பட்ட கழிவு அளவும் வருமானமும் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடுமையாக வீழ்ச்சியடைந்தது.

உள்வரும் கழிவுகளை எடைபோடுதல், பதிவு செய்யும் வசதி, கழிவுகளை அகற்றும் வசதி, கசிவு (leachate) சேகரிப்பு வசதி, கசிவு சுத்திகரிப்பு வசதி, வாயு சுத்திகரிப்பு வசதி, நீர் மாசுப் பாதுகாப்பு லைனர் வசதி, நிலத்தடி நீர் கண்காணிப்பு கிணறுகள், மண் இருப்புகளை மூடும் வசதி, நிலநிரப்பல் உபகரணங்கள் (டோசர், அகழும் இயந்திரங்கள், டிப்பர்கள் போன்றவை), நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ வசதி மற்றும் சி.சி.டி.வி பாதுகாப்பு முறைமை ஆகியவற்றை கழிவு நிரப்பல் வசதி கொண்டுள்ளது.

அட்டவணை 4 : 2021 இல் கையாளப்பட்ட கழிவுகள்

நிறுவனம்	கொட்டப்பட்டவை, kg	வருமானம், ரூ
தொம்பே பிரதேச சபையின் கழிவு நிரப்பல் கழிவுகள்	817530	-
தொம்பே பிரதேச சபையின் உக்கக்கூடிய கழிவு(உரக்கிடங்கு)	62780	-
தொம்பே பிரதேச சபையின் கைத்தொழில்கள்	773380	2706830.00
ஏனைய கைத்தொழில் கழிவு	953770	5452930.00
கண்ணாடி இழைகள்	74200	2221490.00
மொத்தம்	2681660	10381250.00

ஆயினும், இலங்கையில் கொவிட் 19 நிலைமையில் பசளை உற்பத்தி குறைவடைந்ததுடன், முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் ஈட்டிய வருமானம் கீழே உள்ள வரைபடங்களில் காட்டப்பட்டுள்ளது.



உரு 12 : மொத்த உக்கக்கூடிய கழிவுகளைக் கையாளுதல் மற்றும் சுகாதாரம்சார் கழிவு நிரப்பல் தளத்தில் கழிவுகளைக் கொட்டுதல்

சுகாதாரம்சார் கழிவு நிரப்பல் தொழிற்பாட்டிற்கு மேலதிகமாக, மக்கக்கூடிய கழிவுகளின் உரமிடும் வசதியும் அந்த இடத்திற்குள் காணப்படுகின்றது. தற்போது தொம்பே பிரதேச சபையின் உக்கக்கூடிய கழிவுகளைப் பெறுவதன் மூலம் இத்தளத்தின் உரக்கிடங்கு உரங்களை தொடர்ந்து உற்பத்தி செய்து வருகின்றது. உரமிடும் முற்றத்தில், கழிவுகளின் குறுகிய கால மக்கக்கூடிய சேதனப் பகுதி பெறுமதி மிக்க மண் பக்குவப்படுத்தியாக மாற்றப்படுகின்றது. ஒரு நாளைக்கு சுமார் ஐந்து தொன் உக்கக்கூடிய கழிவுகளைக் கையாளும் திறனை இந்த உரமாக்கல் வசதிகொண்டுள்ளது.


உற்பத்தி செய்யப்படும் உரம், கிலோகிராம் ஒன்றுக்கு 10 ரூபா என்ற வீதத்தில் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதுடன், உயர் தரம் மற்றும் குறைந்த விலையின் காரணமாக, பசுமைப் பூங்காவினால் உற்பத்தி செய்யப்படும் உரத்திற்கான கோரல் எப்போதும் அதிகமாகவும் பூர்த்தி செய்யப்பட முடியாத அளவிலும் காணப்படுகின்றது.

இலங்கையில் ஏற்பட்ட கொவிட் நிலைமை காரணமாக, 2020 ஆம் ஆண்டைப் போலவே உர உற்பத்தி மேலும் பாதிக்கப்பட்டது. தொம்பே பிரதேச சபையில் உக்கக்கூடிய கழிவு சேகரிப்பின்மையின் காரணமாக இந்த குறைப்பு அவதானிக்கப்பட்டது.





உரு 13 : மொத்த உக்கக்கூடிய கழிவுகளைக் கையாளுதல் மற்றும் சுகாதாரம்சார் கழிவு நிரப்பல் தளத்தில் கழிவுகளைக் கொட்டுதல்



	2015	2016	2017	2018	2019	2020
கழிவு நிரப்பல் தொகை ரூ.	1933951.50	4677262.24	16646327.50	3767169.00	7800232.50	9536670.00
உரத் தொகை ரூ.	185354.00	269232.00	313780.00	377480.00	202710.00	63480.00

உரு 14 : கழிவுகளைக் கையாள்வதால் பெறப்பட்ட மொத்த வருமானம்

2021 ஆம் ஆண்டின் இறுதியில், கழிவு நிரப்பல் தளத்தின் 3 ஆவது கலப்பகுதியில் 1 ஆவது அடுக்கு குப்பை கொட்டுதல் நிறைவு செய்யப்பட்டு, 4 ஆவது கலப்பகுதியில் கழிவு நிரப்பல் ஆரம்பிக்கப்பட்டது.





உரு 15 : 6 கலங்களில் 3 ஆம் கலத்தின் 3/6 ஆம் அடுக்கு வரை நிரப்புதல்

ஆயினும், 2015 மே மாதத்திலிருந்து கழிவு நிரப்பல் வசதியின் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன' 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை, 22640.53 தொன் கழிவுகள் அவ்விடத்தில் கொட்டப்பட்டன, அத்தளத்தின் மொத்த கூட்டெரு உற்பத்தி சுமார் 158 தொன்கள் ஆகும்.

II. கம்பஹா மாவட்ட ஒருங்கிணைந்த திண்மக்கழிவு முகாமைத்துவ கருத்திட்டம்

கம்பஹா மாவட்டத்தில் உற்பத்தியாகும் திண்மக் கழிவுகளுக்கு முழுமையான தீர்வை வழங்குவதற்காக கம்பஹா மாவட்ட ஒருங்கிணைந்த திண்மக்கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த கருத்திட்டத்திற்காக 9.49 ஹெக்டயர் காணி, கம்பஹா, பெத்தியகந்தவில் இருந்து காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்த மதிப்பீடு 989 மில்லியன் ரூபாவாகும். 09 உள்ளூராட்சி அதிகாரசபைகள் தமது மாநகர மற்றும் கைத்தொழில் கழிவுகளை முகாமை செய்வதற்கு வசதியளிப்பதற்கு வசதியளிப்பதற்காக கருத்திட்ட பிரேரணை பின்வரும் பிரதான கூறுகளைக் கொண்டுள்ளது.

1. உரக்கிடங்கு.
2. கழிவு பிளாஸ்டிக் பைரோலிசிஸ் ஆலை.
3. மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவு சேகரிப்பு மையம்
4. சுகாதாரம்சார் கழிவு நிரப்பல் வசதி.
5. பயிற்சி மற்றும் விழிப்புணர்வு

உரக்கிடங்குகள், கழிவு பிளாஸ்டிக் பைரோலிசிஸ் ஆலை மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவு சேகரிப்பு மையங்கள் ஆகியவை நிறைவு செய்யப்பட்டபோதும் பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக அவற்றின் நடவடிக்கைகளைத் தொடங்க முடியவில்லை.

2021 ஆம் ஆண்டில், கிராமத்தவர்களின் பங்குபற்றலுடன் பின்வரும் அம்சங்களின் கீழ் மூலோபாயரீதியில் பெத்தியகந்த, 'மிஹிசரு' கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு கழிவு முகாமைத்துவ அதிகாரசபையினால் (மேல் மாகாணம்) ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

1. உரத்திற்கு விஞ்ஞானபூர்வமான பெறுமதி சேர்ப்பு
2. திரவப் பசளை உற்பத்தி.
3. மண்புழு உர உற்பத்தி.





உரு 16 : பெத்தியகந்தவில் விவசாயிகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

அத்தியாயம் 4 : சுற்றாடல் முகாமைத்துவ மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு

4.1சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகு

A. சு.தா.ம./ஆ.சு.ம. செயன்முறையை வினைத்திறன் மிக்க வகையில் நடைமுறைப்படுத்தல்

I. குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களுக்காக சு.தா.ம./ ஆ.சு.ம. செயன்முறையை நிர்வகித்தல்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகு, குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களின் பாதகமான சுற்றாடல் தாக்கங்களைத் தணிக்கும் நோக்குடன் இவ்வனைத்துக் கருத்திட்டங்களுக்கும் சு.தா.ம./ஆ.சு.ம. செயன்முறையை நிருவகிக்கும் அதன் பிரதான ஒழுங்குபடுத்தல் செயற்பாட்டைத் தொடர்ந்தது. இது செயற்பரப்புக் கூட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்களை கூட்டுதல், சு.தா.ம./ஆ.சு.ம. அறிக்கைகளுக்கான விசாரணை நியதிகளின் (ToR) வரைவைத் தயாரித்தல், சு.தா.ம. /ஆ.சு.ம. அறிக்கைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் பொதுமக்களின் பங்கேற்பு செயன்முறைக்கு வசதியளித்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் அடுத்தடுத்த முடிவுகள் மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது. அதற்கிணங்க, 2021 ஆம் ஆண்டில், தேசிய சுற்றாடல் சட்டத்தின் 1VC ஆம் பகுதியின் கீழ் அங்கீகாரம் தேவைப்படும் மொத்தம் 64 கருத்திட்டங்கள் சு.தா.ம. அலகினால் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டன. 15 திட்டங்களுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. மேற்குறிப்பிட்ட விவரங்கள் அட்டவணை 1 இல் கொடுக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டு, இதுவரையில் பூர்த்தி செய்யப்படாத 06 கருத்திட்டங்களுக்கான அங்கீகார நீடிப்புக்கள் வழங்கப்பட்டதுடன் அத்தகைய கருத்திட்டங்களின் பட்டியல் அட்டவணை 2 இல் கொடுக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் எந்த ஒப்புதலும் நிராகரிக்கப்படவில்லை.

அட்டவணை 5 : 2021 இல் சு.தா.ம./ஆ.சு.ம. ஒழுங்குவிதிகளின் கீழ், சு.தா.ம. அலகினால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல்

இல	கருத்திட்டத்தின் பெயர்	சு.தா.ம./ஆ.சு.ம. /மே.சு.தா.ம./மே .ஆ.சு.ம.
01	கீழ் மல்வத்து ஓய நீர்த்தேக்கக் கருத்திட்டம் **PP**: நீர்ப்பாசன அமைச்சு	சு.தா.ம.
02	ருவன்புர அதிவேகப்பாதைக் கருத்திட்டம் – கஹதுடுவ முதல் இங்கிரிய வரை **PP**: வீதி அபிவிருத்தி அதிகாரசபை	சு.தா.ம.
03	சீதாவக்க நீர்மின் கருத்திட்டம் **PP**:இலங்கை மின்சார சபை	சு.தா.ம.
04	கிவுல் ஓய நீர்த்தேக்கக் கருத்திட்டம் **PP**: MASL	சு.தா.ம.
05	எம்பிலிப்பிட்டிய கடதாசி ஆலையின் புனரமைப்பு மற்றும் விரிவுபடுத்தல் **PP**: கொரியன் SPA பக்கேஜிங் பிரைவேட் லிமிடட்.	சு.தா.ம.
06	அம்பாந்தோட்டை, அரபொக்க பிரதேசத்தில் மருந்தாக்கல் வலயமொன்றைத் தாபிப்பதற்கான கருத்திட்டம் **PP**: BOI	சு.தா.ம.
07	புன்னைக்குடா, ஏறாவூர், மட்டக்களப்பில் புடவைச் செயன்முறைக்கான கைத்தொழில் வலயமொன்றை அமைப்பதற்கான கருத்திட்டம் **PP**: BOI	சு.தா.ம.
08	அம்பாந்தோட்டை, கெலியபுரவில் முன்மொழியப்பட்டுள்ள மருந்துக்கழிவு அகற்றுமிடம் **PP**: GFC வேஸ்ட் மனேஜ்மன்ட் பிரைவேட் லிமிடட்.	ஆ.சு.ம.

09	தங்காலை வீரகெட்டிய வீதிக்காக பெதிகமவில் தெற்கு அதிவேகப்பாதைக் கருத்திட்டத்தின் விரிவாக்கத்திற்காக முன்மொழியப்பட்டுள்ள புதிய இணைப்புவழி **PP**: வீதி அபிவிருத்தி அதிகாரசபை	ஆ.சு.ம.
10	அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் ஏற்றுமதிக்காக டயர்களை உற்பத்தி செய்வதற்காக முன்மொழியப்பட்ட கருத்திட்டம் **PP**: ஹம்பாந்தோட்ட இன்டர்நஷனல் போர்ட் குரூப் (HIPG)	ஆ.சு.ம.
11	அநுராதபுரம், ஒயமடுவவில் மருந்தாக்கல் உற்பத்தி வலயமொன்றைத் தாபித்தல் **PP**: மருந்தாக்கல் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு	ஆ.சு.ம.
12	கதோட்டுக் கதிர்க் குழாய்க் கண்ணாடி மீட்புச் செயன்முறை மூலம் ஓடுகளை உற்பத்தி செய்தல் **PP**: சிலோன் வேஸ்ட் மனேஜ்மன்ட் பிரைவேட் லிமிடட்.	ஆ.சு.ம.
13	ஹோமாகம, பிடிபனவில் இலங்கை உயிரியல் தொழில்நுட்ப புத்தாக்கப் பூங்கா **PP**: இலங்கை உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம் பிரைவேட் லிமிடட்.	ஆ.சு.ம.
14	மிரிஜ்ஜவில EPZ இனுள் சீமெந்து பொறித்தொகுதியில் முன்மொழியப்பட்ட நிலக்கரி அடிப்படையிலான Hot Air Gas உற்பத்தி முறைமை **PP**: லன்வா சன்ஸ்தா சிமெண்ட் கோப்பரேஷன் பிரைவேட் லிமிடட்.	மே.ஆ.சு.ம.
15	IIHS மல்ட்டிவேசிற்றி, 312/15 & 312/19, கெரவலப்பிட்டிய வீதி, ஹெந்தலை, வத்தளை **PP**: இன்டர்நஷனல் இன்ஸ்டிரியூட் ஒப் ஹெல்த் சயன்ஸ் பிரைவேட் லிமிடட்.	ஆ.சு.ம.

சு.தா.ம. - சுற்றாடல் தாக்க மதிப்பீடு
மே.சு.தா.ம. - மேலதிக சுற்றாடல் தாக்க மதிப்பீடு
மே.ஆ.சு.ம. - மேலதிக ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை
ஆ.சு.ம. - ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை
PP - கருத்திட்டத்தை முன்னெடுப்பவர்

அட்டவணை 6: பூர்த்தி செய்யப்படாத கருத்திட்டங்களுக்கு 2021 இல் வழங்கப்பட்ட நீட்டிப்பு அங்கீகாரங்கள்

இல	**கருத்திட்டத்தின் பெயர்**	சு.தா.ம./ஆ.சு.ம .மே.சு.தா.ம./ மே.ஆ.சு.ம.
01	களுகங்கை நீர்த்தேக்கம் மற்றும் கமத்தொழில் விரிவாக்கக் கருத்திட்டம் **PP**: MASL	சு.தா.ம.
02	கரவலப்பிட்டியவில் நிர்மாணக் கைத்தொழிலுக்காக முன்மொழியப்பட்ட கரைகடந்த மண் பிரித்தெடுப்பு **PP**: SLLDC	சு.தா.ம.
03	உமா ஓய பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டம் – உமா ஓய ஆற்றுப்படுக்கையினுள் அபிவிருத்திகள் **PP**: நீர்ப்பாசன அமைச்சு	சு.தா.ம.
04	முன்மொழியப்பட்ட மிரிஜ்ஜவில ஏற்றுமதி பதனிடும் வலயம் **PP**: BOI	சு.தா.ம.
05	வெயங்கொட முதல் துல்ஹிரிய வரையான 220 KV மின்மாற்று லைன் **PP:** இலங்கை மின்சார சபை	ஆ.சு.ம.
06	தம்புள்ளை வழியாக குருநாகல் தொடக்கம் ஹபரணை வரையான புகையிரத விரிவாக்கக் கருத்திட்டம் (PP: போக்குவரத்து அமைச்சு) **PP**: வீதி அபிவிருத்தி அதிகாரசபை	சு.தா.ம.

2021 ஆம் ஆண்டிற்குள் சு.தா.ம. அல்லது ஆ.சு.ம. இனைக் கோரும் 85 விண்ணப்பங்கள் (BIQs) பெறப்பட்டன. அதற்கிணங்க, சு.தா.ம. மற்றும் மே.சு.தா.ம. செயன்முறைக்குட்பட்ட(13 கூட்டங்கள் மற்றும் 5 தள விஜயங்கள்) 15 கருத்திட்டங்கள் தொடர்பில் ஸ்கோப்பிங் கூட்டங்கள் / தள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 7: சு.தா.ம /ஆ.சு.ம. தீர்மானங்கள் நிலுவையிலுள்ள கருத்திட்டங்களின் பட்டியல்

இதேபோன்று, குறித்துரைக்கப்பட்ட 17 ஆ.சு.ம.கருத்திட்டங்களுக்காக ஸ்கோப்பிங் கூட்டங்கள் மற்றும் தள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.
முன்னைய ஆண்டிலிருந்து (15 கருத்திட்டங்கள்) தொடர்கின்ற சில கருத்திட்டங்கள் உள்ளடங்கலாக தற்பொழுது 43 கருத்திட்டங்களின் தீர்மானம் நிலுவையில் உள்ளது (அத்தகைய கருத்திட்டங்களின் அந்தஸ்து அட்டவணை 3 இல் தரப்பட்டுள்ளது

இல	கருத்திட்டத்தின் பெயர்	சு.தா.ம./ ஆ.சு.ம.	அந்தஸ்து
	போக்குவரத்து		
01	மேற்குப் பிராந்திய இலகு ரயில்இடைத்தங்கல் – பெருநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சு **PP**: நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு	சு.தா.ம.	TEC மீளாய்வின் கீழ் உள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சம்மதத்துடன் திருத்தப்பட்ட சு.தா.ம. அறிக்கையை எதிர்பார்த்துள்ளது
02	ருவன்புர அதிவேகப்பாதை கருத்திட்டத்தின் 2 மற்றும் 3 ஆம் கட்டங்கள் (இங்கிரியவிலிருந்து இரத்தினபுரி மற்றும் இரத்தினபுரியிலிருந்து பெல்மதுள்ளை) **PP**: வீதி அபிவிருத்தி அதிகாரசபை	சு.தா.ம.	ToR வழங்கப்பட்டுள்ளது. சு.தா.ம. அறிக்கையை எதிர்பார்த்துள்ளது.
03	இராஜகிரியவிலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்தப்பட்ட அதிவேகப்பாதை **PP**: வீதி அபிவிருத்தி அதிகாரசபை	சு.தா.ம.	ToR வழங்கப்பட்டுள்ளது. சு.தா.ம. அறிக்கையை எதிர்பார்த்துள்ளது.
04	களனிப் பள்ளத்தாக்கு புகையிரதப்பாதை மேம்பாட்டுக் கருத்திட்டம் **PP**: போக்குவரத்து அமைச்சு	சு.தா.ம.	TEC மீளாய்வின் கீழ் உள்ளது. TEC இன் பதில்களைப் பெறுவதற்கு எதிர்பார்த்துள்ளது.
	கைத்தொழில்கள்		
05	ஹம்பாந்தோட்டை, அரபொக்கவிலுள்ள 600 ஏக்கர் காணிப் பிரதேசத்தில் கைத்தொழில் வலயம் **PP**: BOI	சு.தா.ம./ ஆ.சு.ம.	நோக்கெல்லை ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. காணித் தடை நீக்க அனுமதியை எதிர்பார்த்துள்ளது.
06	இலங்கையில் சைக்ளொட்ரோன் அடிப்படையிலான கதிரியக்க மருந்துகளின் உற்பத்தி வசதி **PP**: இலங்கை அணுசக்திச் சபை	ஆ.சு.ம.	ToR வழங்கப்பட்டுள்ளது. சு.தா.ம. அறிக்கையை எதிர்பார்த்துள்ளது.
07	மிதக்கும் சேமிப்பு மீள் வளிமப்படுத்தல் அலகு (FSRU) கப்பல், நங்கூரமிடும் முறைமை மற்றும் குழாய்த்திட்டம் என்பவற்றை கூட்டிணைத்த இலங்கை திரவ இயற்கை எரிவாயு வசதியை விருத்தி செய்தல். **PP**: NFE லங்கா பவர் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடட்.	சு.தா.ம.	நோக்கெல்லை ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. ToR வழங்கப்படவுள்ளது

08	இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்தினால் மிரிஜ்ஜவில EPZ இல் உருக்குத் தொழிற்சாலை **PP**: BOI	சு.தா.ம.	TEC மீளாய்வின் கீழ் உள்ளது. திருத்தப்பட்ட சு.தா.ம. அறிக்கையை எதிர்பார்த்துள்ளது.
09	கட்டுநாயக்க கைத்தொழில் வலயம் **PP:** கைத்தொழில் அமைச்சு	ஆ.சு.ம.	நோக்கெல்லை ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. ToR வழங்கப்படவுள்ளது.
10	மெல்வயர் ரோலிங் பிரைவேட் லிமிடட்டினால் மிரிஜ்ஜவில EPZ இல் முன்மொழியப்பட்ட உருக்குத் தொழிற்சாலை PP: BOI	சு.தா.ம.	ஒன்றுதிரட்டிய தாக்க ஆய்வு அறிக்கையை எதிர்பார்த்துள்ளது.
சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களை (EPAs) பிரகடனப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் தற்போதுள்ள அளவுகோல்களைத் திருத்தியமைத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தத் துறையில் உள்ள நிபுணர்களிடமிருந்து கருத்துக்கள் சேகரிக்கப்பட்டு, திருத்தப்பட்ட அளவுகோல்களின் வரைவு தயாரிக்கப்பட்டது. உப அளவுகோல்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைகளை மீளாய்வு செய்தல் ஆகியவையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களை (EPAs) பிரகடனப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் அற்புதமான அளவுகோல்களைத் திருத்தியமைத்தல் முன்னேற்றத்தில் உள்ளது. இந்தத் துறையில் உள்ள நிபுணர்களிடமிருந்து கருத்துக்கள் சேகரிக்கப்பட்டு, திருத்தப்பட்ட அளவுகோல்கள் வரையப்பட்டன. உப அளவுகோல்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைகளை மீளாய்வு செய்தல் என்பன முன்னேற்றத்தில் உள்ளன.

IX. ஈரநில முகாமைத்துவத்தின் உலக ஈரநிலங்கள் தின வைபவம்

a. தேசிய நிகழ்ச்சித்திட்டம்


உலக ஈரநிலங்கள் தினம் 2021 இன் தேசிய நிகழ்ச்சித்திட்டம் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் (DWC) மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் இணைந்து "ஈரநிலங்கள் மற்றும் நீர்" என்ற தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனவிலுந்தாவ சரணாலயத்தில் தேசிய நிகழ்ச்சித் திட்டம் நடைபெற்றது -

b. மாகாண மற்றும் மாவட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் உலக ஈரநிலங்கள் தினத்தைக் கொண்டாடுவதற்காக மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதற்கமைய, ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைந்துள்ள ஈரநிலங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், அவதானிப்புச் சுற்றுப்பயணங்கள், சிரமதான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மரநடுகை நிகழ்ச்சித்திட்டம் உள்ளிட்ட இருபத்து மூன்று (23) நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

c. "இலங்கையின் ஈரநிலங்கள்" சஞ்சிகை

"வெளியிடப்பட்ட "இலங்கையின் ஈரநிலங்கள் " சஞ்சிகை தொகுதி 5 இல், உயிருள்ள மற்றும் உயிரற்ற ஈரநில வளங்கள், அவற்றின் பயன்பாடு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றுடன் நேரடியாக மற்றும் மறைமுகமாக சம்பந்தப்பட்ட 6 கட்டுரைகள், மீளாய்வுக் கட்டுரைகள், சுருக்கமான தொழில்நுட்பக் குறிப்புகள் என்பன உள்ளடங்கியிருந்தன.



உரு 19 : இலங்கையின் ஈரநிலங்கள் சஞ்சிகை

d. ஏனைய நிறுவனங்களினால் அமுல்படுத்தப்படும் சுற்றாடல் முகாமைத்துவ செயற்பாடுகள் பற்றிய தொழில்நுட்ப வழிகாட்டல்.

இயற்கை வளங்கள் முகாமைத்துவம் என்பது பல பங்கீடுபாட்டாளர்கள் பங்குபற்றும் செயன்முறையாக இருப்பதனால், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் NRM பிரிவானது, இயற்கை வளங்களின் முகாமைத்துவம் தொடர்பான பல செயற்பாடுகளில் தீர்மானங்களை எடுக்கும் செயன்முறையில் பங்கீடுபாட்டு முகவராண்மைகளினால் நடாத்தப்பட்ட பல்வேறு குழுக் கூட்டங்களில் தொழில்நுட்ப வழிகாட்டல், நிபுணத்துவம் மற்றும் கருத்துரைகளை வழங்குவதில் ஈடுபடுகின்றது. 2021 ஆம் ஆண்டிற்குள் NRM பிரிவின் உத்தியோகத்தர்கள் 05 செயலமர்வுகள் மற்றும் NRM தொடர்பான குழுக் கூட்டங்கள் உள்ளடங்கலாக 104 கூட்டங்கள் ஆகியவற்றில் பங்குபற்றினர்.

அட்டவணை 22 : சுற்றாடல் முகாமைத்துவச் செயற்பாடுகள் பற்றிய தொழில்நுட்ப வழிகாட்டல்கள்

	குழு/செயலமர்வு	சமுகமளித்தவற்றின் எண்.
1	உயிரிப் பாதுகாப்பு /QMS/ஏனையவை பற்றிய செயலமர்வுகள் மற்றும் பயிற்சி அமர்வுகள்	05
2	தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்கள் (NAQDA)	06
3	காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் கருத்திட்டக் குழுக் கூட்டங்கள்	01
4	இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கலந்தாராய்வுக் குழுக் கூட்டங்கள்	16
5	கரையோர வள முகாமைத்துவம் மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆலோசனைக் குழுக் கூட்டம்.	07
6	நோக்கெல்லை ஆய்வு/தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்கள்/சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுடன் தொடர்புடைய கண்காணிப்புப் பரிசோதனை/ சுற்றாடல் தாக்க மதிப்பீடு	10
7	சுற்றாடல் அமைச்சு/ சனாதிபதி செயலணி / பங்கீடுபாட்டு முகவராண்மைகளால் திட்டமிடப்படும் ஏனைய கூட்டங்கள்	64

e. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் விசேட நிகழ்ச்சித்திட்டம்

i.மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தர முகாமைத்துவ முறைமையின் நடைமுறைப்படுத்தலுக்கான தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்குதல்.

ii.சனாதிபதி சுற்றாடல் விருதுகளின் இரு பிரிவுகளான, அரசசார்பற்ற அமைப்புகள் பிரிவு மற்றும் தனியார் பிரிவு ஆகியவற்றைக் கையாளுதல். நடைமுறைப்படுத்தல் செயன்முறையில் ஈடுபட்டமை.

iii.சுரக்கிமு கங்கா கருத்திட்டம்

நீர்ப்பாசன திணைக்களத்துடன் இணைந்து கதிர்காமம் பிரதேச செயலகப் பிரிவுக்குள் மாணிக்க கங்கையின் இருபுறமும் எல்லைக் கம்பங்களை நிறுவி, கங்கையின் ஒதுக்கத்தின் எல்லையை வரையறை செய்வதில் ஈடுபட்டதுடன் தற்போது நடைபெற்றுவரும் ஆரம்ப நிகழ்விற்கான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

4.3 மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு அலகு

A. அறிமுகம்

மூலோபாய சுற்றாடல் மதிப்பீடு (SEA) என்பது கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் (PPP) அபிவிருத்தியின் போது சுற்றாடல் மற்றும் ஏனைய நிலைபேறான அம்சங்களுக்கு உரிய கவனம் செலுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காக, உலகெங்கிலும் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகும். இது மூலோபாய தீர்மானம் மேற்கொள்ளலுக்கான உதவி ஒன்றாகப் பல நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றது. மத்திய சுற்றாடல் அதிகாரசபை, மூலோபாய சுற்றாடல் மதிப்பீடுகளை இலங்கைக்கு அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், தற்போது மூலோபாய சுற்றாடல் மதிப்பீடுகளை நடைமுறைப் படுத்துவதற்கான சட்டவாக்கங்களைத் தயாரிக்கும் செயன்முறையிலும் ஈடுபட்டுள்ளது. மேலும், முன்னோடிச் சோதனை அடிப்படையில் மூலோபாய சுற்றாடல் மதிப்பீடுகளை முன்னெடுப்பதற்கு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை உரிய அரசாங்க முகவராண்மைகளைப் பின்தொடர்கின்றது.

B. இலங்கையில் SEA முறைமையின் அறிமுகம்

I. NEA இன் மீளாய்வு மற்றும் SEA இனை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப் படுத்தப்படும் சட்ட முறைமையை அமைத்தல்

கொள்கைகள், திட்டங்கள், மூலோபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான SEA செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கும் பொருட்டு தேசிய சுற்றாடல் சட்டத்தைத் திருத்தும் செயற்பாட்டில் மத்திய சுற்றாடல் .அதிகாரசபை தற்போது ஈடுபட்டுள்ளது.

இலங்கையில் SEAகளை அறிமுகப்படுத்துவதற்கும் நடைமுறைப் படுத்துவதற்கும் சட்ட நிபுணர்கள், சுற்றாடல் நிபுணர்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பிரதான பங்குதாரர் முகவர் நிலையங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட ஆலோசனைக் குழுவொன்றை 2020 இல் தாபித்துள்ளது. தேசிய சுற்றாடல் அதிகாரசபைக்கு SEA தொடர்பான வரைவு ஏற்பாடுகள் மீதான குழுவின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, ஆலோசனைக் குழுவின் 4 ஆவது கூட்டம் 2021.07.29 அன்று இணையவழி ஊடாக வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

II. விழிப்புணர்வு மற்றும் கொள்திறன் கட்டியெழுப்பற் செயலமர்வு

2021 ஆகஸ்ட் 18 முதல் 20 ஆம் திகதி வரை சுற்றாடல் நீதிக்கான நிலையத்துடன் இணைந்து மூலோபாய சுற்றாடல் மதிப்பீடு தொடர்பான மெய்நிகர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. SEA பற்றிய வெளிநாட்டு மற்றும் உள்ளூர் நிபுணர்கள் இந்த நிகழ்வில் வளவாளர்களாகப் பங்குபற்றினர். துடிப்பான பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியமைக்காக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

C. முன்னோடி அடிப்படையில் SEAகளை நடைமுறைப்படுத்துவதற்காக பங்கீடுபாட்டாளர்களை திரட்டுதல்

I. மேல் மாகாணத்திற்கான கழிவு முகாமைத்துவ பெருந்திட்டத்திற்காக மூலோபாய சுற்றாடல் மதிப்பீடு

இலங்கை அரசாங்கத்தின் ஒரு வேண்டுகோளுக்கு இணங்க, ஜப்பானிய சர்வதேச கூட்டுத்தாபன முகவராண்மை (JICA) மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகாரசபையுடன் இணைந்து மேல் மாகாணத்திற்கான கழிவு முகாமைத்துவ பெருந்திட்டமொன்றை உருவாக்க ஆரம்பித்துள்ளது. கழிவு முகாமைத்துவ அதிகாரசபை (மேல் மாகாணம்), பெருந்திட்ட கருத்திட்டத்திற்காக ஒரு "மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டை" மேற்கொள்வதற்கு உத்தேசித்து, மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து தொழில்நுட்ப வழிகாட்டல்களைக் கோரியது. அதற்கிணங்க, 2021 ஆகஸ்ட் 13 ஆம் திகதி சம்பந்தப்பட்ட முக்கியமான பங்கீடுபாட்டு நிறுவனங்களின் பங்கேற்புடன் இணையவழி செயற்பரப்பெல்லைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டம் மற்றும் சேகரிக்கப்பட்ட மீளாய்வுகளின் அடிப்படையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை கழிவு முகாமைத்துவ அதிகாரசபைக்கு (மேல் மாகாணம்) விசாரணை நியதிகளை (ToR) வழங்கியது).

II. கொழும்புப் பெருநகரப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் மழைநீர் வடிகாலமைப்புத் திட்டத்திற்கான மூலோபாய சுற்றாடல் மதிப்பீடு

கொழும்புப் பெருநகரப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் (பொல்கொட ஆற்றுப்படுக்கை) மழைநீர் வடிகாலமைப்புத் திட்டத்திற்கான மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டின் இறுதி முக்கிய பங்குதாரர்களின் கூட்டம் 2021 நவம்பர் 11 ஆம் திகதி ஜூம் தளத்தினூடாக மெய்நிகர் முறையில் நடைபெற்றது.


.

D. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான திட்டமிடல் குழுவில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையை பிரதிநிதித்துவப்படுத்தல்

SEA அலகு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான திட்டமிடல் குழுவில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

அத்தியாயம் 5 : ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகின் பிரதான குறிக்கோள்களாவன: சுற்றாடல் சீரழிவு அல்லது அதனைத் தடுத்தலுடன் தொடர்புடைய ஆராய்ச்சி/ கற்கைகள்/ ஆய்வுகளை நடாத்துதல், ஊக்குவித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் மற்றும் அத்தகைய தகவல்களைப் பரப்புதல் அத்துடன் புவியியல் தகவல் முறைமை (GIS) மற்றும் தொலையுணர்வு (RS) தொழில்நுட்பங்களைப் பிரயோகிப்பதன் ஊடாக இயற்கை வளங்களின் நிலையான முகாமைத்துவத்திற்கு ஆதரவளித்தல். அதனடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டது.



உரு 21 : கம்பராவ கங்கை உப நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் சூழற்றொகுதிச் சேவைகளின் வரைபடம்

A. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆணையுடன் தொடர்புடைய ஆராய்ச்சிக் கற்கைகள்/ ஆய்வுகளை நடத்துதல், வசதி செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்

- கம்பராவ கங்கை உப நீர்ப்பிடிப்புப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட "சுற்றாடல் மதிப்பீட்டிற்கான சூழல் சேவைகளின் குறிகாட்டிகளின் அபிவிருத்திக்கான' முன்னோடிக் கற்கை முடிவடையும் நிலையில் உள்ளதுடன், சிறப்பாகப் பொருந்தம் மாதிரியைத் தெரிவு செய்வதற்கான இறுதி களச் சரிபார்ப்பும் மேற்கொள்ளப்படவுள்ளது. சூம் இணையவழிக் கூட்டத்தின் ஊடாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஊழியர்களுக்கு கற்கையின் பெறுபேறுகள் சமர்ப்பிக்கப்பட்டன.



உரு 20 : ஆராய்ச்சிச் செய்திமடல்

- 2021 ஆம் ஆண்டில், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகினால் 07 ஆராய்ச்சி முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளதுடன் அவற்றில் 05 ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவினால் நிதியிடலுக்காகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பின்வரும் 02 ஆராய்ச்சிகளுக்காகவும் ஒதுக்கப்பட்ட நிதியின் முதல் தவணை விடுவிக்கப்பட்டுள்ளது.

i. வாகன சேவை நிலையங்களில் இருந்து கழிவுகளை முறையற்ற விதத்தில் அகற்றுவதால் ஏற்படும் மண்ணின் தர மாற்றங்களை மதிப்பீடு செய்தல்

ii. CCME நீர்த்தரச் சுட்டெண்ணைப் பயன்படுத்தி களு கங்கை வடிநிலத்தின் மேற்பரப்பு நீரின் தரத்தை மதிப்பீடு செய்தல்

- 2019 ஆம் ஆண்டில் வசதியளிக்கப்பட்ட "நிதிச் செயலாற்றுகை மீதான பசுமை நடைமுறைகளின் தாக்கம்: இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் மீதான ஒரு கற்கை" என்னும் தலைப்பிலான தத்துவமாணிப் பட்ட ஆய்வு வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் வசதி செய்யப்பட்ட "COD, BOD மற்றும் TSS ஐ பரிசோதிப்பதன் மூலம் வர்த்தக ரீதியாக காய்கறிகளை சுத்தம்செய்யும் தெரிவு செய்யப்பட்ட அமைவிடங்களில் காய்கறிகளைக் கழுவும் நீரின் தரத்தை ஆய்வு செய்தல்" என்ற தலைப்பிலான ஆராய்ச்சியும் 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- மத்திய சுற்றாடல் அதிகாரசபை உத்தியோகத்தர்களினால் பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கற்கைகளின் கண்டறிதல்களையும் சுற்றாடல் துறையில் புதிய கண்டறிதல்களையும் பரப்புவதற்காக ஆராய்ச்சி செய்திமடல் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது (உரு 2).

B. இடஞ்சார்/இடஞ்சாரா தரவுத்தளங்களை இற்றைப்படுத்தல் மற்றும் பேணுதல்

- ஆண்டின் ஒவ்வொரு மாதத்திலும் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில்கள்/ செயற்பாடுகளின் சுற்றாடல் பாதுகாப்பு உரிம தரவுத்தளத்தின் சுருக்கம் தயாரிக்கப்பட்டது.
- 1: 10,000 தரவுத் தாள்களின் ஹைட்ரோ layer, 79 முதல் 92 (290 தரவுத் தாள்கள்) புவிக் குறியீடு இடப்பட்டுத் தொகுக்கப்பட்டன.
- அனைத்து மாவட்டங்களிலும் சுற்றாடல் பாதுகாப்பு உரிம தரவுத்தளங்களிலுள்ள கைத்தொழில்களின் GPS அமைவிடங்கள் சரிபார்க்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அட்டவணை 23 : இடஞ்சார்/இடஞ்சாரா தரவுத்தளங்களை இற்றைப்படுத்தல் மற்றும் பேணுதல்

Industrial Summary update upto 31.01.2021

	Province	District	Total A, B, C & BOI Industry	Total "A" category	Total "B" category	Total "C" category	Total BOI Industry
1	Western	Colombo	6387	2592	1334	2199	262
		Gampaha	6119	2332	1289	2193	305
		Kalutara	3027	965	659	1268	135
2	Southern	Galle	2960	616	860	1394	90
		Matara	2653	464	525	1641	23
		Hambantota	2763	428	335	1967	33
3	Eastern	Trincomalee	1146	262	211	652	21
		Ampara	1959	412	363	1167	17
		Batticaloa	1316	263	322	716	15
4	Uva	Badulla	2524	429	264	1813	18
		Moneragala	1974	340	163	1457	14
5	Central	Kandy	3888	791	649	2393	55
		Matale	1764	387	224	1129	24
		N'Eliya	832	237	133	439	23
6	North Central	Anuradhapura	2489	644	349	1462	34
		Polonnaruwa	830	231	206	383	10
7	Sabaragamuwa	Ratnapura	2683	679	709	1263	32
		Kegalle	2193	571	677	914	31
8	Northern	Jaffna	1905	400	350	1151	4
		Mannar	472	110	115	246	1
		Vavuniya	456	179	70	202	5
		Kilinochchi	577	70	168	336	3
		Mullaitivu	425	71	116	237	1
9	North Western	Kurunegala	950	538	412	0	0
		Puttalam	347	237	110	0	0
	Total		52,639	14,248	10,613	26,622	1,156
	% of each Category			27	20	51	2

Industrial Summary update upto 31.12.2021

	Province	District	Total A, B, C & BOI Industry	Total "A" category	Total "B" category	Total "C" category	Total BOI Industry
1	Western	Colombo	6302	2599	1241	2202	260
		Gampaha	6308	2523	1274	2202	309
		Kalutara	3114	1017	677	1278	142
2	Southern	Galle	2936	610	811	1466	49
		Matara	2843	458	481	1882	22
		Hambantota	2862	442	346	2042	32
3	Eastern	Trincomalee	1147	268	200	659	20
		Ampara	1983	432	367	1167	17
		Batticaloa	1305	269	308	713	15
4	Uva	Badulla	2608	461	257	1877	13
		Moneragala	1974	369	146	1443	16
5	Central	Kandy	3929	829	585	2457	58
		Matale	1834	421	217	1172	24
		N'Eliya	848	243	152	431	22
6	North Central	Anuradhapura	2614	783	377	1430	24
		Polonnaruwa	805	229	188	378	10
7	Sabaragamuwa	Ratnapura	2787	766	726	1264	31
		Kegalle	2311	573	664	1042	32
8	Northern	Jaffna	1925	404	349	1162	10
		Mannar	487	116	113	256	2
		Vavuniya	469	194	68	202	5
		Kilinochchi	594	72	179	340	3
		Mullaitivu	415	71	109	234	1
9	North Western	Kurunegala	934	530	404	0	0
		Puttalam	390	261	129	0	0
	Total		53,724	14,940	10,368	27,299	1,117
	% of each Category			28	19	51	2


C. புவிசார் தகவலியல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மீதான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு / தலைமை அலுவலகம் / பிராந்திய அலுவலகங்கள் மற்றும் ஏனைய முகவராண்மைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் கொள்திறன்களைக் கட்டியெழுப்புதல்

- 25 மாவட்டங்களின் சு.பா.உ. தரவுத்தளங்கள் இணையவழி கூகிள் தாள்களில் பதிவேற்றம் செய்யப்பட்டு, தொழில்துறை தரவுத்தளத்தின் பிவோட் டேபிள்கள் மற்றும் சுருக்கத் தாள்கள் தயாரிப்பு மீதான சூம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. - அதிகாரசபையின் பிராந்திய அலுவலகங்களின் பணியாட்டொகுதியினர்
- கூகிள் ஏர்த் மற்றும் சுற்றாடல் செயலிகளுக்கான அறிமுகம் – ம.சு.அ. பணியாட்டொகுதியினர்
- புவிசார் தகவலியல் மற்றும் செயலிகளுக்கான அறிமுகம் – ம.சு.அ. பணியாட்டொகுதியினர்
- ஒரு சிறந்த Power Point சமர்ப்பித்தலை மேற்கொள்வது எவ்வாறு – ம.சு.அ. பணியாட்டொகுதியினர் (2 கூட்டத் தொடர்கள்)
- ஆராய்ச்சி முன்மொழிவு தயாரித்தல் மற்றும் ஆராய்ச்சிக் கற்கைகளை மேற்கொள்ளுதல் – சனாதிபதியின் பதக்கங்களுக்கு தகுதிபெறும் சுற்றாடல் முன்னோடிகள்

D. CEA இன் ஏனைய அலகுகள் மற்றும் கருத்திட்டங்கள்/நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள்

I. சுரக்கிமு கங்கா" நிகழ்ச்சித்திட்டத்திற்காக

- ஒவ்வொரு மாவட்டத்தினதும் ஆறுகள் பற்றிய ஆய்வு மீதான தரவுகள், பல்வேறு நிர்வாகப் பகுதிகளில் உள்ள பிரச்சினைகளை முன்னிலைப்படுத்துவதற்காக சுருக்கமாகக் தொகுக்கப்பட்டன
- மாவட்டக் குழுக் கூட்டங்களில் ஆறுகள் பற்றிய ஆய்வுத் தரவுகளை சமர்ப்பிப்பதற்காக மாவட்ட வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன.
- இரண்டாம் கட்டத் தரவு சேகரிப்பிற்காக இரண்டு பயனாளர் வழிகாட்டிக் காணொளிகளுடன் ஆறுகள் மீதான ஆய்வுச் செயலி திருத்தப்பட்டு அனைத்துப் பிராந்திய அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டது.
- பின்வரும் செயலிகளுடன் “ சுரக்கிமு கங்கா இணையவழி GIS முறைமை” விருத்தி செய்யப்பட்டது.
  1. ஆறுகள் பற்றிய ஆய்வுத் தரவுகள் முகப்புப்பலகை (Dashboard)
  2. முன்னேற்றக் கண்காணிப்பு முகப்புப்பலகை
  3. முன்மொழிவு சமர்ப்பித்தல் முகப்புப்பலகை
  4. மாவட்ட மற்றும் பிரதேசக் குழுக்கள் முகப்புப்பலகை



உரு 22 : “சுரக்கிமு கங்கா இணையவழி GIS முறைமை”

- பின்வரும் நோக்கங்களுக்காக "சுரக்கிமு கங்கா" நிகழ்ச்சித்திட்டத்திற்கான பின்வரும் 5 கையடக்க செயலிகள் விருத்தி செய்யப்பட்டன
  1. கருத்திட்ட முன்மொழிவை சமர்ப்பித்தல்.
  2. ஆறுகள் மாசடைதல் பற்றிய பொதுமக்களின் கருத்துக்களைத் திரட்டுதல்

3. ஆறுகள் மாசடைதலுடன் தொடர்பற்ற சுற்றாடல் பிரச்சினைகள் பற்றிய பொதுமக்களின் கருத்துக்களைத் திரட்டுதல்
4. தாபிக்கப்பட்ட மாவட்டக் குழுக்கள் பற்றிய தகவல்களைப் பதிவேற்றுதல்.
5. தாபிக்கப்பட்ட பிரதேசக் குழுக்கள் பற்றிய தகவல்களைப் பதிவேற்றுதல்.

- "சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தை" வினைத்திறனுடன் நடைமுறைப் படுத்துவது தொடர்பான இணையவழி நிகழ்ச்சித்திட்டத்தில் சுரக்கிமு கங்கா இணையவழி GIS முறைமை தொடர்பாக பிராந்திய அலுவலகங்களின் பணியாட்டொகுதியினருக்கு விழிப்புணர்வு விரிவுரையொன்று நடத்தப்பட்டது.
- சுரக்கிமு கங்கா இணையவழி GIS முறைமைக்காக பயனாளர் வழிகாட்டிக் காணொளியொன்று தயாரிக்கப்பட்டு மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பணியாட்டொகுதியினருக்கு வழங்கப்பட்டது.
- சுரக்கிமு கங்கா இணையவழி GIS முறைமையின் முகப்புப்பலகை இல் கருத்திட்ட முன்மொழிவுத் தகவல்களை தரவேற்றம் செய்வதற்குபிராந்திய மற்றும் மாவட்ட அலுவலகங்களின் உத்தியோகத்தர்கள் வழிகாட்டப்பட்டனர்.

II. CEA இன் ஏனைய பிரிவுகள், மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்காக

ஏனைய பிரிவுகள், மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் பின்வருமாறு:

- தயாரிக்கப்பட்ட வரைபடங்களின் எண்ணிக்கை– 103
- குறிப்பிட்ட பொருள்களுடன் தொடர்புடைய ஆயத்தொலைவுகளின் ஒப்பீட்டு நிலைகளை சரிபார்த்தல் (ஏனைய அலகுகளின் வேண்டுகோளின் பேரில்)– 27
- விருத்தி செய்யப்பட்ட செயலிகளின் எண்ணிக்கை – 03

i.) தியவன்ன ஓயவின் கைத்தொழில் ஆய்வு (EPD)
ii.) மர நடுகை மற்றும் விநியோக தரவு சேகரிப்பு (EPU)
iii.) கழிவு முகாமைத்துவ தரவு சேகரிப்பு(SWMU)

அத்தியாயம் 6 : சட்ட அலகு

"ஒவ்வொருவரினதும் இருப்பிற்காக சுற்றாடலை விரிவுபடுத்துவதற்காக சுற்றாடல் விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்"

A. தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை

பணிப்பாளர் நாயகத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழான சட்ட அலகு, திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதற்கு உதவுகின்றது. இச்சட்டத்தின் கீழான வழக்குச் செயன்முறைக்கு வசதியளிப்பதே இதன் கணிசமான பணியாகும். சட்ட அலகினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பின்வருமாறு.

2020 ஆம் ஆண்டில் சட்ட அலகு பல வழக்குகளைத் தாக்கல் செய்து இறுதி செய்துள்ளது. இதற்கிணங்க, 2021 ஆம் ஆண்டில் ஏறத்தாழ ஐந்நூற்று அறுபத்திரண்டு (562) வழக்குகள் கையாளப்பட்டதுடன், இவை மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளையும் அதிகாரசபையினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளையும் குறிப்பீடு செய்கின்றன. 2021 ஆம் ஆண்டில் சட்டப் பிரிவு நூற்றி நாற்பத்து நான்கு (144) வழக்குகள் புதிதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தண்டப்பணங்களின் மொத்த தொகை ரூ. 1,101,775.48.

B. NEA இன் அமுலாக்கத்தில் மாகாணங்களின் செயலாற்றுகை

இல.	மாகாணத்தின் பெயர்	புதிதாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் 2021	CEA இனால் தாக்கல் செய்யப்பட்ட நிலுவையில் உள்ள வழக்குகளின் மொத்த எண்ணிக்கை	CEA இனால் தாக்கல் செய்யப்பட்ட இறுதி செய்யப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை
01.	மேல்	72	149	12
02.	மத்திய	26	137	15
03.	ஊவா	03	21	01
04.	தெற்கு	07	17	00
05.	கிழக்கு/வடக்கு	23	61	19
06.	சபரகமுவ/வடமேல்	12	63	16
07.	வட மத்திய	01	08	00
	மொத்தம்	**144**	**456**	**63**

C. CEA இற்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்

நீதவான் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், மேல் நீதிமன்றங்கள், உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றில் 2021 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு எதிராக நூற்று ஆறு (106) வழக்குகள் நிலுவையில் இருந்தன.

மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்காக உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதவான் நீதிமன்றங்களுக்கு சட்ட அலகின் உத்தியோகத்தர்கள் தோற்றுவர்.

மேலும், சட்ட அலகின் உத்தியோகத்தர்கள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்களை வரைவதில் ஈடுபடுவதுடன், ஆலோசனைகளிலும் கலந்து கொள்கின்றனர்.

D. NEA இன் ஏற்பாடுகளின் அமுலாக்கத்தின் முன்னேற்றம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்ட நியமங்களை உறுதிப்படுத்தும் பொருட்டு பல கைத்தொழில்கள் சுத்திகரிப்பு பொறித்தொகுதிகளின் நிர்மாணத்தை நிறைவு செய்துள்ளன. பல கைத்தொழில்கள் தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஒலி மட்ட நியமங்களுக்கு இசைந்ததுடன், சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இசைந்ததன் பின்னர், அந்தக் கைத்தொழில்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

.

E. சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள்/காரணக் கடிதங்களை இரத்துச் செய்தல், மறுத்தல் மற்றும் இடைநிறுத்தல்

கைத்தொழில்களினால் ஏற்படும் சுற்றாடல் மாசடைதலைக் கருத்திற்கொண்டு, இருபத்தியிரண்டு(22) கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளதுடன் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை வழங்க மறுத்து நூற்றி ஒன்பது (109) கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், சட்ட அலகிலிருந்து தேவையான அறிவுறுத்தல்களுடன் பகுப்பாய்வு அறிக்கைகள், ஒலி அளவீட்டு அறிக்கைகள் மற்றும் பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, EPC பிரிவு, மாகாண அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆய்வுகூடம் என்பவற்றுக்கும் பல கோப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

F. பிரிவு 24B பணிப்புரைகள்

தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமைக்காக சட்டப் பிரிவு ஐம்பது (50) பிரிவு 24B பணிப்புரைகளை அனுப்பியுள்ளது.

G. சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களின் நிபந்தனைகள்

புதிய சு.பா.உ. தொடர்பான சு.பா.உ. இன் நிபந்தனைகள், மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களைச் சேர்ந்த சட்ட உத்தியோகத்தர்கள்/ உதவி சட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் சட்ட அலகின் உத்தியோகத்தர்களினால் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

H. சுற்றாடல் அமைச்சின் மேன்முறையீட்டு விசாரணைகள்

சுற்றாடல் அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்பட்ட அறுபத்தைந்து (65) மேன்முறையீட்டு விசாரணைகளில் சட்ட அலகின் உத்தியோகத்தர்கள் சமுகமளித்துள்ளனர்.

I. நொத்தாரிசுப் பணி

மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கான கருத்திட்டங்கள் மற்றும் குத்தகை உடன்படிக்கைகளை நடைமுறைப் படுத்துவதற்கான பல்வேறு தொழில்நுட்ப விடயங்கள் பற்றி ஆலோசகர்களிடமிருந்து பல்வேறு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான தொண்ணூற்றெட்டு (98) உடன்படிக்கைகளை சட்ட அலகு தயாரித்து பரிசோதித்துள்ளது.

J. கூட்டங்கள்

சுற்றாடல் விடயங்கள் தொடர்பான ஏறத்தாழ இருநூற்று எண்பத்து மூன்று (283) கூட்டங்களுக்கு சட்ட அலகின் உத்தியோகத்தர்கள் சமுகமளித்துள்ளனர்.

K. முறைப்பாடுகள்

பொதுமக்கள், உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்ட செயலக அலுவலகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் அனுப்பப்படும் மாசடைதல் மற்றும் தொல்லைகள் தொடர்பான முறைப்பாடுகளை சட்ட அலகு கையாண்டுள்ளது.

L. கலந்தாலோசனைகள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பான ஆட்சேபனைகள், பதில்கள், எழுத்து மூலமான சமர்ப்பிப்புகளைத் தயாரிக்கும் பொருட்டு சட்ட அலகின் உத்தியோகத்தர்கள் சட்டத்துறைத் தலைமையதிபதி திணைக்களத்தில் ஐம்பத்தொரு (51) கலந்தாலோசனைகளில் கலந்து கொண்டனர்.

M. ஆலோசனை

2021 ஆம் ஆண்டில், சுற்றாடல் விடயங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக பல உள்ளூராட்சி மன்றங்கள், தனிநபர்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளுக்கு அறுநூற்றுத் தொண்ணூற்று இரண்டு (692) ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

.

N. சட்ட அறிவித்தல்கள்

சுற்றாடல் மாசடைதல்/சேதத்தை ஏற்படுத்திய இருநூற்றுப் பன்னிரண்டு (212) கைத்தொழில்களுக்கு சட்ட அறிவித்தல்கள் அனுப்பப்பட்டன.

O. பரிசோதனை அறிக்கைகள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் தொடர்பான பல பரிசோதனை அறிக்கைகளுக்கு, நீதிமன்றங்களில் தாக்கல் செய்தல் மற்றும் சுற்றாடல் அமைச்சின் மேன்முறையீட்டு விசாரணைகளுக்கு சமர்ப்பித்தல் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக சட்டப் பிரிவின் உத்தியோகத்தர்கள் அங்கீகாரம் வழங்கினர்.

P. விழிப்புணர்வு

தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் தொடர்புடைய ஏனைய சட்டங்கள் பற்றி ஏனைய நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள்/பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சட்ட அலகின் உத்தியோகத்தர்கள் ஐம்பத்தைந்து (55) விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்து கொண்டனர்.

மேலும், பல்கலைக்கழகங்களின் சட்ட மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சட்ட அலகின் உத்தியோகத்தர்களினால் தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றி அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

Q. தேசிய சுற்றாடல் சட்டத்திற்கான திருத்தங்கள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சட்ட அலகு, உத்தேச தேசிய சுற்றாடல் சட்டத் திருத்தங்களுக்கு சுமை அடிப்படையிலான உரிமத் திட்டம் மற்றும் ஈரநிலம் மற்றும் அபாயகரமான கழிவுகள் பற்றிய அத்தியாயங்கள் ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் "மாசுபடுத்துபவர் கொடுப்பனவுக் கோட்பாடு" போன்ற புதுமையான கருத்தாக்கங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அபராத ஏற்பாடுகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும் திருத்தப்பட வேண்டிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டு, 2021 ஆம் ஆண்டில் மீண்டும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு, உத்தேச திருத்தங்களின் வரைவைத் தயாரிப்பதற்காக, அங்கீகரிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. வரைவு தொடர்பான சுற்றாடல் அமைச்சிற்கான மத்திய சுற்றாடல் .அதிகாரசபையின் அவதானிப்புகளுக்காக வரைவொன்று அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர், மேலும் புதிய திருத்தங்கள் முன்மொழியப்பட்டதுடன், புதிய அமைச்சரவையிடமிருந்து புதிதாக அங்கீகாரத்தைப் பெறுவதற்காக புதிய திருத்தங்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.
மேலும் 2021 ஆம் ஆண்டில் பின்வரும் நான்கு ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டன.

- 2021.01.21 ஆம் திகதியிடப்பட்ட 2211/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி (ஒற்றைப் பாவனை மற்றும் குறுகிய காலப் பாவனைப் பிளாஸ்டிக்கைத் தடை செய்தல்)
- 2021.01.21 ஆம் திகதியிடப்பட்ட 2211/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி (பிளாஸ்டிக் பொருட்களை அடையாளம் காணல் தரநியமங்கள்)
- 2021.07.19 ஆம் திகதியிடப்பட்ட 2237/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி (தலங்கம பாதுகாக்கப்பட்ட பிரதேசம்)
- 2021.10.01 ஆம் திகதியிடப்பட்ட2247/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி (கிறகரி வாவி EPA)

அத்தியாயம் 7 : சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவு

அனைத்து உயிரினங்களும் தங்கள் உயிர்வாழ்விற்காக சுற்றாடல் வளங்களைப் பயன்படுத்துகின்றன. சுற்றாடலின் நிலைபேறான தன்மையைப் பேணுவதற்கு நாம் இந்த சுற்றாடல் சேவைகளை கவனத்துடன் பயன்படுத்த வேண்டும். இயற்கை வளங்களை நிலைபேறான முறையில் பயன்படுத்துவதற்குப் பல்வேறு இலக்குக் குழுக்களிடையே விழிப்புணர்வின் மட்டத்தை உயர்த்துவது இன்றியமையாததாகும்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவானது, மேற்குறிப்பிட்ட காரணிகள் மீது கவனம் செலுத்துவதுடன், சுற்றாடல் பேணுகையை நோக்கிய அவர்களின் துடிப்பான பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்காக பல்வேறு இலக்குக் குழுக்களிடையே விழிப்புணர்வின் மட்டத்தை உயர்த்தும் பொருட்டு பல்வேறு கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்தி வருகின்றது.

7.1 சுற்றாடல் கல்வி அலகு (EEU)

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி அலகு (EEU), பல்வேறு இலக்குக் குழுக்களுக்கு சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் சுற்றாடலைப் பேணுவதற்கும் பாதுகாப்பதற்கும் அவர்களின் துடிப்பான பங்கேற்பை பெற்றுக்கொள்வதற்கும் பல்வேறு கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி வருகின்றது.
2021 ஆம் ஆண்டின் செயற்றிட்டத்தின் பிரகாரம், சுற்றாடல் கல்வி அலகு பல்வேறு இலக்குக் குழுக்களுக்காக பின்வரும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியுள்ளது.

சுற்றாடல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பில் ஆட்கள் விழிப்புடன் உள்ள மற்றும் அக்கறை கொண்டுள்ள உலகை அபிவிருத்தி செய்வதுடன், தற்போதைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிவதற்கும் எதிர்கால சுற்றாடல் சீரழிவின் போக்கைத் தடுப்பதற்கும் தனித்தனியாகவும் கூட்டாகவும் வேலை செய்யுமாறு மக்களை இணங்கவைப்பதும் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவின் (EE&A) குறிக்கோள்கள் ஆகும்.

மிகவும் பயனுறுதிமிக்க மற்றும் வினைத்திறன்மிக்க சேவையை வழங்குவதற்காக சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவானது சுற்றாடல் கல்வி அலகு (EEU), சுற்றாடல் மேம்பாட்டு அலகு (EPU) மற்றும் சுற்றாடல் தகவல் நிலையம் ஆகிய 3 அலகுகளைக் கொண்டுள்ளது.

7.1.1 சுற்றாடல் கல்வி நிகழ்ச்சித்திட்டம்

1. முன்பள்ளி வழிகாட்டிகளை மறுபதிப்பு செய்தல்.
2. சூழல் கிளப் சாதனங்களை தயாரித்தல்
3. EPP சாதனங்களை தயாரித்தல்
4. EPP செய்திமடலை 25 மாவட்டங்களில் வெளியிடுதல்
5. அதிபர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
6. பதக்கப் பரீட்சையை நடத்துதல்
7. EPP தேசிய வழிப்படுத்தும் குழுவை நடத்துதல்
8. தேசிய EPP தரவுத்தளத்தை விருத்தி செய்தல்

9. சனாதிபதி பதக்க வெற்றியாளர்களின் அவைகளுடன் சுற்றாடல் பேணுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
10. தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
11. "சுற்றாடல் பற்றிய சமயப் போதனைகள்" (பௌத்த, கத்தோலிக்க, இஸ்லாம் மற்றும் இந்து) குறித்த புத்தக வெளியீடு, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 40 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம், சனாதிபதி பதக்கங்கள் வழங்கும் வைபவங்கள் மற்றும் சுற்றாடற் சித்திரப் புத்தகம்
12. சங்ஹித", "மிட்டியாவத்த" மற்றும் "பரிசர வியாமன" ஆகிய வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பு
13. "தக்ஷிலாவ" (சிங./தமி.) மற்றும் "Mr. Green" என்னும் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒளிபரப்பு
14. சுற்றாடல் சித்திரப் போட்டி நடத்துதல்
15. தொலைக்காட்சி விளம்பர ஒளிபரப்பு
16. பொலித்தீன் பாவனையைக் குறைப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்
17. பத்திரிகை விளம்பரம்

A. EPP நிகழ்ச்சித்திட்டம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் EEU பிரிவானது தேசிய சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை (NEPP) அறிமுகப்படுத்தியுள்ளது. இது கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பாடசாலை முறைமையினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட இளம் தலைமுறையினருக்கான ஒரு புதுமையான சுற்றாடல் பேணுகை முன்னெடுப்பாகும். சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பேணுகைக்கான முக்கிய தூதுவர்களாக பாடசாலை மாணவர்களை பயிற்றுவிப்பதும் பயன்படுத்துவதும் EPP இன் இலக்காகும். சுற்றாடல் அறிவை மேம்படுத்துவதற்கும், திறன்களை விருத்தி செய்வதற்கும் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பேணுகைக்குத் தேவையான மனப்பான்மைகளை மாற்றுவதற்கும் EPP உதவுகின்றது.


I. சூழல் கிளப் மற்றும் EPP நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்

கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக ஜூம் தொழில்நுட்பம் மற்றும் பிற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி EPP மற்றும் எக்கோ கிளப் நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடத்தப்பட்டன. ஆனால் பரீட்சைகள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன. கல்வியாண்டு மார்ச் 2022 இல் முடிவடையும் என்பதால் மார்ச் மாத இறுதியில் பெறுபேறுகள் இறுதி செய்யப்படும். ஆயினும், ஜனாதிபதி பதக்கப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு 129 ஜனாதிபதி பதக்க வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.
நாடு முழுவதும் EP நிகழ்ச்சித்திட்டத்தை பலப்படுத்தும் பொருட்டு பின்வரும் உப நிகழ்ச்சித்திட்டங்கள்
நடாத்தப்பட்டுள்ளன.

II. முன்பள்ளி வழிகாட்டியை மறுபதிப்பு செய்தல்

பல்வேறு சுற்றாடல் அம்சங்கள் தொடர்பில் முன்பள்ளி பிள்ளைகளின் உணர்நிலையை மேம்படுத்துவதற்காக முன்பள்ளி சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
முன்பள்ளி ஆசிரியர் வழிகாட்டிகள் அச்சிடப்பட்டு முன்பள்ளிகளிடையே விநியோகிக்கப்படுவதுடன்,
ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும் நடத்தப்படுகின்றது.

முதல் வழிகாட்டி 2015 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்காக 2000 புத்தகங்கள் மறுபதிப்பு செய்யப்பட்டன.





உரு 23 : முன்பள்ளி வழிகாட்டி

III. Producing Eco Club Materials



உரு 24 : சூழல் கிளப் சாதனங்கள்

தூய்மையான மற்றும் பசுமையான சுற்றாடலை நோக்கியதாக விழுமியங்கள், நடத்தைகள் மற்றும் மனப்பான்மைகளை மாற்றுவதற்குத் தரம் 1 முதல் 5 வரையான மாணவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குவதன் மூலம் ஆரம்ப மட்டங்களில் மாணவர்களின் பங்கேற்பைப் பெறுவதற்காக சூழல்-கிளப்கள் உருவாக்கப்படுகின்றன. இந்தச் செயற்பாடுகளின் ஊடாக சிறு பிள்ளைகள் தமது பிள்ளைப் பருவத்திலிருந்து சூழல்-நேயமான விதத்தில் பயிற்றுவிக்கப்படுவதுடன் தரம் ஆறில் அவர்கள் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

.

அட்டவணை 24 : சூழல் கிளப் சாதனங்கள்

தொ. இல	சாதனம்	எண்ணிக்கை
01	துருலதா சான்றிதழ்	85000
03	விஹகா சான்றிதழ்	25000
03	சோபா சான்றிதழ்	11000

IV. EPP சாதனங்களைத் தயாரித்தல்

இந்த திட்டத்தில் சேரும் ஒரு சுற்றாடல் முன்னோடிக்கு ஐந்து சின்னங்கள் மற்றும் சான்றிதழ்களை வெல்வதற்கான வாய்ப்பு உள்ளது. மதிப்பீட்டு நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம், மாவட்ட மற்றும் மாகாண உத்தியோகத்தர்கள் EPP மற்றும் சூழல் கிளப் சாதனங்களை பாடசாலைகளுக்கு விநியோகிப்பர்.

பின்வரும் சாதனங்கள் 2021 இல் தயாரிக்கப்பட்டன.

அட்டவணை 25 : 2021 இல் தயாரிக்கப்பட்ட சாதனங்கள்

தொ. இல	சாதனம்	எண்ணிக்கை
01	சுற்றாடல் முன்னோடிக் குறிப்புப் புத்தகங்கள்	80000
02	சுற்றாடல் முன்னோடி தொப்பிகள்	53000
04	சுற்றாடல் முன்னோடி பதக்கங்கள்	80000
05	ஹரித சான்றிதழ்	50000
06	ஹரித பதக்கங்கள்	50000
07	ரஜத சான்றிதழ்	25000
08	ரஜத பதக்கங்கள்	2500
09	ஸ்வரண சான்றிதழ்	1500
10	ஸ்வரண பதக்கங்கள்	1500
11	EPP ஆசிரியர் வழிகாட்டி	1500
	EPP ஆசிரியர் சான்றிதழ்	2500
12	கொடி	2000

V. அதிபர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள், EPP இற்குப் பொறுப்பான ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் சுற்றாடல் முன்னோடித் தலைவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. காலி மாவட்டத்தில் 30 அதிபர்களின் பங்குபற்றலுடன் அதிபர்களுக்கான ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால் ஏனையவற்றை நடத்த முடியவில்லை.

VI. பதக்கப் பரீட்சைகள் நடத்துதல்

05 சனாதிபதி பதக்க முற்பரீட்சைகள், 12 சனாதிபதி பதக்க பரீட்சைகள், 50 ஹரித பரீட்சைகள், 31 வெள்ளிப் பரீட்சைகள் மற்றும்14 தங்கப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

VII. தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

2020 ஆம் ஆண்டளவில், சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக, தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான "பசுமைத் தலைவர்" எனப் பெயரிடப்பட்ட ஒரு புதிய நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டது. ஆயினும், இந்த திட்டம் 2021 ஆம் ஆண்டிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது.

விரிவுரையாளர்களுக்காக மூன்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டதோடு, 33 விரிவுரையாளர்களின் பங்குபற்றலுடன் மேல் மாகாணத்தில் ஏப்ரல் 22 ஆம் திகதி (மத்திய சுற்றாடல் அதிகாரசபை கேட்போர் கூடத்தில்) ஒரு நிகழ்ச்சித்திட்டமும் நடாத்தப்பட்டது. மஹரகம மற்றும் புலத்சிபுர தேசிய கல்வியியல் கல்லூரிகளில் ஏனைய இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது. ஆயினும், தற்போது நிலவும் கொவிட் பெருந்தொற்று நிலைமை காரணமாக அதை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

VIII. மாவட்ட சுற்றாடல் முன்னோடி செய்திமடல் (ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு செய்திமடல்).

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் EE அலகு தமது மாவட்டங்களின் EPP தொடர்பான செயற்பாடுகள் தொடர்பாக வாசகர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மாவட்ட சுற்றாடல் முன்னோடி செய்திமடலை வெளியிடுவதற்கு நிதிகளை ஒதுக்கியுள்ளது. இந்த செய்திமடலை வெளியிடுவதன் மூலம், தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபடும் தனிநபர்களிடையே சுற்றுச்சூழல் பற்றிய அனுபவங்களையும் அறிவையும் பெறவும் பகிர்ந்து கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது

மாவட்ட சுற்றாடல் முன்னோடி செய்திமடல்கள் 25 மாவட்டங்களில் (ஒவ்வொன்றுக்கும் 1000 செய்திமடல்கள்) அச்சிடப்பட்டு மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

IX. EPP ஆணையாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டுள்ள வெளி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கின்றது. அதனடிப்படையில் இவ்வருடம் ஹம்பாந்தோட்டை, காலி, மாத்தறை, மன்னார் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் EPP ஆணையாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்காக ஐந்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

X. EPP ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட ஆலோசகர்களுக்கு வருடாந்த பயணக் கொடுப்பனவுகள்

EPP ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட ஆலோசகர்களுக்கு வருடாந்த பயணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

XI. தேசிய வழிப்படுத்தல் குழுக் கூட்டம்

2004 ஆம் ஆண்டில் EPP இன் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு சுயாதீனமான மதிப்பீடு, சுற்றாடல் கல்வி மற்றும் பாடசாலை மாணவர்களிடையே விழிப்புணர்வை விரிவுபடுத்துவதில் குறிப்பிடத்தக்க வெற்றியை அடைந்துள்ள அதேவேளை, சில நிறுவன மற்றும் நிறுவன ரீதியான பிரச்சினைகள் காரணமாக EPP இன் முழு ஆற்றலும் நிறைவேற்றப்படாமல் இருப்பதை அவதானித்துள்ளது.

எனவே, முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை பிரதான நீரோட்டத்தில் கொண்டுவரும் நோக்கில் EPP வழிநடத்தல் குழுவொன்றை தாபிப்பதற்கு மதிப்பீடு விதப்புரை செய்துள்ளது. இவ்வருடம் ஒரு தேசிய வழிநடத்தல் குழுக் கூட்டம் நடைபெற்றது.

XII. தேசிய EPP தரவுத்தளத்தை விருத்தி செய்தல்

பிராந்திய வலையமைப்புகளுக்கிடையில் தரவுகளைச் சேகரித்துப் பகிர்வதற்காக தேசிய EPP தரவுத் தளம் உருவாக்கப்பட்டது.

XIII. சனாதிபதி பதக்க வெற்றியாளர் மன்றுகளுடன் சுற்றாடல் பேணுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்


சுற்றாடல் பேணுகை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக சனாதிபதி பதக்க வெற்றியாளர்கள் மாவட்ட மட்டங்களில் மன்றங்களை தாபிப்பர். இவ்வருடம் அவர்கள் 09 மாவட்டங்களில் (கொழும்பு, களுத்துறை, கண்டி, கேகாலை, அநுராதபுரம், மொனராகலை, குருநாகல், ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை) ஒன்பது சூழல் பூங்கா நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தினர்.


B. ஊடக நிகழ்ச்சித்திட்டம்

I. புத்தகங்கள் வெளியீடு

"சுற்றாடல் மீதான சமயப் போதனைகள்" (பௌத்த, கத்தோலிக்க, இஸ்லாம் மற்றும் இந்து)

"சுற்றாடல் மீதான சமயப் போதனைகள்" என்ற புத்தகம், சமயப் போதனைகளில் சுற்றாடல் கல்வியை ஒருங்கிணைத்து வெளியிடுவதையும் அதன்மூலம் சுற்றாடல் கல்வியை சமூகமயப்படுத்துவதையும் இலக்காகக் கொண்டு வெளியிடப்பட்டது.






உரு 25 : சுற்றாடல் பற்றிய சமயப் போதனைகள்

ம.சு.அ. 40ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்
மத்திய சுற்றாடல் அதிகாரசபை தனது நாற்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் "நாற்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுதல்" என்ற தலைப்பிலான ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளது.


சனாதிபதி பதக்கம் வழங்கும் வைபவங்கள் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தின் அதியுயர்ந்த பதக்கம் சனாதிபதி பதக்கம் ஆகும். சனாதிபதி பதக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் முன்னோடிக்கு அதிமேதகு சனாதிபதி அவர்கள் சனாதிபதி மாளிகையில் பதக்கங்களை வழங்குவார்., கடந்த காலத் தகவல்கள் அனைத்தையும் திரட்டி, 'சனாதிபதி பதக்கம் வழங்கும் வைபவம்' என்ற தலைப்பிலான புத்தகம் வெளியிடப்பட்டது.



உரு 26 : 'சனாதிபதி விருது வழங்கும் விழா'

சுற்றாடற் சித்திரப் புத்தகம்

கையால் வரையப்பட்ட சித்திரங்களை உள்ளடக்கிய சித்திரப் புத்தகம் வெளியிடப்பட்டது.



II. வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பு

18. "சங்ஹித", "மிட்டியாவத்த" மற்றும் "பரிசர வியாமன" ஆகிய மூன்று வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

"சங்ஹித" வானொலி நிகழ்ச்சி

இந்த நிகழ்ச்சித்திட்டமானது சுற்றாடல் முன்னோடிகளுக்காக முன்னோடிகளின் தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்வதற்கும் நிகழ்ச்சித்திட்டத்தை மேம்படுத்துவதற்கும் வடிவமைக்கப் பட்டுள்ளது. 52 சங்ஹித நிகழ்ச்சிகள் ஒவ்வொரு சனிக்கிழமையும் "ரன்கிர" ஸ்ரீலங்காவில் ஒளிபரப்பப்பட்டன

"மிட்டியாவத்தை" மற்றும் "பரிசர வியாமன" வானொலி நிகழ்ச்சி

"மிட்டியாவத்தை" சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம் (சுற்றாடல் நாடகம்) SLBC இன் வர்த்தக சேவையில் வாராந்தம் ஒலிபரப்பப்பட்டது. இது 2021 செப்டம்பர் முதல் 2022 ஜனவரி வரை ஒலிபரப்பப்பட்டது "பரிசர வியாமன" சுற்றாடல் நிகழ்ச்சி SLBC மற்றும் விஷன் எஃப்.எம் இல் தினமும் ஒலிபரப்பப்பட்டது

III "தக்ஷிலாவ" (சிங்./தமி.) மற்றும் "Mr. Green" ஆகிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புதல்

"தக்ஷிலாவ" (சிங்./தமி.)
சுற்றாடல் முன்னோடித் திட்டத்தில் ஈடுபடும் மற்றும் சேர விரும்பும் மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு தக்ஷிலாவ நிகழ்ச்சி ஐ.டி.என் தொலைக்காட்சி அலைவரிசையில் ஒளிபரப்பப்பட்டது. வாரந்தோறும் புதன்கிழமைகளில் 17 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. "Mr.Green" என்பது சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் பேணுகை தொடர்பாக சமூகத்திற்கு செய்தியை வழங்கும் ஒரு குறுகிய காணொளிக் காட்சியாகும். இந்த நிகழ்ச்சி ஒரு மாதத்திற்கு ஐ.டி.என் இல் ஒளிபரப்பப்பட்டது.

IV. தொலைக்காட்சி விளம்பரங்களை ஒளிபரப்புதல்
ஐ.டி.என், தேசிய ரூபவாஹினி, தெரண, சிரச, ஹிரு, ஸ்வர்ணவாஹினி மற்றும் ஹரித தொலைக்காட்சியில் சுற்றாடல் செய்திகள் ஒளிபரப்பப்பட்டன.

V. பொலித்தீன் பாவனையைக் குறைப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்
பொலித்தீன் பாவனையைக் குறைப்பதற்காக பாடசாலை மாணவர்களிடையே பொலித்தீன் குறைப்பிற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

VI. பத்திரிகை விளம்பரம்

முன்னோடிகள் தங்கள் ஜனாதிபதி பதக்கத்திற்கு போட்டியிடுவதற்காக கருத்திட்டங்களை செயல்படுத்த வேண்டும். அவற்றில் சிறப்பாக நிகழ்த்தப்பட்ட 17 தெரிவு செய்யப்பட்டு தினமின மற்றும் தினகரன் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டன.

7.2 சுற்றாடல் மேம்பாட்டு அலகு

சுற்றாடல் என்பது இயற்கையின் மிக விலைமதிப்பற்ற பரிசாகும். சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டிய தார்மீக கடமை மனிதர்களுக்கு உள்ளது. எதிர்கால சந்ததியினருக்கு ஒரு நிலைபேறான சுற்றாடலை வழங்குவதற்கு நிலைபெறுதகு அபிவிருத்திக் கோட்பாடுகளைப் பின்பற்றுவது இன்றியமையாததாகும். சுற்றாடல் சீரழிவு தீங்கு விளைவிப்பதுடன் விலங்குகள், தாவரங்கள் மற்றும் மனிதர்களின் நீண்டகால ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பையும் சீர்குலைக்கின்றது. தற்போதைய தீங்கு விளைவிக்கும் சுகாதார விளைவுகள், நிலைபேறற்ற மானிட நடவடிக்கைகள் காரணமாக எழுந்த இயற்கைச் சமநிலையின்மையின் யதார்த்தத்தைக் எடுத்துக் காட்டியுள்ளது. சுற்றாடலின் மீது நமது செயல்கள் விளைவிக்கும் தாக்கத்தை நாம் புரிந்துகொள்வது முக்கியம். அதிக சுற்றாடல் விழிப்புணர்வைப் பெற்றுக்கொள்வதற்கு, எமது கோளைப் பாதுகாக்கவும், மனித செயற்பாட்டால் ஏற்கனவே ஏற்பட்ட சில சேதங்களை சரிசெய்யவும் நாம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நிலம், காற்று மற்றும் தண்ணீருக்கு மாசு வெளிவிடல், இயற்கை வளங்களை அதிகளவில் பாதிப்புறச் செய்தல், புதுப்பிக்க முடியாத எரிசக்தி நுகர்வு மற்றும் கழிவுகளை தவறான முறையில் அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் மனிதர்கள் சுற்றாடலைப் பாதிக்கின்றனர்.

சுற்றாடல் மீதான அதிக கவன உணர்வுடன் நடந்துகொள்வது மனித வாழ்க்கை முறைகளில் சிறிய மாற்றங்களைச் செய்வது போல எளிதானது. சுற்றாடலுக்கு உகந்த உற்பத்தி மற்றும் நுகர்வை நோக்கி மனிதனின் வாழ்க்கை முறையை மாற்றுவதில் சுற்றாடல் மேம்பாடு முக்கிய பங்கு வகிக்கின்றது. சுற்றாடல் கல்வியானது சுற்றாடல் பேணுகை மற்றும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகள் பற்றிய அக்கறைகளைக் கொண்டிருப்பதுடன், எதிர்கால சுற்றாடல் சீரழிவின் போக்கைத் தடுக்கும் பொருட்டு தற்போதுள்ள சுற்றாடல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிவதற்காக தனித்தனியாகவும் கூட்டாகவும் பணியாற்றுமாறு மக்களைத் தூண்டுகின்றது.

நிலைபேறான சுற்றாடலை அடைவதற்கு சுற்றாடல் மேம்பாட்டு நடவடிக்கைகளின் அவசியத்தைப் புரிந்து கொண்டுள்ள மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது, மிகவும் பயனுறுதியுடனும் வினைத்திறனுடனும் சேவைகளை வழங்குவதற்காக சுற்றாடல் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேம்பாட்டு அலகொன்றுக்கு ஒதுக்கியுள்ளது. சனாதிபதி சுற்றாடல் விருதுகள், கண்காட்சிகள் மற்றும் கலாசார நிகழ்வுகளை நடாத்துதல் போன்ற பாரிய ஒன்றுகூடல் செயற்பாடுகள் தற்போது நிலவும் "கொவிட் 19" தொற்றுநோய் நிலைமையின் கீழ் மட்டுப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், சுற்றாடல் மேம்பாட்டு அலகு 2021 ஆம் ஆண்டில் இப்பிரிவின் இலக்குகளை அடைவதற்காக பின்வருமாறு பல்வேறு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியது.

.

7.2.1 சுற்றாடல் மேம்பாடு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

A. கல்விச் சாதனங்களை விருத்தி செய்தலும் மீள அச்சிடலும் (posters, துண்டுப்பிரதிகள் & கையேடுகள்)

சுற்றாடல் கல்வி என்பது சுற்றாடல் தரத்தை மேம்படுத்துவதற்கும் சுற்றாடல் வளங்களைப் பாதுகாப்பதற்கும் பயன்படுத்தக்கூடிய அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மைகளைப் பெறுவதற்கான ஒரு செயன்முறையாகும். சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் ஆகியவை அறிவைப் பரப்புவதில் பெரிதும் பயன்படுத்தப்படும் சிறந்த கல்விச் சாதனங்களாகும். இந்த செயற்பாட்டின் கீழ், 2021 ஆம் ஆண்டின் செயற்றிட்டத்தின் பிரகாரம் சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், காணொளிகள் மற்றும் ஏனைய கல்வி சாதனங்கள் சுற்றாடல் மேம்பாட்டு அலகினால் பின்வருமாறு தயாரிக்கப்பட்டன.

I. பிளாஸ்டிக் மற்றும் PET கழிவு முகாமைத்துவம் பற்றிய கல்விச் சாதனங்கள் தயாரிப்பு

அச்சு ஊடகங்கள் ஊடாக அறிவைப் பரப்புவதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்ட EE&A பிரிவின் EPU, " பிளாஸ்டிக் மற்றும் PET கழிவு முகாமைத்துவம்" என்ற தலைப்பில் 6 புதிய சுவரொட்டிகளைத் தயாரிப்பதற்கு பங்களிப்புச் செய்தது. இந்த சுவரொட்டிகள் சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் அச்சிடப்பட்டன. பொதுமக்களுக்கு வினைத்திறன்மிக்க விழிப்புணர்வையும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்துவதற்கும் பரந்தளவிலான பார்வையாளர்களை சென்றடைவதற்கும் ஒவ்வொரு சுவரொட்டி தொடர்பான காணொளிக் காட்சிகளும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலங்களில் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன.

மேற்கூறிய சுவரொட்டிகள் மற்றும் தொடர்புடைய காணொளிக் காட்சிகள், முக்கியமாக பாடசாலைப் பிள்ளைகளிடையே விழிப்புணர்வின் அளவை உயர்த்துவதற்கும், அவர்களின் வீடுகளுக்கும் செய்தியை அனுப்புவதற்கும் பயன்படுத்தப்படும். இந்த சுவரொட்டிகளை TOT நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தும் பொருட்டு, PET மற்றும் பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் பற்றிய சமூகப் பயிற்சிக் கையேடு சிங்கள மொழிமூலமும் தமிழ் மொழிமூலமும் தொகுக்கப்பட்டு அச்சிடப்பட்டது. இக்கல்வி சாதனங்கள் அனைத்தும் இலங்கையின் மத்திய, ஊவா மற்றும் வடமேல் மாகாண சபைகளுடன் இணைந்து மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் Solidaridad network Asia கூட்டு முயற்சியாகத் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. தற்போது "ஹரித டிவி" அலைவரிசையில் காணொளிக் காட்சிகள் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. சுவரொட்டிகள் மற்றும் பயிற்சி கையேடுகள் கருத்திட்டத்தின் குறிக்கோள்களுக்கு ஏற்ப விநியோகிக்கப்பட்டுள்ளன



உரு 27 : PET பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் பற்றிய சுவரொட்டிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கையேடு


II. எழுத்துப்பிரதிகள் மற்றும் அனிமேஷன் வீடியோக்கள் தயாரிப்பு.

2021 ஆம் ஆண்டில் நான்கு வகையான ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்பட்டன. இது சம்பந்தமாக விளம்பரப் பிரசாரத்தை மேற்கொள்வதற்காக, தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகை விளம்பரங்களைத் தயாரிப்பதற்காக ஐக்கிய இராச்சியத்தின் நிதியிடல் கருத்திட்டத்துடன் (Cefas) சுற்றாடல் மேம்பாட்டு அலகு ஒருங்கிணைப்பை மேற்கொண்டது.

தெரண டிவி, சுவர்ணவாஹினி மற்றும் சிரச டிவி போன்ற பல முன்னணி தொலைக்காட்சி அலைவரிசைகளில் தொலைக்காட்சி விளம்பரங்கள் ஒளிபரப்பப்பட்டன. மேலும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வெவ்வேறு ஊடக நிலையங்களுடன் பரப்புவதற்கு, CEFASகளுடன் ஒருங்கிணைத்தது. ஷொப்பிங் பைகளை நிராகரிப்பது தொடர்பான அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட விளம்பரம் ரூபவாஹினி, ITN, ஹரித தொலைக்காட்சி மற்றும் சிரச தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பப்பட்டது.

III. சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்கள் மீதான சிறிய ஆவணப்பட காணொளிகள் தயாரிப்பு.

துறைசார் நிபுணர்களின் நிபுணத்துவத்தைப் பெற்று தலங்கம மற்றும் வளவ்வேவத்த மற்றும் வத்துரன சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்கள் மீதான சிறிய ஆவணப்பட காணொளி ஒன்று தயாரிக்கப்பட்டது.
இந்த ஆவணப்படங்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பேஸ்புக், யூ டியுப் ஆகியவற்றில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.





சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்களின் ஆவணப்படங்கள்

IV. மூன்று விருது வழங்கப்பட்ட பாடல்களைக் காட்சியாக்கம் செய்தல்.


2020 ஆம் ஆண்டின் உலக சுற்றாடல் தினத்தில் விருது வழங்கப்பட்ட பாடல்களுக்கான மூன்று காட்சியாக்கம் செய்யப்பட்ட வீடியோக்கள் பயிற்சி பெற்ற கலைஞர்கள் மற்றும் தொழில்வாண்மையாளர்களின் நிபுணத்துவத்தைப் பெற்று தயாரிக்கப்பட்டன. இந்த வீடியோக்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பேஸ்புக், யூ டியுப் மற்றும் "ஹரித TV" ஆகியவற்றில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன



உரு 28 : விருது வென்ற பாடல்களின் காட்சியமைக்கப்பட்ட வீடியோக்கள்

V. நீர்க்கோளம் பற்றிய குறும் ஆவணப்படம் தயாரிப்பு

கல்வி அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க, புதிய பாடவிதானத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்தை எளிதாக்கும் வகையில் நீர்க்கோளம் பற்றிய ஒரு குறும் கல்வி ஆவணப்படம் தயாரிக்கப்பட்டது.



உரு 29 : நீர்க்கோளம் பற்றிய ஒரு கல்வி ஆவணப்படம்

இயற்கைக் கள நிலையங்களில் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

யதார்த்தபூர்வமான விதத்தில் விழிப்புணர்வைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்காக இயற்கைக் கள நிலையங்கள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. EPU இன் கீழ் 4 இயற்கை கள நிலையங்கள் இயங்கி வருகின்றன. 2021 ஆம் ஆண்டில், தற்போதுள்ள கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக 6 திட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டன.

அட்டவணை 26: இயற்கைக் கள நிலையங்களில் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

இயற்கைக் கள நிலையங்கள்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை
ரூமஸ்ஸல	3
கேகாலை	1
அத்திடிய	2
குண்டசாலை	-

B. நடப்புப் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்ட EPU, தற்போதைய சுற்றாடல் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் சமூகப் பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டங்களையும் பின்வருமாறு நடாத்துகின்றது.

I. இணையவழி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

பொதுமுடக்கக் காலத்தில், பங்கேற்பாளர்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒன்றுசேர்ப்பதற்குப் பதிலாக, தற்போதுள்ள கொவிட் தொற்றுநோய் சூழ்நிலைகளின் காரணமாக சூம் மற்றும் டீம்ஸ் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இணையவழி பயிற்சி மற்றும் கல்வித் திட்டங்களை நடத்த EPU நடவடிக்கை மேற்கொண்டுள்ளது சுற்றாடல் தொடர்பான தற்போதைய பிரச்சினைகள் குறித்து இணையவழி வெபினார்களை நடத்துவதற்கான ஒரு சிறப்பு தொகுப்பை EPU கொள்வனவு செய்தது. ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களில் பெரும்பாலானவை நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களால் வழங்கப்பட்ட இணைப்புகளைப் பயன்படுத்தி நடத்தப்பட்டன.

2021 ஆம் ஆண்டில் பல்வேறு இலக்குக் குழுக்களுக்கு நடத்தப்பட்ட கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பின்வருமாறு

1. பல்கலைக்கழக கலைப் பீடத்தின் சமூகவியல் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு இணங்க விளையாட்டுக் கற்கைகளில் ஈடுபட்டுள்ள 2ஆம் ஆண்டு மாணவர்களுக்கு "விளையாட்டு முகாமைத்துவத்தில் பசுமை நடைமுறைகள்" என்ற தலைப்பில் விசேட இணையவழி விரிவுரை ஒன்று நடாத்தப்பட்டது.
2. சிறுவர் தினத்தை கொண்டாடும் பொருட்டு "சுற்றாடலை எவ்வாறு பாதுகாப்பது" என்ற தலைப்பில் விசேட பேஸ்புக் நேரடி விரிவுரையொன்று நடத்தப்பட்டது. ஹொரணையில் உள்ள ஹெய்லிஸ் ஃபப்ரிக் இண்டஸ்ட்ரியால் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக பாடசாலை மாணவர்களிடையே சுற்றாடல் தொடர்பான போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு வெகுமதி வழங்கப்பட்டது.





உரு 30 : Hayleys Fabric Industry இனால் ஒழுங்குசெய்யப்பட்ட பேஸ்புக் நேரலையின் சிறப்பம்சக் காட்சிகள்

3. உலக சிறுவர் தினத்தை கொண்டாடும் பொருட்டு, கொள்ளுப்பிட்டி, சென்ட் போல், மிலாகிரிய மாணவர்கள் மற்றும் அழைக்கப்பட்ட பாடசாலைகளின் சுற்றாடல் முன்னோடி மாணவர்களுக்கு "சுற்றாடலை எவ்வாறு பாதுகாப்பது" என்ற தலைப்பில் விசேட விரிவுரையொன்று வழங்கப்பட்டது.
4. கொழும்பு 10, ஆனந்தா கல்லூரி மாணவர்களுக்கும், அழைக்கப்பட்ட பாடசாலைகளின் சுற்றாடல் முன்னோடி மாணவர்களுக்கும் "மரம் நடுதலின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் இணையவழி விரிவுரை நடாத்தப்பட்டது.
5. மாலபேயில் உள்ள SLIT பல்கலைக்கழகத்தின் இளங்கலை மாணவர்களின் குழுவிற்காக "சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்பின் முக்கியத்துவம்" பற்றிய இணையவழி விரிவுரை நடத்தப்பட்டது.
6. களனி பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்பு மாணவர்கள் குழுவிற்காக "தலங்கம வாவிக்கான முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரித்தல்" என்ற தலைப்பில் இணையவழி விரிவுரை நடாத்தப்பட்டது.
7. உலக சுற்றாடல் தினத்தைக் கொண்டாடும் முகமாக, வத்தளை, லைசியம் சர்வதேசக் கல்லூரியின் மாணவர்களுக்காக "சுற்றாடலைப் பேணுதில் மாணவர்களின் வகிபங்கு" என்ற தலைப்பில் இணையவழி விரிவுரை நடாத்தப்பட்டது.
8. மஹரகம, ஹைலேண்ட் கல்லூரி மாணவர்களுக்காக "ஓசோன் படலத்தின் முக்கியத்துவம்" பற்றிய விசேட பேஸ்புக் நேரடி விரிவுரையொன்று நடாத்தப்பட்டது.
9. 2021, ஏப்ரல் 22 ஆம் திகதி புவி தினத்தைக் கொண்டாடுவதற்காக பியகம, Prym இன்டர்நேஷனலின் ஊழியர்களுக்காக "சுற்றாடல் பேணுகை" தொடர்பான விசேட விரிவுரையொன்று நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது Prym இன்டிமேட்ஸ், இந்தோனேசியா மற்றும் Prym இன்டிமேட்ஸ், சீனா உள்ளிட்ட அனைத்து Prym இன்டிமேட்ஸ் குழுவினருக்கும் ஓர் இணைந்த அமர்வாக நடத்தப்பட்டது.
10. க்ளீன் டெக் பிரைவேட் லிமிடெட் ஊழியர்களுக்கு: திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான புதிய தொழில்நுட்பம், ஸ்மார்ட் கழிவு முகாமைத்துவம், திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான சட்டங்கள், திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள், தேசிய ஒழுங்குபடுத்தல் அமைப்புக்கள் (பொறுப்பான நிறுவனங்கள்), திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகிய தலைப்புகளை உள்ளடக்கிய ஒரு சிறப்பு இணையவழிச் செயலமர்வு நடத்தப்பட்டது.
11. "கழிவு முகாமைத்துவத்தில் தொழிலாளர்களின் பொறுப்பு" பற்றிய விசேட விரிவுரை மற்றும் சேவை பாராட்டு நிகழ்வு ஆகியவை கிளீன் டெக் பிரைவேட் லிமிடெட்டில் நடைபெற்றது.
12. கொழும்பு மாவட்டத்தின் பெண் வழிகாட்டிகளுக்கான சனாதிபதி பதக்கத்திற்கான "புவிக் காப்பாளர்" பதக்கம் தொடர்பான தலைப்புகளை உள்ளடக்கி விசேட இணையவழி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.

II. இணையவழி வெபினார் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்

1. "சூழல் முறைமைகளை மீளப் பலப்படுத்துவதற்கு நாம் உறுதி பூணுவோம்" என்ற கருப்பொருளின் கீழ் 5 தொடர்புடைய தலைப்புகளை உள்ளடக்கி விசேட வெபினார் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது
2. "ஒரு நிலையான கைத்தொழில் செயன்முறைக்கு அர்ப்பணிப்போம்" என்ற கருப்பொருளின் கீழ் 5 தொடர்புடைய தலைப்புகளை உள்ளடக்கி விசேட வெபினார் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.
3. "சேதனப் பசளையின் பயன்பாடும் அதன் அண்மைய போக்குகளும்" என்ற கருப்பொருளின் கீழ் 5 தொடர்புடைய தலைப்புகளை உள்ளடக்கி விசேட வெபினார் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.







உரு 31: வெபினார் நிகழ்ச்சித்திட்டங்களின் துண்டுப்பிரசுரங்கள்

II. அம்பாந்தோட்டை மாவட்ட இளைஞர் குழு உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

இளைஞர் குழு உறுப்பினர்களிடையே விழிப்புணர்வின் மட்டத்தை உயர்த்தும் முகமாக, சுற்றாடல் பேணுகையை நோக்கி இளைஞர் தலைமுறையினரை ஊக்குவிப்பதற்காக தென் மாகாண அலுவலகத்துடன் இணைந்து சூரியவெவ பிரதேச செயலகம் மற்றும் தங்காலை பிரதேச செயலகம் ஆகிய இடங்களில் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

IV. வெளி நிறுவனங்களுடன் நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு என்பது EPU இன் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

சுற்றாடல் மீதான பாடத்திட்டம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்காக களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவகத்துடன் EPU ஒருங்கிணைப்புச் செய்ததுடன், EPU மற்றும் அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளுடன் இணைந்து நிகழ்த்தப்பட்ட நான்கு நாள் விரிவுரைத் தொடர் வெற்றிகரமாக நிறைவுற்றது. திண்மக்கழிவு முகாமைத்துவம், சுற்றாடல் சட்டம், வளி, நீர் மற்றும் ஒலி மாசடைதல், சுற்றாடல் பாதுகாப்பு உரிம நடைமுறை, இயற்கை வள முகாமைத்துவம், சுற்றாடல் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு நடைமுறை (சு.தா.ம./ஆ.சு.ம.) போன்ற சுற்றாடலின் பல அம்சங்கள் இந்த விரிவுரைத் தொடரில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

V. பத்திரிகைக் கட்டுரைகள் மற்றும் இதழ்க் கட்டுரைகள் மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

"ஓசோன் படலம்" பற்றிய ஒரு விரிவான கட்டுரை எழுதப்பட்டு, அது டெய்லி மிரர் பத்திரிகையில் வெளியிடப்பட்டது. "உயிர்ப்பல்வகைமை" பற்றிய ஒரு விரிவான கட்டுரை எழுதப்பட்டு சுற்றாடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட "சோபா சஞ்சிகையில்" வெளியிடப்பட்டது. "ஈரநிலங்களில் விலங்குகளின் பல்வகைமை" என்ற தலைப்பில் எழுதப்பட்ட கவிதைகளின் தொடரும், அதே சஞ்சிகையில் வெளியிடப்பட்டது.

C. மர நடுகை நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்

தூய்மையான, பசுமைச் சுற்றாடலை நோக்கிய சிறந்த நிலைபேறான செயற்பாடு மர நடுகையாகும். இது சமூகத்தினால் அமுலாக்கப்பட்டுக் கண்காணிக்கப்பட வேண்டும். மரங்களை நடுதல் மற்றும் பாதுகாத்தலின் முக்கியத்துவம், சுற்றாடல் பற்றிய சமுதாயக் கரிசனையை வெளிப்படுத்தல் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற காடழிப்பின் பாதகமான விளைவுகளைக் குறைத்தல் என்பன பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை மர நடுகை இலக்காகக் கொண்டுள்ளது. "சுத்தமான மற்றும் பசுமையான சூழலின்" அவசியத்தைப் புரிந்துகொள்வது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நோக்காகும்: பல்வேறு மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்களின் 2021 ஆம் ஆண்டில் சு.பா. அலகினால் பின்வருமாறு நடாத்தப்பட்டன.

I. களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் மரநடுகை நிகழ்ச்சித்திட்டம்.

களனிப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பசுமை நடைமுறைகள் குழுவானது உலக சுகாதார அமைப்பின் 'ஒரு நியாயமான மற்றும் ஆரோக்கியமான உலகைக் கட்டியெழுப்புதல்' என்ற தொனிப் பொருளின் கீழ் மரம் நடும் நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்தியது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஒருங்கிணைப்புடன் களனிப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற்காக பசுமை நடைமுறைக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்துடன் இந்நிகழ்வு ஆரம்பமானது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் EPU இந்த பசுமை நடவடிக்கைகளுக்காக 30 உள்ளூர் தாவர இனங்கள் உட்பட 60 மரக்கன்றுகளை நன்கொடையாக வழங்கியது.



உரு 32 : களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் சிறப்பம்சங்கள்



II. "ஹரிஸ்ம தென துரு" மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்கள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சு.பா.அ., பின்வருமாறு "ஹரிஸ்ம தென துரு" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மரநடுகை நிகழ்வுகள் சிலவற்றை நடாத்தியது.

01. தெற்கு அதிவேகப் பாதையில் பின்னதுவவிலிருந்து பத்தேகம வரையான வீதி ஒதுக்குப்புறத்தின் இருபுறமும் அசஸ் என்ஜினியரிங் பி.எல்.சியுடன் இணைந்து 1000 மரக்கன்றுகளை நடும் நிகழ்ச்சித்திட்டம்

02. காலி, வக்வெல்ல கின்கங்கை அணைக்கட்டில் அசஸ் என்ஜினியரிங் பி.எல்.சியுடன் இணைந்து, மரநடுகை நிகழ்ச்சித்திட்டம்.
03. மாத்தறை பரவஹேர விகாரை வளாகத்தில் அசஸ் என்ஜினியரிங் பி.எல்.சி மற்றும் சனச வங்கி அங்கத்தவர்களுடன் இணைந்து 4000 மரக்கன்றுகளை நடுதல்.
04. பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், மற்றும் ஆலயங்கள் போன்ற பல்வேறு இடங்களில், அசஸ் என்ஜினியரிங் பி.எல்.சியுடன் இணைந்து மேல் மாகாண அலுவலகம் பல மரநடுகைகளை ஏற்பாடு செய்ததுடன் 2000 இற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.



உரு 33 : "ஹுஸ்ம தென துரு" மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்களின் சிறப்பம்சங்கள்

தென் மாகாண அலுவலகத்துடன் இணைந்த கொக்கல மார்ட்டின் விக்கிரமசிங்க நூதனசாலையுடனான இரண்டு மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கேகாலை மாவட்ட அலுவலகத்துடனான ஒரு மர நடுகை நிகழ்ச்சித்திட்டம்.

III. இளம் தலைமுறையினருக்கு மரக்கன்றுகளை விநியோகித்தல்.

சூரியவெவ பிரதேச செயலகம் மற்றும் தங்காலைப் பிரதேச செயலகம் ஆகியவற்றைச் சேர்ந்த இளைஞர் குழுக்களின் உறுப்பினர்களுக்கு மர நடுகை பற்றிய விழிப்புணர்வை அதிகரித்த பின்னர், அவர்களிடையே மரக்கன்றுகள் (ஏறத்தாழ 400) விநியோகிக்கப்பட்டன

IV. "சிசு துரு உதான" மர நடுகை நிகழ்ச்சித்திட்டம்

இதனை சுற்றாடல் அதிகாரசபையின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ் மக்கள் வங்கியின் பங்களிப்புடன் பாடசாலை சமூகங்களுக்காக நடாத்துவதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டம் முன்மொழியப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தைக் கல்வி அமைச்சின் ஆதரவுடன் மக்கள் வங்கியுடன் இணைந்து நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டது. இந்த கருத்திட்டத்தின் கீழ், ஒரு மாணவரால் ஒரு நாற்று நடப்படும், அதை அவரே கவனித்துக் கொள்ள வேண்டும். இந்த சூழல் நேய நடவடிக்கைக்காக, மாணவருக்கு மக்கள் வங்கியின் சேமிப்புக் கணக்கில் வைப்புத் தொகையாக மாதாந்தம் கொடுப்பனவொன்று வழங்கப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டு உலக சுற்றாடல் தினத்திற்கு இணையாக, அதிமேதகு ஜனாதிபதியின் பங்கேற்புடன் ஆனந்தா கல்லூரியில் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தையும் 25 மாவட்டங்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்களையும் ஆரம்பிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக 'சிசு துரு உதான' தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டம் இரத்துச் செய்யப்பட்டது.

D. விசேட தின நிகழ்ச்சிகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகள்

இச்செயற்பாட்டின் கீழ் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

1. களுத்துறை, பேருவளை மற்றும் பாணந்துறையில் கடற்கரையை சுத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல் (ECO-SPRINDLES இன் உதவி)
2. தென் மாகாண அலுவலகங்களுடன் இணைந்த சுபநேரத்திற்கான ஒரு மரக்கன்று.
3. மேல் மாகாண அலுவலகங்களுடன் இணைந்து புவி தினத்தை முன்னிட்டு கட்டுரைப் போட்டியொன்றை நடாத்துதல்
4. கொவிட் தொற்றுநோய் நிலைமையில், ஊழியர்களின் உடல் மற்றும் உள நலனுக்கான யோகா பயிற்சி பட்டறையொன்றை ஏற்பாடு செய்தல்.
5. மேல் மாகாண அலுவலகங்களுடன் இணைந்து உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வினாடி வினா நிகழ்ச்சியொன்றை நடாத்துதல்.
6. உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு தென் மாகாண அலுவலகங்களுடன் இணைந்து சுற்றாடல் கட்டுரைப் போட்டியொன்றை நடாத்துதல்.
7. கேகாலை மாவட்ட அலுவலகங்களுடன் இணைந்து மரநடுகை நிகழ்ச்சித்திட்டம், கட்டுரைப் போட்டி மற்றும் சுவரொட்டிப் போட்டிகளை நடாத்துதல்.

E. சுற்றாடல் ஆளுகை மீதான சர்வதேச மாநாட்டை நடத்துதல் (ICEG – 2021)

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 40 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக, சுற்றாடல் பேணுகைப் பிரிவு 2021 ஆம் ஆண்டில் சுற்றாடல் ஆளுகை தொடர்பான சர்வதேச மாநாட்டை ஏற்பாடு செய்தது. அம்மாநாடு 2021 நவம்பர் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் BMICH இல் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

இந்த மாநாட்டின் ஆரம்ப வைபவம் 2021 நவம்பர் 24 ஆம் திகதி BMICH, லோட்டஸ் மண்டபத்தில் சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் தலைமையில் இடம்பெற்றதுடன் கௌர விருந்தினராக இலங்கைக்கான நெதர்லாந்து இராச்சியத்தின் தூதுவர் அதிமேதகு Tanja Gonggrijp அவர்களும் கலந்து கொண்டார். ICEG 2021, கொழும்பின் பிரதான உரைகள் வாழ்நாள் பேராசிரியர் I A. U. N. குணதிலகவுடன் அதிமேதகு Tanja Gonggrijp இனால் வழங்கப்பட்டன .

ICEG இல் 06 பிரதான கூட்டத்தொடர்கள் இடம்பெற்றதுடன் பின்வரும் விதத்தில் சுருக்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

1. சுற்றாடல் கொள்கை, ஆளுகை மற்றும் ஒழுங்கமைப்பு மறுசீரமைப்புகள் (17 சுருக்கங்கள்)
2. சுற்றாடல் கல்வி, சுற்றாடல் தொடர்பாடல் மற்றும் சுற்றாடல் மேம்பாடு (16 சுருக்கங்கள்)
3. சுற்றாடல் பிரசைகள் விஞ்ஞானம் (202 சுருக்கங்கள்)
4. கழிவு முகாமைத்துவம் (27 சுருக்கங்கள்)
5. சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு (49 சுருக்கங்கள்)
6. மாசுக் கட்டுப்பபாடு, சுற்றாடல் சுகாதாரம் மற்றும் காலநிலை மாற்றம் (68 சுருக்கங்கள்)

இந்த ஆய்வரங்கிற்காக, 202 சுருக்கங்கள் ICEG இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

185 உள்ளூர் சுருக்கங்கள் மற்றும் 17 வெளிநாட்டு சுருக்கங்கள் ஆகியவை ICEG இணையத்தளத்தினூடாகப் பெறப்பட்டன (www.encon.cea.gov.lk)



உரு 34 : ICEG இன் சிறப்பம்சங்கள்

F. ஏனைய செயற்பாடுகள்

பிரதான செயற்பாடுகளுக்கு மேலதிகமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் EPU பின்வரும் செயற்பாடுகளையும் நடாத்துகின்றது.

I. டெங்கு நுளம்புகளின் இனப்பெருக்க வாழ்விடங்களைத் தேடி மத்திய சுற்றாடல் அதிகாரசபை வளாகத்தில் களக் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்.

சு.பா. அலகிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள், டெங்கு நுளம்புகளின் இனப்பெருக்க வாழ்விடங்களைத் தேடி மத்திய சுற்றாடல் அதிகாரசபை வளாகத்தில் இருவாரங்களுக்கு ஒருமுறை களக் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துகின்றனர். நிர்வாகப் பிரிவின் உரிய அலுவலர்களுக்கு சாத்தியமான இனப்பெருக்க வாழ்விடங்கள் பற்றி தெரிவிக்கப்பட்டதுடன், விசாரணைச் செயன்முறையின் விளைவாக, இனவிருத்தி கொள்கலன்கள் அகற்றப்பட்டு, அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய நிர்மாணங்கள் மாற்றியமைக்கப்பட்டன.

II. பெண் சாரணியரின் புவிப் பதக்கப் பரீட்சையை நடத்துதல்

பெண் சாரணியர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க சுற்றாடல் மேம்பாட்டு அலகின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் அவர்களின் "புவிக் காப்பாளர்" பரீட்சையை நடாத்துகின்றார். இந்த ஆண்டில், 16 பெண் சாரணியர் பரீட்சைக்குத் தயாராகுமாறு அறிவுறுத்தப்பட்டதுடன் புவிப் பதக்கப் பரீட்சை வழிகாட்டுதல்களின்படி இணையவழியில் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

III. சுற்றாடல் பேரவையை நடத்துதல்

சுற்றாடல் பேரவையின் 3 வது கூட்டத்தொடர் 2020 டிசம்பர் 17 அன்று முடிவடைந்தது. சுற்றாடல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சுக்கள் மற்றும் ஏனைய புதிய அமைச்சுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 14 ஆவது கூட்டத்தொடருக்காக சுற்றாடல் அமைச்சினால் பெயர் குறித்த நியமனங்கள் கோரப்பட்டன.

அதற்கிணங்க, 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் ஆரம்பக் கூட்டம் இடம்பெற்றதுடன், 15 நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். இலங்கை வேடுவர் மக்களின் தலைவர் உருவரிகே வன்னியலத்தோ இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

சுற்றாடல் பேரவையில் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜாசிங்கவும் பங்கேற்றதுடன் அமைச்சின் பணியாட்டொகுதியினரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.





உரு 35 : சுற்றாடல் பேரவையின் 3ஆம் கூட்டத்தொடரின் சிறப்பம்சங்கள்

G. ஊடகப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் பாதுகாப்புடன் தொடர்புடைய சுற்றாடல் மேம்பாட்டு அலகின் செயற்பாடுகள் பற்றிய தகவல்களைப் பரப்புவதற்காக பரந்தளவிலான மக்களைச் சென்றடைவதற்கு இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன

இவ்வலகின் குறிக்கோள்களை அடைவதற்கும் சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பான குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் விளம்பரம் செய்வதற்கும் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவின் செயற்திட்டத்திற்கு அமைவாக பல பொது மக்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொடர்புடைய செயற்பாடுகள் பின்வருமாறு

I. "சொபாகெத" வானொலி நிகழ்ச்சி

சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் சுற்றாடல் பேணுகை மற்றும் பாதுகாப்பு பற்றிய செய்தியை பரப்புவதற்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் (SLBC) 94.3/94.5 வானலையில் "சொபாகெத" வானொலி நிகழ்ச்சி, ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 8.00 மணி முதல் 8.30 மணி வரை ஒலிபரப்பாகின்றது. சுற்றாடல் தொடர்பான ஒரு கேள்வியைக் கேட்பதன் மூலம் நிகழ்ச்சியின் பின்னூட்டம் நேயர்களிடமிருந்து பெறப்படுகின்றது. ஒவ்வொரு வாரத்திலும் மூன்று வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

2021 ஆம் ஆண்டில், 45 வளவாளர்களுடன் ஒருங்கிணைத்து 52 "சோபகேதா" வானொலி நிகழ்ச்சிகளை EPU ஒலிபரப்பியதுடன் நிகழ்ச்சிகளின் போது கிட்டத்தட்ட 105 செய்திகள் ஒலிபரப்பப்பட்டன.

II. தொலைக்காட்சி மற்றும் வானொலிக் கலந்துரையாடல்கள்

2021 ஆம் ஆண்டில், இந்த அலகு விசேட நிகழ்வுகள பற்றிய 17 தொலைக்காட்சி கலந்துரையாடல்களையும் (பெரும்பாலும் ஹரித தொலைக்காட்சியில்) 03 வானொலி கலந்துரையாடல்களையும் ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்ச்சிகள் SLRC, ITN, SLBC, ஸ்வர்ணவாஹினி, சிரச, தெரண & ஹரித தொலைக்காட்சி, லக்விரு வானொலி, லக்ஹண்ட, வி.எஃப்.எம், சியத தொலைக்காட்சி ஆகியவற்றில் ஒளி/ஒலிபரப்பப்பட்டன. மேலும், 2021 ஆம் ஆண்டில் எழும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஊடக ஒருங்கிணைப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

III. ஊடகங்களின் பயன்பாடு

ஊடகங்களைப் பயன்படுத்தி, சமூகமொன்றின் பரந்த பகுதியொன்றிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். எனவே, மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது அதன் செய்திகள், கட்டுரைகள் மற்றும் செயற்பாடுகளை வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் மற்றும் அதன் இணையத்தளம் ஊடாக வெளிப்படுத்துகின்றது. அதற்கிணங்க, ஆண்டு முழுவதும் 29 பத்திரிகை வெளியீடுகளும், 11 பத்திரிகைக் கட்டுரைகளும் வெளியிடப்பட்டுள்ளன. சிலுமின, திவயின, தினமின, அத, அருண, தி ஐலண்ட், டெய்லி நியூஸ், டெய்லி மிரர், தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பத்திரிகைக் கட்டுரைகளும் செய்தி வெளியீடுகளும் பெரும்பாலும் வெளியிடப்பட்டன.

IV. இலத்திரனியல் ஊடகங்களின் பயன்பாடு

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் செயற்பாடுகள் பற்றிய மேலதிக தகவல்களைப் பரப்புவதற்காக, EPU இன் ஊடகப் பிரிவு, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இணையத்தளத்தில் 43 செய்திகளை சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பதிவேற்றியுள்ளது. சமூக ஊடக தளங்கள் மிகவும் பிரபலமானவையாகவும் பயனர் நட்புடனும் காணப்படுவதால், அதிகாரசபையின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்திற்கு அதிக ஈடுபாட்டையும் பின் தொடர்பவர்களையும் பெறுவதற்காக ஒரு வெளி நிறுவனத்துடன் இணைந்து ஒரு ஊக்குவிப்பு பிரச்சாரம் செய்யப்பட்டது

அதிகாரசபையின் தேவைப்பாட்டிற்கு பொருத்தமான ஆர்வமூட்டக்கூடிய வீடியோக்கள், பதிவுகள் போன்றவற்றை உருவாக்குவதற்காக, வெளி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இடுகை மற்றும் வீடியோக்களை EPU இன் ஊடகப் பிரிவு ஒருங்கிணைத்து, வழிநடத்தி, தகவல்களும் வழங்கியதுடன் திருத்தங்களையும் மேற்கொண்டது.

இதற்கு மேலதிகமாக, மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் அடிப்படையில் ஊடகப் பிரிவு செய்திகளைத் தயாரித்துப் பதிவேற்றியது. மேலும், அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட பத்திரிகை வெளியீடுகள், பத்திரிகைக் கட்டுரைகள், பத்திரிகைச் செய்தித் துண்டுகள், செய்தி துணுக்குகள், காணொளிக் காட்சிகள் என்பனவும் பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டன. இவ்வாறு, 2021 ஆம் ஆண்டு முழுவதும் 459 பேஸ்புக் பதிவேற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

V. நிகழ்வுகள்



மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் குறிக்கோள்களுக்கு அமைவாக பயனுறுதிமிக்க கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை உள்ளடக்குவதற்கு ஒலி, ஒளிசார்அலகு விரிவான பங்களிப்பைச் மேற்கொள்கின்றது. அதன் கடமைகளில், ஒலி, ஒளிசார் அலகானது 2021 இல் 58 நிகழ்வுகளை உள்ளடக்கியது.

VI. அரச சார்பற்ற நிறுவனங்களின் பதிவு

இச்செயற்பாட்டின் கீழ், 2021 இல் இரண்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

VII. சுற்றாடல் செய்திமடல் மற்றும் "சொபாகெத சஞ்சிகை" தயாரிப்பு


சுற்றாடல் செய்திமடல் என்பது ஆண்டுக்கு இருமுறை வெளியிடப்படும் செய்தி பத்திரிகை ஆகும். 2021 ஆம் ஆண்டிலும், ஒவ்வொரு தொகுதியிலும் 10,000 பிரதிகள் அச்சிடப்பட்டு பதிவு செய்யப்பட்ட வாசகர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

உரு 36 : சுற்றாடல் செய்திமடல், சொபாகெத சஞ்சிகை

சொபாகெத சஞ்சிகையானது வருடாந்தம் வெளியிடப்படும் சுற்றாடல் சஞ்சிகையாகும், இது தற்போதைய சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் சுற்றாடலின் புதுமையான போக்குகள் தொடர்பான கட்டுரைகளைக் கொண்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில், *சொபாகெத* சஞ்சிகையின் இரண்டு தொகுதிகள் வெளியிடப்பட்டன. ஒன்று கதிர்காமத்தில் *சுரக்கிமு கங்கா* நிகழ்ச்சியிலும் மற்றொன்று *BMICH* இல் *ICEG- 2021* வெளியிடப்பட்டன.

உரு 37 : சொபாகெத சஞ்சிகைகள் வெளியீடு

மேலும், கௌரவ சுற்றாடல் அமைச்சர், செயலாளர், தவிசாளர், பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு விசேட விடயங்கள் மற்றும் சந்தர்ப்பங்களில் எழுத்துவடிவங்கள், உரைகள் தயாரித்தல் பணியும் இந்த அலகினால் மேற்கொள்ளப்பட்டது. மேலும், புத்தாண்டு செய்திகள், வீடியோ காட்சிகளுக்கான எழுத்துவடிவங்கள் ஆகியவையும் இவ்வலகினாலேயே தயாரிக்கப்படுகின்றன.

தொற்றுநோய் நிலைமையின் கீழும், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவின் சுற்றாடல் மேம்பாட்டு அலகு, சமூகத்திற்கு பயனுறுதி மிக்க மற்றும் வினைத்திறன் மிக்க சேவையை வழங்குவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைந்துள்ளது.

7.3. தேசிய சுற்றாடல் தகவல் நிலையம்

தேசிய சுற்றாடல் தகவல் நிலையமானது இலங்கையின் சுற்றாடல் தகவல்களின் மையப் புள்ளியாகும். சுற்றாடல் தகவல்களைப் பெறுதல், செயன்முறைப் படுத்தல் மற்றும் பரப்புதல் ஆகியவை NEIC இன் பிரதான தொழிற்பாடுகளாகும்.

A. பாடசாலைச் சுற்றாடல் நூலகங்களைத் தாபித்தல்

மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடன் கூடிய சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளைக் கொண்டுள்ள பாடசாலைகள் 2021 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டு பின்வரும் பாடசாலைகளுக்கு 22 மில்லியன் ரூபா பெறுமதியான நூலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் வழங்கப்பட்டன.

அத்தல்கெதர தசஷிலா ம/வி, பதுளை



பாலிநகர் ம/வி, முல்லைத்தீவு



கரம்ப ம/வி, மஹவ, குருநாகல்



கம்புறுகமுவ ம/வி, மாத்தறை



தொலபுகொல்ல ம/வி, கலேவெல



B. மாகாண அலுவலகங்களுக்காக சுற்றாடல் நூலகங்களை தாபித்தல்

I. தென் மாகாண அலுவலகம், கிழக்கு மாகாண அலுவலகத்தின் நூலகங்களுக்கு (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) மொழி மூலமான 2,227 புத்தகங்களும், அலமாரிகள், கற்கை மேசைகள், நாற்காலிகள் என்பனவும் NEIC இனால் கையளிக்கப்பட்டுள்ளன.

தென் மாகாண அலுவலகம்





மத்திய மாகாண அலுவலகம்





கிழக்கு மாகாண அலுவலகம்





C. சேகரிப்பை விருத்தி செய்தல்

I. 209 சுற்றாடல் புத்தகங்கள் மற்றும் இதழ்கள்/ சஞ்சிகைகளை நூலக சேகரிப்புக்காக NEIC கொள்வனவு செய்தது. 42 இலவச புத்தகங்கள் / பருவ இதழ்கள் மற்றும் 40 சு.தா.ம./ஆ.சு.ம. அறிக்கைகள் ஆகியவை சேகரிப்புடன் சேர்க்கப்பட்டன. இலங்கை மண் மாதிரிகளின் மாதிரிகளைக் கொண்ட காட்சிப் பலகையொன்று தயாரிக்கப்பட்டு NEIC இல் நிறுவப்பட்டது.

D. ஆவணப்படுத்தல் சேவைகள் & செயன்முறைப் பணிகள்

I. IND, Cat & இ- களஞ்சியத் தரவுத்தளங்களுக்காக 668 தரவுகள் பதிவுசெய்யப்பட்டன.

II. 209 புத்தகங்கள் / பருவ இதழ்கள் பெறப்பட்டு வகையீடு செய்யப்பட்டன. 8 புதிய உறுப்புரிமைகள் வழங்கப்பட்டன.

III. இ-களஞ்சியத்திற்கு 3975 பத்திரிகை செய்தித்துண்டுகள் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

E. சுற்றாடல் தகவல்கள் பரிமாற்றம்

I. 750 பயனாளர்கள் சுற்றாடல் தகவல்களை மின்னஞ்சல், தொலைபேசி மற்றும் வருகை மூலம் பெற்றுக்கொண்டதுடன், 2173 புத்தகங்கள் NEIC அங்கத்தவர்களுக்காக இரவல் பெறப்பட்டுள்ளன. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இ-களஞ்சியத்தினூடாக 3121 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயனாளர்கள் சுற்றாடல் தகவல்களைப் பெற்றுள்ளனர்.

II. 509 சுற்றாடல் சுவரொட்டிகள் பொதுமக்களிடையே விநியோகிக்கப்பட்டதுc.

III. பின்வரும் சேவைகளை வழங்குவதன் மூலம் ரூ. 32, 450 ஈட்டப்பட்டது.

- சு.தா.ம. அறிக்கைகள் விற்பனை – 30.

- போட்டோப் பிரதியிடல் – 490 பக்கங்கள்

F. ஏனைய செயற்பாடுகள்

I. பிரிட்டிஷ் கவுன்சிலின் புக் பொக்ஸ் (book box) பரிமாற்று நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 46 பிரிட்டிஷ் கவுன்சில் நூலகப் புத்தகங்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களிடையே விநியோகிக்கப்பட்டன.

அத்தியாயம் 8 : திட்டமிடல் அலகு

சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் தேசிய சுற்றாடல் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள அனைத்து ஒழுங்குறுத்தல் செயற்பாடுகளையும் தூண்டுவதற்காக நீண்ட கால மற்றும் குறுகிய கால இலக்குகளை தாபிப்பதுடன் மூலோபாயங்களை உருவாக்குவதன் ஊடாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வழங்கப்படும் சேவை வழங்கலை உறுதிப்படுத்துவதே திட்டமிடல் அலகின் பிரதான பணியாகும்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2016 – 2020 ஆம் ஆண்டின் ஐந்தாண்டு கூட்டாண்மைத் திட்டத்தின் அடிப்படையில் வகுக்கப்பட்ட பல்வேறு செயற்றிட்டங்களையும் தொழிற்பாட்டுத் திட்டங்களையும் கண்காணிப்பதன் மூலம் திட்டமிடல் அலகு திட்டமிடல் செயன்முறைக்கு தலைமை தாங்குகின்றது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முன்னேற்றத்தை ஒருங்கிணைத்தல், கண்காணித்தல் மற்றும் உரிய பங்கீடுபாட்டாளர்களுக்கு அறிவித்தல் என்பவற்றுக்கு இப்பிரிவே பொறுப்பாகும்.

அதற்கிணங்க, திட்டமிடல் அலகின் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு சுருக்கமாகக் கூறப்படலாம்;

7.1 கூட்டாண்மைத் திட்டத்தின் தயாரிப்பு.

அடுத்த ஐந்தாண்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறுகிய கால மற்றும் நீண்ட கால குறிக்கோள்களை அடைவதற்கும், சுற்றாடலுக்கு குறைந்த தீங்கு விளைவிக்கும் வகையில் அபிவிருத்தி செயன்முறைகளில் அபிவிருத்தி மூலோபாயங்களை முகாமை செய்வதற்கும் வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்துவதன் மூலம் அரசாங்கத்தின் தற்போதைய அபிவிருத்தி செயன்முறைக்கு வசதியளிப்பதே இத்திட்டத்தின் உருவாக்கத்தின் பிரதான குறிக்கோளாகும். இதற்கமைய, ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கும், அதிகாரசபையின் சகல பிரிவுகள், அலகுகள், மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பங்கேற்புடன் திட்டமிடல் அலகு கூட்டாண்மைத் திட்டத்தைத் தயாரிக்கின்றது. அறிக்கையிடல் காலப்பகுதியில், திட்டமிடல் அலகு 2020 முதல் 2025 வரையான காலப்பகுதிக்கான மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கூட்டாண்மைத் திட்டத்தைத் தயாரித்தது.





உரு 38 : 6.12.2021 ஆம் திகதி நடைபெற்ற கூட்டாண்மைத் திட்டச் செயலமர்வு

7.2 மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆண்டறிக்கை தயாரிப்பு

அதிகாரசபை அடைந்துள்ள முன்னேற்றத்தை உரிய பங்கீடுபாட்டாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்கான பிரதான ஆதாரம் வருடாந்த அறிக்கையாகும். அதனடிப்படையில், திட்டமிடல் அலகானது வருடாந்தம் அனைத்து பிரிவுகள், அலகுகள், மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் அடைந்துள்ள முன்னேற்றங்களை திரட்டுவதற்காக அலுவலகங்களை ஒருங்கிணைத்து, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அடைவுகளை உரிய பங்கீடுபாட்டாளர்களுக்கு வெளிப்படுத்துவதற்காக முறையான அறிக்கையிடல் வடிவத்தில் சமர்ப்பிக்கின்றது.

7.3 வருடாந்த செயற்றிட்டங்களைத் தயாரித்தல், பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்தல், பின்னாய்வு, அறிக்கையிடல் மற்றும் மேற்பார்வை

– திறைசேரி நிதிகளினூடாக நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

திறைசேரி நிதியளிக்கப்படும் கருத்திட்டங்களின் மாதாந்த பின்னாய்வுகள், உரிய கருத்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கையிடல், கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை என்பவற்றைத் திட்டமிடல் அலகு மேற்கொள்கின்றது.

– ம.சு.அ. வருமானங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 16 அலகுகளினால் அமுல்படுத்தப்படுகின்ற வழமையான அபிவிருத்தி செயற்பாடுகள்/ அபிவிருத்தி முன்னெடுப்புகளை திட்டமிடல் அலகு மாதாந்தம் கண்காணித்து வருகின்றது. இந்த செயற்றிட்டங்கள் திட்டமிடல் அலகினால் மாதாந்தம் கண்காணிக்கப்படுவதுடன், அவற்றின் முன்னேற்றம் குறித்து உரிய பங்கீடுபாட்டாளர் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படும்.

7.4 .புதிய கருத்திட்ட முன்மொழிவுகள்

புதிய கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் புதிய கருத்திட்ட கருப்பொருள்களை இனங்கண்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தொழில்நுட்ப அலகுகளுடன் ஒருங்கிணைப்புச் செய்வது தொடர்பில் திட்டமிடல் அலகு தேவையான வசதிகளை வழங்குகின்றது. மேலும், தேசிய திட்டமிடல் திணைக்களம், வெளி வளங்கள் திணைக்களம் உள்ளிட்ட ஏனைய பங்கீடுபாட்டாளர் நிறுவனங்களிடமிருந்து அத்தகைய கருத்திட்ட முன்மொழிவுகளுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான ஒருங்கிணைப்பை திட்டமிடல் அலகு வழங்குகின்றது.

7.5 கூட்டங்கள்

- மேற்பார்வைக் குழு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள், மற்றும் பிராந்தியத் தொழிற்பாட்டுக் கூட்டங்களை நடைமுறைப்படுத்தல்

- மேற்பார்வைக் குழுக் கூட்டங்கள்

அனைத்து சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் (சு.தா.ம.), ஆரம்ப சுற்றாடல் பரீட்சைகள் (ஆ.சு.ம.), 'A' மற்றும் 'B' வகைச் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை (ஈ.பி.எல்) விநியோகித்தல் என்பவற்றுக்கு அங்கீகாரங்களை வழங்குவதற்காகவும் கலந்துரையாடுவதற்காகவும் அத்துடன் தலைமை அலுவலகம் அல்லது உரிய மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களினால் வழங்கப்படும் அங்கீகாரங்களுக்கு முன்னர் சுற்றாடல் விதப்புரைகளை முதலீட்டுச் சபையின் கைத்தொழில்களுக்கு சமர்ப்பிப்பதற்காகவும் இக்குழு மாதம் ஒரு தடவை கூடுகின்றது.

திட்டமிடல் அலகின் ஒருங்கிணைப்பில், 2021 ஆம் ஆண்டில், அத்தகைய 04 கூட்டங்கள் நடத்தப்பட்டு, இறுதிக் கூட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக குழு உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

- முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்

இக்குழுவானது தவிசாளரின் தலைமையில் அனைத்து பணிப்பாளர்களினதும் பங்கேற்புடன் இடம்பெறுகின்றது. கவனம் செலுத்த வேண்டிய நிருவாக மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பாக தலைமை அலுவலகத்திற்கும் மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கும் இடையிலான பிரச்சினைகளை சரிசெய்வதற்கான ஒருங்கிணைப்புப் பொறிமுறையொன்றை உருவாக்குவது இக்குழுவை நடத்துவதன் பிரதான குறிக்கோளாகும். திட்டமிடல் அலகு ஒருங்கிணைப்பு, கூட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. தற்போதைய பெருந்தொற்று நிலைமை மற்றும் அரசாங்க சுகாதார வழிகாட்டுதல்களை கருத்தில் கொண்டு, 2021 ஆம் ஆண்டில் குழு கூட்டங்கள் எதுவும் நடத்தப்படவில்லை.

- பிராந்தியத் தொழிற்பாட்டுக் கூட்டங்கள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களில் மனிதவள முகாமைத்துவம், நிருவாகம், நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதே இக்குழுவின் பிரதான குறிக்கோளாகும். அதற்கிணங்க மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண மற்றும் மாவட்டத் தலைவர்களின் பங்கேற்புடன் இக்கூட்டம் நடாத்தப்படுகின்றது. திட்டமிடல் அலகு ஒருங்கிணைப்பு, கூட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

தற்போதைய பெருந்தொற்று நிலைமை மற்றும் அரசாங்க சுகாதார வழிகாட்டுதல்களை கருத்தில் கொண்டு, 2021 ஆம் ஆண்டில் ஒரே ஒரு தொழிற்பாட்டுக் கூட்டம் மட்டுமே நடத்தப்பட்டது

7.6 அறிக்கையிடல்

- மத்திய சுற்றாடல்அதிகாரசபை அடைந்த முன்னேற்றம் குறித்து சுற்றாடல் அமைச்சுக்கும் இலங்கை மத்திய வங்கி போன்ற ஏனைய பங்கீடுபாட்டு நிறுவனங்களுக்கும் திட்டமிடல் அலகினால் முறையான அறிக்கையிடல் வடிவங்களில் அறிவிக்கப்படும்.
- திட்டமிடல் அலகு செயலாற்றுகை அறிக்கைகள் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில், அமைச்சரவை அவதானிப்புகளைத் தயாரிக்கின்றது.

அத்தியாயம் 9 : முறைப்பாடுகள் அலகு

மத்திய சுற்றாடல் அதிகாரசபை பிரதானமாக அதன் துரித அழைப்புச் சேவை (1981), கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல்கள் ஊடாக பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்கின்றது. அவ்வாறான முறைப்பாடுகளின் முகாமைத்துவத்தை ஒருங்கிணைப்பதற்கும் மீளாய்வு செய்வதற்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைமையகத்தில் முறைப்பாட்டு ஒருங்கிணைப்பு அலகு (CCU) தாபிக்கப்பட்டுள்ளது

A. CCU இன் பிரதான தொழிற்பாடு

i. பெறப்பட்ட முறைப்பாடுகளை வகைப்படுத்தலும் உரிய மாவட்ட அலுவலகங்கள், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அலகுகள் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுக்கு தேவையான நடவடிக்கைகளுக்காக விநியோகித்தலும்.
ii. முறைப்பாடுகளைக் கையாளும் அந்தஸ்தைப் பதிவுசெய்வதற்கான மென்பொருள் முறைமையை இயக்குதல் மற்றும் பராமரித்தல்.
iii. துரித அழைப்புச் சேவையை (1981) இயக்குதல் மற்றும் பராமரித்தல்.
iv. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் அலகுகளில் முறைப்பாடுகளை கவனிப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்
v. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நோக்கெல்லையுடன் தொடர்பற்ற முறைப்பாடுகளுக்காக ஏனைய நிறுவனங்களை ஒருங்கிணைத்தல். .

B. துரித அழைப்பு (1981) சேவையைத் தாபித்தல்

செப்டம்பர் 2020 இலிருந்து, முந்தைய துரித அழைப்பு எண் 0112888999 இற்குப் பதிலாக, பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் குறைகளை நிவர்த்தி செய்வதில் மிகவும் பயனுறுதி மிக்கதும் வினைத்திறன் மிக்கதுமான சேவையை வழங்கும் குறிக்கோளுடன் '1981' என்ற புதிய துரித அழைப்புக் குறியீடு அறிமுகம் செய்யப்பட்டது. 1981 என்னும் இந்த குறியீடு இலக்கம், ஆண்டின் 365 நாட்களிலும் செயற்படுகின்றது. எனவே நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தும் எந்தவொரு நபரும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் நேரடித் தொடர்பு கொண்டு தனது முறைப்பாட்டை அதிவேகமாக பதிவு செய்வதற்கு இது வசதியளிக்கின்றது.

C. வழமையான நடைமுறைக்கு மேலதிகமாக, உடனடி நடவடிக்கைகளின் தேவை மற்றும் நிலைமையின் பாரதூரத்தன்மை ஆகியவற்றைப் பொறுத்து, மேலதிக விசாரணைகளுக்காக, 2004 ஆம் ஆண்டிலிருந்து மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் தாபிக்கப்பட்டுள்ள சுற்றாடல் பொலிஸ் பிரிவிற்கு சில முறைப்பாடுகள் ஆற்றுப்படுத்தப் படுகின்றன. அத்தகைய முறைப்பாடுகளை மிக விரைவான முறையில் கவனிப்பதற்கும் விசாரிப்பதற்கும், பொலிஸ் நிலையங்களின் வலையமைப்பின் ஊடாக அபிவிருத்தி செய்யப்பட்ட அதன் சொந்த உள்ளக மனித வளக் கட்டமைப்பு மற்றும் தொடர்பாடல் முறைமையை சுற்றாடல் பொலிஸ் பிரிவு கொண்டுள்ளது. அதன்படி, உடனடியாக விசாரிக்கப்பட வேண்டிய 276 பொதுமக்கள் முறைப்பாடுகள் 2021 ஆம் ஆண்டில் சுற்றாடல் பொலிஸ் பிரிவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 251 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டுள்ளன. 2021 இல் CEA இனால் கையாளப்பட்ட முறைப்பாடுகள்

a. பெறப்பட்ட முறைப்பாடுகளின் விபரங்கள்

2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 3529 ஆகும். 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகளின் வகை மற்றும் விநியோகத்தை கருத்தில் கொள்ளும்போது, பின்வரும் உண்மைகளை எடுத்துக்காட்ட முடியும்.

- 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மொத்த முறைப்பாடுகளில், 2491 'வகை A' முறைப்பாடுகளாகும். இவை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் விடயப் பரப்புடன் நேரடியாக தொடர்புடையவை என்பதுடன் அதிகாரசபையின் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் அலகுகளினால் கையாளப்பட்டன.
- மொத்த முறைப்பாடுகளில், 369 முறைப்பாடுகள் வகை "B" இனைச் சேர்ந்த, ஏனைய நிறுவனங்களின் நோக்கெல்லையுடன் தொடர்புடையவையாகும். அவை ஏனைய நிறுவனங்களின் நோக்கெல்லையுடன் தொடர்புடையவை என்றபோதும், தேவைப்பாட்டைப் பொறுத்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகாட்டல்/ விதப்புரைகளை மத்திய சுற்றாடல் அதிகாரசபை வழங்குகின்றது.

- 669 முறைப்பாடுகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நோக்கெல்லையின் கீழ் இல்லாத " C " வகைகள் என்பதுடன் பொதுவாக இவற்றிற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வழிகாட்டல் தேவைப்படாது. இந்த 'வகை C' முறைப்பாடுகள் அவசியமான நடவடிக்கைகளுக்காக விடயம் தொடர்பான நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.


உ-ம்: வீட்டுக் குப்பைகளை எரித்தல், பொது வடிகால்களில் வீட்டுக் கழிவுகளைக் கொட்டுதல், அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்கள், கழிவு நிரப்பல் இடங்கள், பொலித்தீன் பிளாஸ்டிக் எரித்தல், இரைச்சல் தொடர்பான முறைப்பாடுகள் (வழிபாட்டுத் தலங்கள், வியாபாரத்தலங்களில் உள்ள ஜெனரேட்டர்கள் மூலம்)

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகளின் விநியோகம் மற்றும் வகைப்படுத்தல் கீழே அட்டவணை மற்றும் உருவில் தரப்பட்டுள்ளது.

.

அட்டவணை 27 : மாவட்டங்களிடையே பொதுமக்கள் முறைப்பாடுகளின் விநியோகம் – 2021

மாகாணம்	மாவட்டம்	வகை "A"	வகை "B"	வகை "C"	விநியோகம்		மாகாணம் %
					இல	%	
WPO	கொழும்பு	507	63	238	808	23	51
	கம்பஹா	584	28	96	708	20	
	களுத்துறை	220	14	50	284	8	
CPO	கண்டி	159	28	33	220	6	9
	நுவரேலியா	21	10	7	38	1	
	மாத்தளை	41	14	20	75	2	
SUP	காலி	127	45	43	215	6	14
	மாத்தறை	131	16	26	173	5	
	அம்பாந்தோட்டை	70	14	17	101	3	
SAB	இரத்தினபுரி	61	29	36	126	4	7
	கேகாலை	46	24	21	91	3	
NWP	குருநாகல்	206	18	29	253	7	10
	புத்தளம்	83	15	8	106	3	
NCP	அநுராதபுரம்	56	5	17	78	2	3
	பொலநறுவை	20	2	7	29	1	
NPO	யாழ்ப்பாணம்	40	0	1	41	1	1
	முல்லைத்தீவு	---	---	---	---	---	
	மன்னார்	2	2	0	4	0	
	வவுனியா	10	1	0	11	0	
	கிளிநொச்சி	9	1	0	10	0	
EPO	திருகோணமலை	9	11	1	21	1	2
	அம்பாறை	18	4	2	24	1	
	மட்டக்களப்பு	5	0	0	5	0	
UVA	பதுளை	37	14	8	59	2	3
	மொனராகலை	29	11	9	49	1	
மொத்தம்		2491	369	669	3529	3529	100



உரு 39 : வகைகளின் அடிப்படையில் மொத்த முறைப்பாடுகள்

b. 'வகை A' முறைப்பாடுகள் முகாமைத்துவத்தின் முன்னேற்றம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நோக்கெல்லையுடன் தொடர்புடைய "A" வகை முறைப்பாடுகளையும் அனைத்து பிராந்திய / மாவட்ட அலுவலகங்கள் மற்றும் தொடர்புடைய அலகுகள் கையாண்டன.

2021 ஆம் ஆண்டில், பெறப்பட்ட மொத்த 'வகை A' முறைப்பாடுகள் 2491 ஆகும். 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட இந்த 'வகை A' முறைப்பாடுகள் அனைத்தும் கவனம் செலுத்தப்பட்டு, 1412 முறைப்பாடுகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 28: 2021 இல் பெறப்பட்ட "A" வகை முறைப்பாடுகளைக் கையாள்வதன் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது

முறைப்பாடுகளைக் கையாளுதல் (வகை A) – சனவரி தொடக்கம் டிசம்பர் 31, 2021				
D.O./Unit	மொத்தமாகப் பெறப்பட்டவை	நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டவை	நிலுவையில் உள்ளவை	Prog. %
கொழும்பு	492	281	211	57
கம்பஹா	575	261	314	45
களுத்துறை	212	89	123	42
கண்டி	159	88	71	55
நுவரேலியா	19	9	10	47
மாத்தளை	41	26	15	63
காலி	127	119	8	94
மாத்தறை	131	96	35	73
அம்பாந்தோட்டை	70	49	21	70
இரத்தினபுரி	60	42	18	70
கேகாலை	45	29	16	64
குருநாகல்	206	121	85	59
புத்தளம்	83	27	56	33

முறைப்பாடுகளைக் கையாளுதல் (வகை A) – சனவரி தொடக்கம் டிசம்பர் 31, 2021				
D.O./அலகு	மொத்தமாகப் பெறப்பட்டவை	நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டவை	நிலுவையில் உள்ளவை	முன். %
அநுராதபுரம்	55	31	24	56
பொலநறுவை	20	10	10	50
யாழ்ப்பாணம்	40	24	16	60
முல்லைத்தீவு	-	-	-	-
மன்னார்	2	1	1	50
வவுனியா	10	9	1	90
கிளிநொச்சி	9	5	4	56
திருகோணமலை	9	7	2	78
அம்பாறை	18	11	7	61
மட்டக்களப்பு	5	3	2	60
பதுளை	37	28	9	76
மொனராகலை	27	20	7	74
EPC அலகு	7	6	1	86
WM அலகு	-	-	-	-
சு.தா.ம. அலகு	17	12	5	71
NRM அலகு	10	5	5	50
CHW அலகு	5	3	2	60
மொத்தம்	2491	1412	1079	57

முறைப்பாடுகள் மென்பொருள் முறைமையிலிருந்து 12/01/2022 பெறப்பட்ட முன்னேற்றம்

c. CEA இன் முறைப்பாட்டு முகாமைத்துவச் செயன்முறையின் மீளாய்வு

மாவட்ட அலுவலகங்களால் "வகை A " முறைப்பாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை CCU மீளாய்வு செய்கின்றது. 2021 ஆம் ஆண்டில், பெறப்பட்ட மொத்த வகை A முறைப்பாடுகளில் 58% இனை CCU மீளாய்வு செய்துள்ளது.

.

அத்தியாயம் 10 : உள்ளகக் கணக்காய்வு அலகு

A. உள்ளகக் கணக்காய்வின் வளவெல்லை

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் உள்ளகக் கணக்காய்வாளரின் வளவெல்லையை வரையறை செய்வதுடன் அமைப்பின் கட்டமைப்பின் பிரகாரம், அதிகாரசபையின் தலைவருக்கு அவர் நேரடியாகப் பொறுப்புக்கூற வேண்டியவருமாவார். தலைமை அலுவலகமும் அனைத்து மாகாண/மாவட்ட அலுவலகங்களும் உள்ளகக் கணக்காய்வாளரின் வளவெல்லையினுள் காணப்படுகின்றன. ஆகவே, உள்ளக் கணக்காய்வாளர் அதிகாரசபையின் அனைத்துத் துறைகளையும் மீளாய்வு செய்வதற்கான அதிகாரத்தினைக் கொண்டுள்ளதுடன் அதிகாரசபையின் நோக்கெல்லையின கீழ் வரும் அனைத்து ஆவணங்களையும் பரிசோதிப்பதற்கும் அனைத்துச் சேமிப்பகங்களுக்கும் ஆட்களுக்குமான அணுகலைக் கொண்டிருப்பதற்கும் முழுமையான அனுமதியைக் கொண்டுள்ளார்.

B. உள்ளக் கணக்காய்வு அலகின் கடமைகள்

- கணக்கியல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டுச் செயன்முறையை மீளாய்வு செய்தல்.
- நிதி மற்றும் தொழிற்பாட்டுத் தகவல்களை விசாரணை செய்தல்
- தொழிற்பாட்டு பணிகளின் பொருளாதார வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் மற்றும் நிறுவனத்தின் நிதிசார் மற்றும் நிதி சாராத கட்டுப்பாடு ஆகியவற்றை மீளாய்வு செய்தல்.
- உள்ளக மற்றும் வெளிப்புற ஒழுங்குவிதிகள், முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் தொழிற்பாட்டில் உள்ளனவா எனப் பரிசோதித்தல்
- முகாமைத்துவத்தினால் பொருத்தமானவாறாக ஒப்படைக்கப்பட்ட விசேட விசாரணைகள்.

C. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது 1999 நவம்பர் 19 ஆம் திகதிய PF/PE 3 ஆம் இலக்க மற்றும் 2000 மார்ச் 15 ஆந் திகதிய PF/PE7 ஆம் இலக்க பகிரங்க நிதிச் சுற்றுநிருபங்களின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. இக்குழு காலாண்டுக்கு ஒருமுறை கூட வேண்டும் என்றபோதும் 2021 ஆம் ஆண்டில் கொவிட்-19 பெருந்தொற்று நிலைமையின் போது இணைய வழியில் இரண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன. நிதி அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திரு அஜித் அபேசேகர, 2021 ஆம் ஆண்டில் குழுவின் தலைவராக உள்ளார். மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தவிசாளர், பணிப்பாளர் நாயகம், பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிதி), பணிப்பாளர் (திட்டமிடல்), உரிய விடயப் பணிப்பாளர்கள், கணக்காய்வு அத்தியட்சகர் மற்றும் சுற்றாடல் அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்குபற்றினர். மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வாளர் குழுவின் அமைப்பாளராக செயற்படுவார். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அவதானிப்புகளும் தீர்மானங்களும் அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

D. 2021 இன் கணக்காய்வு அறிக்கைகளில் எழுப்பப்பட்ட பின்வரும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

01. 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட 24/06/1993 ஆம் திகதிய 772/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சுற்றாடல் விதப்புரைகளை வெளியிடும் போது அதிகாரசபையின் கவனம் அவசியமாகவுள்ள நிகழ்வுகள்.
02. 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 2000

ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சுற்றாடல் உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை முறையாக இனங்காணுதல்.

03. அதிகாரசபையின் சொத்துக்கள் முகாமைத்துவத்தின் பலவீனங்களுக்காக முன்மொழியப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு
04. விசேட விசாரணைகளின் மூலம் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள்

அத்தியாயம் 11 : இணக்கக் கண்காணிப்பு அலகு

இணக்கக் கண்காணிப்பு என்பது இந்த அதிகாரசபையின் உரிமம் வழங்குதல் மற்றும் அங்கீகார நடைமுறைகளின் முக்கிய கூறுகளில் ஒன்றாகும். உரிமம்/ ஆங்கீகாரங்கள் வழங்குவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உரிய அலகுகள் மற்றும் பிராந்திய/ மாவட்ட அலுவலகங்கள் ஊடாக வழமையான இணக்கக் கண்காணிப்பு பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கக் கண்காணிப்பு அலகு பொறுப்பாகவுள்ளது. பொறிமுறையினூடாக, சுற்றாடல் மற்றும் முகாமைத்துவத்தைப் பாதுகாப்பதற்கான குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் கருத்திட்டங்களுக்காக தேசிய சுற்றாடல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள், நியமங்கள் என்பவற்றுக்கு கைத்தொழிலாளர்கள்/ அபிவிருத்தியாளர்கள் இணங்குவதை மத்திய சுற்றாடல் அதிகாரசபை உறுதிப்படுத்த முடியும்.

2021 ஆம் ஆண்டில் இணக்கக் கண்காணிப்பு அலகின் பிரதான செயற்பாடுகள்.

1. சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள்/ அட்டவணைப்படுத்தப்பட்ட கழிவு முகாமைத்துவ உரிமங்கள் (SWML) என்பவற்றுக்கான வழமையான இணக்க கண்காணிப்பு பொறிமுறையொன்றைப் பேணுதல்.
2. இணக்க கண்காணிப்பு பொறிமுறையை ஒழுங்குபடுத்துவதற்கான வழிகாட்டல் புத்தகத்தைத் தயாரித்தல்
3. இணக்க கண்காணிப்புக்காக ஒரு மென்பொருள் முறைமையை நிறுவிப் பராமரித்தல்

அட்டவணை 29: 2021 இல் CMU கண்காணிப்பின் முன்னேற்றம்

ஆற்றுப்படுக்கை	இ.க.அலகினால் நடத்தப்பட்ட இணக்கக் கண்காணிப்புச் சோதனைகளின் எண்ணிக்கை
களனி ஆற்றுப்படுக்கை	28
களு கங்கை ஆற்றுப்படுக்கை	12
ஏனையவை	10
மொத்தம்	50

A. ஒரு வழக்கமான இணக்க கண்காணிப்பு பொறிமுறையைப் பேணுதல்

I. **சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களைக் கண்காணித்தல்**

a) **EPL களுடன் தொழிற்படும் தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில்களுக்கான இணக்கக் கண்காணிப்பை நடைமுறைப் படுத்துதல்**

2021 ஆம் ஆண்டில் கண்காணிப்புக்காக சு.பா.உ. உடன் இயங்கும் உயர் மாசுறுதல் கைத்தொழில்கள் சிலவற்றை CMU தெரிவு செய்துள்ளது. களனி ஆற்றுப்படுகை மற்றும் களுகங்க வடிநிலத்தில் அமைந்துள்ள கைத்தொழில்களுக்கு கண்காணிப்புக்கான கைத்தொழில் தெரிவுகளின் போது முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. களனி கங்கை மற்றும் களுகங்கை ஆற்றுப் படுகைகளில் அமைந்துள்ள கைத்தொழில்களில் இருந்து மாசுறுதலைக் குறைப்பதே இந்தக் கண்காணிப்பின் நோக்கமாகும். ஆயினும், நாட்டிற்குள் கொவிட் தொற்றுநோய் பரவியதால், திட்டமிட்டபடி இணக்கக் கண்காணிப்பைச் செய்ய முடியவில்லை மற்றும் CMU கண்காணிப்பின் முன்னேற்றம் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது. ஆற்றுப்படுக்கைக் கைத்தொழில்களுக்கு மேலதிகமாக, பல உயர் மாசுறுதல் கைத்தொழில்கள் மற்றும் முறைப்பாடுகளைக் கொண்ட கைத்தொழில்களும் கூட்டாக ஆய்வு செய்யப்பட்டு உயர் முகாமைத்துவத்தினால் கோரப்பட்டவாறு அறிக்கையிடப்பட்டன.

b) மாகாண / மாவட்ட அலுவலகங்களினால் சு.பா.உ. கண்காணிப்பை நடைமுறைப்படுத்துதல்

2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இணக்க கண்காணிப்புத் திட்டங்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனைத்து மாகாண/மாவட்ட அலுவலகங்களினால் தயாரிக்கப்பட்டு அவற்றினால்

நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆயினும், நாட்டிற்குள் கொவிட் பெருந்தொற்று பரவலின் காரணமாக, திட்டமிட்டபடி இணக்கக் கண்காணிப்பை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டதுடன் EPLகளுடன் இயங்கும் 2549 கைத்தொழில்கள் இந்த அதிகாரசபையின் மாகாண/மாவட்ட அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டன மாகாண/மாவட்ட இணக்க கண்காணிப்புத் திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் இணக்க கண்காணிப்பு அலகினால் கண்காணிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டது.

அட்டவணை 30 : 2021 இல் மாகாண/மாவட்ட அலுவலகங்களினால் நடத்தப்பட்ட இணக்கக் கண்காணிப்பின் முன்னேற்றம்

மாகாண/மாவட்ட அலுவலகம்	மேற்கொள்ளப்பட்ட இணக்கக் கண்காணிப்புகளின் எண்.		
	வகை A	வகை B	மொத்தம்
கொழும்பு	228	93	321
களுத்துறை	27	0	27
கம்பஹா	36	15	51
காலி	24	56	80
மாத்தறை	35	68	103
அம்பாந்தோட்டை	13	6	19
கண்டி	60	50	110
நுவரேலியா	46	64	110
மாத்தளை	46	9	55
கேகாலை	46	49	95
இரத்தினபுரி	175	150	325
குருநாகல்	70	42	112
புத்தளம்	45	18	63
அம்பாறை	11	34	45
திருகோணமலை	27	75	102
மட்டக்களப்பு	9	25	34
அநுராதபுரம்	53	32	85
பொலநறுவை	28	49	77
பதுளை	47	36	83
மொனராகலை	25	5	30
யாழ்ப்பாணம்	116	142	258
கிளிநொச்சி	31	73	104
முல்லைத்தீவு	39	52	91
மன்னார்	53	81	134
வவுனியா	22	13	35
மொத்தம்	1312	1237	2549

II. **அட்டவணைப்படுத்தப்பட்ட கழிவு முகாமைத்துவ உரிமங்களின் (SWMLs) கண்காணிப்பு**

SWML களுடன் இயங்கும் கைத்தொழில்கள் சு.பா.உ. இணக்க கண்காணிப்புப் பரிசோதனைகளுடன் இணைந்து பரிசோதிக்கப்பட்டு, இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கான விதப்புரைகள்/ ஆலோசனைகள் என்பன மேலதிக நடவடிக்கைகளுக்காக HW மற்றும் CM அலகுக்கு அறிவிக்கப்பட்டன.

B. இணக்கக் கண்காணிப்பு பொறிமுறையை ஒழுங்குபடுத்துவதற்கான வழிகாட்டல் புத்தகம் தயாரிப்பு

உரிய உத்தியோகத்தர்களின் பாவனைக்காக, சு.பா.உ. இணக்கக் கண்காணிப்பு பொறிமுறையை ஒழுங்குபடுத்துவதற்கான வழிகாட்டல் புத்தகம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

C. இணக்கக் கண்காணிப்பிற்கான மென்பொருள் முறைமை ஒன்றைத் தாபித்தலும் பேணுதலும்

மாசுறுதல் மூல கையிருப்புத் (PSI) தரவுத்தளத்துடன் சு.பா.உ. களின் இணக்கத்தைக் கண்காணிப்பதற்கான தரவுத்தள முகாமைத்துவ முறைமை விருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

அத்தியாயம் 12 : விசாரணைகள் அலகு

விசாரணைகள் பிரிவு 2018 மார்ச்சில் தாபிக்கப்பட்டு, பணிப்பாளர் நாயகத்தின் கீழ் தொழிற்படுகின்றது. தடைசெய்யப்பட்ட பொலித்தீன் தொடர்பான ஒழுங்கு விதிகளையும் தவிசாளர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரையுடன் நடாத்தப்பட்ட முக்கியமான சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பான விசேட விசாரணைகளையும் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு இப்பிரிவிடம் ஒப்படைக்கப் பட்டது. இப்பிரிவானது ஒரு பணிப்பாளர், இரண்டு உதவிப் பணிப்பாளர்கள், ஒரு அலுவலக உதவியாளர் மற்றும் ஒரு கணனிப் பயிலுனரைக் கொண்டுள்ளது. 2021 நவம்பரில் சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் ஒருவரும், 2021 ஒக்டோபரில் பட்டதாரி பயிலுனர் ஒருவரும் இந்த அலகுடன் இணைக்கப்பட்டனர்.

A. அறிமுகம்


நவீன சமுதாயத்தில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் தயாரிப்புகள் அத்தியாவசிய பொருட்களாக மாறியுள்ளன. இருப்பினும், பிளாஸ்டிக் பைகள், உணவு உறைகள், உறிஞ்சு குழாய்கள், பொலிஸ்டைரீன் பெட்டிகள், குவளைகள், உணவு வெட்டும் கருவிகள் மற்றும் பேக்கிங் பொருட்கள் போன்ற ஒற்றைப் பாவனைப் பிளாஸ்டிக்குகள் நகர்ப்புற கழிவுகளில் ஏறத்தாழ 15 சதவீதமாக மாறிவிட்டன. அவ்வாறான உற்பத்திப் பொருட்களைத் தவறாகப் பயன்படுத்துதல், அவற்றை அபாயகரமான முறையில் அகற்றுதல் மற்றும் எரித்தல் என்பன பல சமூக, சுற்றாடல், சுகாதாரம் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளன. இலங்கையில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் நுகர்வு ஒரு நபருக்கு ஏறத்தாழ 0.5 கிலோகிராம் என்பதுடன் நாளொன்றுக்கு 20 மில்லியன் உணவுத்தாள்கள் மற்றும் 15 மில்லியன் பிளாஸ்டிக் கொள்வனவுப் பைகள் நாட்டில் பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் தொடர்புடைய உற்பத்திகள் உக்குவதற்கு நீண்ட காலம் தேவைப்படுவதனால், இந்த உற்பத்திகள் சுற்றாடலினுள் அகற்றப்பட்டவுடன், சுற்றாடலில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்திக் தொழிற்றுறையில் பாரியளவிலான தொழிலார்கள் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. சுற்றாடல் மீது ஒற்றைப் பாவனைப் பிளாஸ்டிக் ஏற்படுத்தும் கடுமையான தாக்கங்களை கருத்திற்கொண்டு, தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23W பிரிவின் கீழ், 2017 செப்டெம்பர் 1 ஆம் திகதி, 2034/33, 2035/34, 2034/35, 2034/36, 2034/37 மற்றும் 2034/38 ஆகிய இலக்கங்களைக் கொண்ட கட்டளைகளும் ஒழுங்குவிதிகளும் பொலித்தீன் உற்பத்திகள் மற்றும் பொலித்தீன்/பிளாஸ்டிக் என்பவற்றைப் பயன்படுத்தும் அலங்காரங்கள் தொடர்பான செயற்பாடுகள் அத்துடன் பிளாஸ்டிக் கொண்ட கழிவுப்பொருட்களை எரித்தல் ஆகியவற்றைத் தடை செய்வதற்காக வெளியிடப்பட்டன. அதைத் தொடர்ந்து, 2021 இல், 2021 மார்ச் 31 முதல் நடைமுறைக்கு வருமாறு சில ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்வதற்கான 2211/51 ஆம் இலக்கக் கட்டளை, தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23W இன் கீழ் வெளியிடப்பட்டது.


ஒழுங்குவிதிகளை நடைமுறைப் படுத்துவதன் பொருட்டு, இலங்கைப் பொலிஸ் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் உதவியுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மாகாண/ மாவட்ட அலுவலகங்களினாலும் நாடளாவிய ரீதியில் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன. நாட்டில் நிலவும் கொவிட்-19 பெருந்தொற்று, அதைத் தொடர்ந்த ஊரடங்கு மற்றும் பொது முடக்கங்கள் காரணமாக 2021 இல் நடத்தத் திட்டமிடப்பட்ட சோதனைகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட வேண்டியிருந்தது.

2021 இல், மொத்தம் 3512 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம், திட்டத்தின் முன்னேற்றம் 63% ஆகும். கண்டறியப்பட்ட விதிமீறல்களின் எண்ணிக்கை 522 என்பதுடன் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் கைப்பற்றப்பட்ட பொலித்தீன் உணவு உறைகளின் மொத்த கையிருப்பு 19821.3 கிலோகிராம் (19.8 தொன்கள்) ஆகும்.

அதற்கமைய அதிகாரசபையால் 9.9 மில்லியன் பொலித்தீன் உணவு உறைகள் சுற்றாடலுக்குள் அகற்றப்படுவதைத் தவிர்க்க முடிந்ததுடன், இது ஒற்றைப் பாவனை பிளாஸ்டிக் மாசைக் கட்டுப் படுத்துவதற்கான திடீர் சோதனை நிகழ்ச்சித்திட்டத்தின் பாரிய வெளியீடாகவும் கருதப்படுகின்றது. கீழுள்ள வரைபு மாவட்ட அடிப்படையிலான சோதனைகளை விளக்குகின்றது.



உரு 40: மாவட்ட அடிப்படையில் திடீர்சோதனைகள்




உரு 41: தடைசெய்யப்பட்ட உற்பத்திகளுக்கான பொருள்வாரியான திடீர்சோதனைகளின் சராசரி

B. நாட்டின் பாவனைக்காக மூலப் பொருளாக பொலித்தீனைக் கொண்டு உணவு உறைகளை உற்பத்தி செய்தல்; நாட்டின் பாவனைக்காக மூலப் பொருளாக பொலித்தீனைக் கொண்டு உற்பத்தி செய்த உணவு உறைகளின் விற்பனை, விற்பனைக்காக வைத்திருத்தல், கட்டணமின்றி வழங்குதல், காட்சிப்படுத்தல் அல்லது பயன்படுத்துதல் மீதான ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துதல்.

நாடளாவிய ரீதியில் பொலித்தீனை மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் உணவு உறைகளின் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், காட்சியாளர்கள் மற்றும் பாவனையாளர்களை உள்ளடக்கிய திடீர் சோதனை நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட ஒழுங்குவிதியை நடைமுறைப்படுத்துவதற்காக நடத்தப்பட்ட மொத்த சோதனைகளின் எண்ணிக்கை 2313 மற்றும் கண்டறியப்பட்ட விதிமீறல்களின் எண்ணிக்கை 130 ஆகும். சில சந்தர்ப்பங்களில், உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும் வழக்குத் தொடரப்பட்ட பின்னரும் சட்டவிரோத வியாபாரத்தைத் தொடர்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நாட்டில் ஒற்றைப் பாவனை பொலித்தீன் மாசாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு திடீர் சோதனை நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்வது இன்றியமையாததாகும்.

2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை பொலித்தீன் உணவு உறைகளுக்கான மொத்த திடீர் சோதனைகளின் எண்ணிக்கை மற்றும் 2021 ஆம் ஆண்டு வரை கண்டறியப்பட்ட விதிமீறல்களின் சதவீதம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ள உரு 03 இல் காட்டப்பட்டுள்ளது.



உரு 42: திடீர் பரிசோதனைகளின் எண்ணிக்கைக்கெதிரான மீறுகைச் சராசரியின் வருடாந்தப் போக்கு

I. சட்டவிரோத உணவுத்தாள் உற்பத்திக் கம்பனிகள் மீதான திடீர் சோதனைகள்

தேசிய சுற்றாடல் சட்டத்தின் தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளுக்கமைய, மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது சட்டவிரோத உற்பத்திகளின் உற்பத்தி கையிருப்புக்களை கைப்பற்ற முடியாதுள்ளதுடன் அத்தகைய உற்பத்திகளின் மாதிரிகளை சேகரித்து உரிய பிரதேசத்தின் நீதவான் நீதிமன்றங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு மாத்திரமே இயலுமாக உள்ளது. எனவே, சட்டவிரோத உற்பத்திக் கைத்தொழில்கள் மற்றும் உணவு உறைகளின் மொத்த விற்பனையாளர்களையும் சோதனையிடுவதற்காக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையுடன் கூட்டுச் சோதனைகள் திட்டமிடப்பட்டன.

CAA உடன் இணைந்து உற்பத்திக் கைத்தொழில்களின் மீது மேற்கொள்ளப்பட்ட 93 சோதனைகளில், 10 கைத்தொழில்கள் சட்டவிரோதமான உணவுப் உறைகளை உற்பத்தி செய்வதற்காக உற்பத்தி செயன்முறையின் போது சோதனையிடப்பட்டுள்ளன. நுகர்வோர் அலுவல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உற்பத்திக் கையிருப்புகள் பறிமுதல் செய்யப்பட்டன, மேலும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டவுடன் நீதவான்களின் உத்தரவுகளின்படி அத்தகைய உற்பத்திகள் அழிக்கப்பட்டன.

அட்டவணை 31 : பொலித்தீன் உணவுத்தாள் உற்பத்திக் கம்பனிகள் தொடர்பில் திடீர் பரிசோதனைச் செயற்பாடுகளின் விபரங்கள்

தொ. இல.	கம்பனியின் பெயர் மற்றும் முகவரி	சோதனைத் திகதி	கைப்பற்றப்பட்ட உணவுத்தாள்களின் தொகை/kg
1	அங்கீகரிக்கப்படாத கைத்தொழில், பண்டாரநாயக்க முதியான்சலாகே அஜித், இல:220,கஜுகஹயடதெனிய, புவக்வத்த, மீகொட	2021.01.25	2720
2	பி. எஸ் ரீ. பொலித்தீன், இல:550/35L, ரணவிருகம, பெலந்தகொட வீதி, பணாகொட	2021.03.24	1160
3	அங்கீகரிக்கப்படாத கைத்தொழில், கே. எச். ஏ.தனுஜ இந்திக இல.580/F, ஹன்வெல்ல வீதி, ஹுணுப்பிட்டிய, அத்தனகல்ல	2021.04.01	1930
4	அங்கீகரிக்கப்படாத கைத்தொழில், வெலிகமகமகே ஜயந்த புஷ்பகுமார, இல 130, ஸ்ரீ தர்மராம மாவத்தை, தெமட்டகொடை	2021.07.15	333.5
5	கமோ கிறீன் பக்பிரைவேட் லிமிடட், 148/2/4, பெலவத்தை, பன்னிப்பிட்டிய	2021.10.08	15.25
6	காலித் PAC பொலித்தீன் உற்பத்திகள் , 459/2A, ஹிக்ரா, திஹாரிய	2021.10.11	47.45
7	ஏ. பி. இன்டஸ்ட்ரீஸ், இல. 88/2, தலம்பிடியகொட, அட்டிகல, ஹன்வெல்ல.	2021.11.25	5159
8	டேனிஷ் பொலி இன்டஸ்ட்ரீஸ், இல. 273/6, பெர்குசன் வீதி, மட்டக்குளி	2021.12.07	600
9	அங்கீகரிக்கப்படாத கைத்தொழில், வெலிகமகமகே ஜயந்த புஷ்பகுமார, இல 130, ஸ்ரீ தர்மராம மாவத்தை, தெமட்டகொடை	2021.12.20	1740
10	அங்கீகரிக்கப்படாத கைத்தொழில், வெலிகமகமகே ஜயந்த புஷ்பகுமார, இல 130, ஸ்ரீ தர்மராம மாவத்தை, தெமட்டகொடை	2021.12.27	2470
	மொத்தம்		**16175.2**

இந்த கூட்டு சோதனைகளின் விபரங்கள், சட்டவிரோத தயாரிப்புகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக, இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்டன.





உரு 43 : கம்பனியொன்றில் பொலித்தீன்/உணவுத்தாள்கள் திடீர் பரிசோதனை -ஹோமாகம

II. சட்டவிரோத உணவுத்தாள் விற்பனையாளர்கள் மீதான திடீர் சோதனைகள்

திடீர் சோதனை நிகழ்ச்சித்திட்டம் பற்றிய கிடைக்கப்பெறும் தரவுகளின்படி, 1460 வியாபாரிகள், அதாவது மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகள், சட்டவிரோத உணவு உறைகளை விற்பது அல்லது காட்சிப்படுத்துவது தொடர்பாக சோதனையிடப்பட்டுள்ளனர். மொத்த வியாபாரிகள் மீது மத்திய சுகாதார அதிகாரசபையின் பொலிஸ் விசேட பிரிவு மற்றும் CAA உடன் இணைந்து பல்வேறு சோதனைகள் நடத்தப்பட்டன.

சட்டவிரோத பொலித்தீன் உணவுத் தாள்கள் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில்' கைப்பற்றப்பட்டன.

அட்டவணை 32 : பொலித்தீன் உணவுத்தாள் மொத்த விற்பனையாளர்கள் தொடர்பில் திடீர் பரிசோதனைச் செயற்பாடுகளின் விபரங்கள்

தொ. இல.	வியாபாரியின் பெயர் மற்றும் முகவரி	சோதனைத் திகதி	கைப்பற்றப்பட்ட தொகை/kg
1	G.S மார்க்கட்டிங், இல 130, கஸ்பாவ வீதி, கட்டுவாவல, Boralesgamuwa	2021.03.24	197.00
2	பதுதீன் மொஹமட் அஸ்மீத், நியூ முருகன் ஸ்டோர்ஸ், இல 157/T/1/24, மாளிகாவத்தை,கொழும்பு 10	2021.04.29	590.00
3	குழந்தைவேலு விமலநாதன், நியூ லக்ஷ்மி டிரேடர்ஸ், இல 57/17, போதிராஜ மாவத்தை, கொழும்பு 11	2021.07.12	300.00
4	ஸாகிர் ஹுசன் அப்துல் ஹுசன், M.S Traders, இல 180/76/C, பீப்பிள்ஸ் பார்க் கடைத்தொகுதி, கொழும்பு 11	2021.07.12	75.00
5	திசவீரசிங்கம் சாந்த குமார, (van pc 1604), டேனிஷ் பொலி இன்டஸ்ட்ரீஸ், இல. 273/6, பெர்குசன் வீதி, மட்டக்குளி	2021.07.15	500.00
6	ராஜேந்திரன் கங்காநாதன் நியூ குமார டிரேடர்ஸ், இல.173,5 ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு 11	2021.08.02	275.00
7	சென். ஜோன்ஸ் டிரேடிங் சென்டர், இல. 32/E, சென். ஜோன்ஸ் வீதி, கொழும்பு 11	2021.08.03	246.82
8	முத்துவீரன் கண்ணதாசன், பெட்டா பொலித்தீன், இல. 135, பாங்ஷால் வீதி, கொழும்பு 11	2021.11.01	88.00
9	வடிவேல் ஜெயசீலன், நியூ பிரேமா டிரேடர்ஸ், LG 180, பீப்பிள்ஸ் பார்க்,கொழும்பு 11	2021.11.15	75.00
10	Husana Smile Aliboy, இல.112, பழைய யோர்க் வீதி, கொழும்பு11	2021.11.22	375.00
11	ஆரையூர் குறோசரி, பிரதான வீதி, ஆரையம்பதி 02	2021.11.09	2.28
12	எஸ். கே. ஆர் ஸ்டோர்ஸ், பிரதான வீதி, ஆரையம்பதி	2021.11.09	0.57
13	பொலித்தீன் கோனர், பீச் வீதி, காத்தான்குடி 03	2021.11.09	3.99
14	AF GRO, இல. 114, பிரதான வீதி, காத்தான்குடி 06	2021.11.09	10.4
15	திரு. டபிள்யு. எச் எச். மதுஷங்க டபிள்யு. எச் எல் ஸ்டோர்ஸ், பங்கமுவ வீதி, அக்குரஸ்ஸ	2021.11.17	486

16	திரு ஏ. டீ. பாலித, பாலித ஸ்டோர்ஸ், பங்கமுவ வீதி, அக்குரஸ்ஸ	2021.11.17	
17	திரு. ஏ. டி. சமிந்த ஜயந்தி, ஏ. டி.ரி. டிரெடர்ஸ், இல 1/29 பங்கமுவ வீதி, அக்குரஸ்ஸ	2021.11.17	
18	நியூ அமீர் ஸ்டோர்ஸ், வெலகெதர வீதி, குருநாகல்.	2021.12.21	600
	மொத்தம்		3824.49

நீதிமன்ற உத்தரவுகள் பெறப்படும் வரை கைப்பற்றப்பட்ட கையிருப்புகள் தொம்பே கழிவு நிரப்பல் தளத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டன. கொழும்பு, ஹோமாகம மற்றும் அவிஸ்ஸாவளை நீதவான் நீதிமன்றங்களின் நீதிமன்ற உத்தரவுகளின் கீழ், நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் கழிவு நிரப்பல் தளத்தில் 9374.32 கிலோ கிராம் கையிருப்புகள் அழிக்கப்பட்டு, நீதிமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்டது





உரு 44 : தொம்பே சுகாதாரம்சார் கழிவு நிரப்பல் தளத்தில் கையிருப்பு அழிப்பு

III. வர்த்தக ரீதியில் சட்டவிரோத உணவுத்தாள் பயன்படுத்துவோர் மீதான திடீர் சோதனைகள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபை பொலித்தீன் உணவுத்தாள்களைப் பயன்படுத்தும் வர்த்தக நிறுவனங்கள், உணவகங்கள், ஹோட்டல்கள் என்பவற்றில் 760 சோதனைகளை நடாத்தியுள்ளது. வர்த்தக ரீதியில் பொலித்தீன் உணவு உறைகளை சட்டவிரோதமாகப் பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டதுடன், தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சட்டவிரோத உணவுத்தாள் தொடர்பான விசாரணைகளை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு, கொழும்பு நகரப் பிரதேசத்தில் சட்டவிரோத உணவுத்தாள்களை விற்பனை செய்வதையும் காட்சிப்படுத்துவதையும் கட்டுப்படுத்துவதற்காக தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழான அதிகாரங்களை கொழும்பு மாநகர சபைக்கு பகிர்ந்தளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக கொழும்பு மாநகர சபையுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு அதனை நநடைமுறைப்படுத்துவதற்கான நடைமுறையொன்று விருத்தி செய்யப்படும்.

D. உணவுத்தாள் பயன்படுத்துவோர் மீதான திடீர் சோதனைகள்

E. C. நாட்டின் பாவனைக்கான மூலப் பொருளாக உயர் அடர்த்தி கொண்ட ஏதேனும் பொலித்தீன் பையை உற்பத்தி செய்தல்; மற்றும் நாட்டின் பாவனைக்கான மூலப் பொருளாக உயர் அடர்த்தி கொண்ட ஏதேனும் பொலிஎத்திலீன் பைகளின் விற்பனை, விற்பனைக்காக வைத்திருத்தல், கட்டணமின்றி வழங்குதல், காட்சிப்படுத்தல் அல்லது பயன்படுத்துதல் மீதான ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துதல்;

மேற்குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதில் உள்ள இடைவெளியைக் கண்டறிந்ததுடன், தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23W பிரிவின் கீழ் குறிப்பிட்ட பரிமாணங்களை விடக் குறைவான பைகளைப் பயன்படுத்துவதைத் தடைசெய்வதற்கான புதிய ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

D. பிளாஸ்டிக் உள்ளடங்கலாக கழிவுகளை அல்லது ஏனைய எரியக்கூடிய பதார்த்தங்களை பகிரங்கமாக எரித்தல் அல்லது பகிரங்கமாக எரிப்பதற்கு அனுமதிபத்தல் அல்லது அங்கீகரித்தல் என்பவற்றின் மீதான ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துதல்

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்கை திறந்த வெளியில் எரிப்பதன் தாக்கங்கள் குறித்து குடும்பங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு மத்திய சுற்றாடல்

அதிகாரசபையின் மாகாண/ மாவட்ட அலுவலகங்களினூடாக மாதிரிக் கடிதம் ஒன்று தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

E. எவையேனும் பொலித்தீன், பொலிபுரொப்பிலீன், பொலிஎத்திலீன் உற்பத்திகளின் அனைத்து வடிவங்களையும் அரசியல், தேசிய, கலாசார அல்லது வேறு ஏதேனும் நிகழ்வு அல்லது சந்தர்ப்பத்தில் பொலிபுரொப்பிலீன் உற்பத்திகளை அலங்காரமாக பயன்படுத்துவதையும் தடைசெய்யும் கட்டளையை நடைமுறைப்படுத்துதல்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளூராட்சி அதிகாரசபைகளின் தவிசாளர்கள் மற்றும் தேர்தல் ஆணையாளர்களுக்கு ஒழுங்குவிதிகள் தொடர்பில் அறிவித்ததுடன் அதனைக் கடைப்பிடிக்குமாறும் கேட்டுக்கொண்டது. இதன் விளைவாக, அரசியல் கட்சிகள் கடந்த பொதுத் தேர்தலின் போது அலங்கார நோக்கங்களுக்காக பொலித்தீன் பொருட்களைப் பயன்படுத்தாது தங்கள் பரப்புரைகளை ஆரம்பித்தன. உள்ளூராட்சி அதிகாரசபைகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் இந்த ஒழுங்குவிதிகள் குறித்து அறிவிக்கப்பட்டதுடன், அது குறித்து உள்ளூர் மட்டத்திலான அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, தேர்தல் பரப்புரைகளில் பொலித்தீன் அலங்காரப் பொருட்கள் பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டதுடன், உள்ளூர் மட்ட நிகழ்வுகளிலும் பொலித்தீன் பொருட்களின் பாவனை தற்போது குறைக்கப்பட்டுள்ளது.

F. விரிவாக்கப்பட்ட பொலிஸ்டைரீனிலிருந்து உணவுக் கொள்கலன்கள், தட்டுக்கள், குவளைகள் மற்றும் கரண்டிகள் என்பவற்றை நாட்டின் பாவனை மற்றும் விற்பனை, காட்சிப்படுத்தல் அல்லது பாவனைக்காக உற்பத்தி செய்வதைத் தடை செய்வதற்கான கட்டளையை நடைமுறைப்படுத்துதல்

இது தொடர்பாக நடத்தப்பட்ட சோதனைகளில் அத்தகைய தயாரிப்புகள் சந்தையில் கிடைக்கவில்லை அல்லது நுகர்வோரின் பயன்பாடு இல்லை என்பது தெரியவந்தது.


සැබෑ පැකට් නිෂ්පාදනය කළ කර්මාන්ත ශාලාවක්
මධ්‍යම පරිසර අධිකාරිය වටලයි
පැකට් 3,000ක් අත්අඩංගුවට

උරු 45: சிறு பைக்கற்றுகள் உற்பத்திக் கைத்தொழில் ஒன்றில் மேற்கொள்ளப்பட் திடீர் சோதனை பற்றிய செய்தி

G. விவசாய இரசாயனப் பொருட்களை பொதி செய்வதற்கு PET அல்லது PVC மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்தல் மற்றும் எந்தவொரு செயல்முறை, வர்த்தகம் அல்லது கைத்தொழிலுக்கும் பைக்கற்றுக்கள்,காற்றடைக்கப்படக்கூடிய பொம்மைகள், பிளாஸ்டிக் தண்டு கொண்டகொட்டன்பட்களைப் பயன்படுத்துவதைத் தடைசெய்தல் மீதான கட்டளையை நடைமுறைப்படுத்துதல்

இந்தக் கட்டளை 31 மார்ச் 2021 முதல் நடைமுறைக்கு வருமாறு வெளியிடப்பட்டதுடன், உற்பத்தி கைத்தொழில்கள் மற்றும் பங்கீடுபாட்டு நிறுவனங்களுடனான பல கலந்துரையாடல்களின் பின்னர், ஒழுங்குவிதிக்கமைவாக, பைக்கற்று வகை உற்பத்திகளை போத்தல் வகை /சிறு முடிச்சு வகையாக மாற்றுவதற்கு அல்லது அதிகமான அளவுகளில் செய்வதற்கு அல்லது கொட்டன் பட்களிளன் பிளாஸ்டிக் தண்டுகளை மர அல்லது காகிதத்தண்டுகளாக மாற்றுவதற்கு தொழில்நுட்ப தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும், கொவிட் 19 பெருந்தொற்று நிலைமை காரணமாக சந்தையில் உற்பத்திகள் மெதுவாக நகர்வதால், பல நிறுவனங்கள், குறிப்பாக தலைமுடி நிறமூட்டிகளின் உற்பத்தியாளர்கள், 2021 மார்ச் 31 ஆம் திகதி ஒழுங்குவிதி வெளியிடப்படுவதற்கு முன்னர் உற்பத்தி செய்யப்பட்ட தங்கள் தயாரிப்புகளை விற்பதற்கு கோரிக்கை விடுத்தனர். வெளியிடப்பட்ட மேற்படி கட்டளையை அமுல்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் 866 சோதனைகளை மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடாத்தியதுடன், பைக்கற்றுக்கள் உற்பத்தி செய்யும் கம்பனி 01 மற்றும் வர்த்தகர்கள் உள்ளடங்கலாக 392 மீறல்களைக் கண்டறிந்தது. நிகர எடை 20 மி.லி கொண்ட

பைக்கற்று வகை மிருதுவாக்கிகளின் உற்பத்திச் செயன்முறை இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது, பைக்கற்றுகள் உற்பத்தி தொழிற்சாலையில் ஒரு திடீர் சோதனை நடத்தப்பட்டது. அக்கைத்தொழிலுக்கு எதிராக வழக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

H. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

ஒற்றைப் பாவனைப் பிளாஸ்டிக்கை அபாயகரமான முறையில் அகற்றுதல் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் அத்துடன் அவற்றின் நடைமுறை அந்தஸ்து ஆகியவற்றின் மீதான இரண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை, இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் சிற்றுண்டிச்சாலை ஊழியர்கள் 14 பேருக்கு 2021.02.09 மற்றும் 2021.10.28 ஆம் திகதிகளில் விசாரணைகள் அலகு நடத்தியது.

பொலித்தீன் சோதனைத் நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் கொள்திறனைக் கட்டியெழுப்பும் பொருட்டு, 23.11.2021 ஆம் திகதி, பொலிமரைப் பரிசோதிப்பதற்காக கையடக்க ராமன் நிறமாலை மானியைப் (Spectrophotometer) பயன்படுத்துவது குறித்து வெபினாரை ஒத்த இணையவழி வெளிநாட்டுப் பயிற்சியொன்று நடத்தப்பட்டது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில் வெளிநாட்டுக் நிறுவனத்துடன் இணைந்து உபகரணத்தின் விநியோகக் கம்பனியினால் இந்தப் பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

I. நீர்ப்பாசனக் குளக்கட்டுக்களில் பிளாஸ்டிக் குப்பைகள்

2211/51 ஆம் இலக்க வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்டவாறு, பைக்கற்றுக்களை தடைசெய்வதற்கான ஒழுங்குவிதிகளை விதிப்பதை மேலும் நியாயப்படுத்தும் விதத்தில், நீர்ப்பாசன குளக்கட்டுக்களில் வெற்றுப் பைகளை அகற்றுவது பற்றிய பகுப்பாய்வு மீதான கற்கையொன்றை விசாரணைகள் அலகு நடத்தியது.
அநுராதபுரம், குருநாகல் மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கி, குளிப்பதற்காகப் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் ஆறு நீர்ப்பாசன குளங்கள் இந்த ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டன.

பிளாஸ்டிக் மாசுகளை ஏற்படுத்தி, பெப்ரவரி மாதத்தில் துருவில வாவி மற்றும் திஸ்ஸ வாவி கரைகளில் கணிசமான அளவு வெற்று பைக்கற்றுக் கழிவுகள் காணப்பட்டதாகவும், டிசம்பர் மாதத்தில் ஏனைய நீர்ப்பாசன குளங்களில் குறைந்தளவிலான வெற்றுப் பைக்கற்றுகள் அகற்றப்பட்டதாகவும் பகுப்பாய்வுப் பெறுபேறுகள் சுட்டிக்காட்டின.

J. முக்கியமான சுற்றாடல் பிரச்சினைகளின் விசாரணை

பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரையின் பேரில் முக்கியமான சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பாக இவ்வலகு விசேட விசாரணைகளை நடாத்தியது.

அட்டவணை 33 : பிரதான சுற்றாடல் பிரச்சினைகள் பற்றிய விசாரணைகளின் விபரங்கள்

தொ. இல.	பிரச்சினை	அமைவிடத்தின் பெயரும் முகவரியும்	விசாரணையின் திகதி
1.	ஒலி மற்றும் அதிர்வு மாசு பற்றிய முறைப்பாடு	Metal Quarry திரு. ஏ. கே. சமந்த, F S A ஹோல்டிங் லங்கா Kahehelhena, தித்தெனிய வடக்கு, ஹன்வெல்ல.	26.03.2021
2.	கசடுகளை (slag) திறந்த வெளியில் கொட்டுதல்	S R Steel பிரைவேட் லிமிடட், கொட்டதெனியாய & திவுலப்பிட்டிய.	31.03.2021
3.	சுத்திகரிப்பின்றி அபாயகரமான இரசாயனங்களை	வோக் ஜுவலர்ஸ் பிரைவேட் லிமிடட், 52B, காலி வீதி, கொழும்பு 03.	29.04.2021

	சுற்றாடலுக்குள் வெளியேற்றுதல்.		
4.	இரைச்சல் மற்றும் தூசி மாசு தொடர்பான முறைப்பாடு	சுதத் ஜயமான்ன Metal Quarry. இல 41/1A , போப்பேகெதரவத்த, போப்பேகெதர, ஜம்புகஸ்பிடிய.	14.10.2021
		சுதத் ஜயமான்ன இல 41/1A, போப்பேகெதரவத்த, போப்பேகெதர, ஜம்புகஸ்பிடிய.	
5.	சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்க மறுத்தமைக்கான மேன்முறையீடு	Metal Crusher திலகரத்ன விக்ரமசிங்க, கராந்தெனிய 6 ஆம் கட்டை, கொஸ்வத்து மாவத்தை, கராந்தெனிய, காலி.	12.11.2021
6.	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் இன்றி செயற்படும் சேவை நிலையம் தொடர்பான முறைப்பாடு	மிஸ்டர் கிளீன், இல. 757, அநுராதபுர வீதி, தம்புள்ள	19.11.2021
7.	சுற்றாடல் அங்கீகாரத்தை இரத்துச் செய்வதற்கான மகாவலி அதிகாரசபையின் கடிதங்கள்	M டு M சொலூஷன்ஸ் பிரைவேட் லிமிடட். 1 MW சூரிய சக்திப் பொறித்தொகுதி, கேகாலை, பல்லேகல, கண்டி..	22.11.2021
8.	சுற்றாடல் விதப்புரைகளை வழங்க மறுத்தமைக்கான மேன்முறையீடு	திரு. டப்ளியு. பி. விதானாச்சி மஹஹெங்கொட, பத்தேகம	25.11.2021
9.	மண் அகழ்வு கருத்திட்டத்தின் பற்றுச்சீட்டுத் தீர்ப்பனவுப் பிரச்சினை	கினிகத்ஹேனையில் வாரச் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழியப்பட்ட மண் அகழ்வுக் கருத்திட்டம்	13.12.2021

K. பௌதிக முன்னேற்றம்

2021 ஆம் ஆண்டில், 5614 திடீர் சோதனைகள் இலக்கு வைக்கப்பட்டு, 3512 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆண்டின் பௌதிக முன்னேற்றம் 63% ஆக இருந்தது.

I. நிதி முன்னேற்றம்

இந்த அலகிற்கு ரூபா 1 மில்லியன் ஒதுக்கப்பட்டது. வருடாந்த செயற்திட்டத்தின் செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக ரூபா 837,730 பயன்படுத்தப்பட்டதுடன் இது 84 வீத முன்னேற்றத்தை சுட்டிக்காட்டியது.

அத்தியாயம் 13 : தகவல் தொழில்நுட்ப (IT) அலகு

A. அறிமுகம்

நிறுவனத்தின் நெகிழ்வுத்தன்மை மற்றும் நிறுவன எல்லைகளின் இயல்பை மாற்றுவதில் மற்றும் பணியின் தன்மையையும் வேகத்தையும் மாற்றுதல் ஆகியவற்றில் தொழில்நுட்பம் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தலாம். தகவல் தொழில்நுட்பம் ஒரு நிறுவனத்தை சுமுகமாக இயங்க செய்வதுடன் தொழிலாளர்களை ஆக்கப்பூர்வமாகவும் உற்பத்தித் திறனுடனும் செயற்படவும் அனுமதிக்கின்றது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் (CEA) தகவல் தொழில்நுட்ப அலகு, டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் கூடிய தகவல் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி ஒட்டுமொத்த உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் அதிகாரசபையின் தொடர்புகளைப் பேணுவதற்கும் உதவுகின்றது. மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவையானது மிகச்சிறந்த செயற்பாட்டு பிரயோகங்கள் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல்களிலிருந்து ஏற்படுத்தப்படுகின்றது. இது வாடிக்கையாளர் உறவு முகாமையை இலகுவாகவும் நம்பிக்கையுடனும் வைத்திருக்க உதவுகின்றது.

நிறுவனத்தின் பணிகளில் குறைந்தளவிலான இடையீடுகள் மற்றும் சுமுகமான தொழிற்பாட்டுடன் ஊழியர்களுக்கு தொழில்நுட்பத்தின் அணுகலை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தகவல் தொழில்நுட்ப அலகு உறுதிப்படுத்துகின்றது.

B. 2021 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப அலகின் பிரதான பணிகள்

1. வலையமைப்பு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி

a. வலையமைப்பு உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் CEA இற்கு உதவி மற்றும் ஆதரவளித்தல்

b. வலையமைப்பு, சேவையகம் மற்றும் தொலைநிலை அமைவிடத்தில் முகாமைத்துவத்தில் எதிர்பாரா/அவசரகால காப்புப்பிரதி திட்டங்களை பராமரித்தல்

c. வினைத்திறன் மிக்க சரிசெய்தல்(troubleshooting) திறன்களுடன் (பயநர் முகாமைத்துவம், சேவையக முகாமைத்துவம், வலையமைப்பு முகாமைத்துவம், தொலைவு அமைவிட கையாளுகைபோன்றவை) வலையமைப்பு வசதிகளுக்கான ஆதரவு, உதவி மற்றும் கண்காணிப்பு.

II. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தொடர்புடைய தொழிற்பாட்டுப் பகுதிகளுக்கான மென்பொருளை நிறுவுதல் மீதான வசதிச் சேவைகள் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு, மென்பொருள் முறைமைகள் அபிவிருத்தி செய்தல் என்பவற்றில் கவனம் செலுத்துதல்.

III. சரிசெய்தல் (troubleshooting) திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு பற்றிய வன்பொருள் உதவிச்சேவைகள் வழங்கியமை.

C. சு.பா.உ. கையடக்க செயலியுடன் மேலே உருவாக்கப்பட்ட மென்பொருள் முறைமைகளை செயல்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்பதன் மூலம் மொத்த ஒருங்கிணைந்த மென்பொருள் தீர்வு ERP முறைமையை நிறுவுதல்.

a. ERP செயலியின் அபிவிருத்தி மற்றும் தனித்தனியாக விருத்தி செய்யப்பட்ட ஆக்கக்கூறுகளின் ஒருங்கிணைப்பு

b. மொத்தத் தீர்வின் மீது உரிய விடயப்பரப்புகளுக்கான கையடக்க செயலி அபிவிருத்தி

C. மின்னஞ்சல் முறைமைக் கட்டமைப்பு

மின்னஞ்சல் முறைமைக் கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது. Microsoft Outlook மின்னஞ்சல் முறைமை உள்ளமைவு, 25 மாவட்ட/பிராந்திய அலுவலகங்கள் உட்பட ம.சு.அ. முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டது ஆரம்ப கலந்துரையாடல்கள், எதிர்கால மேம்பாட்டிற்காக அரசாங்க ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக புதிய மின்னஞ்சல் முறைமையை தாபித்தல் மீது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்துடன் (ICTA) மேற்கொள்ளப்பட்டன.

D. மென்பொருள் முறைமை அபிவிருத்தி

ஓர் ஒருங்கிணைந்த மென்பொருள் மொத்த தீர்வுப் பொதியின் உருவாக்கம் இடம்பெற்று வருகின்றது. 2021 ஆம் ஆண்டில் ஆரம்ப கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. தற்போது பிராந்திய அலுவலக வலையமைப்பு மற்றும் தலைமை அலுவலகத்தில் முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமை தொழிற்பட்டு வருகின்றது. 2017 செப்டெம்பர் முற்பகுதியில் வெளியிடப்பட்ட மாசடைதல் மீதான மூல இருப தரவுத்தளம் (PSI தரவுத்தளம்) தற்போது மத்திய சுற்றாடல் .அதிகாரசபையின் பிராந்திய அலுவலக வலையமைப்பு மற்றும் தலைமை

அலுவலகத்தில் வெற்றிகரமாகத் தொழிற்படுகின்றது. ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையின் (jica)

உதவியின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தகவல் தொழில்நுட்ப அலகு மற்றும் சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகின் இணைந்த பணியாக குறிப்பிட்ட இத்தரவுத்தளம் உருவாக்கப்பட்டது.

மருத்துவ காப்பீட்டு உரிமை கோரும் முறைமையானது பிராந்திய அலுவலக வலையமைப்பு மற்றும் தலைமை அலுவலகம் ஆகிய இரண்டிலும் செயற்படுகின்றது. மருத்துவ காப்பீடு கோரும் ஊழியர்களின் விவரங்களை இந்த முறையின் மூலம் காணலாம்


2021 ஆம் ஆண்டில் அதன் அலகு இந்தத் தரவுத்தளங்கள் மற்றும் முறைமைகளை பராமரிப்பதில் உதவியது.

F. டிஜிட்டல் நிலைமாற்றம் – ம.சு.அ. (2020- 2030)

ஒவ்வொரு தனிநபரும் உயர்தரத்துடன் அடிப்படைத் தேவைகளுக்கான சமமான அணுகலைப் பெறுவதை உறுதி செய்வதற்காகத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம், 2025 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மொத்த தொழிற்பாட்டையும் ஒரு முழுமையான டிஜிட்டல் கட்டமைப்பாக மாற்ற திட்டமிடப்பட்டது.
சுற்றாடல் கரிசனைகள் மீதான உலகளாவிய நியமங்களுடன் நேராக்கம் செய்யும் திட்டத்துடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மொத்த டிஜிட்டல்மயமாக்கல் திட்டமிடப்பட்டுள்ளது.
மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஊடாக பிரசைகளுக்கு சிறந்த சேவைகளையும் நன்மைகளையும் வழங்குதல், கட்டம் I ஆனது ம.சு.அ. இன் சேவைகளில் முழுமையாகப் பொதுமக்களில் கவனம் செலுத்தும் பகுதிகளில் கவனம் செலுத்தும். கருத்திட்டம் வெற்றியடைவதற்காக பிரதான காரணிகள் பின்வருமாறு அமையும்

- கடதாசியற்ற வேலைத்தளம்
- பூச்சிய புகை வெளியேற்றம்
- புதுப்பிக்கத்தக்க சக்தி
- பசுமைக் கலாசாரம்

2021 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் டிஜிட்டல் உருமாற்றம் தொடர்பில் தகவல் தொழில்நுட்ப அலகினால் பூர்வாங்கக் கலந்துரையாடல்களும் திட்டமிடலும் முன்னெடுக்கப்பட்டன.



அத்தியாயம் 14: மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பன்முகப்படுத்தல்

14.1. CEA இன் மாகாண அலுவலகங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிப்பு

சுற்றாடல் பிராந்தியமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய அனைத்து முகவராண்மைகள் மற்றும் அமைப்புக்களுக்கு தேசிய நியமங்கள், அளவுகோல்கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்காக தேசிய மட்டத்தில் மத்திய முகவராண்மையாக விளங்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பிராந்திய மட்டத்தில் மத்திய மாகாணத்திலும் தென் மாகாணத்திலும் இரண்டு பிராந்திய அலுவலகங்களை தாபிப்பதன் மூலம் 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பிராந்திய அலுவலகங்களை தாபித்ததன் பின்னர், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் செயலாற்றுகைச் செயற்பாடுகள் மற்றும் சுற்றாடலின் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய தொழிற்பாடுகளின் செயற்திறனுக்கு சிறந்த ஏற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாண அலுவலகங்களை தாபிப்பதன் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை பிரதியீடு செய்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது

தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்களின் தலைவர்களுக்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சார்பில் அமுல்படுத்துவதற்காக சில அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

14.2 உள்ளூர் அதிகாரசபைகளுக்கு அதிகாரம் பகிர்ந்தளிப்பு

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம், மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது அதிகாரப் பரவலாக்கல் மூலோபாயத்தைப் பயன்படுத்துவதையும், அதன் அதிகாரங்களையும் பணிகளையும் கையளிப்பதன் மூலம் ஏனைய முகவராண்மைகள் ஊடாக உப தேசிய மட்டத்தில் அதன் சேவைகளை ஒழுங்கமைப்பதையும' இயலச் செய்யும் சட்ட ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. தேசிய சுற்றாடல் சட்டத்தின் 26 ஆம் பிரிவானது, சட்டத்தின் கீழான ஏதேனும் அதன் அதிகாரங்கள் மற்றும் பணிகளை அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட நிறுவனம், உள்ளூராட்சி அதிகாரசபை அல்லது எவரேனும் பகிரங்க அலுவலருக்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஒப்படைப்பதற்கு ஏற்பாடு செய்கின்றது. 1993 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் சிலவற்றை இப்பிரிவின் கீழ் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கை மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டது. 1994.01.01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இக்கட்டளை வழங்கப்பட்டது; 45 செயற்பாடுகளுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்குதல் உள்ளடங்கலாக தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சுற்றாடல் முகாமைத்துவத்திற்கும் பாதுகாப்பதற்குமான 12 தொழிற்பாடுகளைக் கையாள்வதற்கான அதிகாரம் அனைத்து மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டில், 22.11.2000 ஆம் திகதிய 1159/22 ஆம் இலக்க வர்த்தமானியை நீக்கி 2008.01.25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி வெளியிடப்பட்டது. புதிய வர்த்தமானி ஒழுங்குவிதிகளில், சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவைப்படுத்தப்படும் 3 வகைகள் உள்ளன. ஒப்பீட்டளவில் குறைந்த மாசுறுதல் கைத்தொழில்களான "C" வகையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட 25 செயற்பாடுகளுக்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சார்பில் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்குவதற்காக LASகள் மீள அதிகாரமளிக்கப்பட்டுள்ளன.

14.3 மாவட்ட சுற்றாடல் சட்ட அமுலாக்கக் குழு (DELEC)

1995 ஆம் ஆண்டில், ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் மாவட்ட சுற்றாடல் சட்ட அமுலாக்கக் குழு (DELEC) என்னும் ஒரு குழுவை தாபிப்பதன் மூலம் சுற்றாடல் விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்காக மாவட்ட மட்டத்தில் ஒரு நிர்வாக ஏற்பாடு அமைக்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் இக்குழுவின் தலைவராகச் செயற்பட்டதுடன் பின்வருவோர் ஏனைய உறுப்பினர்களாகவும் செயற்பட்டனர்;

- மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்
- சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்
- மாவட்ட வன அலுவலர்
- மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்
- வனசீவராசிகள் திணைக்களத்தின் மாவட்டத் தலைவர்
- மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள்
- மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள்
- மாவட்டத்திலுள்ள மரச சார்பற்ற நிறுவனமொன்றின் பிரதிநிதி
- செயலாளர் ஒருவராக DEO
- வேறு எவரேனும் பிரதிநிதியும் குழுவிற்குள் இணைத்துக் கொள்ளப்படலாம்.

பொலிஸ், சுகாதார சேவைகள் திணைக்களம், வனப்பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் போன்ற உரிய முகவராண்மைகளினால் சுற்றாடல் குற்றங்கள் சம்பந்தப்பட்ட சட்ட அமுலாக்கம் தொடர்பான விடயங்களை ஒருங்கிணைப்பதே DELEC இன் பிரதான பணியாகும்.

சுற்றாடல் விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மேன்முறையீடுகளை பரிசீலிப்பதே DELEC இன் இன்னுமொரு பணியாகும்.

இக்குழுக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டச் செயலாளர்களின் தலைமையில் மாதாந்தம் நடாத்தப்பட்டன.

அத்தியாயம் 15 : CEA இன் பிராந்தியமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்

15.1 சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு

சுற்றாடல் பாதுகாப்பின் பிரதான ஒழுங்குபடுத்தல் நிகழ்ச்சித்திட்டம் சுற்றாடல் பாதுகாப்பு உரிம நடைமுறையாகும். இது அமுலாக்கத்திற்காக மாகாண அலுவலகங்களுக்கு குறித்து ஒதுக்கப்பட்டுள்ளது. கைத்தொழில் கழிவுப்பொருட்கள் அகற்றல், வளி வெளியேற்றங்கள் அத்துடன் ஒலி மற்றும் அதிர்வு என்பவற்றுக்கான நியமங்களும் அளவுகோல்களும் பொதுவாக சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தின் ஊடாக குறித்துரைக்கப்படும் செயற்பாடுகளில் விதிக்கப்படுகின்றன. கைத்தொழில் கழிவுகள் தொடர்பாக இலங்கையின் தற்போதைய நிலைமையை மீளாய்வு செய்யும் போது, தற்போதைய சுற்றாடல் ஒழுங்குவிதிகள் அமுலுக்கு வருவதற்கு முன்னர், இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் தாபிக்கப்பட்ட கைத்தொழில்களில் இருந்து பிரதானமாக பாரிய மாசடைதற் பிரச்சினைகள் எழுகின்றன என்பது தெளிவாகின்றது.

தொழிற்சாலைக் கழிவுகள் பொதுவாக ஆறுகள், குளங்கள் மற்றும் கடல் போன்ற அருகிலுள்ள நீர்நிலைகளினுள் (சுத்திகரிக்கப்பட்டு அல்லது சுத்திகரிக்கப்படாது) வெளியேற்றப்படுகின்றன. பொதுவாக, ஆறுகளின் நீர் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் பொதுமக்களின் நீர் தேவையை பூர்த்தி செய்வதற்கான ஆதார நீராக பயன்படுத்தப்படுகின்றது எனவே, கழிவுகளை ஒரு நீர்நிலையில் அகற்றுவது ஒரு பெரிய பிரச்சினையாகும். மேற்பரப்பு நீர் மாசுபாட்டைத் தவிர, நிலத்தடி நீர் மாசுபாடு பொதுமக்களின் குடிநீர் ஆதாரங்களை பாதிக்கின்றது.

நிலத்தடி நீர் நிரப்புதல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவை சுற்றாடலுக்கு கைத்தொழில் கழிவுகளை வெளியேற்றுவதன் மீதான தற்போதுள்ள தரநியமங்களால் உள்ளடக்கப்படவில்லை. வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களின் கீழ் வரும் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் சட்டரீதியான பிணைப்பைக் கொண்டுள்ளன. எனவே, தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஏதேனும் குற்றம் அல்லது மீறுகை தண்டனைக்குரியதாகும்.

செயற்பாடு ஒன்றிற்கு வழங்கப்படும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் புதுப்பிக்கத்தக்கதாகும். உரிமத்தில் உள்ள நிபந்தனைகளுக்கு இணங்காதுள்ளதாக ஒரு செயற்பாடு கண்டறியப்படுமாயின், மேன்முறையீட்டு விசாரணையின் முடிவில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்படும் தீர்மானத்தின் பின்னர் உரிமத்தை இரத்துச் செய்வதற்கும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கும் வழமையாக மேற்கொள்ளப்படும்.

.

15.1.1 சு.பா.உ. நடைமுறை

சு.பா.உ. நடைமுறையின் அமுலாக்கத்தின் முன்னேற்றம் பின்வருமாறு காட்டப்படலாம்:

அட்டவணை 34 : சு.பா.உ. செயன்முறையைப் பிராந்திய மட்டத்தில் நடைமுறைப்படுத்தல்

மாகாணம்	மாவட்டம்	வழங்கப்பட்ட EPLகளின் எண்ணிக்கை						புதுப்பிக்கப்பட்ட EPLகளின் எண்ணிக்கை					
		2019		2020		2021		2019		2020		2021	
		"A"	"B"	"A"	"B"	"A"	"B"	"A"	"B"	"A"	"B"	"A"	"B"

WPO	கொழும்பு	158	97	141	36	154	24	1532	223	922	101	461	85
	கம்பஹா	162	76	95	87	270	67	854	155	803	113	1486	278
	களுத்துறை	76	59	89	56	24	9	471	74	370	50	374	8
CPO	கண்டி	62	30	29	13	18	7	470	49	278	823	622	130
	மாத்தளை	43	19	31	18	51	15	247	32	238	23	269	33
	நுவரேலியா	30	5	6	1	6	1	168	20	106	11	132	4
SuPO	காலி	41	118	24	46	34	45	409	128	274	159	483	172
	மாத்தறை	34	36	16	19	19	25	279	96	252	72	371	140
	அ'தோட்டை	33	32	31	35	55	37	248	6	257	18	276	41
SaPO	கேகாலை	8	30	8	18	9	26	222	61	81	35	284	129
	இரத்தினபுரி	21	60	18	3	10	5	131	28	59	23	215	31
NCPO	அ'புரம்	87	39	66	39	95	61	384	82	307	50	423	46
	பொலநறுவை	12	16	15	9	21	15	208	15	136	26	150	44
EPO	தி'மலை	8	14	14	15	25	17	186	14	100	32	195	68
	அம்பாறை	8	10	12	9	33	48	182	30	169	66	354	35
	மட்டக்களப்பு	10	5	26	57	16	10	80	69	258	71	168	58
UPO	பதுளை	43	16	5	14	21	21	300	49	151	23	359	63
	மொ'கலை	19	14	10	6	13	2	272	20	45	11	57	12
NPO	யாழ்ப்பாணம்	7	11	0	8	3	15	119	33	131	42	282	68
	கிளிநொச்சி	7	6	3	6	4	23	62	18	52	66	45	21
	முல்லைத்தீவு	1	8	0	20	2	5	48	10	62	33	18	23
	வவுனியா	33	12	16	6	34	10	100	4	116	9	185	24
	மன்னார்	3	8	3	4	6	5	38	12	68	19	145	24
NWPO	குருநாகல்	50	19	23	14	16	13	131	43	101	16	87	24
	புத்தளம்	29	26	17	5	8	11	54	7	61	6	33	6
மொத்தம்		**985**	**766**	**698**	**544**	**947**	**517**	**7195**	**1278**	**5397**	**1898**	**7474**	**1567**

2021 ஆம் ஆண்டில், 947 "A" வகை மற்றும் 517 "B" வகை சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் புதிதாக வழங்கப்பட்டதுடன் 7,474"A" வகை மற்றும் 1,567 "B" வகை சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டன.

15.1.2 புதிய கைத்தொழில்களுக்கான சுற்றாடல் விதப்புரை வழங்குதல்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் புதிய கைத்தொழில் தளங்களை பரிசோதித்தல், பல நன்மைகளைக் கொண்டிருப்பதுடன்,

கைத்தொழில்கள் பொருத்தமற்ற இடங்களில் அமையாமல் இருப்பதையும் உறுதிப்படுத்துகின்றது. கடந்த காலங்களில், கைத்தொழில்கள் முற்றிலும் பொருத்தமற்ற இடங்களில் காணப்பட்டதன் விளைவாக கைத்தொழில்களுக்கும் அண்மையில் வசிக்கும் குடியிருப்பாளர்களுக்குமிடையில் பல பிரச்சினைகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருந்தன. ஆயினும், 2000 ஆம் ஆண்டிலிருந்து மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது செயற்பாட்டில் உயர் மாசடைதலை ஏற்படுத்தும் வரையறுக்கப்பட்ட (80) செயற்பாடுகளுக்கு மாத்திரமே தள அனுமதியை வழங்குகின்றது. ஆனால் பி.ஓ.க்கள் நிறுவப்பட்டதுடன் இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது. புதிய தள விதப்புரைகள் மாகாண அலுவலங்களால் வழங்கப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை புதிய கைத்தொழில்களை அமைப்பதற்கான சுற்றாடல் விதப்புரைகளை கீழே உள்ள அட்டவணை காட்டுகின்றத

அட்டவணை 35 : புதிய கைத்தொழில்களுக்கு சுற்றாடல் விதப்புரைகளை வழங்குதல்

மாகாணம்	மாவட்டம்	பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை			அங்கீகாரம் வழங்கப்பட்டவற்றின் எண்ணிக்கை			நிராகரிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை		
		2019	2020	2021	2019	2020	2021	2019	2020	2021
WPO	கொழும்பு	82	57	60	47	36	27	1	1	0
	கம்பஹா	169	157	190	120	55	117	14	2	21
	களுத்துறை	136	88	48	72	49	53	00	4	2
CPO	கண்டி	51	6	18	37	22	12	2	0	0
	மாத்தளை	41	30	20	36	18	10	2	1	0
	நுவரேலியா	19	9	11	15	3	16	00	0	0
SuPO	காலி	68	73	84	45	31	35	2	9	5
	மாத்தறை	61	42	46	41	21	35	7	4	6
	அ'தோட்டை	75	54	72	37	34	50	1	2	0
SaPO	கேகாலை	8	7	0	15	7	1	1	0	0
	இரத்தினபுரி	43	2	94	20	2	0	00	0	0
NCPO	அ'புரம்	81	72	57	63	42	46	1	2	2
	பொலநறுவை	25	26	8	19	19	4	1	0	0
EPO	திருகோணமலை	35	17	21	35	26	20	00	0	0
	அம்பாறை	25	29	29	35	32	36	00	1	1
	மட்டக்களப்பு	36	32	33	44	46	35	12	0	0
UPO	பதுளை	16	19	58	18	13	39	4	1	1
	மொனராகலை	49	35	113	28	20	46	00	1	2
NPO	யாழ்ப்பாணம்	48	64	68	24	39	29	00	0	0
	கிளிநொச்சி	77	66	85	62	63	63	00	0	0
	முல்லைத்தீவு	37	23	37	32	22	24	00	0	0

	மன்னார்	57	15	21	38	24	34	00	2	0
	வவுனியா	16	21	57	31	11	36	00	0	0
NWPO	குருநாகல்	143	52	25	89	47	17	1	2	1
	புத்தளம்	57	55	67	43	48	37	4	0	0
மொத்தம்		**5174**	**1051**	**1322**	**1046**	**730**	**822**	**53**	**32**	**41**

2021 ஆம் ஆண்டில், 1,322 புதிய கைத்தொழில்கள் தங்கள் தொழில் முயற்சிக்கான விதப்புரையைக் கோரியுள்ள அதேவேளை கடந்த ஆண்டு விண்ணப்பங்கள் உட்பட 822 விண்ணப்பதாரர்களுக்கு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. ஏனெனில் அவை விதப்புரையைப் பெறுவதற்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாத 41 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

15.2 ISO 14000 தரநியமங்களின் கீழ் கைத்தொழில்களுக்கு சான்றளிப்பதற்கான பங்களிப்பு

ISO 14001 தரநியமங்களின் கீழ் கைத்தொழில்களுக்கு சான்றளிப்பதற்கான WPO இன் பங்களிப்பு

தொழில்நுட்ப மற்றும் சட்ட விடயங்கள் தொடர்பான நிபுணத்துவ அறிவை வழங்குவதன் மூலம் கைத்தொழில்களுக்கு கட்டத்திலேயே இதற்கான செயற்பாடுகள் திட்டமிடப்படுவதை உறுதிப்படுத்துகின்றது.

ISO 14001 சான்றிதழை வழங்குவதில் இலங்கை தரப்படுத்தல் நிறுவகத்திற்கு WPO உதவுகின்றது. 2021 ஆம் ஆண்டில், நாட்டில் நிலவும் கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக இந்த நடவடிக்கையை மேற்கொள்ள முடியவில்லை.

15.3. சுற்றாடல் முகாமைத்துவம்

15.3.1 ஆரம்பச் சுற்றாடல் பரிசோதனை (ஆ.சு.ம.)

1993 ஆம் ஆண்டிலிருந்து, அனைத்து பாரிய அபிவிருத்தி கருத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றன.

சு.தா.ம./ஆ.சு.ம. அவசியமான 'குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்கள்' எனப்படும் கருத்திட்டங்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேற்பட்ட கைத்தொழில் பேட்டைகளை அபிவிருத்தி செய்தல் என்பன உள்ளடங்குகின்றன. சு.தா.ம. /ஆ.சு.ம. செயன்முறை, ஒரு பாரிய கருத்திட்டம் அபிவிருத்தியில் ஏற்படுத்தக்கூடிய அனைத்து தாக்கங்களையும் இனங்கண்டு, ஆரம்ப.

இது கருத்திட்டத்தின் திட்டமிடல் சுழற்சியின் ஆரம்பக் கட்டத்திலேயே கருத்திட்டத்தில் கூட்டிணைக்கப்பட வேண்டிய அத்தகைய நடவடிக்கைகளை கருத்திட்டத்தை முன்னெடுப்போர் திட்டமிடுவதை இலகுவாக்குகின்றது.

கருத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க சுற்றாடல் தாக்கங்களை குறைக்கும் நோக்குடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் PO க்கள் ஆ.சு.ம. களை மேற்கொள்கின்ற அதேவேளை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சு.தா.ம. அலகு சு.தா.ம.களை மேற்கொள்கின்றது.

ஆ.சு.ம. நடைமுறையின் கீழ் செயலாக்கப்படும் கருத்திட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு:

அட்டவணை 36 : சு.தா.ம. அலகின் சு.தா.ம./ஆ.சு.ம. ஒழுங்குவிதியின் கீழ் 2019-2021 வருட காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல்

மாகாணம்	மாவட்டம்	பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை			அங்கீகாரம் வழங்கப்பட்டவை			நிராகரிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை		
		2019	2020	2021	2019	2020	2021	2019	2020	2021
WPO	கொழும்பு	3	0	0	5	9	0	00	00	0
	கம்பஹா	3	0	0	00	0	0	00	00	0
	களுத்துறை	4	4	2	00	5	0	00	00	0
SuPO	காலி	11	2	8	9	0	2	00	00	0
	மாத்தறை	1	0	1	12	1	0	00	00	0
	அ'தோட்டை	4	3	0	2	5	7	00	00	0
CPO	கண்டி	71	72	67	72	16	37	00	00	0
	மாத்தளை	4	0	0	11	0	0	00	00	0
	நுவரேலியா	7	8	0	15	3	0	00	00	0
SaPO	கேகாலை	9	0	0	11	6	7	00	00	0
	இரத்தினபுரி	17	13	38	1	0	0	3	00	0
UPO	பதுளை	56	30	179	34	29	148	00	00	0
	மொனராகலை	9	0	1	6	3	2	00	00	0
EPO	திருகோணமலை	00	0	0	3	0	0	00	00	0
	அம்பாறை	00	0	0	00	0	0	00	00	0
	மட்டக்களப்பு	00	0	0	00	1	0	00	00	0
NCPO	அ'புரம்	2	2	3	2	4	2	00	00	0
	பொலநறுவை	7	0	2	5	0	1	00	00	0
NWPO	குருநாகல்	1	3	0	1	2	0	00	00	0
	புத்தளம்	00	0	0	5	1	0	00	00	0
NPO	யாழ்ப்பாணம்	15	3	0	10	2	0	00	00	0
	கிளிநொச்சி	00	0	0	00	0	0	00	00	0
	முல்லைத்தீவு	00	0	0	00	0	0	00	00	0
	மன்னார்	00	2	2	00	3	1	00	00	0
	வவுனியா	00	0	0	00	0	0	00	00	0
மொத்தம்		224	142	303	204	90	207	03	00	00

2021 ஆம் ஆண்டில், 303 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 207 விண்ணப்பங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.தரநியமங்களை பூர்த்தி செய்யாத காரணத்தினால் விண்ணப்பங்கள் எவையும் நிராகரிக்கடவில்லை.

15.3.2 குறித்துரைக்கப்படாத செயற்பாடுகளுக்கு சுற்றாடல் விதப்புரைகள் வழங்குதல்

தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்படாதமையினால் ஆ.சு.ம./சு.தா.ம. தேவைப்படாத கருத்திட்டங்களுக்காக மாகாண அலுவலகங்களினால் சுற்றாடல் அனுமதி வழங்கப்படுகின்றது. மேம்பாட்டாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பாதகமான சுற்றாடல் தாக்கங்களை குறைப்பதற்கான நிபந்தனைகளுடன் பல்வேறு குறித்துரைக்கப்படாத கருத்திட்டங்களுக்கு சுற்றாடல் அனுமதிகள் வழங்கப்படுகின்றன. இதற்கமைய, ஹோட்டல் கருத்திட்டங்கள், நில நிரப்பல்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், அகழ்வு நடவடிக்கைகள், காணிகளிலிருந்து தடுத்தல் போன்ற கருத்திட்டங்களுக்காக இவ்வாண்டில் 1,163 (முன்னைய வருட விண்ணப்பங்கள் உட்பட) கள அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

அபிவிருத்தியின் ஆரம்பத் திட்டமிடல் கட்டத்திலேயே, முன்னெடுப்பவர்களால் சாத்தியமான சுற்றாடல் தாக்கங்கள் நிவர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதற்கு இந்த செயன்முறை வசதி செய்யப்படலாம்.

அட்டவணை 37 : குறித்துரைக்கப்படாத செயற்பாடுகளின் மீதான 2021 ஆம் ஆண்டின் விதப்புரைகளின் உருக்களின் பட்டியல்

மாகாணம்	மாவட்டம்	பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	அங்கீகாரம் வழங்கப்பட்டவை	நிராகரிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை	இணக்கக் கண்காணிப்பு
WPO	கொழும்பு	71	58	0	0
	கம்பஹா	0	52	2	0
	களுத்துறை	42	34	0	0
SuPO	காலி	48	9	0	0
	மாத்தறை	1	15	0	0
	அ'தோட்டை	0	19	0	0
CPO	கண்டி	0	151	0	0
	மாத்தளை	120	49	0	0
	நுவரேலியா	0	11	0	0
SaPO	கேகாலை	0	78	0	0
	இரத்தினபுரி	0	63	0	0
UPO	பதுளை	3	2	0	0
	மொனராகலை	33	52	0	0

EPO	திருகோணமலை	0	75	0	0
	அம்பாறை	0	123	0	0
	மட்டக்களப்பு	0	48	0	0
NCPO	அ'புரம்	38	12	0	0
	பொலநறுவை	0	1	3	0
NPO	யாழ்ப்பாணம்	0	21	0	0
	கிளிநொச்சி	103	73	0	0
	முல்லைத்தீவு	59	120	0	0
	மன்னார்	6	10	0	0
	வவுனியா	0	3	0	0
	குருநாகல்	73	43	5	0
NWPO	புத்தளம்	5	41	0	0
மொத்தம்		602	1163	10	0

மேலே உள்ள அட்டவணை 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அத்தகைய விதப்புரைகளின் விவரங்களைக் குறிக்கின்றது

அத்தியாயம் 16 : பிராந்தியத் தொழிற்பாட்டுப் பிரிவு

2018 டிசம்பரில் தாபிக்கப்பட்ட பிராந்திய தொழிற்பாட்டுப் பிரிவின் (RO பிரிவு) இலக்கு, "மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண/ மாவட்ட அலுவலகங்களின் வலையமைப்பினால் வழங்கப்படும் சேவைகளின் உயர்ந்த விநியோகத்தை உறுதிப்படுத்துவதாகும்". முறையான அணுகுமுறை, விரிவுபடுத்தப்பட்ட ஒருங்கிணைப்பு மற்றும் தேவையான ஆதரவு சேவைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் பயனுறுதி வாய்ந்த மற்றும் வினைத்திறன்மிக்க தொழிற்பாட்டுப் பொறிமுறையை அமைப்பதன் மூலம் பிராந்திய அலுவலகங்களின் ஒட்டுமொத்த செயலாற்றுகையை மேம்படுத்துவதே இதன் குறிக்கோளாகும்.

பிராந்திய தொழிற்பாட்டுப் பிரிவுக்கு வழங்கப்பட்ட இரண்டு பிரதான பொறுப்புகளாவன அ) மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உரிய பிரிவுகள் மற்றும் அலகுகளின் ஒருங்கிணைப்புடன் முறையான விதத்தில் அனைத்து மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஆ) தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளை மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிராந்திய வலையமைப்பின் பயனுறுதி வாய்ந்த மற்றும் வினைத்திறன்மிக்க செயலாற்றுகையினைப் பேணுதல்.

இதற்கு மேலதிகமாக, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தகவல் தொழில்நுட்ப அலகின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் முகாமைத்துவம் அத்துடன் சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் பிராந்திய அலுவலகங்களுடனான அல்லது அவற்றின் கருத்திட்டங்கள் தொடர்பான செயற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டல்கள், பணிப்புரைகள் மற்றும் உதவிகளை வழங்குதல் ஆகியவை 2020 ஆம் ஆண்டில் பிராந்திய தொழிற்பாட்டுப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டன.

ஆயினும், கொவிட்-19 பூகோளப் பெருந்தொற்றுப்பரவலைத் தடுப்பதற்கு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நாடளாவிய ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துதல், தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களை மூடுதல்/ தனிமைப் படுத்தல், அலுவலகங்களை இடையிடையே மூடுதல் மற்றும் அலுவலக நேரங்களைக் குறைத்தல். போன்ற முகாமைத்துவ நடவடிக்கைகளின் விளைவாக, 2020 ஆம் ஆண்டைப் போன்றே, RO பிரிவின் 2021 செயற்றிட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட சில நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்பாடுகளும் பெரிதும் பாதிக்கப்பட்டன. பிராந்திய அலுவலகங்களுக்கு பொதுவான பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதில் கவனம் செலுத்துவதைத் தவிர, 2021 ஆம் ஆண்டில் RO பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்ட இரண்டு பிரதான பொறுப்புகளின் கீழ் பின்வரும் விசேட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

A. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உரிய பிரிவுகள் மற்றும் அலகுகளின் ஒருங்கிணைப்புடன் முறையான விதத்தில் அனைத்து மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல்.

I. மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களின் (பிராந்திய அலுவலகங்கள்) முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் அவசியமான சந்தர்ப்பங்களில் திருத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2021 ஆம் ஆண்டில் தவிசாளர் அல்லது/ மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையின் கீழ் பிராந்திய அலுவலகங்களுடன் (ROs) 7 இணையவழி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை RO பிரிவு நடாத்தியது. அ) மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிராந்திய அமைப்புக்கும் தலைமை அலுவலகத்திற்கும் இடையில் ஒரு நெருக்கமான இடைமுகத்தை உருவாக்குதல் மற்றும் ஆ) முகாமைத்துவத்தின் தீவிரமான தலையீடு மற்றும் தீர்வுக்காக அவற்றைக் கொண்டுவரும் நோக்கில் தொழில்நுட்பம், நிர்வாகம் மற்றும் விநியோக அம்சங்கள் தொடர்பான பிரச்சினைகளை அடையாளம் காணுதல் மற்றும் இ) பிராந்திய அலுவலகங்களின் மேம்பட்ட வினைத்திறன் மற்றும் பயனுறுதிக்காக RO பிரிவின் வகிபங்கினையும் பொறுப்புக்களையும் தெரியப்படுத்துதல் ஆகியவற்றின் பொருட்டு இக்கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் திட்டமிட்டபடி, பிராந்திய அலுவலகங்களில் முன்னேற்ற மீளாய்வுக்

கூட்டங்களை நடத்துவது சாத்தியமில்லை என்பதால், மேலுள்ள குறிக்கோள்களை அடைவதற்கான சிறந்த மாற்றீடாகக் கருதப்பட்டதால், முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்ய இணையவழியிலான மெய்நிகர் கூட்டங்களை நடத்துவதற்குப் பின்னர் தீர்மானிக்கப்பட்டது.

அட்டவணை 38 : 2021 இல் நடத்தப்பட்ட கூட்டங்கள்

	கூட்டத்தின் தலைப்பு	**இணையவழிக் கூட்டத் திகதி**
1	பிராந்தியப் பணிப்பாளர்களுடனான கூட்டம்	13.01.2021
2	பிராந்திய அலுவலகங்கள் பற்றிய முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்	01.07.2021
3	பிராந்திய அலுவலகங்கள் பற்றிய முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்	06.10.2021
4	முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் - பிராந்திய அலுவலகங்கள்	13.10.2021
5	தலைவரால் நடத்தப்படும் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்ட அலுவலகங்களுடனான (மேல் மாகாணம்) விசேட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்	10.11.2021
6	தலைவரால் நடத்தப்படும் அனுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்ட அலுவலகங்களுடனான (வட மத்திய மாகாணம்) விசேட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்	11.11.2021
7	தலைவரால் நடத்தப்படும் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட அலுவலகங்களுடனான (கிழக்கு மாகாணம்) விசேட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்	10.12.2021

சுற்றாடல் பாதுகாப்பு உரிமமளித்தல் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல், சுற்றாடல் விதப்புரைகளை வழங்குதல் (ER), பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கையாளுதல், ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை (ஆ.சு.ம.) முன்மொழிவுகள், சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் (EPP), விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் சுற்றாடல் கல்வி, , நூலக வசதிகள் மூலம் சுற்றாடல் தகவல்களைப் பரப்புதல், பங்கீடுபாட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஆய்வுகூட சேவைகள் போன்ற விடயங்களின் செயலாற்றுகை இக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டது. பங்கீடுபாட்டாளர்களுக்கு ஒரு சிறந்த சேவையை வழங்குவதை உறுதி செய்வதற்காக, செயலாற்றுகையை மேம்படுத்துதல், சிக்கல்களை சரிசெய்தல் மற்றும் எதிர்கொள்ளும் மட்டுப்பாடுகள் மற்றும் தடைகளைத் தீர்த்தல் ஆகியவற்றிற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பிராந்திய அலுவலகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, சுற்றாடல் முகாமைத்துவம், மாகாணங்கள்/ மாவட்டங்களில் கண்காணிப்பு மற்றும் அமுலாக்கம் அத்துடன் பொது முகாமைத்துவம் மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள் தொடர்பான விடயங்கள் ஆகியவற்றைக் குறித்தும் கலந்துரையாடப்பட்டு தீர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

II. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உரிய பிரிவுகள்/அலகுகளின் தலைவர்களுடன் இணைந்து மாகாண, மாவட்ட பணியாட்டொகுதியினருக்கு சுற்றாடல் பிரச்சினைகள் மீதுஅவசியமான தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குதல். நீண்டகால சுற்றாடல் பிரச்சினைகள், குறிப்பாக தவிசாளர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தினால் காலத்துக்குக்காலம் ஆற்றுப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பில், உரிய பிரிவுகள் / அலகுகளின் தலைவர்களுடன் இணைந்து அவசியமான தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குவதிலும் RO பிரிவு ஈடுபட்டது. அவசியமான இடங்களில் வீடியோ மூலமான மாநாடுகளும் நடத்தப்பட்டன. கவனம் செலுத்தப்பட்ட இத்தகைய பிரச்சினைகளுக்கான சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. திக்வெல்லவிலுள்ள குமாரசிங்க உலோகக் குவாரிப் பிரச்சினை
2. கொடகாவெலவில் டொலமைற்று அகழ்வு
3. மீரிகமவில் உலோக்க குவாரி (Orumix Asphalt பிரைவேட் லிமிடட்)

B. தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளை மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிராந்திய வலையமைப்பின் பயனுறுதி வாய்ந்த மற்றும் வினைத்திறன்மிக்க செயலாற்றுகையினைப் பேணுதல்.

I. முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் மாகாண/மாவட்ட அலுவலகங்களின் பிரச்சினைகளைச் சரிசெய்தல்

2.2.1 மத்திய சுற்றாடல் .அதிகாரசபையின் உரிய பிரதிப் பணிப்பாளர்கள் நாயகம் மற்றும் பணிப்பாளர்களின் தொழில்நுட்ப உதவியுடன், பிராந்திய மட்டத்தில் அவசரகால பதிற்செயற்பாட்டு முறைமையொன்றை தாபிப்பதற்கு அவசியமான வழிகாட்டல்கள் விருத்தி செய்யப்பட்டதுடன், ஒவ்வொரு பிராந்திய அலுவலகத்திலும் தனிப்பட்ட அவசரகால பதிற்செயற்பாட்டுத் திட்டத்தை (ERP) விருத்தி செய்யுமாறு கோரி அனைத்து பிராந்திய அலுவலகங்களுக்கும் இறுதி வழிகாட்டல் விநியோகிக்கப்பட்டது.

அனைத்து ROக்களுடனும் 20.07.2021 மற்றும் 05.08.2021 ஆகிய திகதிகளில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு, விநியோகிக்கப்பட்ட வழிகாட்டியின் அடிப்படையில் ERP தயாரிப்பு மீதான அவசியமான விரிவான தகவல்கள் வழங்கப்பட்டன. அனைத்து பிராந்திய அலுவலகங்களிலும் ஒரு சீரான முறைமையை நிறுவும் நோக்குடன் பிராந்திய அலுவலகங்களில் இருந்து திருத்தப்பட்ட அவசரகால பதிற்செயற்பாட்டுத் திட்டங்கள் பெறப்பட்டன.
மேலும், 10.09.2021 ஆம் திகதி பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாகாண/ மாவட்ட அலுவலகங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இணைவழியிலான தளத்தின் ஊடாக இரண்டு ஊடாடும் விரிவுரைகள் நடாத்தப்பட்டன.
1. கம்பஹா மாவட்டத்தில் அவசரகால பதிற்செயற்பாட்டுக் குழுக்களை நடைமுறைப்படுத்தலின் அனுபவப்பகிர்வு.
2. கொழும்பு, மேற்கு கடற்கரைக்கு அண்மையில் கரை கடந்த 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல் விபத்து சம்பவத்தைக் கையாண்டமை பற்றிய அனுபவப்பகிர்வு.
இதற்கு மேலதிகமாக, RO பிரிவின் அழைப்பின் பேரில், தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் திரு. பிரதீப் கொடிப்பிலி அவர்களால் 06.10.2021 ஆம் திகதி, MS Teams ஊடாக "இலங்கையில் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அவசரகால பதிற்செயற்பாட்டுக் கட்டமைப்பு" என்னும் வெபினார் நடாத்தப்பட்டது.

II. மாகாண/மாவட்ட அலுவலகங்களின் செயலாற்றுகையை விரிவுபடுத்துவதற்கு பயிற்சிகள்/ செயலமர்வுகள் போன்றவற்றை இனங்கண்டு அவற்றை நடாத்துதல். மாகாண/மாவட்ட அலுவலகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான சு.தா.ம. செயலமர்வு.

ஆ.சு.ம./ சு.தா.ம. நடைமுறைகளை அமுல்படுத்தும் செயன்முறையின் போது பிராந்திய அலுவலகங்கள் எதிர்நோக்கும் நடைமுறைச் சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்கான இணையவழி செயலமர்வு முறையே 29.10.2021 மற்றும் 28.12.2021 ஆகிய திகதிகளில் இரண்டு அமர்வுகளாக நடாத்தப்பட்டது. சு.தா.ம. அலகுடன் இணைந்து நடத்தப்பட்ட செயலமர்வுகளின் போது மத்திய, வடமேல், ஊவா, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களினால் பகிரப்படும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. செயலமர்வில் அனைத்து பிராந்திய அலுவலகங்களும் பங்குபற்றின. இப்போது பிராந்திய மட்டத்தில் தீர்மானிக்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் பொதுவான அளவுகோல்களின் தொகுதியொன்றை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது.

III. 2021 இல் கொவிட்-19 ஊரடங்கு மற்றும் பயணக் கட்டுப்பாடுக் காலப்பகுதியின் போதான செயற்பாடுகள்

சனாதிபதி செயலகம், பொது நிர்வாக அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம், பங்கீடுபாட்டாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு துரித சேவைகளை வழங்குவதற்கு இலகுவாக கிடைக்கக்கூடிய டிஜிட்டல் தளங்கள், இணையவழி முறைமைகள் மற்றும் ஏனைய பொருத்தமான டிஜிட்டல் வசதிகளைப் பயன்படுத்துமாறு அனைத்து அரசாங்க நிறுவனங்களும் அறிவுறுத்தப்பட்டன.

இதற்கமைய மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உரிய பிரிவுகள் மற்றும் அலகுகளின் உதவியுடன் பின்வரும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. இ-வசதிகள் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிராந்திய அமைப்புக்கும் தலைமை அலுவலகத்தின் முகாமைத்துவத்திற்கும் இடையில் வினைத்திறன்மிக்க தொடர்பாடல் மற்றும் ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்தல்.
2. அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அவசியமான வழிகாட்டல்கள் மற்றும் அறிவுறுத்தல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக பிராந்திய அலுவலகங்களின் கடமைக்கு அறிக்கையிடும் பணிச்சுழற்சி அட்டவணைகளை விதப்புரை செய்வதில் ஈடுபடல் மற்றும் மேல்மட்ட முகாமைத்துவத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்புதல்பின்வருவனவற்றுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல்
3. பிராந்திய அலுவலகங்களினால் பொதுமக்களுக்கும் ஏனைய பங்கீடுபாட்டாளர்களுக்கும் சேவைகளை வழங்கும்போது எழும் நிருவாக, முகாமைத்துவ மற்றும் விநியோகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துதல்.

C. RO பிரிவு கவனம் செலுத்திய நானாவித விடயங்கள்

I. சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித் திட்டத்திற்கான பங்களிப்பு

a. 'பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கான வழிகாட்டல்கள்' மீதான கையேடு தயாரிப்பு - சுரக்கிமு கங்கா செயலகம்

சுற்றாடல் அமைச்சின் சுரக்கிமு கங்கா செயலகம் மற்றும் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட 'பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கான வழிகாட்டல்கள்' பற்றிய கையேட்டைத் தயாரிப்பதில் தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்குவதில் பிராந்தியத் தொழிற்பாட்டுப் பிரிவு கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளது. சிங்கள மற்றும் தமிழ் ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்ட இந்தக் கையேட்டில், SGP இன் கீழ் நிதி உதவிக்காக கருத்திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் நியம நடைமுறைகள் ஆகியவை உள்ளன.

b. கதிர்காமத்தில் சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் தேசிய ஆரம்ப வைபவம்

அதிமேதகு சனாதிபதி அவர்கள் முன்னிலையில் 2021.03.22 ஆம் திகதி கதிர்காமத்தில் நடைபெற்ற சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் தேசிய ஆரம்ப வைபவத்தை ஏற்பாடு செய்ததில் பிரதான அமைப்பாளர்களில் ஒருவராக பிரதிப் பணிப்பாளர் நாயகம் (RO) பங்களிப்பு வழங்கினார். இந்த வைபவத்தை ஏற்பாடு செய்வதில் RO பிரிவின் ஊழியர்களும் பங்குபற்றினர்

c. சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் மாகாண ஆரம்ப வைபவங்கள்

கதிர்காமத்தில் இடம்பெற்ற தேசிய ஆரம்ப வைபவத்திற்கு இணையாக 2021.03.22 ஆம் திகதி ஏனைய மாகாணங்களில் எட்டு மாகாணங்களின் ஆரம்ப வைபவங்கள் இடம்பெற்றன. இந்த விழாக்கள் RO பிரிவின் ஒருங்கிணைப்பின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டன.

d. சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்ட மதிப்பீட்டுக் குழு

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் ஊடாக மாகாண ஒருங்கிணைப்புக் குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி உதவி வழங்குவதற்காக அத்தகைய முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து சுற்றாடல் அமைச்சுக்கு விதப்புரை செய்வதற்காக சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினராக பி.ப.நா. (RO) நியமிக்கப்பட்டார். 2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற 10 கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுக்களில் அவர் பங்குபற்றியுள்ளார்.

e. சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் போத்தலில் அடைக்கப்படும் நீர் மற்றும் பானக் கைத்தொழில்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு.

உற்பத்தி செயன்முறையின் போது கணிசமான அளவு நீரைப் பயன்படுத்துகின்ற, போத்தலில் அடைக்கப்படும் நீர் மற்றும் பானக் கைத்தொழில்கள் போன்ற கைத்தொழில்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று15.03.2021 ஆம் திகதி

நடாத்தப்பட்டது. சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், அதனை நடைமுறைப்படுத்துவதில் அவர்களின் ஒத்துழைப்பைப் பயன்படுத்துவதற்காகவும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைமையகத்தில் இந்த கைத்தொழிலாளர்களுக்கு செயலமர்வு நடாத்தப்பட்டது.

f. பிராந்திய அலுவலகங்களுடனான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களும் ஏனைய கூட்டங்களும்

சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பிராந்திய அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் ஏனைய அலகுகளுடன் 45 இணையவழிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பிராந்திய அலுவலகங்களுடனான இணையவழி கூட்டங்கள், சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை அடைவதில் பிராந்திய அலுவலகங்களை வழிநடத்துவதற்காக பிரதானமாக நடத்தப்பட்டன. 2021, ஆகஸ்ட் 20, 23, 24, 25, 26, 28 மற்றும் 31 ஆகிய திகதிகளில் அனைத்து பிராந்திய அலுவலகங்களையும் உள்ளடக்கி நடத்தப்பட்ட 07 இணையவழிக் கூட்டங்கள், நிதி ஒதுக்கீடுகளைப் பரிசீலனை செய்வதற்காக கருத்திட்ட முன்மொழிவுகளின் தொடர்பு மற்றும் பொருத்தம் அத்துடன் கருத்திட்டக் குறிக்கோள்களுக்கு அமைவாக கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்காக அவசியமான அறிவுறுத்தல்கள் வழங்குதல் ஆகியவை பற்றி விரிவாகக் கலந்துரையாடுவதற்காக ஒதுக்கப்பட்டன. சுற்றாடல் உத்தியோகத்தர் மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் உள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் கூட்டத் தொடரின்போது கலந்துரையாடப்பட்டனர்.



உரு 46: சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம் மேல் மாகாணம்



உரு 47 : சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம் மத்திய மாகாணம்



உரு 48: சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம் தென் மாகாணம்



உரு 49: சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம் சபரகமுவ மாகாணம்



உரு 50: சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம் வடமேல் மாகாணம்



உரு 51: சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம் வட மத்திய மாகாணம்



உரு 52: சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம் கிழக்கு மாகாணம்



உரு 53 : சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவம், வட மாகாணம்

3. 2 இலங்கையில் பாலுற்பத்தித் துறையின் அபிவிருத்தி

பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான சனாதிபதி செயலணி, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஒவ்வொன்றும் 1,000 முதல் 1,500 கால்நடைகளைக் கொண்ட 10 முதல் 15 பாரியளவிலான பாற்பண்ணைகளை பொருத்தமான இடங்களில் அமைப்பதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த முன்னெடுப்புடன், உலர் வலயத்தில் பாரியளவிலான சோள/தீவனப் பண்ணைகளை, out-grower முறைமையின் ஊடாக, தாபிப்பதன் மூலம் கால்நடைத் தீவனத் தேவைப்பாட்டின் போதியளவிலான உற்பத்தி மற்றும் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

சனாதிபதி செயலணியின் பணிப்புரைகளுக்கமைய, பாற்பண்ணை அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்காக மதிப்பீடு மேற்கொண்டு விதப்புரைகளை வழங்குவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை (TEC) முதலீட்டுச் சபையின் முகாமைத்துவம் நியமித்தது. பிராந்திய தொழிற்பாட்டுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினராக சேவையாற்றுவதுடன் காணி ஒதுக்கீட்டை இறுதி செய்யும் செயன்முறையில், முன்மொழியப்பட்ட காணிகள் சிலவற்றுக்கு,00000 காணிகளைக் கொண்டுள்ள நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டு விஜயங்களில் பங்குபற்றினார்.

மொத்தமாக, 8 பாற்பண்ணை அபிவிருத்திக் கருத்திட்டங்களும், 8 தீவனப் பயிர்ச்செய்கைக் கருத்திட்டங்களும் காணிகளைக் கொண்டுள்ள நிறுவனங்களுக்கான மேலதிக பரிசீலனைக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விதந்துரைக்கப்பட்டன.

.



உரு 54 : லுணுகம்வெஹரவில் பால் பண்ணைக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள காணிக்கு TEC இன் பரிசோதனை விஜயம் 13.03.2021



உரு 55 : நிக்கவரட்டிய, தெலஹரவில் பால் பண்ணைக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள காணிக்கு TEC இன் பரிசோதனை விஜயம் 23.03.2021

3.3 மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் இணைந்த சுற்றாடல் உத்தியோகத்தர்களுக்கான, 2021 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் மீதான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 2021.01.15 ஆம் திகதி பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியினால் நடாத்தப்பட்டது. RO தொழிற்பாட்டுப் பிரிவு இந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஒருங்கிணைப்புச் செய்ததுடன் முன்னேற்றமும் அறிக்கையிடப்பட்டது.

3.4 சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவினால் பேணப்படும், சுற்றாடல் விடயங்களில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் (NGO) பட்டியலை இற்றைப்படுத்துவதற்கு பிராந்திய அலுவலகங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டது.

முன்னர் பட்டியலில் சேர்க்கப்படாத அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

3.5 கீழ் மட்டத்தில் சுற்றாடல் அமைப்பு / குழுக் கட்டமைப்பை தாபிப்பதன் அவசியம் அதிமேதகு சனாதிபதியால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சுற்றாடல் அமைப்பு / குழு கட்டமைப்பை தாபிப்பதற்கான நடைமுறைகளைத் தயாரிப்பதில் பி.ப.நா. (RO) பங்களிப்பு வழங்கி வழிநடத்திய அதேவேளை RO பிரிவு நடைமுறைகள் தயாரிப்பை ஒருங்கிணைத்தது.

3.6 தலைவரின் அறிவுறுத்தலின்படி, 2021.07.05 ஆம் திகதி சிறப்பு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டது. பிராந்திய விடயங்கள்/பிரச்சினைகளைக் கலந்துரையாடி தீர்வுகளைப் பெறுவதற்கு உயர் முகாமைத்துவத்திற்கு கணிசமான நேரத்தை ஒதுக்குவதே கூட்டத்தின் குறிக்கோளாகும்.

3.7 நகர அபிவிருத்தி அதிகாரசபையில் தாபிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் ஒருவராக பி.ப.நா. (RO) சேவையாற்றினார்.

அத்தியாயம் 17: மாகாண அலுவலகங்களிலிருந்தான வெற்றிக் கதைகள்

A. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் சம்பவம்

சிங்கப்பூருக்கு சொந்தமான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் ஐரோப்பாவிலிருந்து தனது பயணத்தைத் தொடங்கி 20/05/2021 ஆம் திகதியளவில் கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் வந்து சேர்ந்தது, மேலும் கப்பலை ஆழ்கடலுக்கு எடுத்துச் செல்வதற்கான அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்றதால், அது தீப்பிடித்து எரிந்தது. இதேவேளை, பிளாஸ்டிக் கழிவுகள் உஸ்வகெட்டியாவ கடற்கரையில் வந்தடைந்ததுடன், அந்த நேரத்தில் புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் ஏற்பட்ட கொவிட் அலை காரணமாக நாடு முடக்கப்பட்டிருந்ததால், கம்பஹா மாவட்ட அலுவலகம் பாதுகாப்பு துறைகளின் ஒப்புதலுடன் இந்த நிலைமையை கண்காணிக்க நடவடிக்கை மேற்கொண்டது. அந்த நோக்கத்திற்காக உஸ்வகெட்டியாவ கடற்கரையில் இருந்து கொச்சிக்கடை கடற்கரை வரை இரண்டு குழுக்களாக உத்தியோகத்தர்கள் களப்பணியை ஆரம்பித்தனர். தீ விபத்தின் விளைவாக ஏற்பட்ட கரும் புகை நீர்கொழும்பு கடற்கரையில் இருந்து நாட்டிற்குள் நுழைந்து வடமேற்குப் பிரதேசத்திற்குள் செல்வதால், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வளித் தர அலகின் உத்தியோகத்தர்கள் பொருத்தமான இடங்களில் காற்றின் தரத்தை அளவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மேல் மாகாணம், தென் மாகாணம் மற்றும் வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் பிளாஸ்டிக்கை அகற்றுவதற்கு களஞ்சியசாலை வளாகமொன்றைத் தெரிவு செய்வதற்கான களப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் கம்பஹா மாவட்ட அலுவலகத்தின் இரண்டு குழுக்கள் தொடர்ச்சியாக அவதானிப்புக்களை முன்னெடுத்தன. நீர்கொழும்பு/வத்தளை பிரதேச செயலகப் பிரதேசத்தில் அமைந்துள்ள சரக்குவ கரையோரப் பகுதியில் இலங்கை கடற்படையின் உதவியுடன் ஏறத்தாழ 500 தொன் எடையுள்ள சிறு பிளாஸ்டிக் உருளைக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு களஞ்சியப்படுத்தும் இடங்களுக்கு அனுப்பப்பட்டதுடன், அண்ணளவாக 1000 கடல் மீன்கள், 70 ஆமைகள் மற்றும் 6 டால்பின்கள் என்பன பாதிக்கப்பட்டதாகவும் அறிக்கையிடப்பட்டது. கப்பலின் எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்ட எண்ணெய் கடல் நீரை மாசுபடுத்துவதற்கும் காரணமாக அமைந்தது. உயிர்ப்பல்வகைமைக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பாக சட்ட மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளுடன் கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையினால் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

கம்பஹா மாவட்டத்தில் இடம்பெற்ற அடுத்த அவசர சம்பவம் 03.02.2021 ஆம் திகதி கட்டான பிரதேச செயலகத்திற்குட்பட்ட அதிகாரப் பிரதேசத்தைச் சேர்ந்த மாநகரசபையிலுள்ள கட்டுநாயக்க ஏற்றுமதி பதனிடும் வலயத்திற்குள் காணப்படும் இன்ஸீ எக்கோ சைக்கிள் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தில் பதிவாகியது. சியாம் சிட்டி சீமெந்து லங்கா லிமிட்டெட் நிறுவனத்தில் அமைந்துள்ள எரியூட்டிக்கு கொண்டு செல்லப்படவிருந்த, அபாயகரமான கழிவு பதனிடும் நிலையத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த நச்சு இரசாயனங்கள் அன்றைய தினம் காலையில் தீப்பற்றின. தீயை அணைக்கப் பயன்படுத்தப்பட்ட நீர் கைத்தொழில் வளாகத்திலேயே இருந்ததால், அசுத்தமான நீர் தரையில் கசிவதைத் தடுப்பதற்காக, சுற்றாடலுக்கு உகந்த முறையில் அதனை அகற்றுமாறு நிறுவனத்திற்கு 03/02/2021 ஆம் திகதி எழுத்துப்பூர்வமாக அறிவுறுத்தப்பட்டது.

பியகம பிரதேச செயலகப் பகுதியில் உள்ள தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைக்கு சொந்தமான பட்டிவில நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 05/06/2021 ஆம் திகதி பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், மாசுபட்ட எண்ணெயினால் கலந்த அசுத்தமான நீர் சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் இருந்து பாய்வதாக தெரிவிக்கப்பட்டது. தொடர்ச்சியான மழைவீழ்ச்சியின் காரணமாக, சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் உயர்த்தப்பட்ட கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள API பிரிப்பாக்கி மற்றும் அருகிலுள்ள தற்காலிக கொள்கலன் தாங்கிகளிலுள்ள

சேற்று எண்ணெயுடன் பட்டிவில நீர்ப்பம்பி நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள பொறிகளில் எண்ணெய் கலப்பதைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
எனவே, கரையோரக் காண்காணிப்புப் படை வரவழைக்கப்பட்டு, அவர்களின் மிகுந்த ஆதரவு மற்றும் கடின உழைப்புடன், கழிவுநீர் ஆற்றில் கலப்பதைத் தடுக்க மணல் மூட்டைகள் பயன்படுத்தப்பட்டதுடன் மேலும் கழிவுகளை சேகரிக்கவும், சுற்றாடலுக்கு உகந்த முறையில் அவற்றை வெளியேற்றவும் பவுசர்கள் பயன்படுத்தப்பட்டன. இந்நோக்கத்திற்காக 2021, ஜூன் 05, 07, 09 மற்றும் 11 ஆம் திகதிகளில் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பகுதியளவு சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை ரக்கஹவத்த கால்வாய் ஊடாக களனி கங்கைக்கு திருப்பி விடுவது தொடர்பில் பியகம பிரதேச சபையின் தவிசாளரினால் ஆரம்பிக்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், 02.08.2021 அன்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. கழிவு நீர் இரசாயனரீதியாக சுத்திகரிக்கப்பட்டு உயிரியல் சுத்திகரிப்புக்காக பணிக்கப்பட்ட போதும், வெளியேற்றப்பட்ட கழிவுநீரின் அதிக வெப்பநிலை காரணமாக உயிரியல் சுத்திகரிப்பு பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவந்தது. கழிவு நீர் சுத்திகரிப்பு தொகுதியின் பராமரிப்பு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 1990 களின் தசாப்தத்தை விட பியகம ஏற்றுமதி பதனிடும் வலயத்தின் கைத்தொழில் கொள்ளளவு அதிகரித்ததன் காரணமாக தற்போதுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளளவு இந்த நோக்கத்திற்காக போதுமானதாக இல்லை என அறிக்கையிடப்பட்டது. இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலீட்டுச் சபைக்கு அறிவிக்கப்பட வேண்டும் என சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகிற்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டது.

2021 ஒக்டோபர் 22 ஆம் திகதி அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரதேசத்தின் மீவிதிகம்மானவில் உள்ள தம்ரோ தளபாட உற்பத்திக் கைத்தொழிற்சாலையில் களஞ்சியசாலையில் தற்செயலாக ஏற்பட்ட தீவிபத்து காரணமாக தொழிற்சாலையின் அனைத்துக் கட்டிடங்களும் எரிந்து சாம்பலாயின.

B. உலக நீர் தின நிகழ்ச்சித்திட்டம்

லுணுகம்வெஹர நீர்த்தேக்கத்தில் நீர்வடிந்தோடும் சரிவுப் பகுதிப் பேணுகை நிகழ்ச்சித்திட்டம்
நீர்வடிந்தோடும் சரிவுப் பகுதிப் பேணுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கிரிந்தி ஓயா தேசிய நீர் வழங்கல் கருத்திட்டம் லுணுகம்வெஹெர நீர்த்தேக்கத்தின் நீரேந்து பிரதேசங்களில் மருது, இலுப்பை மற்றும் தான்றி மரக்கன்றுகள் உட்பட 200 மரக்கன்றுகளை நட்டதோடு, உலக நீர் தினத்தைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. (இணைப்பு-6)

C. ககிரி ஒபாதா வித்தியாலயம், வலஸ்முல்ல. உலக நீர் தினத்தை முன்னிட்டு இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. உலக நீர் தினம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பதக்கங்கள் வழங்குதல் மற்றும் மரங்களை நடுதல் ஆகியவை வலஸ்முல்ல, ககிரி ஒபாதா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டன.

D. தடைசெய்யப்பட்ட பொலித்தினைக் கைப்பற்றுவதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டம்

2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி வெலிகம, கொக்மடுவ விசேட அதிரடிப்படையினர், மாத்தறை மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாத்தறை மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோரால் அக்குரஸ்ஸ பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்போது 486 கிலோகிராம் தடைசெய்யப்பட்ட உணவுப் பொதிகள் கண்டறியப்பட்டுள்ளது.



E. சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான "கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் ஆறு மற்றும் சூழற்றொகுதியைப் பாதுகாத்தல்" கருத்திட்டம்

சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட "கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் ஆறு மற்றும் சூழற்றொகுதியைப் பாதுகாத்தல்" கருத்திட்டத்திற்கான அங்குரார்ப்பண நிகழ்வு 04.11.2021 ஆம் திகதி மு.ப. 9.30 மணியளவில் அக்கராயன் ஆற்றுப் படுக்கையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.





F. மர நடுகை நிகழ்ச்சித்திட்டம்

பேராறு ஆற்றின் சூழற்றொகுதிக்கு அருகாமையில் மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டுள்ளது. மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்ப்பலகை பேராறு ஆற்றிற்கு அருகில் உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்டது.

வவுனியா மாவட்டச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளர், கமநலத் திணைக்களம், WRDS, RDS, விவசாய அமைப்புக்கள், தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்ற சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டாளர்கள் பங்குபற்றினர். மருது, இலுப்பை மற்றும் கொன்றை மரங்கள் போன்ற ஏறத்தாழ 300 மரக்கன்றுகள் ஆற்றங்கரையோரத்தில் நடப்பட்டன.





G. மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தில் உலக ஈரநில தினம் – 2021

2021 பெப்ரவரி 2 ஆம் திகதி உலக ஈரநில தினத்தை முன்னிட்டு, 2021 பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி வெல்லாவெளி, தும்பங்கேணியில் மாவட்ட வேலைத்திட்டம் இடம்பெற்றதுடன், தும்பங்கேணி குள நீரேந்து பிரதேசத்தில் மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.



மேலும், இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக தும்பங்கேணி வெல்லாவெளியிலுள்ள, Bt/PD/ தும்பங்கேணி கண்ணகி வித்தியாலயத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்நிகழ்வில் வெல்லாவெளி மாவட்ட செயலகத்தின் பிரதேச செயலாளர், பட்டிருப்பு வலயப் பணிப்பாளர், மட்டக்களப்பு வனசீவராசிகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாவட்ட அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர், பாடசாலை அதிபர், சுற்றாடல் முன்னோடிக் குழுக்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்நாட்டு கடற்றொழிலாளர் உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

H. பொலித்தீன் சோதனைகள்-2021

2021 இல் முல்லைத்தீவு மாவட்டத்தில் மொத்தமாக ஆறு பொலித்தீன் சோதனைகள் நடத்தப்பட்டன .

I. ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டத்திலிருந்து நிதிகளைப் பெற்றுக்கொள்ளல்

கொவிட்டிற்குப் பிந்தைய நிலையுடன் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கு தொழிலதிபர்களை வழிநடத்துதல் மற்றும் இலக்கு வைக்கப்படும் பெறுமதிச்சங்கிலிகள் மற்றும் வணிகங்கள் தொடர்பாக நெருக்கடிக்கு அப்பால் பேணக்கூடிய நடவடிக்கைகள் மற்றும் சேவைகளை மேற்கொள்ளல் ஆகியவற்றுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பின்தங்கிய செயற்பாடுகளை மீளக் கட்டியெழுப்புவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தினால் நிதியளிக்கப்பட்ட ஒருங்கிணைந்த பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் ரூபா 630,000.00 நிதியத்தை மொனராகலை மாவட்ட அலுவலகம் வென்றெடுக்க முடிந்தது.

II. மாரகல EPA இல் ஆராய்ச்சிக் கற்கைகள்

மாரகல EPA இல் சுற்றாடல் மதிப்பீட்டிற்கான பல்வகைமை மற்றும் சூழற்றொகுதிச் சேவைகளின் குறிகாட்டிகளை விருத்தி செய்வதற்கான ஆராய்ச்சிக் கற்கையொன்றினை மொனராகலை மாவட்ட அலுவலகம் வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளது. தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசமொன்றிற்காக மேற்கொள்ளப்பட்ட இவ்வகையான கற்கைகளில் இது முதலாவதாகும். இந்த ஆய்வு R & D அலகின் பங்குபற்றலுடன் நடத்தப்படுகின்றது.

III. மாரகல EPA இல் சட்டவிரோத மனிதச் செயற்பாடுகள் மீது மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

காடுகளை அழித்தல் மற்றும் சட்டவிரோத பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் போன்ற முறையற்ற மனித செயற்பாடுகள் காரணமாக மாரகல EPA தற்போது பல்வேறு அச்சுறுத்தல்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொண்டுள்ள நிலையில், மொனராகலை பொலிஸ் நிலையத்துடன் இணைந்து மொனராகலை மாவட்ட அலுவலகம் பல்வேறு திடீர் சோதனைகளை நடாத்தியது. கண்டறிதல்களின் அடிப்படையில் மொனராகலை நீதவான் நீதிமன்றில் மூன்று அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் சட்டவிரோத பயிர்ச்செய்கைகள் அகற்றப்பட்டன.

IV. எக்கோ பார்க் நிகழ்ச்சித்திட்டம், மொனராகலை

மொனராகலை நகரில் மொனராகலை பிரதேச சபை மற்றும் EPP மாவட்ட மன்றம் ஆகியவற்றின் கூட்டிணைவில், இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு நகரத் தோட்டம் தாபிக்கப்பட்டது. சுற்றாடலைப் பாதுகாத்தல், பசுமைப் போர்வையை அதிகரித்தல், பொதுமக்களின் சுகாதாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் சமூக விழிப்புணர்வைப் பரப்புதல் ஆகிய குறிக்கோள்களுடன் 50 இற்கும் மேற்பட்ட நிழல் தரும் மரங்கள் மற்றும் ஏனைய மர வகைகள் நடப்பட்டு, இருக்கைகளும் அமைக்கப்பட்டன.

அத்தியாயம் 18: "சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம்

"சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம்

A. அறிமுகம்

இலங்கையின் உள்ளக மேற்பரப்பு நீர் வளங்களின் பிரதான ஆதாரங்களில் இடம்பெறும் பல்வேறு மனித செயற்பாடுகள் காரணமாக நீர் வளங்கள் குறைவடைதல் மற்றும் தரமிழத்தல் என்பன ஆற்றுப் படுக்கைகளுடன் தொடர்புடைய அடிப்படைப் பிரச்சினைகளாகும். நகர்ப்புறங்களில் உள்ளக மேற்பரப்பு நீர், வீட்டு மற்றும் தொழிற்சாலை கழிவுகளாலும் கிராமப்புறங்களில் விவசாயக் கழிவுகளாலும் பெரிதும் மாசடைகின்றது.

பல ஆண்டுகளாக ஆறுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் முறைசாரா மானிடச் செயற்பாடுகளின் விளைவாக, பல ஆறுகளின் நீர் தற்போது பயன்படுத்துவதற்கு பொருத்தமற்றதாகிவிட்டது. இதன் விளைவாக, தற்போது குடிப்பதற்கும் பிற தேவைகளுக்கும் சுத்தமான நீரைப் பெறுவது கடினமாக உள்ளது.

நாட்டில் உள்ள ஆறுகள் மற்றும் நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்காக பல நிறுவனங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் அனைத்தும் வெவ்வேறு பொறுப்புகளை நிறைவேற்றுகின்றபோதும், இந்த நிறுவனங்களிடையே தகுந்த ஒருங்கிணைப்பின்மையால் சில பணிகள் உரிய விதத்தில் செயற்படவில்லை என அவதானிக்கப்படுகின்றது.

சுரக்கிமு கங்கா தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டமானது இந்த நிலைமையை சமாளிக்கவும், ஆற்றுப்பாதுகாப்புக்காக சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் அணிதிரட்டவும், இந்த ஆற்றுப்படுக்கைகள் எல்லாவற்றினதும் பாதுகாப்பினையும் நிவர்த்தி செய்வதற்காகவும் ஒரு பொருத்தமான நிலைபேறான பேணுகை நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 2020 ஆம் ஆண்டில் 10,377 அமைவிடங்களை அவதானித்து ஆறுகளை ஆய்வு செய்து, ஆற்று நீரின் தரத்தை பாதிக்கக்கூடிய பின்வரும் காரணிகளை வெளிப்படுத்தியுள்ளது.

.

- கழிவுநீர் கலப்பதனால் நீர் மாசடைதல்
- திண்மக்கழிவு மற்றும் அபாயகரமான கழிவுகளின் காரணமான நீர் மாசடைதல்
- மண் அகழ்வு மற்றும் ஆறுகளின் கரையோர அகழ்வு
- அங்கீகரிக்கப்படாத, முறைசாரா நிர்மாணங்கள்
- அங்கீகரிக்கப்படாத, கட்டுப்பாடற்ற அகழ்வுகள்.

B. "சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் உருவாக்கம்

அதிமேதகு சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அதிமேதகு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையின் கீழ் "சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் தாபிக்கப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் "சுபீட்சத்திற்கான நோக்கு" தேசிய கொள்கையானது, அனைவருக்கும் நீரை வழங்கும் நோக்குடன் இலங்கையில் உள்ள அனைத்து ஆறுகள் மற்றும் நீர் ஆதாரங்களையும் தூய்மைப்படுத்தி, முறையான திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்று மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டதுடன், இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக சுற்றாடல் அமைச்சர் கௌரவ மஹிந்த அமரவீர அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கப்பட்டது

C. எதிர்பார்க்கப்படும் விளைவுகளும் நன்மைகளும்

"சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் இலங்கையிலுள்ள அனைத்து ஆற்றுப்படுக்கைகளையும் பாதுகாக்கும் உன்னதமான நோக்கத்துடனும் பரந்த நோக்குடனும் ஆரம்பிக்கப்பட்டது. இந்த தேசிய வேலைத்திட்டத்தின் ஊடாக உயிர்ப்பல்வகைமை நிறைந்த சுத்தமான நீரோடைகள் மற்றும் ஆற்றுச் சூழற்றொகுதிகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கிணங்க, இது சுற்றாடலைப் பாதுகாக்கும் அதேவேளையில் நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச்செல்லும் இலக்குகளை அடைவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு பிரதான நிகழ்ச்சித்திட்டமாகும்.

D. "சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் தொழிற்பாட்டுப் பொறிமுறை

இந்த நிகழ்ச்சித்திட்டமானது "சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் 03 பிரதான அடுக்குகளின் (குழுக்கள்) ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- தேசிய மட்டத்தில் தாபிக்கப்பட்ட அமைச்சுகளுக்கிடையிலான தேசிய வழிநடத்தல் குழு.
- மாவட்ட மட்டத்தில் தாபிக்கப்பட்ட மாவட்டக் குழு.
- உள்ளூர் மட்டத்தில் தாபிக்கப்பட்ட பிராந்தியக் குழு

அமைச்சுகளுக்கிடையிலான தேசிய வழிநடத்தல் குழுவொன்று தேசிய மட்டத்தில் சுரக்கிமு கங்கா தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்காக சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் தலைமையில் தாபிக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் செயலாளர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் ஆவார். இந்தக் குழுவின் உறுப்பினர்கள் சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் அல்லது அந்தச் செயலாளரால் நியமிக்கப்படும் மேலதிக செயலாளர்களாவர். அமைச்சுகளுக்கிடையிலான தேசிய வழிநடத்தல் குழு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடுகின்றது

நாட்டில் இந்த தேசிய வேலைத்திட்டத்தை வினைத்திறனுடன் நடைமுறைப் படுத்துவதற்காக மாவட்ட மட்டத்தில் 25 **"சுரக்கிமு கங்கா மாவட்டக் குழுக்கள்"** தாபிக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் மாவட்டச் செயலாளரின் தலைமையில் கூடுவதுடன், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாவட்ட அலுவலகத்தின் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் இதற்குத் தலைமை வகிப்பார். குழுவை வெற்றிகரமாகச் செயல்படச் செய்வதற்குத் தேவையான ஆக்கவமைப்புடன் மாதம் ஒரு முறை இக்குழு கூடுகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான மற்றும் அடிமட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சுரக்கிமு கங்கா பிராந்தியக் குழு பொறுப்பாகவுள்ளது. அதற்கிணங்க, ஆறுகளைப் பாதுகாப்பதற்கும் முகாமை செய்வதற்கும் நாடளாவிய ரீதியில் 310 பிராந்திய குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. இக்குழுவானது உரிய அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பாகவுள்ளது.

அமைச்சுகளுக்கிடையிலான தேசிய வழிநடத்தல் குழுவுடன் மாவட்ட மற்றும் பிரதேச குழுக்களை ஒருங்கிணைப்பதன் மூலம் சுரக்கிமு கங்கா தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கும் வழிநடத்துவதற்கும் சுரக்கிமு கங்கா செயலகம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகம் பத்தரமுல்லையிலுள்ள மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைமையகத்தில் அமைந்துள்ளது.

E. "சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்

I. "சுரக்கிமு கங்கா" தேசிய அங்குரார்ப்பண வைபவம்

சுரக்கிமு கங்கா தேசிய அங்குரார்ப்பண வைபவம் 2021 மார்ச் 22 ஆம் திகதி வரலாற்றுச் சிறப்புமிக்க ருஹுணு கதிர்காம புனித பிரதேசத்தில் அதிமேதகு சனாதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அரசாங்க உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் மாணிக்க கங்கையில் நடைபெற்றது.

கதிர்காமம் மகா தேவாலயத்தின் தியவதன நிலமேயுடன் இணைந்து சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றின் பின்வரும் பாதுகாப்பு அம்சங்களை இது முன்னெடுத்தது

- மாணிக்க கங்கையருகில் இளைப்பாறுவதற்காக பக்தர்களுக்கான ஆற்றுப் பூங்கா ஒன்றை நிர்மாணித்தல்
- ஆற்றின் இரு பக்கங்களிலும் கேபியன் சுவர் நிர்மாணம்.
- புனிதப் பிரதேசத்துடன் தொடர்புடைய ஆற்றங்கரைகளில் 100 மருதமரங்களை நாட்டுதல் மற்றும் பேணுகை நிகழ்ச்சித்திட்டமொன்றை அறிமுகப்படுத்தல்.

- GPS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுற்றாடல் பாதுகாப்பு வலயங்களாக குறித்துரைக்கப்பட வேண்டிய அமைவிடங்களைக் குறித்தல்.
- மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய ஆற்றுப்போக்கில் ஆற்றின் குறுக்கே அடையாளம் காணப்பட்ட இரண்டு இடங்களில் இரண்டு பாதுகாப்பு வலைகளை நிறுவுதல்.
- பிரதேச செயலாளரின் அனுமதியுடன் தகுந்த முறைமைகளின் ஊடாக மாத்திரமே



மணல் அகழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்

- பிரதான படகுத்துறைக்கு மேலதிகமாக ஏனைய படகுகளிலும் கழிவுகளைச் சேகரிப்பதற்காக குப்பைத்தொட்டிகளை அமைத்தல்
- மகா தேவாலயம் மற்றும் புனிதப் பிரதேசத்திற்கு அருகாமையில் வீசப்படும் பழங்களை விலங்குகளின் பாவனைக்காக காட்டிற்குள் அகற்றுதல் மற்றும் எஞ்சியுள்ள பழங்களை மீள்சுழற்சி செய்ய பிரதேச சபையினால் நடவடிக்கை எடுத்தல்.



உரு 56: தேசிய அங்குரார்ப்பண வைபவம் – ஊவா மாகாணம்

- பிளாஸ்டிக் மலர்கள் மற்றும் பிளாஸ்டிக் மலர்வளையங்களுக்குப் பதிலாக இயற்கை மலர்கள் மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய மலர்களை மட்டுமே வழிபாட்டிற்கு வழங்குவதை ஊக்குவிப்பதற்காக ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல்.
- சுரக்கிமு கங்கா தேசிய ஆரம்ப வைபவத்திற்கு இணையாக, ஒவ்வொரு மாகாணத்திற்குமுரிய ஆறுகளை அடிப்படையாகக் கொண்டு ஏனைய 08 மாகாணங்களில் ஆரம்ப வைபவங்கள் நடாத்தப்பட்டன.





அட்டவணை 39 : "சுரக்கிமு கங்கா " மாகாண அங்குரார்ப்பண வைபவங்கள்

மாகாணம்	அங்குரார்ப்பண வைபவங்கள் நடைபெற்ற இடங்கள்
மேல் மாகாணம்	களனி ஆற்றை அண்டிய சீத்தாவக்க சபைக்குச் சொந்தமான கீழ் ஹன்வெல்ல பிரதேசத்திலுள்ள ஓர் இடம்
தென் மாகாணம்	அம்பலாந்தோட்டை நகரத்திற்கருகில் ஆற்றங்கரை
கிழக்கு மாகாணம்	அம்பாறை மாவட்டம், அம்பாறை பிரதேச செயலகத்தின் கல் ஓய ஆற்றின் வழியில்.
சபரகமுவ மாகாணம்	சமன் தேவாலயத்திற்கு அருகில்
வடமேல் மாகாணம்	பிங்கிரிய பிரதேச செயலகப் பிரிவில் தெதுரு ஓய எல்லையை ஒட்டிய கட்டுக்குளிய கிராமிய நீர் வழங்கல் திட்டத்திற்கருகில்
மத்திய மாகாணம்	கன்னொருவ இராணுவப் பாசறைக்கு அருகில் மகாவலி ஆற்றங்கரை
வட மாகாணம்	கிளிநொச்சி மாவட்டத்தின் கனகராயன் ஆற்றில் திரியாறு
வட மத்திய மாகாணம்	அநுராதபுர சிறைச்சாலை வளாகத்தில் மல்வத்து ஓயவிற்கு அருகில்



உரு 57 : மேல் மாகாணம் - அங்குரார்ப்பண வைபவம்



உரு 58 : மத்திய மாகாணம் - அங்குரார்ப்பண வைபவம்



உரு 59 : தென் மாகாணம் - அங்குரார்ப்பண வைபவம்




உரு 60 : வடமேல் மாகாணம் - அங்குரார்ப்பண வைபவம்




உரு 61 : வட மத்திய மாகாணம் - அங்குரார்ப்பண வைபவம்

II. "சுரக்கிமு கங்கா" புவியியல் தகவல் முறைமைக்கான (GIS) இணையத்தளம்

ஆறுகளைப் பேணுவதற்கான இலங்கையின் முன்னோடி நிகழ்ச்சித் திட்டமாக சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித் திட்டம் பற்றிய இடஞ்சார் தரவுகள் மற்றும் தகவல்களைச் சேகரித்து, முகாமை செய்து சமர்ப்பிப்பதற்காக புவிசார் தகவல் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி இணையத்தளமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. தேசிய, மாவட்ட மற்றும் பிராந்தியக் குழுக்கள் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், கருத்திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் இயலுமான வகையில், இந்த முறைமை பொதுமக்களின் சேவைகளுக்கான இணையத்தளமாகப் பேணப்படுகின்றது. அதற்கிணங்க, இதன் மூலம் வழங்கப்படும் சேவைகள் பின்வருமாறு:

- ஆறுகள் மாசடைவதற்கான மூலங்களை இனங்காணல் பற்றிய ஆய்வுத் தரவுகளையும் தகவல்களையும் பெற்றுக்கொள்ளல்.
- புதிதாக இனங்காணப்பட்ட மாசு மூலங்களை அறிக்கையிடல்.
- தேசிய, மாவட்ட மற்றும் பிராந்தியக் குழு உறுப்பினர்களின் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்
- கருத்திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளை ஆராய்தல்.
- . கருத்திட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை அறிக்கையிடல் மற்றும் முன்னேற்றத்தை கண்காணித்தல்
- "சுரக்கிமு கங்கா" வழிகாட்டல் மற்றும் கருத்திட்ட முன்மொழிவு வடிவுருக்களைத் பதிவிறக்கம் செய்தல்
- சுற்றாடல் பிரச்சினைகள் பற்றிய தகவல்களை பொதுமக்களுக்கு அறிக்கையிடும் ஆற்றல்

மேற்குறிப்பிட்ட சேவைகளை சுரக்கிமு கங்கா புவியியல் தகவல் இணையத்தளத்தில் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்: https://surakimuganga.maps.arcgis.com




உரு 62 : வட மாகாணம் - அங்குரார்ப்பண வைபவம்


III. "சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் பிராந்தியக் குழுக்களுக்கான வழிகாட்டல்களைத் தயாரித்தலும் விநியோகித்தலும்

ஆறுகள் தொடர்பான தேசிய ரீதியில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்காக உள்ளூர் மட்டத்தில் ஒரு செயற்றிட்டத்தை உருவாக்கி அதனைக் கருத்திட்ட முன்மொழிவுகளின் ஊடாக சமர்ப்பித்தல்பிராந்தியக் குழுக்களின் பிரதான பணியாகும். அதற்கிணங்க, கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரிக்கும்போது, அவை துல்லியமானதாகவும், ஒரே குறிக்கோளுடன் நேரொத்ததாகவும் காணப்படுவதற்காகவும் "சுரக்கிமு கங்கா" வழிகாட்டல் தயாரிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில், 3000 பிரதிகள் சிங்களத்திலும் 1500 பிரதிகள் தமிழிலும் அச்சிடப்பட்டு உரிய மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனைத்து மாவட்ட மற்றும் மாகாண அலுவலகங்களுக்கும் விநியோகிக்கப்பட்டன .

IV. சுரக்கிமு கங்கா தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளின் முன்னேற்றம்.

சுரக்கிமு கங்கா பிராந்திய குழுக்கள் 2021 ஆம் ஆண்டிற்கான 118 கருத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளதுடன் அவற்றில் 86 கருத்திட்ட முன்மொழிவுகள் கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளில், 50 கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தலுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட நடைமுறைப்படுத்தல் அமைவிடங்களுடனான இலங்கை வரைபடம்



உரு 63 :அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட நடைமுறைப்படுத்தல் அமைவிடங்களுடனான இலங்கை வரைபடம்

2021 ஆம் ஆண்டில், இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய 50 கருத்திட்ட முன்மொழிவுகளுக்கு "சுரக்கிமு கங்கா" கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 40 : அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள்

	மாகாணம்	மாவட்டம்	பிரதேச செயலகம்	பாதுகாக்கப்பட்ட ஆறு/ கால்வாய்	கருத்திட்டம்	அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள், ரூ.
1	மேல் மாகாணம்	கொழும்பு	சீத்தாவக்க	வக் ஓய	பன்றி வளர்ப்பு காரணமாக வக் ஓயா ஊடாக களனி ஆற்றில் மாசுக் கட்டுப்பாடு	5,210,000.00
2			கொழும்பு	களனி ஆற்றுடன் தொடர்புடைய கால்வாய்கள்	களனி ஆற்றுடன் தொடர்புடைய 03 கால்வாய்களுக்கான குப்பைத் தடைகளை நிர்மாணித்தல்	2,618,000.00
3		கம்பஹா	தொம்பே	பஹுரு ஓய	மல்வான பாலத்திற்கு அருகில் பாதுகாப்பு வலை வேலியை நிறுவுதல்	1,230,000.12
4			பியகம	பஹுரு ஓய	மல்வானையுடன் இணைந்த கரையைப் பாதுகாப்பதற்காக கேபியன் சுவரை நிர்மாணித்தல்	8,782,595.91
5			மீரிகம	அல்ல ஓய	முருதவெல அணைக்கட்டு, எல்லே ஓயாவில் மிதக்கும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன்களை சேகரிப்பதற்காக பாதுகாப்பு வலையை நிறுவுதல்,	300,000.00
6			ஜா – எல	ஜா – எல	ஜா - எல பாலத்திற்கருகில் மிதக்கும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன்களை சேகரிப்பதற்காக பாதுகாப்பு வலையை நிறுவுதல்,	431,773.00
7			களனி	களனி ஆறு	களனி ஆற்றில் கழிவுநீர் தேங்குவதைத் தடுப்பதற்கான கருத்திட்டம்	19,271,412.00
8		களுத்துறை	பாலிந்தநுவர	லத்பந்துர கால்வாய்	லத்பந்துர கடவீதிய கால்வாய் சுத்தம் செய்தல் மற்றும் கரைப்பகுதியின் பாதுகாப்பு	864,000.00
9			மத்துகம	ரன்வலகல நீர்வீழ்ச்சி	ரன்வலகல நீர்வீழ்ச்சியின் நீரேந்து பிரதேசத்தின் பேணுகை	1,676,650.00
10			மதுருவல	களு கங்கை	கனார்த்துப்பன களு கங்கை ஆற்றின் கரைகளைப் பாதுகாத்தல்	1,573,986.68
11	மத்திய மாகாணம்	நுவரேலியா	நுவரேலியா	கிறகரி வாவியைச் சுற்றியுள்ள நீரேந்து பிரதேசங்கள்	கிறகரி வாவியின் நீர்வடிந்தோடும் சரிவுப் பகுதியில் கழிவகற்றல் நிகழ்ச்சித்திட்டம்	3,975,000.00

12			அம்பகமுவ	சீத கங்குல/ களனி ஆறு	நல்லதண்ணிப் பிரதேசத்தில் கழிவு நீர் முகாமைத்துவத்திற்கான ஒரு முறைசார் முறையியலை அறிமுகப்படுத்தல்	250,000.00
13		மாத்தளை	மாத்தளை	சுது கங்கை/ திய புபுல ஓயா	மாத்தளை சுது கங்கை மற்றும் திய புபுல ஓயா கரைகளின் பேணுகை, திண்மக்கழிவு மீள்சுழற்சி	1,282,659.00
14			லக்கல பல்லேகம	-	நக்கிள்ஸ் பேணுகைப் பிரதேசத்தில் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தின் நிர்மாணம்	3,268,749.10
15		கண்டி	உடுநுவர	-	உடுநுவர பிராந்தியத்தின் திண்மக்கழிவு மற்றும் கழிவு நீர் முகாமைத்துவக் கருத்திட்டம்	3,236,845.00
16	தென் மாகாணம்	மாத்தறை	அக்குரஸ்ஸ	நில்வளா ஆறு	நில்வளா ஆறு பேணுகை நிகழ்ச்சித்திட்டம்	3,365,890.42
17		காலி	கராந்தெனிய	ஹல்வதுர கால்வாய்	ஹல்வதுர கால்வாய் பேணுகை	4,074,852.00
18		காலி	பலப்பிட்டிய	மடு கங்கை	மடு கங்கை பேணுகை நிகழ்ச்சித்திட்டம்	2,683,178.00
19		காலி	அம்பலாங்கொட	ஹல்வதுர கால்வாய்	ஹல்வதுர கால்வாய் பேணுகை	7,009,700.00
20		அம்பாந்தோட்டை	அம்பலாந்தோட்டை	வளவ்வ ஆறு (2)	வளவ்வ ஆறு பேணுகை	6,190,038.80
21		அம்பாந்தோட்டை	அம்பலாந்தோட்டை	வளவ்வ ஆறு	வளவ்வ ஆறு பேணுகை	8,659,000.00
22		அம்பாந்தோட்டை	லுணுகம்வெஹர	கிரிந்தி ஓய	கிரிந்தி ஓய பேணுகை நிகழ்ச்சித்திட்டம்	1,873,000.00
23	ஊவா மாகாணம்	மொனராகல	கதிர்காமம்	மாணிக்க கங்கை	மாணிக்க கங்கை பேணுகைக் கருத்திட்டம்	5,450,700.00

24		மொனராகல	படல்கும்புர	மாணிக்க கங்கை	மாணிக்க கங்கை பேணுகைக் கருத்திட்டம்	6,756,017.85
25		பதுளை	அல்ல, ஹாலி எல, பதுளை, சொரணதொட்ட, மீகஹகியுல, கந்தகெட்டிய	பதுளு ஓய	பதுளு ஓய பேணுகை நிகழ்ச்சித்திட்டம்	3,034,704.28
26	வடமாகாணம்	வவுனியா	வவுனியா	பேராறு	பேராறு பேணுகைக் கருத்திட்டம்	1,178,800.00
27		முல்லைத்தீவு	ஒட்டுசுட்டான்	கனகராயன் ஆறு	கனகராயன் ஆறு பேணுகை நிகழ்ச்சித்திட்டம்	1,008,000.00
28		கிளிநொச்சி	கரைச்சி	அக்கராயன் ஆறு	அக்கராயன் ஆறு பேணுகை நிகழ்ச்சித்திட்டம்	4,113,105.00
29	வடமேல் மாகாணம்	குருநாகல்	குளியாப்பிட்டிய மேற்கு	கரம்பலன் ஓய	கரம்பலன் ஓயா தொடர்பில் விவசாய இரசாயனங்களின் பயன்பாட்டினால் ஏற்படும் நீர் மாசடைதலைக் குறைத்தல் கழிவு	18,000.00
30			பொல்பிதிகம	மீ ஓய	மீ ஓயவிற்குள் ஊடுருவும் நீர்வாழ் தாவரங்களை அகற்றுதல்	615,000.00
31			பொல்பிதிகம	மீ ஓய	மீ ஓயவுடன் தொடர்புடைய விவசாய இரசாயனக் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்	266,000.00
32			குருநாகல்	தெதுரு ஓய	கனேவத்த வீதியில் தெதுரு ஓயா பாலத்திற்கு அருகாமையில் திண்மக்கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்	74,900.00
33			மஹவ	மீ ஓய	நச்சற்ற மீஓய	128,300.00
34			இப்பாகமுவ	தெதுரு ஓய	தெதுரு ஓயவினுள் விவசாயக் கழிவு நீர் கலத்தலைக் கட்டுப்படுத்தல்	277,500.00
35			பண்டுவஸ்நுவர	கரம்பலன் ஓய	கரம்பலன் ஓயவினுள் விவசாயக் கழிவு நீர் கலத்தலைக் கட்டுப்படுத்தல்	72,100.00
36			பொல்கஹவெல	மா ஓய	மஹா ஓயவில் பாரியளவில் ஊடுருவும் மிமோசா தாவரங்களை அகற்றுதல்	75,550.00
37	சபரகமுவ மாகாணம்	கேகாலை	அனைத்துப் பிரதேச செயலகங்கள்	மாவட்டத்தின் ஊடாகப் பாய்கின்ற பல்வேறு	கேகாலை மாவட்டத்தின் ஆறுகள் மற்றும் கிளை ஆறுகளுக்கான	7,200,000.00

				கிளை ஆறுகள்	ஒருங்கிணைந்த மாசுத் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்	
38		இரத்தினபுரி	பலாங்கொமை	வளவ்வ ஆறு	வளவ்வ ஆற்றிலிருந்து நீர் செல்லும் கால்வாயொன்றில் நீர் மாசடைதலைத் தடுத்தல்	3,900,000.00
39		இரத்தினபுரி	குருவிட்ட	குரு கங்கை	குரு கங்கை பேணுகைக் கருத்திட்டம்	1,495,400.00
40	வட மத்திய மாகாணம்	அநுராதபுரம்	நுவரகம்பலாத	மல்வத்து ஓய	மல்வத்து ஓயவின் பேணுகை	3,298,115.75
41		அநுராதபுரம்	நுவரகம்பலாத	மல்வத்து ஓய	மல்வத்து ஓயவிற்குள் கழிவு நீர் வெளியேற்றப்படுவதைக் குறைத்தல்	398,824.83
42		பொலநறுவை	தமன்கடுவ	மகாவலி ஆறு	திவுலன வில்லுவிற்குள் கழிவு நீர் சேர்வதைக் கட்டுப்படுத்தல்	407,068.80
43	கிழக்கு மாகாணம்	மட்டக்களப்பு	போரதீவுப்பத்து	பட்டந்தொடத்தணி ஆறு மற்றும் அண்டலு ஓய	பட்டந்தொடத்தணி ஆறு மற்றும் அண்டலு ஓய ஆகியவற்றின் பேணுகை	1,650,000.00
44		அம்பாறை	அம்பாறை, தமன, நிந்தவூர், சம்மாந்துறை, அட்டாளச்சேனை	கல்ஓயா	கல்ஓயா பேணுகை நிகழ்ச்சித்திட்டம்	6,819,000.00
45	சபரகமுவ மாகாணம்	கேகாலை	யட்டியாந்தோட்டை	களனி ஆறு	சிவனொளிபாத மலை யாத்திரைப் பருவகாலத்தின்போது களனி ஆறு பேணுகைக் கருத்திட்டம்	346,788.40
46	தென் மாகாணம்	காலி	நாகொட	கின் கங்கை	இயற்கைச் சூழல் தொகுதியாக ஆற்றைப் பேணுதல்	2,205,219.12
47	மத்திய மாகாணம்	நுவரேலியா	அம்பகமுவ	சீத கங்குல	நல்லதண்ணி தொடக்கம் சிறிபாதஸ்தான வரையான வீதிகளில் பிளாஸ்டிக் போத்தல் சேகரிப்பு தொட்டிகளை அமைத்தல்	926,972.00
48	சபரகமுவ மாகாணம்	இரத்தினபுரி	பலாங்கொடை	வீ கங்கை, வளவ்வ கங்கை, தொரவெல ஓயா, வெலி ஓயா	உள்ளூர் மட்டத்தில் ஆற்றங்கரைகளின் பேணுகை மற்றும் மண்ணரிப்பைக் குறைத்தல்	709,150.00

49	சபரகமுவ மாகாண ம்	இரத் தின புரி	கல்தோட்ட	வீ கற்கை, வளவ்வ கங்கை, தொரவெல ஓயா, வெலி ஓயா	உள்ளூர் மட்டத்தில் ஆற்றங்கரைகளின் பேணுகை மற்றும் மண்ணரிப்பைக் குறைத்தல்	2,364,650.00
50	சபரகமுவ மாகாண ம்	இரத் தின புரி	அம்பிலிப்பி ட்டிய	சந்திரிகா வாவி	1. சந்திரிகா வாவியிலுள்ள நிலையத்துடன் தொடர்புடைய திண்மக்கழிவு முகாமைத்துவம் 2. பல்லேபத்த கிரந்துர பிரதேசத்தில் துப்புரவேற்பாட்டு வசதிகள் மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவத்தின் முன்னேற்றம் 3.பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி சேகரிப்பு நிலையமொன்றை அமைத்தல் மற்றும் பலகைகளை உருவாக்குதல்	388,936.92

V. "சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் பொதுச் செயற்பாடுகளின் முன்னேற்றம்

அட்டவணை 41 : "சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் பொதுச் செயற்பாடுகள்

	பிரதான செயற்பாடு	2021 இற்கான தகவல்கள்/ வருடாந்த இலக்குகள்	31.12.2021 வரையான முன்னேற்றம்
1	மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் விழிப்புணர்வுக் கூட்டத்தொடர்களை நடத்துதல்	25 விழிப்புணர்வுக் கூட்டத்தொடர்கள் நடத்தப்பட்டுள்ளன	25
2	"சுரக்கிமு கங்கா" மாவட்டக் குழுக்களைத் தாபித்தல்	25 மாவட்டக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன	25
3	"சுரக்கிமு கங்கா" பிராந்தியக் குழுக்களைத் தாபித்தல்	310 பிராந்தியக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன	310
4	"சுரக்கிமு கங்கா" நிகழ்ச்சித்திட்டத்தின் வழிகாட்டல் (சிங்கள மொழிமூலம் 3000) "சுரக்கிமு கங்கா" நிகழ்ச்சித்திட்டத்தின் வழிகாட்டல் (தமிழ் மொழிமூலம் 1500)	அனைத்துப் பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் மாகாண அலுவலகங்களுக்கிடையிலான விநியோகம்.	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
5	தேசிய வழிப்படுத்தல் குழுக் கூட்டங்கள்	3 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.	3
6	கருத்திட்ட மதிப்பாய்வுக் குழுக் கூட்டம்	சுற்றாடல் அமைச்சு ஏழு உறுப்பினர்களை நியமித்துள்ளது	-
6.1	கருத்திட்ட மதிப்பாய்வுக் குழுக் கூட்டங்களை நடத்துதல்	10 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.	10

6.2	பிரதேச செயலகங்களிலிருந்து பெறப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை	118 கருத்திட்ட முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.	117
6.3	கருத்திட்ட மதிப்பாய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை	பெற்றுக்கொள்ளப்பட்ட 118 கருத்திட்ட முன்மொழிவுகளில், பூர்த்தி செய்யப்பட்ட 86 கருத்திட்ட முன்மொழிவுகள் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	86
6.4	மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை	50 கருத்திட்ட முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.	50
7	இணைந்த களப் பரிசோதனைகள் (கருத்திட்ட மதிப்பாய்வுக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கமைய)	கருத்திட்டங்களைப் பின்னாய்வு செய்வதற்காக இணைந்த களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன	22

VI. சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம்

அட்டவணை 42 : "சுரக்கிமு கங்கா" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம்

கருத்திட்டக் காலப்பகுதி	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் (2021) LKR (Mn)	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள்	31.12.2021 இல் உள்ளவாறான முன்னேற்றம்	
			ரூ.	%
ஜனவரி – டிசம்பர் 2021	200 (20- முகாமைத்துவம் மற்றும் விழிப்புணர்வு, 130- கருத்திட்டங்கள் மற்றும் உள்ளூர் மட்டத்திற்கான ஒதுக்கீடுகள், 50–தாவர நாற்றுமேடை நிகழ்ச்சித் திட்டத்திற்காக)	20	19,031,411.18	95.16
		130	137,020,787.75	101.4
		50	நாற்றுமேடை நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஏற்பாடுகள், 2021 ஆகஸ்ட் 25 ஆம் திகதி சுற்றாடல் அமைச்சினால் கைமாற்றப்பட்டுள்ளன	

அத்தியாயம் 19 : மனித வள அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவு

19.1 மனித வள அபிவிருத்தி அலகு

பணியாட்டொகுதியினரின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி ஆகியவை மனிதவள அபிவிருத்திப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றாகும். இது தவிர ஒழுக்காற்று விசாரணைகளைக் கையாளுதலும் மேற்கொள்ளப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டில் பணியாட் டொகுதியினருக்கு பின்வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

A. உள்நாட்டுப் பயிற்சி

(1) 2021 ஆம் ஆண்டில் சிரேஷ்ட மற்றும் நடுத்தர முகாமையாளர்கள், சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர்கள், சுற்றாடல் உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், நூலகப் பணியாட்டொகுதியினர், சட்ட மற்றும் உள்ளக கணக்காய்வு அலகுகள் மற்றும் ஆரம்ப மட்ட ஊழியர்கள் உள்ளிட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணியாட்டொகுதியினருக்கான 25 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்து வசதியளித்தல்.

(2) மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் பின்வரும் குழுப் பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகள் உள்ளடக்கப்பட்டன:

அட்டவணை 43 : உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்		இல. of Officers Attended
01.	நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	10
02.	சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	28
03.	WPO இல் சுற்றாடல் உத்தியோகத்தர்களுக்கான இணையவழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	38

B. வெளிநாட்டுப் பயிற்சி

2021 ஆம் ஆண்டில், காலநிலை மாற்றத்தைத் தழுவல் மீதான குறுங்கால பயிற்சிகளுக்காக 04 உத்தியோகத்தர்கள் பெயர் குறித்து நியமிக்கப்பட்டு ஒருவர் தெரிவு செய்யப்பட்டார்.

C. பூர்வாங்க விசாரணைகள்

2021 ஆம் ஆண்டில், மனிதவள மேம்பாட்டுப் பிரிவினால் 15 பூர்வாங்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

19.2 மனித வள முகாமைத்துவம்

மனித வள முகாமைத்துவ உப அலகு பிரதானமாகப் பின்வரும் பிரதான தொழிற்பாடுகளை நிறைவேற்றுகின்றது.

- ஒட்டுமொத்த மனித வளங்கள் திட்டமிடல்
- தெரிவு, ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, இடமாற்றங்கள்
- உள்ளீர்ப்பு திசைமுகப்படுத்தல்.
- கொடுப்பனவுகள் நிர்வாகம் & கண்காணிப்பு
- தனியாள் செயலாற்றுகை மதிப்பீடு
- ஊழியர்களின் குறைகளைக் கையாளுதல்
- மனிதவளத் தரவுத்தளம் போன்றவற்றைப் பராமரித்தல்.
- விடுப்பு முகாமைத்துவம்

31.12.2021 இல் உள்ளவாறாக அங்கீகரிக்கப்பட்ட மொத்தப் பதவியணியின் எண்ணிக்கை 1166 மற்றும் காணப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 908.

அட்டவணை 44: 2021 ஆம் ஆண்டின் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, பதவி விலகல், பதவியிலிருந்தான நிரந்தர விடுப்பு மற்றும் ஓய்வூதியம்

	பதவி	2021			
		ஆட்சேர்ப்பு	பதவியுயர்வு	பதவி விலகல்/இடைநிறுத்தம்/இடமாற்றம்	ஓய்வு
1	**சிரேஷ்ட முகாமையாளர்**				
	பிரதிப் பணிப்பாளர் நாயகம்		04		01
	பணிப்பாளர்		02		
2	**மத்திய முகாமையாளர்**				
	உதவிப் பணிப்பாளர்	02	04		
	நூலகர்	01			
3	**கனிஷ்ட முகாமையாளர்**				
	மனித வள உத்தியோகத்தர்				01
	நிதி உத்தியோகத்தர்				01
	கொள்வனவு உத்தியோகத்தர்	01			
	சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர்		05	02	
4	**அமுலாக்கம்/விரிவாக்கம்/ தொழிற்பாடு.**				
	சுற்றாடல் உத்தியோகத்தர்			06	03
5	**முகாமைத்துவ உதவியாளர் (தொழி.-அல்லாத)**			01	01
7	**ஆரம்ப மட்டம் (திறன்)**				
	ஓட்டுநர்			01	01
		04	**15**	**10**	**08**

மேற்குறிப்பிட்ட பதவியுயர்வுகளுக்கு மேலதிகமாக, 04 உதவிப் பணிப்பாளர்கள் மத்திய முகாமையாளர் மட்டத்தின் தரம் I இற்கும், 01 சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் கனிஷ்ட முகாமையாளர் மட்டத்தின் தரம் I இற்கும், அமுலாக்கல் / தொழிற்பாட்டு / விஸ்தரிப்பு மட்டத்தின் தரம் I இற்கு 02 பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்களும், தரம் II இற்கு 01 பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தரும் பதவியுயர்த்தப்பட்டுள்ளனர். 03 முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழி. அல்லாத) முகாமைத்துவ உதவியாளர் சேவை (தொழி. அல்லாத) தரம் I இற்கும், 01 முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) முகாமைத்துவ உதவியாளர் சேவை (தொழில்நுட்பம்) தரம் I இற்கும் பதவியுயர்த்தப்பட்டனர். ஆரம்ப மட்டத்தின் (திறன்) தரம் II இற்கு 02 ஓட்டுநர்களும் தரம் I இற்கு 03 ஓட்டுநர்களும் பதவியுயர்த்தப்பட்டனர். 02 அலுவலக உதவியாளர்கள் ஆரம்ப மட்டத்தின் (திறன். அல்லாத) தரம் II இற்குப் பதவியுயர்த்தப்பட்டனர்.

19.3 நிதி அலகு

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2021 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானவை

1. கூட்டாண்மைத் தகவல்கள்

1.1 நிலையகம் மற்றும் சட்ட வடிவம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஒரு நியதிச்சட்ட நிறுவனமாகும். அதன் தலைமை அலுவலகம் இல. 104, "பரிசர பியச", டென்சில் கோப்பேக்கடுவ மாவத்தை, பத்தரமுல்லை, இலங்கையில் அமைந்துள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் இயல்பு

எமது தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் அர்ப்பணிப்பின் அடிப்படையில் மாசுக் கட்டுப்பாடு, இயற்கை வள முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் கல்வி ஆகியவற்றின் ஊடாக சுற்றாடலின் தரத்தைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் என்பன மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதான செயற்பாடுகளாகும்.

1.3 ஊழியர்களின் எண்ணிக்கை

2021 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறாக ஊழியர்களின் எண்ணிக்கை 908 ஆகும்.(2020-923)

2. குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

2.1 தயாரிப்பின் அடிப்படை

2.1.1 இணக்கக் கூற்று

நிதிநிலைக் கூற்று, நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சற் கூற்று, உரிமையாண்மை மாற்றல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் ஆகியவற்றை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிதிக்கூற்றுகள் கொண்டுள்ளன. இந்தக் கூற்றுகள், இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் அமைத்துருவாக்கப்படும் இலங்கைப் பகிரங்கத் துறையின் கணக்கியல் நியமங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்படுகின்றன.

2.1.2 அளவீட்டின் அடிப்படை

வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.நிதிக் கூற்றுகளிலுள்ள பணவீக்கக் காரணிகளுக்காக எந்தவொரு சீராக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை

2.1.2 ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கியல் கொள்கைகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்படுவதுடன், முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்ட கொள்கைகளுடன் ஒத்திசைவு பெற்றுள்ளன. நடப்பாண்டின் சமர்ப்பிப்பை உறுதிப்படுத்த, முந்தைய ஆண்டின் உருக்கள், அவசியமான சந்தர்ப்பங்களில், மீள ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

2.2 குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம்

கீழே தரப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள் இந்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துக் காலகட்டங்களுக்கும் சீராகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

2.1.2 வெளிநாட்டு நாணய மாற்றல்கள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்கள், அதன் தொழிற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவில் (ரூபா) சமர்ப்பிக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற திகதியில் உள்ளவாறான தொழிற்பாட்டு வீதங்களில் பதிவு செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நன்கொடை, பண சொத்துக்கள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களில் குறிக்கப்பட்ட பொறுப்புகள் ஆகியவை பரிவர்த்தனை திகதியில் குறித்த வீதத்தில் மாற்றப்படுகின்றன.

2.2.2 வருமான ஏற்பிசைவு

செலவினங்கள் மற்றும் வருமானம் ஆகியவை அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன. 3 வருடங்களுக்காக வழங்கப்படும் உரிமங்களை வழங்குவதன் மூலம் கிடைத்த வருமானம், 2021 ஆம் ஆண்டில் ஈட்டிய வருமானத்தில் 1/3 வீதமாக மாத்திரமே கணக்கிடப்பட்டுள்ளதுடன், அதற்கு அமைவாக முன்னைய இரண்டு வருடங்களுக்கு சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. ஒரு வருடத்திற்கு வழங்கப்பட்ட உரிமத்திலிருந்து கிடைக்கப்பெறும் வருமானம், பெற்றுக்கொண்ட திகதியைப் பொருட்படுத்தாமல் அதே ஆண்டுக்கான வருமானமாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

வட்டி மற்றும் வாடகை வருமானம் தவிர ஏனைய வருமானங்கள் காசு அடிப்படையில் பதிவிடப்பட்டுள்ளது

2.2.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

2.2.3.1 ஏற்பிசைவின் அடிப்படை

சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்கு கிடைத்தலும் சொத்தின் கிரயம் நம்பத்தகுந்த முறையில் அளவிடப்படக் கூடியமையும் சாத்தியமாகுமிடத்து, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஏதேனும் பொருள், கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமான இழப்பு ஆகியவற்றைக் கழித்து வரும் தொகையில் பதிவிடப்படும். கிரயமானது, சொத்தின் கொள்வனவு தொடர்பாக நேரிடையாக சாட்டுதல் செய்யக்கூடிய செலவினம் மற்றும் சொத்தின் குறித்த பாவனைக்காக அதனை இயங்குநிலைக்குக் கொண்டுவருவதற்காக ஏற்படும் நேரிடையாக சாட்டுதல் செய்யக்கூடிய வேறு ஏதேனும் செலவுகள், பொருட்களை பகுதி பகுதியாகப் பிரித்தலுக்கும் அகற்றுதலுக்கும் அவை அமைந்திருந்த இடத்தை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்குமான செலவுகள் மற்றும் மூலதனமாக்கப்பட்ட கடன்பாட்டுக் கிரயம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஏதேனும் பொருளின் பாகங்கள் வெவ்வேறு பயன்தரு ஆயுட்காலங்களைக் கொண்டிருக்குமிடத்து, அவை ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தனித்தனிப் பொருட்களாகக் (பிரதான ஆக்கக்கூறுகள்) கணக்கிடப்படும்.

2.2.3.2 மீள்மதிப்பீட்டு மாதிரி

அறிக்கையிடும் ஆண்டின் இறுதியில் சீர்மதிப்புப் பெறுமதியைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படும் தொகையிலிருந்து பொருண்மையாக முற்கொணரல் பெறுமதி வேறுபடாதவாறு மீள்மதிப்பீடுகள் போதுமான ஒழுங்குமுறையுடன் செய்யப்படுகின்றன. வாகனங்கள் (மோட்டார் சைக்கிள்கள் தவிர) மீள்மதிப்பீடு செய்யப்படும்போது, மொத்த முற்கொணரல் பெறுமதி, முற்கொணரல் பெறுமதியின் மீள்மதிப்பீட்டிற்கு ஏற்ப சீராக சரிசெய்யப்படுகின்றது. அந்தத் திகதியில் உள்ளவாறான திரட்டிய பெறுமானத்தேய்வு, திரட்டிய பெறுமதி இழப்புகளைக் கருத்திற் கொண்ட பின்னர், மொத்த முற்கொணரல் பெறுமதிக்கும் முற்கொணரல் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாட்டை சமப்படுத்தும் விதத்தில் சரிசெய்யப்படுகின்றது.

மீள்மதிப்பீட்டின் விளைவாக, ஒரு சொத்தின் முற்கொணரல் பெறுமதியில் ஏற்படும் ஏதேனும் அதிகரிப்பு, பிற முற்றடக்க வருமானத்தின் கீழ் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் உரிமையாண்மையில் உள்ள மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் சேர்த்துக்கொள்ளப்படும். இந்த அதிகரிப்பானது ஏற்கனவே இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு பெறுமதிக் குறைப்பை எதிர்நீக்கம் செய்யும் அளவிற்கு, இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

மீள்மதிப்பீட்டின் விளைவாக, ஒரு சொத்தின் முற்கொணரல் பெறுமதியில் ஏற்படும் ஏதேனும் குறைத்தல், நடப்பு ஆண்டில் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. அந்தச் சொத்து தொடர்பில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் உள்ள ஏதேனும் செலவு மீதி இருக்கும் அளவுக்கு, பிற முற்றடக்க வருமானத்தில் இந்தக் குறைத்தல் அங்கீகரிக்கப்படுகின்றது. பிற முற்றடக்க வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட குறைத்தல்கள், உரிமையாண்மையில் உள்ள மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் திரட்டப்பட்ட தொகையைக் குறைக்கின்றது.

வாகனங்கள் தொடர்பான மீள்மதிப்பீட்டு ஒதுக்கம், அச்சொத்து ஏற்பிசைவு செய்யப்படாதவிடத்து, நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்திற்கு நேரிடையாக மாற்றம் செய்யப்படும்.

2.2.3.3 அகற்றலிலிருந்து எழும் இலாபங்களும் நட்டங்களும்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் பொருளொன்றை அகற்றுவதில் ஏற்படும் வருமானங்கள் மற்றும் இழப்புகள் என்பவை, அகற்றலிலிருந்தான கிடைப்பனவுகளை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முற்கொணரல் பெறுமதியுடன் ஒப்பிடுவதன் மூலம் தீர்மானிக்கப் படுவதுடன் இலாப அல்லது நட்ட அறிக்கையில் "பிற வருமானம்/பிற செலவினங்களுக்குள்" நிகரமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

2.2.3.4 தொடர்ந்துவரும் செலவுகள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஏதேனும் பொருளின் பாகத்தை மாற்றீடு செய்வதற்கான செலவு, அப்பாகத்தினால் கிடைக்கும் எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்கு கிடைத்தலும் அதன் கிரயம் நம்பத்தகுந்த முறையில் அளவிடப்படக் கூடியமையும் சாத்தியமாகுமெனின், அப்பொருளின் முற்கொணரல் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. மாற்றப்பட்ட பாகத்தின் முற்கொணரல் பெறுமதி ஏற்பிசைவின்றி ஆக்கப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நாளாந்தப் பராமரிப்புச் செலவுகள், ஏற்பட்டவாறாக இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் திருத்தங்கள் அல்லது பராமரிப்பிற்கான செலவினங்கள், அடிப்படையில் மதிப்பிடப்பட்ட செயலாற்றுகைத் தரத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மையை மீளக் கொண்டுவருதல் அல்லது பேணுதலின் பொருட்டு, அவை ஏற்படும்போது செலவொன்றாக ஏற்பிசைவு செய்யப் படுகின்றன.

2.2.3.5 ஏற்பிசைவின்றி ஆக்கப்படுதல்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் ஏதேனும் பொருளொன்றின் முற்கொணரல் பெறுமதியானது அகற்றலின்போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எவ்வித எதிர்கால நன்மைகளும் எதிர்பார்க்கப்படாதபோது ஏற்பிசைவின்றி ஆக்கப்படுகின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பொருளொன்றை ஏற்பிசைவின்றி ஆக்குவதால் எழும் இலாபம் அல்லது நட்டம், அப்பொருள் ஏற்பிசைவின்றி ஆக்கப்படும்போது இலாபம் அல்லது நட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றது. ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும், சொத்தின் இறுதிப் பெறுமதி, பயன்தரு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத். தேய்விடல் முறைகள் மீளாய்வு செய்யப்பட்டு, பொருத்தமாயின், சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2.2.3.6 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்–மானியமாகக் கிடைத்தவை

மானியத்தின் கீழ் பெறப்படும் ஏதேனும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆகியவை கிரயத்தில் மூலதனமாக்கப் படுகின்றன.

கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட பின்னரே இறையிலிக் காணிகள் தவிர்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பதியப்படுகின்றன. இறையிலிக் காணிகள் கிரயத்தில் பதியப்படுகின்றன

2.2.3.7 பெறுமானத்தேய்வு

மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்கேற்ப குறிப்பிட்ட தொகைகளைப் பதிவழிப்பதற்காக இறையிலிக் காணிகள் தவிர்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு பெறுமானத்தேய்வு கணக்கிடப்படுகின்றது. பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடியதாக உள்ள திகதியிலிருந்து அகற்றுதல் இடம்பெறும் திகதி வரையில் ஆதனத்திற்குப் பெறுமானத்தேய்வு வழங்கப்பட்டுள்ளது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றிற்கு நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப் படுவதுடன் பிரயோகிக்கப்படும் வீதங்கள் பின்வருமாறு ;

கட்டடம் – தலைமை அலுவலகம் மற்றும் பிராந்தியங்கள்	வருடாந்தம் 2.5%
மோட்டார் வாகனம்	வருடாந்தம் 25%
தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும்	வருடாந்தம் 10%
பொறி மற்றும் உபகரணங்கள்	வருடாந்தம் 10%
கணனிகளும் துணைச்சாதனங்களும்	வருடாந்தம் 25%
கணக்கீட்டு மென்பொருள்	வருடாந்தம் 50%
ஆய்வுகூட உபகரணம்	வருடாந்தம் 10%
நூலகப் புத்தகங்கள்	வருடாந்தம் 10%
தொம்பே சுகாதாரம்சார் கழிவு நிரப்பல்	வருடாந்தம் 2.5%
இயற்கைக் கள நிலையம்	வருடாந்தம் 10%
பெயர்ப்பலகை	வருடாந்தம் 10%
தலைமை அலுவலகக் கட்டத்திற்கு வெள்ளையடித்தல்	வருடாந்தம் 20%.
நடமாடும் ஆய்வுகூடம்	வருடாந்தம் 10% .

2.2.4 குத்தகைச் சொத்துக்களும் பதிவழித்தலும்

ஒரு அடிப்படைச் சொத்தின் உரிமையுடன் தொடர்பான அனைத்து அபாயங்களையும் வெகுமதிகளையும் கணிசமாக மாற்றாதிருக்கும் குத்தகையொன்று, செயல்பாட்டு குத்தகையென வகைப் படுத்தப்படும். குத்தகை உடன்படிக்கையின் குத்தகை நியதிகள் மற்றும் குத்தகை உடன்படிக்கைக் காலப் பகுதியின் அடிப்படையில் பெறுமானப் பதிவழிப்பு என்பவற்றிற்கமைய குத்தகை சொத்துக்கள் பெறுமதியிடப்படும். குத்தகை சொத்துக்கள் அவற்றின் கிரயத்திலிருந்து திரட்டப்பட்ட பெறுமானப் பதிவழிப்பு கட்டணங்களைக் கழித்த பெறுமதியில் அளவிடப் படுகின்றன. அத்தகைய செலவு, அங்கீகார அளவுகோல்கள் பூர்த்தி செய்யப்படுமிடத்து, சொத்தின் கூறுகளை மாற்றுவதற்கான செலவை உள்ளடக்கும். பெறுமானப் பதிவழிப்பு, ஒப்பந்த காலத்தில் நேர்கோட்டு அடிப்படையில் பின்வருமாறு கணக்கிடப்படும்:

குத்தகைக் காணி வரு. 2%

காணி- இரத்தினபுரி அலுவலகம் வரு. 3.33%

2.2.5 இருப்புகள்

கிரயம் மற்றும் தேறக்கூடிய நிகரப் பெறுமதி ஆகியவற்றில் எப்பெறுமதி குறைவானதோ அப்பெறுமதியில் இருப்புக்கள் மதிப்பிடப்படுகின்றன. தேறக்கூடிய நிகரப் பெறுமதி என்பது வணிகத்தின் சாதாரண போக்கில் மதிப்பிடப்பட்ட முடிவுறுத்தல் செலவுகள் மற்றும் விற்பனையைச் செய்வதற்குத் தேவையான மதிப்பிடப்பட்ட செலவு ஆகியவற்றைக் கழித்து வரும் இருப்புகளை விற்கக்கூடிய விலையைக் குறிக்கின்றது.
இருப்புகளை அதன் தற்போதைய இருப்பிடம் மற்றும் நிலைமைக்கு கொண்டு வருவதில் ஏற்படும் செலவு பின்வரும் கிரயச் சூத்திரங்களைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றது:-
கொள்வனவு செய்யப்பட்ட விலையில் முதல் உள்- முதல் வெளியே அடிப்படை.

இரசாயனங்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள் சம்பந்தப்பட்ட சந்தர்ப்பங்களில், அந்த ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்ட அனைத்தும் நுகர்வாகக் கருதப்பட்டன. இந்த பொருட்களை அளவிடுவதில் உள்ள சிரமம் மற்றும் ஒப்பீட்டளவில் குறைந்த பயன்பாட்டு செலவு காரணமாகவும் இந்த முறை பின்பற்றப்பட்டது.

2.2.6 முதலீடு

மூன்று மாதங்களுக்கும் மேலான முதிர்வுக் காலத்தைக் கொண்ட பணச் சந்தைக் கருவிகளில் செய்யப்படும் முதலீடுகள் குறுகிய கால முதலீடாகக் கருதப்பட்டு, கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. நிலையான வைப்பு மற்றும் குறுகிய கால வைப்பு ஆகியவற்றில் முதலீடு செய்தல் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

2.2.7 காசும் காசுச் சமானங்களும்

காசும் காசுச் சமானங்களும் கையிலுள்ள காசு மற்றும் வங்கியில் அழைப்பிலுள்ள வைப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

2.2.8 காசுப்பாய்ச்சற் கூற்று

மறைமுக முறையைப் பயன்படுத்தி காசுப்பாய்ச்சற் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

2.2.9 வரியிடல்

நிதிக் கூற்றில் அறிக்கையிடப்பட்டதும் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கமைவாகக் கணக்கிடப்படுவதுமான வரிச் செலவுகள்.

2.2.10 ஊழியர்களின் பயன்கள்

2.2.10.1 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

பங்களிப்புத் திட்டத்தை வரையறுப்பதற்கான கடப்பாடு, வருமானக் கூற்றில் ஏற்பட்டவாறான ஒரு செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படும். மத்திய சுற்றாடல் அதிகாரசபை, ஊழியர்களின் மொத்த வேதனங்களில் முறையே 15% மற்றும் 3%இனை சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கின்றது.

2.2.10.2 வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம்

பணிக்கொடை என்பது ஒரு வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டமாகும். மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது உரிய நியதிச்சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடையினைச் செலுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ளது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு, சேவையின் முதலாம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகி, பூர்த்தி செய்யப்பட்ட ஒவ்வொரு சேவையாண்டிற்கும், அனைத்து ஊழியர்களும் கடைசியாக சேவையாற்றிய நிதியாண்டின் அரை மாத சம்பளத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட தொகைக்கு சமமான ஒரு ஏற்பாடு ஐந்தொகைக்குக் கொண்டுசெல்லப் படுகின்றது.
1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடை தொடர்பில் அனைத்து ஊழியர்களுக்கும் ஓய்வூதியப் பணிக் கொடை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஐந்தொகையில் நடைமுறையல்லாப் பொறுப்புகளின் கீழ் இந்த விடயம் வகைப்படுத்தப்பட்டுள்ளது. திறைசேரியின் பிரகாரம், அவர்கள் தேவைப்படும்போது நிதிகளை வழங்குவர் என்பதனால் நிதியம் அவசியமற்றதாகும்.

2.2.11 பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புகளாக வகைப் படுத்தப்பட்டுள்ள பொறுப்புகள், நிதிச் செயலாற்றுகைக் கூற்றுத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் அல்லது தேவைக்கேற்ப கொடுப்பனவு செய்வதற்காக செலுத்தப்பட வேண்டியவை. நிதிச் செயலாற்றுகைக் கூற்றுத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய மீதிகள் நடைமுறையல்லாப் பொறுப்புகளாகும். நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் அறியப்பட்ட அனைத்து பொறுப்புகளும் கணக்கிடப்பட்டுள்ளன.

2.2.12 மானியங்களின் கணக்கீடு

2.2.12.1 அரசாங்க மானியங்கள்

சமர்ப்பித்தல் முறைகள் உள்ளடங்கலாக அரசாங்க மானியங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை பின்வருமாறு:

சொத்துக்கள் கொள்வனவிற்கான அரசாங்க மானியங்கள், சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் பூராகவும் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.
வெளிநாட்டு முகவராண்மைகளிடமிருந்து பெறப்படும் ஏனைய மீண்டெழும் மானியங்களும் அவற்றிற்கான செலவுகளும் இலாப, நட்டக் கணக்கில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.
பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அரசாங்க மானியங்கள், அவற்றிலிருந்து உருவச் சொத்துக்கள் எவற்றையும் அடைய முடியாது என்பதனால் ஆண்டிற்கான செலவினமாகக் கருதப்படுகின்றன .

2.2.12.2 ஏனைய முகவராண்மைகளிடமிருந்து பெறப்படும் மூலதன மானியங்கள்

அரசாங்க மானியங்களின் கணக்கீட்டிற்காக ஏற்றுக்கொள்ளப்படும் முறைமை, ஏனைய முகவராண்மைகளிடமிருந்து பெறப்படும் ஏனைய மூலதன மானியங்களுக்காகவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. **2021 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை பின்வரும் மூலதனக் கொடைகளைப் பெற்றுள்ளது.**

அட்டவணை 45 : 2021 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட மூலதன மானியங்கள்

விபரம்	ரூ.
திறைசேரி – மீண்டெழும்	750,000,000
திறைசேரி – மூலதனம்– காசாக	55,000,000
சுரக்கிமு கங்கா	10,101,720
உள்ளக நீர் மூலங்களின் தரத்தைப் பரிசோதிப்பதற்காக பின்னாய்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்	8,498,190
CEFAS	4,284,205
ஒருங்கிணைந்த WMP மீதான பின்னாய்வுக் கருத்திட்டம்	3,049,342
மானியமளிக்கப்பட்ட வியாபாரப் போட்டி,மொனராகலை	628,960
சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்	145,000
சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு	105,000

2.2.14 நிகழத்தக்கவையும் கடப்பாடுகளும் . நிகழத்தக்கவை என்பது கடந்த கால நிகழ்வொன்றிலிருந்து எழும் சாத்தியமுடைய சொத்துக்கள் அல்லது கடப்பாடுகள் ஆகும். மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட, நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளின் நிகழ்வு அல்லது நிகழ்வின்மையின்போது மட்டுமே இவை உறுதிப்படுத்தப்படும்.
